
# APPOLO STUDY CENTRE

## நடப்பு நிகழ்வுகள் - ஜூலை - டிசம்பர் 2021, ஜன - மார்ச் 2022



| வ.எண். | தலைப்புகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநிலம் | 79 |
| 3 | தேசிய செய்திகள் | 101 |
| 4 | திட்டங்கள் | 154 |
| 5 | நீதிமன்ற தீர்ப்புகள் | 160 |
| 6 | குழுக்கள் | 163 |
| 7 | சர்வதேச செய்திகள் | 164 |
| 8 | இந்தியா மற்றும் இதர நாடுகள் | 182 |
| 9 | மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள் | 191 |
| 10 | பாதுகாப்பு | 201 |
| 11 | பொருளாதாரம் | 221 |
| 12 | புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்கள் | 238 |
| 13 | தரவரிசைப்பட்டியல் | 244 |
| 14 | குறியீடு | 250 |
| 15 | நியமனங்கள் | 251 |
| 16 | விருதுகள் | 259 |
| 17 | புகழ்பெற்ற நபர்கள் | 274 |
| 18 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் | 279 |
| 19 | விளையாட்டுகள் | 300 |
| 20 | நினைவில் நின்றவர்கள் | 320 |
| 21 | அறிக்கைகள் | 327 |
| 22 | முக்கியமான தினங்கள் | 342 |
| 23 | உயர்நிலை பதவிகள் | 358 |

APOLLO STUDY CENTRE

# தமிழ்நாடு

- **கார் தயாரிக்கும் முன்னணி நிறுவனம் ஹுண்டாய்**
  - ✓ தென் கொரிய கார் தயாரிக்கும் முன்னணி நிறுவனமாகிய ஹுண்டாய் - சென்னைக்கு அருகில் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள தன்னுடைய ஆலையிலிருந்து இந்தியாவின் 10 மில்லியனாவது காரை வெளியிட்டுள்ளது.

- **பெரியார் பல்கலைக் கழக துணை வேந்தர்**
  - ✓ ஆர். ஜெகந்நாதன் - ஜுன் 30 அன்று ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் அவர்களால் பெரியார் பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தராக நியமிக்கப்பட்டார்.

- **கிங் நிறுவனம்**
  - ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - சென்னை கிண்டியில் கிங் நிறுவன வளாகத்தில் உள்ள அரசு கோவிட் மருத்துவமனையில் கோவிட்டுக்குப் பிந்தைய சிகிச்சை மையத்தைத் தொடங்கி வைத்தார்.

- **வேழம்**
  - ✓ வனத்துறை – யானையைப் பற்றி குழந்தைகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக கோத்தகிரி சாலையில் உள்ள அரசு மரக் கிடங்கில், 'வேழம்' (யானை) என்ற பெயரில் ஒரு விளக்க மையத்தை அமைக்க உள்ளது.

- **கோவிட் - கர்ப்பிணிப் பெண்களுக்கான தடுப்பூசிப் பணி**
  - ✓ தமிழ்நாடு – நாட்டிலேயே முதன் முறையாக கர்ப்பிணிப் பெண்களுக்கான தடுப்பூசிப் பணியை கடலூர் மாவட்டத்தில் உள்ள பெண்ணாடத்தில் தொடங்கி வைத்தது.
  - ✓ **கர்ப்பிணிப் பெண்கள்** கோவின் (Co-WIN) தளத்தில் தங்களைப் பதிவு செய்து கொண்ட பிறகு அல்லது அருகாமையில் உள்ள பதிவு மையத்திற்கு நேரில் சென்று, தங்களது கர்ப்ப காலத்தின் எந்த நிலையில் வேண்டுமானாலும் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம்.

- **தொழிலாளர் துறை -** இதுவரை தன்னுடைய 'ஆன்லைன்' போர்ட்டலில் சுமார் 5 இலட்சம் வெளி மாநிலங்களிலிருந்த இடம்பெயரும் தொழிலாளர்களை பதிவு செய்துள்ளது.

- **மணலி –** திடக்கழிவு மேலாண்மையில் அனைத்து நிலைகளிலும் பெண்களையே கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சியின் முதலாவது மண்டலமாக ஆகியுள்ளது.

- **ஒளிப்பதிவுச் சட்டம், 1952**
  - ✓ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - ஒன்றிய அரசு கொண்டு வர உத்தேசித்துள்ள ஒளிப்பதிவுச் சட்டம், 1952க்கு தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

- **10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மூன்று கல்வெட்டுகள் மற்றும் இரண்டு அடிப்படை கற்சிற்பங்கள்** - திருவண்ணாமலை மாவட்டத்தின் தேசூர் கிராமத்தை ஒட்டியுள்ள நீர்நிலைகளில் கண்டுபிடிக்கப்பட்டன.

- **திண்டுக்கல் ஐ. லியோனி – பாடநூல் கழகத் தலைவர்**
  - ✓ திண்டுக்கல் ஐ லியோனி – புகழ்பெற்ற பட்டிமன்ற நடுவர் - தமிழ்நாட்டு பாடநூல் கழகம் மற்றும் கல்விச் சேவைகள் கழகத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

 PH: 044-24339436, 42867555, 9840226187

- **விருதுகளுக்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய சங்கம்**
  - ✓ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - கலை, கலாச்சாரம், இலக்கியம் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆகிய துறைகளில் மிகச் சிறந்த இலக்கியங்களைப் படைத்ததற்காக 21 எழுத்தாளர்களுககு ரொக்கப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.
  - ✓ இந்த புகழ்பெற்ற எழுத்தாளர்களை விருதுகளுக்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய சங்கம் அடையாளம் கண்டது.
  - ✓ மாநில அரசு ஆதிதிராவிட எழுத்தாளர்களுக்கு நிதி உதவியை வழங்குகிறது. இதற்காக ரூ.50 இலட்சம் முதலீட்டு நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

- **தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - ஜெர்மனியில் உள்ள கொலோங்னே பல்கலைக் கழகத்திற்கு தமிழ் இருக்கைக்காக ரூ.1.25 கோடி உதவியை வழங்கியுள்ளார்.**
  - ✓ இந்தப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைக்கு வழங்கப்பட்ட இந்த நிதி உதவியானது, நிதி ஒதுக்கீடு இல்லாமல் அந்தத் துறை மூடப்பட இருந்ததைத் தவிர்ப்பதற்கு உதவியுள்ளது.
  - ✓ முந்தைய அஇஅதிமுக அரசும்கூட, 2019ஆம் ஆண்டில் தமிழ் இருக்கைக்கு ரூ.1.25 கோடி உதவியை வழங்குவதாக அறிவித்தது.

- **கடற்படை – அரக்கோணத்தில் ஐஎன்எஸ் ராஜாளி கடற்படைத் தளத்தைச் சுற்றிலும் 3 கிமீ தொலைவு வரை உள்ள பகுதி 'பறக்க அனுமதியில்லாத மண்டலம்' (no fly zone) என்று அறிவித்துள்ளது.**
  - ✓ டிஜிசிஏ-ன்படி, பொதுமக்கள் தங்களிடமுள்ள அனைத்து டிஜி ஸ்கை பிளாட்பார வகை ட்ரோன்களையும் பதிவு செய்து வைத்து, 200 அடி உயரத்திற்கு மேல் 'அனுமதி இல்லை – மேலே எழுப்பப் போவதில்லை' (No permission- No Take off) என்பதை இயக்கி வைத்திருக்க வேண்டும்.

- **சென்னை கடற்கரைக்கு அப்பால் இந்தியாவின் முதலாவது உப்பு நீரை குடிநீராக்கும் திட்டம் - சமீபத்தில் ரூ.4000 கோடி ஆழ்கடல் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, விரைவில் செயல்படத் தொடங்க உள்ளது.**

- **PCV – தடுப்பூசி**
  - ✓ தமிழ்நாடு அரசு – அனைவருக்கும் தடுப்பூசித் திட்டத்தின்கீழ், நியூமோ காக்கல் காஞ்சுகேட் தடுப்பூசி (**Pneumococcal Conjugate** Vaccine) ஐ விரைவில் தொடங்கி வைக்க உள்ளது.
  - ✓ இந்தத் திட்டம், நிமோனியா மற்றும் மூளைக் காய்ச்சல் காரணமாக 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மரணமடைவதைக் குறைக்க உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
  - ✓ அனைவருக்கும் தடுப்பூசித் திட்டத்தின்கீழ். இதர தடுப்பூசிகளுடன் இந்த பிசிவி தடுப்பூசியும் குழந்தைகளுக்கு இலவசமாக போடப்படும்.

- **'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற பெயரில் வீடுகளுக்கே சென்று மருத்துவ உதவி வழங்குதல்**
  - ✓ தமிழ்நாடு அரசு – நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு அவர்களின் இல்லங்களுக்கே சென்று டயாலிசிஸ் செய்வதற்காக, வீடுகளுக்கே சென்று மருத்துவ உதவி அளிக்கும் திட்டத்தைத் தொடங்கி வைக்க உள்ளது.
  - ✓ இந்தத் திட்டத்திற்கு 'மக்களைத் தேடி மருத்துவம்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

- **தமிழ்நாடு அரசு –** மாநிலத்தில் ரூ.28,664 கோடி முதலீட்டைப் பெற்றுத் தரக் கூடிய 47 தொழில்துறைத் திட்டங்களைத் தொடங்கி வைக்க உள்ளது.
  - ✓ இந்தத் திட்டங்கள் மூலமாக மாநிலத்தில் 82,400 பேர் வேலைவாய்ப்பைப் பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- ✓ இந்த 47 திட்டங்களில், மாநில அரசு 35 புதிய திட்டங்களுக்கு கையொப்பமிட உள்ளது. இவற்றிற்கான முதலீடு ரூ.17,000 கோடிக்கும் அதிகம் ஆகும்.
- ✓ மேலும், இதர 9 திட்டங்களுக்கான அடிக்கல்லை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நாட்ட உள்ளார்.

- **முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் -** 2030ஆம் ஆண்டு வாக்கில் தமிழ்நாட்டை 1 டிரில்லியன் டாலர் (ஒரு இலட்சம் கோடி டாலர்) ஒட்டு மொத்த உள்நாட்டு மதிப்பு கொண்ட மாநிலமாக ஆக்குவதை இலக்காகக் கொண்டு தனது அரசு செயல்பட்டு வருகிறது என்று அறிவித்தார்.
  - ✓ மே 2021ல் ஆட்சிக்கு வந்த பிறகு, வழிகாட்டுதல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட, திமுக அரசின் முதலாவது முதன்மையான தொழில்துறை மாநாட்டை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.
  - ✓ மாநில அரசு, 24 துறைகளை உள்ளடக்கிய, 100க்கும் மேற்பட்ட சேவைகளை ஒருங்கிணைக்கும் ஒற்றைச் சாளர முடித்து வைப்பாகிய தரம் உயர்த்தப்பட்ட வலைத்தளம் 2.0 ஐ தொடங்கி வைத்தது.
  - ✓ அடுத்த மார்ச் மாதத்திற்குள் மேலும் 210 சேவைகளை இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கு இந்த அரசு திட்டமிட்டு வருகிறது.
  - ✓ இந்த நிகழ்வின்போது, முதலமைச்சர் முன்னிலையில் 35 புதிய திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இதன்மூலமாக ரூ.17,141 கோடி புதிய முதலீடுகள் திரட்டப்படும் என்பதோடு, 55,000 பேருக்கு வேலைவாய்ப்பையும் வழங்குவதாக இது அமையும்.
  - ✓ மேலும், ரூ.4,250 கோடி மதிப்பிலான முதலீட்டையும் 21,600 பேருக்கு மேல் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரக்கூடிய 9 புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது.
  - ✓ மேலும், ரூ.7,117 கோடி ஒருங்கிணைந்த முதலீடு மற்றும் சுமார் 6,800 பேருக்கு வேலைவாய்ப்பைத் தரக் கூடிய 5 புதிய தொழில்துறை அலகுகளின் வர்த்தக ரீதியான உற்பத்தியையும் முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

- **தமிழ்நாடு அரசு –** மாநிலத்தில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ்களை வழங்கும்போது வேளாண்மைத் தொழில் மூலமாகக் கிடைக்கும் ஊதியம் மற்றும் வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று அதிகாரிகளுக்கு ஆணையிட்டுள்ளது.

- **'கனைன் பர்வோ வைரஸ்' (Canine Parvovirus)**
  - ✓ மாநில கால்நடை மருத்துவ பல்கலைக் கழகம் - எளிதில் தொற்றக் கூடிய 'கனைன் பர்வோ வைரஸ்' என்ற தொற்று நோய் சென்னையில் உள்ள பெரும்பாலான நாய்களுக்கு ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை செய்துள்ளது.

- **ரர்பன் இயக்கம்**
  - ✓ ஊரக சுற்றுலாவை வளர்ப்பதற்கான தன்னுடைய முயற்சியின் ஒரு பகுதியாக ஒன்றிய அரசு சிங்கப் பெருமாள் கோவிலில் ஒரு பாரம்பரிய கிராமம் மற்றும் சுற்றுலாத் தலத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது.
  - ✓ சிங்கப்பெருமாள் கோவில், சென்னையிலிருந்து 40 கிமீ தொலைவில் உள்ளது. அதன் அருகில் உள்ள ஆறு கிராமங்கள் - அப்பூர், செட்டிபுண்ணியம், குருவன்மேடு, கொளத்தூர், ரெட்டிபாளையம் மற்றும் வெங்கடாபுரம் - ஆகியவை 'ரர்பன்' இயக்கத்தைச் செயல்படுத்துவதற்காக ஏற்கனவே அறிவிக்கை செய்யப்பட்ட தொகுப்புகளாகும்.
  - ✓ இந்தத் திட்டமானது ஊரகப் பகுதிகளில் பொருளாதார, வாழ்வாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் வாயிலாக நகர்ப்புறப் பகுதிகளுக்கும் ஊரகப் பகுதிகளுக்கும் இடையிலான இடைவெளியை குறைக்க முனைகிறது.
  - ✓ இந்தத் திட்டத்தின்கீழ், கிராமப் புறப் பெண்கள் ஒன்றாக வரவழைக்கப்பட்டு வாழ்வாதாரத்திற்கான பயிற்சி வழங்கப்படுகின்றனர். தமிழ்நாட்டில், ஊரகப் பகுதி – நகர்ப்புறப் பகுதிக்கு இடையிலான இடைவெளி 3.10 விழுக்காடு என்றும், இது தேசிய சராசரியைவிட மிகவும் குறைவு என்றும் இந்தத் திட்டம் குறிப்பிடுகிறது.

- **தமிழ்நாடு அரசு** – தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கமிட்டியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலினைத் தலைவராகக் கொண்டு மாற்றியமைத்துள்ளது.
  - ✓ திரு. பழனிவேல் தியாகராஜன் (நிதி)
  - ✓ திரு.என். கயல்விழி செல்வராஜ் (ஆதிதிராவிடர் நலன்)
  - ✓ சி.வி. கணேசன் (தொழிலாளர் நலன்)
  - ✓ எம் மதிவேந்தன் (சுற்றுலா)
  - ✓ இந்தக் குழுவில் 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவனும் டி. ரவிக்குமாரும் இடம் பெற்றுள்ளனர்.

- **மாநில அரசு** – பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் தொடர்புடைய அமைப்புகளின் அரசுசார் தேவைகளுக்கு உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகிய இரண்டையும் தொடக்க நிலை நிறுவனங்களிடமிருந்து வாங்குவதற்காக 'கொள்முதல் முன்னுரிமை'யை வழங்க முடிவு செய்துள்ளது.

  - ✓ வெளியிடப்பட்ட அரசாணையில், மாநில அரசுத் துறைகள் அவை செயல்படுத்தும் திட்டங்களில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் ஆளுகைக்காகவும் தீர்வுகளை வழங்குவதற்கு தமிழ்நாட்டில் உள்ள தொடக்க நிலை நிறுவனங்கள் தொழில்நுட்ப ரீதியாக திறன் பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - ✓ பல்வேறு பிரிவுகளில் கொள்முதல் விருப்பங்களை வழங்குகின்றன – தகவல் தொழில்நுட்பம், வேளாண் தொழில் நுட்பம் மற்றும் கல்வி தொழில்நுட்பம் - விரைவாக வளர்ச்சி அடைவதற்காகவும், மாநிலத்தில் ஏராளமான வேலைவாய்ப்புகளையும் வளத்தையும் உருவாக்குவதற்காகவும் தொடக்க நிலை நிறுவனங்களுக்கும் அவை உதவி செய்கின்றன.

- உயர் முன்னுரிமை – தமிழ்நாடு அரசு அறிவிப்பு

  தமிழ்நாடு அரசு – தனது ஊழியர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரை 'உயர்முன்னுரிமைப் பிரிவு' என்று வகைப்படுத்தி, அவர்கள் தங்களது பணியிடங்கள் அல்லது தொழிற்சாலைகளுக்குச் செல்ல வேண்டும் எனில், கட்டாயமாக இரண்டு டோஸ் கோவிட்-19 தடுப்பூசியையும் போட்டிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.
  - ✓ **சுகாதார ஆய்வாளர்கள்** - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களில் பொது சுகாதாரம் பற்றிய பாடத்திட்டங்களைப் படித்து முடித்தவர்கள் - பணியிடங்களின் நுழைவு வாயிலில் அனைத்துப் பணியாளர்களும் ஆய்வு செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
  - ✓ **உடல்** வெப்ப நிலையைப் பதிவு செய்வதோடு அல்லாமல், இந்த சுகாதார ஆய்வாளர்கள் நோய் அறிகுறிகள் மற்றும் கடந்த வாரத்தில் பாசிடிவ் ஆக இருந்த குடும்ப உறுப்பினர்களின் வரலாறு பற்றிய விவரங்களையும் பதிவு செய்ய வேண்டும்.
  - ✓ **நோய்** அறிகுறி உள்ள பணியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, தொடர் பரிசோதனைகள் மற்றும் மேலாண்மைக்காக அருகில் உள்ள சுகாதார நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

- **தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை – அரசுப் பள்ளிகளில் உள்ள அனைத்து 3 இலட்சம் ஆசிரியர்களுக்கும் அடிப்படை கணினி செயல்பாட்டுக் கல்வியை வழங்கத் திட்டமிட்டுள்ளது**

  - ✓ ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒரு வொர்டு (word) கோப்பை, பிடிஎப் (pdf) கோப்பை எப்படி உருவாக்குவது, மின்னஞ்சலை எப்படி அனுப்புவது மற்றும் ஆன்லைன் வீடியோக்களை வகுப்பறைகளில் எப்படி பயன்படுத்துவது போன்ற விவரங்கள் ஐந்து நாள் வகுப்பறையில் கற்றுக் கொடுக்கப்படும்.
  - ✓ இதற்கான பயிற்சி மாநிலம் முழுவதிலும் உள்ள 70,000 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்களில் நடத்தப்படும்.

- ✓ இந்த ஆசிரியர்களுக்கு கல்வி மேலாண்மை தகவல் அமைப்பு (Educational Management Information System - EMIS) மென்பொருளில் எப்படி புள்ளி விவரங்களைப் பதிவு செய்வது என்பது பற்றியும் கற்பிக்கப்படும். இந்த இஎம்ஐஎஸ் என்பது மாநிலம் முழுவதிலும் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பதிவு மற்றும் இதர விவரங்களடங்கிய ஒரு அரசு தகவல் தொகுப்பு ஆகும்.
- ✓ 'வள நபர்களுக்கான பயிற்சி' பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பின் மகேஷ் பொய்யாமொழி அவர்களால் ஜூலை 26 அன்று தொடங்கி வைக்கப்படும்.

➢ **தமிழ்நாடு அரசு – வன்னியர்களுக்கான 10.5 விழுக்காடு சிறப்பு இட ஒதுக்கீட்டை, 2021-22 கல்வி ஆண்டு முதல் தொழில்முறை பாடப் பிரிவுகள் உள்ளிட்ட அனைத்து பாடத்திட்டங்களின் சேர்க்கைக்கும் பின்பற்றும் என்று தெரிவித்துள்ளது.**

- ✓ சட்ட வல்லுநர்கள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தைக் கலந்து ஆலோசனை செய்த பிறகு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், பிப்ரவரி 26, 2021 முதல் 10.5 விழுக்காடு சிறப்பு இட ஒதுக்கீட்டை செயல்படுத்துவதற்கான ஆணையை வெளியிட்டார்.
- ✓ முந்தைய அஇஅதிமுக அரசு, மிகவும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கான 20 விழுக்காடு இடஒதுக்கீட்டில், வன்னியர்களுக்கு 10.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை தற்காலிக அடிப்படையில் வழங்குவதற்கான சட்டத்தை இயற்றியது.

➢ **முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - சென்னை மற்றும் திருவள்ளூரில் 25 ஒடுக்கப்பட்ட இயற்கை எரிவாயு (compressed natural gas – CNG) நிலையங்களையும், குஜராத்தைச் சேர்ந்த டாரன்ட் கேஸ் (Torrent Gas) நிறுவனத்தின் ஒரு முதன்மை நிலையத்தையும் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.**

- ✓ டாரண்ட் எரிவாயு நிறுவனம் நடப்பு ஆண்டு செப்டம்பர் வாக்கில் 50 சிஎன்ஜி நிலையங்களையும், அடுத்த ஆண்டு ஜுன் மாத வாக்கில் 100 சிஎன்ஜி நிலையங்களையும், மார்ச் 2023 வாக்கில் 500 சிஎன்ஜி நிலையங்களையும் நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளது.
- ✓ இந்தத் திட்டத்தின்படி, அடுத்த ஆண்டிற்குள், சென்னையில் உள்ள கிட்டத்தட்ட 70,000 குடும்பங்களுக்கு குழாய் வழி எரிவாயு இணைப்பு வழங்கப்படும். இது திரவ பெட்ரோலிய எரிவாயு சிலிண்டர்களைவிட சிக்கனமான மாற்று ஆகும்.
- ✓ இப்போதைய நிலையம், குழாய்வழி எரிவாயு இணைப்பானது எல்பிஜி-ஐவிட 40 விழுக்காடு விலை குறைவானது ஆகும்.

➢ **சென்னையைச் சேர்ந்த கடல்சார் ஆராய்ச்சிக்கான தேசிய மையம் - உணர்விகள் பொருத்தப்பட்ட ஒரு மிதவையை புதுச்சேரி கடற்கரைக்கு அப்பால் நிலைநிறுத்தியுள்ளது**

- ✓ தரவுகளின் அடிப்படையில், இந்த கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தின் (NCCR) குழு, தண்ணீரின் தர அளவை மதிப்பிடுவதோடு, சரி செய்ய வேண்டியிருப்பின் அதற்குரிய நடவடிக்கைகளையும் வழங்கும்.
- ✓ செப்டம்பரில் தென்மேற்குப் பருவமழைக் காலம் முடிவுற்றதும். இதே போன்ற மிதவைகளை விசாகப்பட்டினம் மற்றும் லட்சத்தீவுகள் கடற்கரைகளுக்கு அப்பால் நிர்மாணிக்க இந்த கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையம் திட்டமிட்டுள்ளது.
- ✓ இப்போதைக்கு, இந்த மையம் இந்திய கடற்கரையின் 7,500 கிமீ தொலைவு எங்கிலும், தண்ணீரின் தரத்தை மதிப்பிடுவதற்காக 22 க்கும் மேற்பட்ட இடங்களில் மனித உழைப்பின்மூலம் தண்ணீரின் மாதிரியை சேகரிக்கிறது.

➢ **மாநில அரசில் நடுத்தர, குறு மற்றும் சிறு நிறுவனங்களை மீட்டமைத்தல்**

- ✓ தமிழ்நாடு அரசு – மாநிலத்தில் நடுத்தர குறு மற்றும் சிறு நிறுவனங்களை (MSME) மீட்டமைப்பதற்காக 13 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தியுள்ளது.
- ✓ தமிழ்நாடு அரசின் முன்னாள் தொழில்துறைச் செயலாளர்.
- ✓ ஜுன் 21, 2021 அன்று வழங்கப்பட்ட ஆளுநரின் உரையில், நடுத்தர, குறு மற்றும் சிறு நிறுவனங்களை மீட்டமைப்பதற்காக இத்தகைய குழுக்கள் அமைக்கப்படும் என்று மாநில அரசு உறுதியளித்திருந்தது.

**இந்தக் குழுவின் பின்வரும் உறுப்பினர்கள் இடம்பெற்றிருப்பர்:**

- ✓ பேராசிரியர் எம். விஜயபாஸ்கர், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் பகுதி நேர உறுப்பினர்.
- ✓ பிந்து ஆனந்த், நிதி உள்ளடக்கத்திற்கான ஆர்பிஐ குழுவின் முன்னாள் உறுப்பினர், எஸ்எம்இ நிதி மற்றும் பத்திரப்படுத்துதல்
- ✓ என். பாலசுப்பிரமணியன். முன்னாள் சிஎம்டி, SIDBI.
- ✓ ஆம்பியர் வெகிக்கிள்ஸ் (ஈடிவெகிகிள்) நிறுவனத்தின் இணை தோற்றுவிப்பாளரும் முன்னாள் தலைமைச் செயல் அலுவலரும் ஆகிய ஹேமலதா அண்ணாமலை அவர்கள்.
- ✓ இஸ்ரார் அஹமது, மண்டலத் தலைவர், FIEO
- ✓ அன்புராஜன், தலைவர், TANSTIA
- ✓ ஆர், ஆனந்த், முன்னாள் பங்குதாரர், எர்ன்ஸ்ட் மற்றும் யங் மற்றும் சொத்து மறுசீரமைப்பு நிறுவனங்களுக்கான ஆர்பிஐ குழுவின் முன்னாள் உறப்பினர்.

➢ **மாநில அரசு – சமீபத்தில் தன்னுடைய 100வது பிறந்த நாளைக் கொண்டாடிய பழம்பெரும் கம்யூனிஸ்ட் தலைவர் திரு.என். சங்கரய்யா, அவர்களுககு சமீபத்தில் உருவாக்கப்பட்ட 'தகைசால் தமிழர்' என்ற விருது வழங்குவது என்று முடிவு செய்துள்ளது.**

- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், இந்த விருதை, திரு சங்கரய்யா அவர்களுக்கு ஆகஸ்ட் 15 அன்று நடைபெறும் சுதந்திர தின விழா நிகழ்ச்சிகளின்போது வழங்குவார்.
- ✓ இந்த விருது ஒரு பாராட்டுப் பத்திரத்தையும், ரூ.10 இலட்சத்திற்கான காசோலையையும் கொண்டதாக இருக்கும்.
- ✓ இந்த அறிவிப்பைக் கேட்ட பிறகு, இந்த விருதைப் பெறுவதற்கான தன்னுடைய ஏற்பைத் தெரிவித்த திரு. சங்கரய்யா, இந்த அங்கீகரிப்பிற்காக, முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.
- ✓ இருப்பினும் அவர் அந்த ரூ.10 இலட்சம் அன்பளிப்புத் தொகையை முதலமைச்சரின் கோவிட்-19 நிவாரண நிதிக்கு நன்கொடையாக வழங்கினார்.

➢ **சென்னை பெருநகர மாநகராட்சி – தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்துடன் இணைந்து ரூ.180 கோடி மதிப்பில் காற்று மற்றும் தண்ணீர் மாசு நீக்கும் திட்டத்தைத் தொடங்கி வைக்க உள்ளது.**

- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், இந்த உள்ளாட்சி அமைப்பானது. சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு அமைப்பை (ambient air quality monitoring systems) இந்த பெருநகரத்தின் 50 இடங்களில் அமைக்க உள்ளது.
- ✓ இந்த அமைப்பானது காற்று மாசுபாடுகளை பிஎம்2.5, பிஎம்10, எஸ்ஓஎக்ஸ், என்ஓஎக்ஸ் மற்றும் கார்பன் மோனாக்சைடு போன்ற அளவீடுகளை கணக்கீடு செய்து டிஜிட்டல் பலகைகளில் காட்சிப்படுத்தும்.
- ✓ மேலும். சென்னையின் 20 முனையங்களில் காற்றுப் பெருக்கம் மற்றும் சுத்திகரிப்பு அலகுகளும் (wind augmentation and purifying units) கூட நிர்மாணிக்கப்படும்.

➢ **தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் (DGP) சி. சைலேந்திர பாபு** – மாநிலத்தில் உள்ள காவலர்கள், தங்கள் உடல்நலத்தைப் பராமரிக்க ஏதுவாகவும், தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் நேரத்தை செலவிடுவதற்கு வசதியாகவும், அவர்களுக்கு வாராந்திர விடுப்பு வழங்கப்படும் என்று அறிவித்தார்.

➢ **அமெரிக்காவைச் சேர்ந்த சூரிய சக்தி தொழில்நுட்ப நிறுவனம் ஃபர்ஸ்ட் சோலார் இங்க் (First Solar Inc)** – மாநிலத்தில் முற்றிலும் ஒரு புதிய செங்குத்தான ஒருங்கிணைந்த ஒளிமின்னழுத்த மெல்லிய பட சூரிய தொகுதி உற்பத்தி வசதியை (fully vertically integrated photovoltaic thin film solar module manufacturing facility) ஏற்படுத்த உள்ளதாக அறிவித்தது.

- **மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் ஸ்ரீவில்லிப்புத்தூர் சரணாலயத்தில் அதிக எண்ணிக்கையிலான சிறுத்தைகள் உள்ளன: அறிக்கை**
  - ✓ தமிழ்நாட்டின் ஸ்ரீவில்லிபுத்தூர் நரைத்த அனில் வனவிலங்கு பூஙகாவில் (100 சதுர கிமீ சுற்றளவுக்குள்) அதிக எண்ணிக்கையிலான சிறுத்தைகள் காணப்படுகின்றன, இது மாநிலத்திலேயே அதிகம் இல்லை, மாறாக ஒட்டு மொத்த மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியிலேயே அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

- **ஃபுக்கெட் நகரம் சென்னையின் சகோதரி நகரமாகப் போகிறது**
  - ✓ தாய்லாந்தில் உள்ள ஃபுக்கெட் நகரம். சென்னையுடன் ஒரு சகோதரி நகரத்திற்கான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளது.
  - ✓ சென்னையில் உள்ள ராயல் தாய்லாந்து துணை தூதரகம் சகோதரி கூட்டாண்மை நகரத்தை உருவாக்குவதன் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிப்பதற்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளது.

- **டென்மார்க் தமிழ்நாட்டில் கடல் காற்றின் மையம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.**
  - ✓ தமிழ்நாட்டில் கடல் காற்றின் சிறப்பு மையம் ஒன்றை அமைப்பது என்ற தீர்க்கமான முடிவில் டென்மார்க் உள்ளது. மேலும், இங்கே காற்றின் போக்குகள் ஒரே சீராக இருப்பதால், இதை அமைப்பதற்கு தமிழ்நாடுதான் சிறந்த இடம் என்று நம்புகிறது.
  - ✓ இதற்கான ஒரு இடமும் அடையாளம் காணப்பட்டு விட்டது என்று, இந்தியாவிற்கான டேனிஷ் தூதர் ஃபிரடி ஸ்வேன் தெரிவித்துள்ளார்.

**புதிய உயர் கல்விக் குழு அமைக்கப்பட்டது: தமிழ்நாடு மாநில உயர் கல்விக் குழு** (Tamil Nadu State Council for Higher Education) சமீபத்தில் கீழ்க்கண்ட நியமனங்களைக் கொண்டு அரசால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது:

| பெயர் | துறை |
|---|---|
| ஏ. இராமசாமி | **துணைத் தலைவர்** |
| எஸ். கிருஷ்ணசாமி | **உறுப்பினர் செயலர்** |

- ✓ அழகப்பா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தராக இருந்த திரு. ராமசாமி, ஒரு வரலாற்று ஆசிரியர் ஆவார். அவர் மொழிப் போராட்டம் மற்றும் திராவிட அரசியல் பற்றிய புத்தகங்களை எழுதியுள்ளார்.
- ✓ அவர் தமிழ்நாடு மாநில உயர் கல்விக் குழுவின் துணைத் தலைவராக 2006 முதல் 2011 வரை இருந்துள்ளார்.
- ✓ 2016 முதல் துணைத் தலைவர் இல்லாமலேயே இந்தக் குழு இயங்கி வந்துள்ளது.
- ✓ திரு. கிருஷ்ணசாமி. பச்சையப்பன் கல்லூரியில் ஒரு இணைப் பேராசிரியராக இருந்தவர்.
- ✓ உயர் கல்வித் துறை அமைச்சர் இந்தக் குழுவின் தலைவராக இருப்பார். நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், ஆளுநரின் செயலாளர், உயர் கல்வித் துறை முதன்மைச் செயலாளர், கல்லூரிக் கல்வி இயக்குநர், மற்றும் தொழில் கல்வி இயக்குநர் ஆகியோர் சில அலுவல் சார் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

- **கோவிட் 19 மேலாண்மைக்காக ஒன்றிய அரசு 800 கோடி ரூபாய் நிவாரணத் தொகையை தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளது.**
  - ✓ கோவிட் இரண்டாவது அலையை எதிர்கொள்வதற்காகவும் மூன்றாவது அலையைத் தவிர்ப்பதற்காகவும், ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு 800 கோடி ரூபாய் நிவாரணத் தொகையை வழங்கியுள்ளதாக தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

- **குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் கருணாநிதியின் உருவப் படத்தை தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் திறந்து வைத்தார்.**
  - ✓ குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், சென்னை சட்ட மன்ற கவுன்சிலின் நூற்றாண்டைக் குறிக்கும் வகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு,

முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் உருவப் படத்தை தமிழ்நாடு சட்டமன்ற வளாகத்தில் திறந்து வைத்தார்.

- **மாநகர சுற்றுப்புறக் காற்றில் கனமான உலோகங்கள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன**
  - ✓ சுற்றுப் புறக் காற்றில் நிக்கல், மாங்கனீஸ் மற்றும் சிலிகா போன்ற கனமான உலோகங்கள் இருப்பதால், சென்னை மாநகரமானது தொழில்நுட்ப அடிப்படையில் சுகாதாரமற்ற பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.

- **தமிழ்நாட்டின் அஞ்சல் அலுவலகங்களில் ஆட்டோ காப்பீட்டுத் திட்டம்**
  - ✓ ஆட்டோக்களுக்கு காப்பீடு வழங்குவதற்கான ஒரு திட்டம் தமிழ்நாட்டின் அஞ்சல் அலுவலகங்களில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- **9ஆம் வகுப்பு மாணவர் ஒருவர் உள்ளங்கை அளவிலான ஒரு சிபியூ-வை உருவாக்கியுள்ளதாக முதலமைச்சர் ஸ்டாலின் பாராட்டியுள்ளார்.**
  - ✓ தமிழ்நாட்டின் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்எஸ். மாதவ் என்ற ஒரு ஒன்பதாம் வகுப்பு மாணவர், உள்ளங்கை அளவிலான ஒரு கணினி சிபியூ-வை தயாரித்துள்ளார். இந்த தனித்துவமான கண்டுபிடிப்புக்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், திரு.எஸ்எஸ்.மாதவைச் சந்தித்து அவரது முயற்சி வெற்றிபெறுவதற்கு தன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். மாதவின் பணியைப் பாராட்டிய முதலமைச்சர் ஸ்டாலின் அவருக்கு கணினி தொடர்பான கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு மாநில அரசின் உதவி உண்டு என்று உறுதியளித்தார்.

- **பெருநிறுவன சமூக பொறுப்புடைமை நிதியைப் பயன்படுத்தி, தனியார் மருத்துவமனைகள் மூலம் இலவச கோவிட்-19 தடுப்பூசி போடும் பணியை முதலமைச்சர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.**
  - ✓ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பெருநிறுவன சமூக பொறுப்புடைமை நிதியைப் (Corporate Social Responsibility Fund) பயன்படுத்தி தனியார் மருத்துவமனைகள் மூலம் இலவசமாக கோவிட்-19 தடுப்பூசி போடுவதற்கான ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

- **தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம், பொற்பனைக் கோட்டையில் அகழ்வாய்வுப் பணிகளைத் தொடங்கியுள்ளது**
  - ✓ தமிழ்நாட்டின் சுற்றுச் சூழல் அமைச்சர் சிவா. வி. மெய்யநாதன், சாத்தியமான தொல்பொருள் மீதங்களைக் கண்டுபிடிப்பதற்காக, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தின் பொற்பனைக்காடு என்ற கிராமத்தில் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக் கழகத்தால், மேற்கொள்ளப்படும் அகழ்வாய்வுப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

## சமீபத்திய அகழ்வாய்வுப் பணிகள் - தமிழ்நாடு

- **சிவகலை அகழ்வாய்வுப் பணி**
  - ✓ ஜூலை மாதத்தில் சிவகலையில் நடந்த அகழ்வாய்வுப் பணியின்போது, ஒரு மன்பானையில் ஒரு முழு எலும்புக்கூடு இருந்தது முதல் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டது.
  - ✓ இந்த இடத்தில் இரண்டாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகள் தமிழ்நாடு தொல்பொருள் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
  - ✓ இவை மரபியல் துறை முதன்மைப் புலனாய்வாளர். டாக்டர்.ஜி. குமரேசன் மற்றும் புகழ்பெற்ற நோய் எதிர்ப்பு நிபுணர் டாக்டர்.ஆர். எம். பிச்சையப்பன் ஆகியோரின் வழிகாட்டுதலின் பேரில் நடத்தப்படுகின்றன.

- **ரா ரா பெருவழி**
  - ✓ முதலாம் ராஜராஜ சோழனின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த 800 ஆண்டுகள் பழமையான கல்வெட்டு - இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தொண்டிக்கு அருகில் உள்ள நம்புதலை என்ற ஊரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
  - ✓ ரா ரா பெருவழி என்பது ராஜராஜ சோழன் காலத்தில் அமைக்கப்பட்ட கிழக்குக் கடற்கரை நெடுஞ்சாலையைக் குறிக்கும்.

- **புதுக்கோட்டையில் உள்ள தொல் பொருள் ஆய்வாளர்கள்** - 13 மற்றும் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மூன்று அபூர்வ பட்டயத் தகடுகளைக் (ஆசிரியம் - உறுதிமொழி) கண்டுபிடித்துள்ளனர்.

- **மாநில தொல்பொருள் துறை –** தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கொற்கையில் ஒரு பெரிய பழங்கால சங்குத் தொழிற்சாலையின் எச்சங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.
  - ✓ இந்த இடத்தில்தான், தமிழ்நாடு அரசின் தொல்பொருள் துறை, அது தோற்றுவிக்கப்பட்ட 1969க்குப் பிறகு முதன் முறையாக தன்னுடைய அகழ்வாய்வுப் பணிகளைத் தொடங்கியது.

- **தன்னுடைய வெளிப் பாகத்தைச் சுற்றிலும் வளைந்து நெளிந்து செல்லக் கூடிய, ஒரு வளைய அமைப்புடன்கூடிய ஒரு சுடுமண் பானை –** சிவகங்கையின் கீழடியில் உள்ள தொல்பொருள் இடத்தில் ஏழாம் கட்ட அகழ்வாய்வுப் பணியின்போது பூமியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.
  - ✓ கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட உறை கிணற்று குழாய்கள் உள்பூட்டு அமைப்பினைக் கொண்டுள்ளன. அவற்றின் வழியே மணல் உள்ளே செல்ல இயலாது. அதே சமயம் காற்றும் தண்ணீரும் அவற்றின் வழியே ஊடுருவிச் செல்லும்.
  - ✓ இத்தகைய அமைப்புகள் கீழடியைச் சேர்ந்த மக்களை அதே இடத்தில் நிலையாக வசிக்கும்படி செய்திருக்க வேண்டும், இங்கே அவர்களுக்குப் போதிய அளவு தண்ணீர் கிடைத்திருக்கக் கூடும் என்பதால் அவர்கள் வறட்சிக் காலங்களில் வேறெங்கும் சென்றிருக்க வேண்டிய தேவை எழவில்லை என்று கருதப்படுகிறது.

- **தொல்பொருள் ஆய்வாளர்கள் - ஈரோடு மாவட்டத்தின் சென்னிமலைக்கு அருகில், நொய்யல் ஆற்றின் கரைக்கு அருகில், கொடுமணல் என்ற இடத்தில் பாழடைந்த கற் கிணறு ஒன்றைக் கண்டுபிடித்தனர்.**
  - ✓ இதற்கு முன்பாக உறை கிணறுகள் மற்றும் செங்கல் கிணறுகள் தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி போன்ற இதர தொல்பொருள் ஆய்வு இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

  - ✓ 2300 ஆண்டுகள் பழமையான பிராமி கல்வெட்டுகளுடன் கூடிய கலசம், மணிகள், பானைத் துண்டுகள் தவிர, அந்த இடத்தில் உலைகளுடன் இரும்பு உருக்கும் அலகும் இருந்ததற்கான ஆதாரங்களை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
  - ✓ கொடுமணலில் தமிழ் பிராமி கல்வெட்டுகளுடன் கூடிய அதிக எண்ணிக்கையிலான பானை ஓடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

  கொடுமணலில் செம்பு, தங்கம், இரும்பு மற்றும் கண்ணாடித் துண்டுகள் மற்றும் கலைப் பொருட்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.
  - ✓ அங்கே கொடுமணல் தளத்தில் மூன்று வகையான அடக்கம் செய்யும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை கைர்ன் வட்டங்கள், கலச அடக்கம் மற்றும் சிஸ்ட்டுகளுடன் கலசம் அடக்கம்.

- **கொந்தகை என்பது கீழடியின் அடக்கம் செய்யும் இடமாக இருந்திருக்க வேண்டும்.**
  - ✓ தொல்பொருள் ஆய்வாளர்கள் - கீழடி தொகுப்பின் கொந்தகையில் ஒரே சதுர பரப்பிற்குள் ஏழு மனித மண்டை ஓடுகளைக் கண்டுபிடித்தனர். 2600 ஆண்டு கால பழமையான நாகரிகம் இருந்த காலத்தில் கீழடி, ஒரு தொழிற்சாலை தொகுப்பாக இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

- ✓ கொந்தகையின் அண்டை கிராமங்களாகிய அகரம் மற்றும் மணலூர் ஆகியவையும்கூட இந்த நகரத்தில் பகுதிகளாகக் கருதப்படுகின்றன.
- ✓ தற்போது. கீழடி தொகுப்பில் ஏழாவது கட்ட அகழ்வாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ✓ கொந்தகையின் அண்டை கிராமங்களாகிய அகரம் மற்றும் மணலூரில் தமிழ்நாடு தொல்பொருள் துறையால் அகழ்வாய்வுப் பணிகளின் இரண்டாம் கட்டம் நடைபெற்று வருகின்றன.
- ✓ சமீபத்திய கண்டுபிடிப்புகளின்படி, கொந்தகையானது கீழடி நாகரிகத்தின் அடக்கம் செய்யும் இடமாக இருந்திருக்க வேண்டும்.

➢ **சிவகங்கையின் கீழடி அகழ்வாய்வு இடத்தில் முத்திரையிடப்பட்ட வெள்ளி நாணயம் கண்டெடுக்கப்பட்டது.**

- ✓ இந்தக் கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டதை தொல்லியல்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்தார்.
- ✓ அந்த நாணயத்தில் சூரியன், சந்திரன், காளை, டாரின், ஒரு விலங்கு சிலை மற்றும் வடிவியல் அடையாளங்கள் காணப்படுகின்றன. இவை, கீழடியில் வாழ்ந்த மக்கள் வர்த்தக சமூகத்தினராக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றன.
- ✓ 1.46 மீட்டர் ஆழத்தில் கண்டெடுக்கப்பட்ட இந்த முத்திரை நாணயம் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளுக்கு இடையே குறிப்பாக கங்கை பள்ளத்தாக்குடன் வாணிபம் நடைபெற்றதற்கான அறிகுறி ஆகும்.
- ✓ பண்டைக் காலத்தில், இத்தகைய முத்திரையிடப்பட்ட நாணயங்கள் ஆறாம் நூறாண்டு காலத்திற்குரிய மஹஜன்படர் காலத்தில் புழக்கத்தில் இருந்தன.
- ✓ இத்தகைய நாணயங்கள் ஆலங்குளத்தில் நடத்தப்பட்ட அகழ்வாய்விலும்கூட கண்டுபிடிக்கப்பட்டன.

➢ **அரியலூர் மாளிகைமேட்டில் அகழ்வாய்வின்போது கூடுதலாக சுவர் எழுப்பப்பட்டிருப்பது கண்டுபிடிப்பு**

- ✓ முதலாம் இராஜேந்திர சோழனின் தலைநகராக விளங்கிய கங்கைகொண்ட சோழபுரத்தில் இரண்டு மாதங்களுக்கும் குறைவான மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது, மாநில தொல்லியல்துறை, சில முக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியுள்ளது.

- ✓ **கீழடியில் உள்ளதைப் போலவே, சில வடிவங்களுடன் கூடிய சுடுமண்ணால் செய்யப்பட்ட பானை**
- ✓ தமிழ்நாட்டின் கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது, தன் உள் பகுதியில் சிக்கலாக வரையப்பட்டிருந்த வளையங்களுடன்கூடிய சுடு மண் பானை ஒன்று கண்டறியப்பட்டது.

➢ **மெகாலித்திக் காலத்திய முழுநீள வாள் கண்டெடுப்பு**

- ✓ கிருஷ்ணகிரி மாவட்டத்தின் மயிலாடும்பாறையில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிப் பணியின்போது, பல இடங்களில் உடைந்துபட்ட ஒரு முழு நீள இரும்பு வாள் கண்டெடுக்கப்பட்டது.
- ✓ கைப்பிடியுடன்கூடிய ஒரு முழுநீள வாளை தமிழ்நாடு அரசின் தொல்லியல்துறை கண்டுபிடிப்பது இதுவே முதல் முறை ஆகும்.
- ✓ அதன் நீளம் 60 செமீ ஆகும்.

➢ **வேளச்சேரியில் உள்ள சோழர் கால கோவில் அரசின் கவனத்தைப் பெற்றுள்ளது.**

- ✓ வேளச்சேரியின் இராம் நகரில் அமைந்துள்ள வாசுதேவ பெருமாள் கோவிலின் வளாகத்தை தூய்மை செய்யும் பணி விரைவுபடுத்தப்படும்.
- ✓ இந்தக் கோவிலின் பெரும்பகுதி அடர்த்தியான அழுக்கு/ குப்பைகளால் மூடப்பட்டுள்ளது.
- ✓ இந்தக் கோவிலின் ஆவணங்களை ஆராய்ச்சி செய்து. கோவில் சம்பந்தமாக ஏதேனும் விவரங்கள் கிடைக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்காக அலுவலர்கள் கேட்டுக்

கொள்ளப்பட்டுள்ளனர் என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி. சேகர் பாபு தெரிவித்துள்ளார்.

- **சுடு மண்ணால் செய்யப்பட்ட வடிகுழாய்கள் கொற்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.**
  - ✓ தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பழமையான கொற்கை என்ற தொல்லியல் ஆராய்ச்சி நடைபெறும் இடத்தில் சுடுமண்ணால் செய்யப்பட்ட துளையுடன்கூடிய ஒன்பது குழாய்கள் ஒன்றின்மேல் ஒன்று அடுக்கப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டன.

**தமிழ்நாட்டின் நோய்த்தொற்று பரவல் வீதம் 66.2 விழுக்காடு**
- ✓ ஜூலை மாதத்தில் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்ட மூன்றாவது கட்ட ஆய்வுகளின்படி, தமிழ்நாட்டில் ஒட்டு மொத்தமாக நோய்த் தொற்று பரவல் வீதம் 66.2 விழுக்காடாக உள்ளது என்று பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் துறை தெரிவித்துள்ளது.
- ✓ மொத்தம் உள்ள 38 மாவட்டங்களில், விருதுநகர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 84 விழுக்காடும், குறைந்தபட்சமாக ஈரோடு மாவட்டத்தில் 37 விழுக்காடும் நோய்ப் பரவல் வீதம் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

- **தமிழ்நாடு சட்ட மன்றத்திற்கு 100 வயது**
  - ✓ மாண்டேகு செம்ஸ்.ஃபோர்டு அறிக்கை மற்றும் இந்திய அரசுச் சட்டம் 1919ன்படி, மொத்த மக்கள் தொகையில் 30 விழுக்காட்டினரே இருந்த வாக்காளர்களைக் (ஆடவர்கள்) கொண்டு நவம்பர் 1920ல் தமிழ்நாட்டிற்கு தேர்தல் நடைபெற்றது.

- **100 ஆண்டு சட்டப் பேரவையின் முக்கிய அம்சங்கள்: தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை**
  - ✓ ஏப்ரல் 1921 அன்று நடைபெற்ற அதனுடைய அமர்வின்போது, பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குவது என்று தீர்மானம் செய்யப்பட்டது.
  - ✓ புகழ்பெற்ற மருத்துவரும் சமூக ஆர்வலருமாகிய முத்துலக்ஷ்மி ரெட்டி, இந்த மன்றத்தின் முதல் பெண் உறுப்பினராக ஆனார். உடனடியாக அவர் துணைத் தலைவர் பதவிக்கும் தேர்வு செய்யப்பட்டார்.
  - ✓ நிதியமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியன், 1957-58ல் முதல் முறையாக நிதிநிலை அறிக்கையை தமிழில் வாசித்தார்.
  - ✓ 1991ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஆளுநர் உரைக்கு முன்பாக முதன்முறையாக 'தமிழ்த் தாய் வாழ்த்து' பாடப்பட்டது.
  - ✓ திமுக கட்சியின் நிறுவனராகிய சி.என். அண்ணாதுரை, ஆட்சியில் இருந்தபோது, 1967ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தில் சென்னை மாகாணம் என்ற பெயர் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
  - ✓ தேவதாசிமுறை ஒழிப்பு, சொத்துகளில் பெண்களுக்கு சம உரிமை மற்றும் மாநில பெண்கள் நல ஆணையம் போன்ற பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த சட்டங்கள் பெண்களுக்காக இந்த மன்றத்தில் இயற்றப்பட்டுள்ளன.

- **முக்கிய மைல்கற்கள் - தமிழ்நாடு சட்ட மன்றம்**
  - ✓ **ஜனவரி 1921:** இந்தியாவிலேயே முதன் முறையாக, இதுவரை இல்லாத அளவுக்கு பெரியதாக, தேர்ந்தெடுக்கப்பட்ட 98 பிரதிநிதிகள் உள்ளிட்ட 127 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்ட மன்றம், மூன்று ஆண்டு என்ற நிலையான காலத்திற்கு அமைக்கப்பட்டது.
  - ✓ **ஏப்ரல் 1921:** பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குவதற்காக, பாலின தடையை நீக்கும் சட்டத்தை இயற்றியது.
  - ✓ **ஜூலை 1937:** 215 உறுப்பினர்களைக் கொண்ட சட்ட மன்றம் மற்றும் 56 உறுப்பினர்களைக் கொண்ட சட்ட மேலவை ஆகிய இரண்டு அடுக்குகளைக் கொண்ட சட்ட மன்றம் அமைக்கப்பட்டது.
  - ✓ **மார்**ச் 1952: இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு முதன் முறையாக 375 உறுப்பினர்களைக் கொண்டு சட்ட மன்றம் அமைக்கப்பட்டது. இவற்றில் 24 ஒற்றை உறுப்பினர் தொகுதிகளும், 66 இரட்டை உறுப்பினர் தொகுதிகளும் அடங்கும்.
  - ✓ **ஏப்**ரல் 1957: மாநிலங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சட்ட மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 205 ஆகக் குறைந்தது.
  - ✓ **ஏப்**ரல் 20 முதல் மே 9, 1957: சட்ட மன்றமும், சட்ட மேலவையும் இரண்டும் சேர்ந்து சென்னைக்கு வெளியே முதன் முறையாகக் கூடிய இடம்: உதகமண்டலம், ஆரண்மோர் அரண்மனை.
  - ✓ **1986:** சட்ட மேலவை நீக்கம் செய்யப்பட்டது.

- **மக்களைத் தேடி மருத்துவம் - தமிழ்நாடு அரசு**
  - ✓ சுகாதார பராமரிப்பு சேவைகளை மக்களின் இருப்பிடங்களிலேயே கொண்டு சேர்ப்பதற்காக 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற ஒரு புதிய திட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள சாமணபள்ளி கிராமத்தில் தொடங்கி வைக்கப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

- ✓ இது இந்த வகையில் நாட்டிலேயே முதலாவதான திட்டமாகும். இதன்மூலம் இயன்முறை மருத்துவம் தொடர்பான சிகிச்சைகள், தொற்றா நோய்களுக்கான மருத்துவ பரிசோதனை, மருத்துகள் மற்றும் சிகிச்சைகளை ஏழைகளுக்கு வழங்குதல் ஆகியவை உள்ளிட்ட சேவைகள் அவர்களின் இருப்பிடங்களிலேயே வழங்கப்படும்.
- ✓ முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை மதுரை, கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களிலும் காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

➢ **தமிழ்நாடு அரசு, தொழில்முறை படிப்புகளில், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கியுள்ளது. நீதியரசர் முருகேசன் ஆணையத்தின் பரிந்துரைக்கு ஏற்ப இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

➢ **டாக்டர். ராதாகிருஷ்ணன் விருது 385 ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது.**

➢ **2021-22ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நீர்மின் சக்தி உற்பத்தி இலக்கை விஞ்சுவதற்கு தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது**

- ✓ மத்திய மின்வாரிய ஆணையம் 2021-22ஆம் ஆண்டுக்கு நிர்ணயித்துள்ள நீர்மின்சக்தி உற்பத்தி இலக்கை தமிழ்நாடு விஞ்சும் என்று அரசு நம்புகிறது. மத்திய மின்வாரிய ஆணையம் 3,853 மில்லியன் அலகுகள் மின் உற்பத்தியை தமிழ்நாட்டிற்கு இலக்காக நிர்ணயித்துள்ளது.

➢ **தமிழ்நாடு நெசவாளர்கள் - கடந்த மூன்று ஆண்டுகளில் இதர மாநிலங்களின் ஒட்டு மொத்த கடன் தொகைக்கும் அதிகமாக முத்ரா திட்டத்தின்கீழ் கடன்தொகையைப் பெற்றுள்ளனர்.**

- ✓ இதை ஒன்றிய அரசின் ஜவுளித் துறை அமைச்சர் பியூஷ் கோயல், ஆகஸ்ட 15 அன்று ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும் போது ஒரு அறிக்கை வாயிலாக மாநிலங்களவையில் தெரிவித்தார்.
- ✓ அமைச்சரின் கூற்றுப்படி, 2018-19, 2019-20 மற்றும் 2020-21 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 41,568 நெசவாளர்களுக்கு முத்ரா திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்பட்டுள்ளது.

➢ **நிதியமைச்சரின் நிதிநிலை அறிக்கைக்கு நான்கு நாட்கள் முன்னதாக சென்னை, தலைமைச் செயலகத்தில் மாநிலத்தின் நிதிநிலைமை குறித்த வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டது.**

- ✓ மாநிலத்தின் நிதி நிலைமை 2012-13ஆம் ஆண்டில், ரூ.1,760 கோடி உபரியாக இருந்த நிலைமை மாறி, தற்போது ரூ.61,320 கோடி பற்றாக்குறையாக சரிந்துள்ளது (அல்லது 2020-21ஆம் ஆண்டில் ஒட்டு மொத்த மாநில உற்பத்தி மதிப்பு (GSDP) 3.16 விழுக்காடாக குறைந்துள்ளது) என்பதை வெள்ளை அறிக்கை புலப்படுத்துகிறது.
- ✓ இந்த வெள்ளை அறிக்கையின்படி, தமிழ்நாட்டின் வேளாண்மைத் துறையானது, கடந்த 15 ஆண்டுகளில் வளர்ச்சியைச் சந்தித்துள்ளது. அதே சமயம் 1981 மற்றும் 2010க்கு இடையிலான காலத்தில், வேலைவாய்ப்புத் துறையானது, 54 விழுக்காட்டிலிருந்து 44 விழுக்காடாக, அதாவது 10 விழுக்காடு குறைந்துள்ளது.

➢ **ஆர். வேல்ராஜ், அண்ணா பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தர்**

- ✓ ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் - ஆர். வேல்ராஜை, அண்ணா பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தராக நியமித்தார்.

➢ **இமாசலப் பிரதேசம் மற்றும் ஒடிசா மாநிலங்களை அடுத்து காகிதமில்லாத வரவு செலவு அறிக்கையை தாக்கல் செய்த மாநிலம்**

- ✓ இந்த ஆண்டு, இமாசலப் பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாக, தமிழ்நாடு அரசு, காகிதமில்லாத ஒரு வரவு செலவு அறிக்கையைத் தாக்கல் செய்ய உள்ளது.

➢ **தமிழ்நாடு சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் மத அறக்கட்டளைகள் துறை – முதலாம் இராஜேந்திர சோழனின் பிறந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்தது.**

➢ **மாநில அரசு – முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியாகிய பி.டபிள்யூ.சி. தேவிதாரை, தமிழ்நாடு மின் ஆளுகை முகமையின் (டிஜிட்டல் மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட நிர்வாகம்) ஆலோசகராக நியமித்தது.**

➢ **சென்னை மாநகராட்சி – ஆகஸ்ட் மாதம் முதல் சென்னையில் உள்ள 49 இடங்களில் 30 நிமிடங்களுக்கு இலவச வை.ஃ.பை வசதியைத் தொடங்கி வைத்துள்ளது.**

- ✓ இந்த இடங்கள் அண்ணா நகர் டவர் பூங்கா, சிடிஎச், தண்டையார்பேட்டை, ஜெமினி சந்திப்பு, மெரினா கடற்கரை, அசோக் பில்லர், தி. நகர் மற்றும் கோயம்பேடு வெளியூர் பேருந்து நிறுத்த மையம் ஆகும்.

➢ **தமிழ்நாடு அரசின் - 100 நாள் சாதனைகள்**

- ✓ கொரோனா பெருந்தொற்றிலிருந்து பொதுமக்களைக் காத்தது.
- ✓ ரூ.4,000 ரொக்கம் மற்றும் 14 மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு 2.07 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கியது.

- ✓ பெட்ரோலின் விலையை ஒரு லிட்டருக்கு ரூ.3 குறைத்தது.
- ✓ ஆவின் பால் விலையை ஒரு லிட்டருக்கு ரூ.3 குறைத்தது.
- ✓ பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி.
- ✓ சென்னை கிங் நிறுவன வளாகத்தில் ரூ.250 கோடி மதிப்பில் ஒரு பன்னோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனை ஏற்படுத்தப்படும்.
- ✓ மதுரையில், ரூ.70 கோடி செலவில் நவீன வசதிகளுடன்கூடிய ‘கலைஞர் நினைவு நூலகம்’ அமைக்கப்படும்.
- ✓ ‘முதலீட்டாளர்களின் முதல் இலக்கு – தமிழ்நாடு’ திட்டத்தின்கீழ், 49 தொழில் பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ✓ ரூ.28,508 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது, 83,482 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.
- ✓ ‘விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே மருத்துவ சேவை’ – நாட்டிலேயே முதல் முறை.
- ✓ அனைத்து ஜாதிகளிலிருந்தும் அர்ச்சகர்கள் நியமனம்
- ✓ கோவில்களில் ‘அன்னைத் தமிழில்’ அர்ச்சனை
- ✓ வன்னியர்கள், சீர்மரபினர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 10.5 விழுக்காடு சிறப்பு இட ஒதுக்கீடு
- ✓ வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலனுக்காக தனியான ஆண்டு நிதி நிலை அறிக்கை
- ✓ கொரோனா தொற்று பாதிப்பால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ரூ.5 இலட்சம் மற்றும் ரூ.3 இலட்சம் நிலையான வைப்பு.
- ✓ பத்திரிகையாளர்கள் முன்னணிப் பணியாளர்களாக அறிவிக்கப்பட்டனர். கோவிட்-19 காரணமாக உயிரிழக்கும் பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.10 இலட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்படும்.
- ✓ இலவச மின்சாரத் திட்டத்திற்காக ரூ.4,508.23 கோடி நிதி ஒதுக்கீடு.
- ✓ ‘அண்ணா மறுமலர்ச்சி’ மற்றும் ‘நமக்கு நாமே’ திட்டங்கள் மீண்டும் அறிமுகம்.
- ✓ ரூ.1,245.45 கோடி ஒதுக்கீட்டில், ‘கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்’
- ✓ ‘மீனவர்களின் நலனுக்காக’ ரூ.1,149.79 கோடி நிதி ஒதுக்கீடு.
- ✓ ரூ.1000 கோடி ஒதுக்கீட்டில், ‘கலைஞரின் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்’.
- ✓ மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வழங்கப்பட்ட ரூ.2,750 கோடி கடன்கள் தள்ளுபடி. ரூ.20,000 கோடி கடன் உதவி.
- ✓ தமிழ்நாடு மற்றும் தமிழர்களுக்காக பங்காற்றிய சிறந்த நபர்களுக்கு வழங்குவதற்காக ‘தகைசால் தமிழர் விருது’ ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ உலகப் புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர்களைக் கொண்ட ‘பொருளாதார ஆலோசனைக் குழு’ ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ சென்னையை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்காக ‘சிங்கார சென்னை 2.0’ திட்டம்.

➢ **நீலகிரி மலை இரயில் (The Nilgiri Mountain Railway) – உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நிலக்கரியைக் கொண்டு இயங்கும் எஞ்சின் வழங்கப்பட உள்ளது.**
- ✓ 10ம் நிலை தரத்திலான நீராவி எஞ்சின் திருச்சியில் உள்ள பொன்மலை இரயில்வே பணிமனையில் தயாரிக்கப்பட்டது.
- ✓ இந்தப் பணிமனையில் தயாரிக்கப்படும் நிலக்கரி கொண்டு இயங்கும் முதலாவது மீட்டர் இரயில்பாதை எஞ்சின் இதுவே முதலாவது ஆகும்.

➢ **மின் பார்வை (E – Paarvai)**
- ✓ **தமிழ்நாடு மின் ஆளுகை முகமை (Tamil Nadu e-Governance Agency) யின் விருது பெற்ற கைப்பேசி செயலி, மின்-பார்வை** – கண் புரை நோய் உள்ள நோயாளிகளை அடையாளம் காண்பதற்கு அரசு மருத்துவமனைகளுக்கு உதவுகிறது.
- ✓ செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான ‘மின்-பார்வை’ என்று பெயரிடப்பட்டுள்ள இந்த செயலியானது, சுகாதாரப் பணியாளர்கள் 91 விழுக்காடு துல்லியமாக கண்புரை நோயை அந்த இடத்திலேயே கண்டுபிடிக்க உதவுகிறது.
- ✓ தமிழ்நாட்டில் சிகிச்சையளிக்கப்படாத கண்புரை நோய்களே பார்வை இழப்பிற்கு முதன்மைக் காரணமாக அமைகின்றன.

➢ **புகழ்பெற்ற பா.ஜ.க. தலைவரும் இந்தக் கட்சியின் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமாகிய எல். கணேசன், மணிப்பூர் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

➢ **தமிழ்நாட்டில், சென்னை உள்ளிட்ட ஆறு விமான நிலையங்கள், 491 கிமீ தேசிய நெடுஞ்சாலை, நீலகிரி மலை இரயில்** - ஆகியவை தேசிய பணமாக்குதல் திட்டத்தின்கீழ், மேற்கொள்ளப்படுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சில கட்டமைப்பு சொத்துகளாகும்.
- ✓ இந்திய தேசிய அனல்மின் கழகத்தின் சூரிய சக்தி உற்பத்தித் திறன், காவேரி வடிநிலப் பகுதியில் எரிவாயுக்குழாய் பதிப்பு, தூத்துக்குடியில் உள்ள வஉசி துறைமுகத்தின் சில துறைமுக சொத்துகள்,

புதுச்சேரி மற்றும் சென்னையில் உள்ள சில இரயில் நிலையங்கள், புதுச்சேரியில் உள்ள ஹோட்டல் அசோக் ஆகியவை ஒன்றிய அரசுடன் இணைந்து மேற்கொள்ளப்பட உள்ள சில திட்டங்களாகும்.

- ✓ 2022ஆம் நிதியாண்டில் பிரவுன்.ஃபீல்டு அரசு மற்றும் பொதுத்துறை பங்களிப்பு மூலமாக திருச்சி விமான நிலையத்தில் நாணயமாக்கல் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.
- ✓ இதைத் தொடர்ந்து 2023ஆம் நிதியாண்டில் மதுரை மற்றும் கோயம்புத்தூர் விமான நிலையங்களிலும், 2024ஆம் நிதியாண்டில் சென்னை விமான நிலையத்திலும் இந்தப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.
- ✓ மாநிலத்தில் 2022-2025ஆம் நிதி ஆண்டில் இந்த நாணயமாக்கல் பணிக்காகத் கீழே கொடுக்கப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

| முதல் | முடிய | தூரம் |
|---|---|---|
| உளுந்தூர்பேட்டை | பாடாலூர் | 94 கிமீ |
| உளுந்தூர்பேட்டை | தின்டிவனம் | 73 கிமீ |
| திருச்சி | பாடாலூர் | 38 கிமீ |
| கிருஷ்ணகிரி | தொப்பூர் கணவாய் | 63 கிமீ |
| ஓசூரில் ஆறுவழிப் பாதை | கிருஷ்ணகிரி | 60 கிமீ |
| தாம்பரம் | தின்டிவனம் | 46.5 கிமீ |
| திருச்சி | திருச்சி பைபாஸ் உட்பட காரைக்குடி | 117 கிமீ |

- ➢ **100 கோடி ரூபாய் நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்கி வைத்தது.**
  - ✓ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தைப் போலவே, நகர்ப்புற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக, தமிழ்நாடு அரசு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தை ரூ.100 கோடி செலவில் செயல்படுத்தும் என்று, நகராட்சி நிர்வாகம், நகர்ப்புறம் மற்றும் நீர் விநியோகத்துறை அமைச்சர் திரு.கே. என். நேரு, செவ்வாய்க்கிழமை சட்டப் பேரவையில் அறிவித்தார்.
  - ✓ இந்தத் திட்டத்தின் நோக்கம், கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக தங்கள் வேலைகளை இழந்த நகர்ப்புற ஏழை மக்களுக்கு, முன்னாள் இந்திய ரிசர்வ் வங்கி கவர்னர் சி. ரங்கராஜன் தலைமையிலான குழு பரிந்துரைத்ததற்கு ஏற்ப, வேலை வாய்ப்பை வழங்குவதே ஆகும்.

- ➢ **சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம், 'நியோ போல்ட்' (Neo Bolt) என்ற பெயரிலான உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது மோட்டார் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலியை வடிவமைத்துள்ளது**
  - ✓ சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம், 'நியோ போல்ட்' (NeoBolt) என்ற பெயரிலான உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது மோட்டார் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலியை வடிவமைத்துள்ளது. இதை சாலைகளில் மட்டுமல்லாது, சமபரப்பு இல்லாத மலைப்பகுதிகளிலும்கூட பயன்படுத்த முடியும். இதன் அதிகபட்ச வேகம் ஒரு மணிக்கு 25 கிமீ ஆகும்.

- ➢ **தமிழ்நாட்டின் ஆறு நகராட்சிகள்** - தாம்பரம், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர் மற்றும் சிவகாசி – அவற்றின் அருகில் உள்ள சில பகுதிகளையும் இணைத்து மாநகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும்.

- ➢ **ஆகஸ்ட் மாதத்தில், தொழில்முறை பட்ட வகுப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்கள் சேர்வதற்காக 7.5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவை ஒருமனதாக நிறைவேற்றியது.**
  - ✓ ஓய்வு பெற்ற நீதிபதி டி. முருகேசன் தலைமையிலான குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப இந்த மசோதா வடிவமைக்கப்பட்டுள்ளது.

- ➢ **தமிழ்நாடு அரசு, அபிவிருத்தி கொள்கை கவுன்சிலின் பெயரை மாற்றியுள்ளது**
  - ✓ தமிழ்நாடு அரசு கடந்த புதன்கிழமை மாநில அபிவிருத்திக் கொள்கைக் குழுவின் பெயரை தேசிய திட்டக் குழு என்று மாற்றியமைத்துள்ளது.
  - ✓ இந்த மாற்றத்தை உடனடியாக செயல்படுத்தும் வண்ணம் அரசு ஆணையை வழங்கியுள்ளது.
  - ✓ 2020ஆம் ஆண்டில், திட்டம், திட்டமில்லாதது என்ற வேறுபாடுகளைக் களைந்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, 1971ல் தோற்றுவிக்கப்பட்ட மாநில திட்டக் குழுவை, மாநில அபிவிருத்திக் கொள்கைக் குழு என்று மாற்றியமைத்தது.
  - ✓ இந்த மாநில அபிவிருத்திக் கொள்கைக் குழுவிற்கு, சிறிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் மூலோபாய ஆவணங்களைத் தயாரித்தல், கண்காணித்தல், மதிப்பிடுதல் மற்றும் கொள்கை வக்காலத்து, கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகள் வழங்கப்பட்டன.

- ➢ **தமிழ்நாடு அரசு – அடுத்த பத்து ஆண்டுகளில் வட்டத் தலைநகரங்களையும் மாவட்டத் தலைநகரங்களையும் இணைக்கும் சாலைகளை அகலப்படுத்துவதற்காக, 'முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம்' ஐ அறிவித்துள்ளது.**

- **மாநில அரசு – 'ஒப்பந்ததாரர்களின் ஏகபோகத்தை' ஊக்குவிக்கக் கூடிய, முந்தைய அஇஅதிமுக அரசின் 'செயல்திறன் அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம்' (performance-based maintenance contract) ஐ நீக்கம் செய்வதாக அறிவித்துள்ளது.**

- **தமிழ்நாடு சட்டப் பேரவை –** நாட்டின் வேளாண்மை வளர்ச்சிக்கும் விவசாயிகளின் நலன்களுக்கும் பலனளிக்காத மூன்று சர்ச்சைக்குரிய பண்ணை சட்டங்களை ரத்து செய்யுமாறு ஒன்றிய அரசைக் கேட்கும் ஒரு தீர்மானத்தை இயற்றியுள்ளது.

- **சிங்கார சென்னை 2.0**
  - ✓ தமிழ்நாடு முதலமைச்சர் 'சிங்கார சென்னை' திட்டத்தை புதுப்பித்து ஆணையிட்டிருக்கிறார். 1996ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில் திமுக வெற்றி பெற்ற பிறகு, இந்தத் தலைநகரத்தின் மேயராக அப்போது இருந்த மு.க. ஸ்டாலின், இந்த நகரத்தை குப்பைகள் இல்லாமல் தூய்மையாக வைத்திருக்கவும், புதிய மேம்பாலங்கள் போன்ற கட்டமைப்புத் திட்டங்கள் மூலமாக இந்த நகரத்தை தழைத்தோங்கச் செய்வதற்காகவும் 'சிங்கார சென்னை' என்ற திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தார்.

- **திருநெல்வேலியில் நாட்டுக் கோழி குஞ்சு பொறிப்பகம்**
  - ✓ நாட்டுக்கோழி இறைச்சி மற்றும் முட்டைக்கு பொது மக்களிடையே நல்ல வரவேற்பு இருப்பதால், திருநெல்வேலியில் உள்ள அபிசேகப்பட்டியில் நாட்டுக்கோழிக்கென தனியான ஒரு பண்ணையை அரசு அமைக்க உள்ளது.
  - ✓ இதை மீன்வளம், மீனவர் நலம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் சனிக்கிழமை அன்று சட்டப் பேரவையில் தெரிவித்தார்.
  - ✓ சிறுவிடை கோழி இனம் (**Siruvidai chicken breed**), ரூ.1.52 கோடி செலவில், சென்னை, மாதவரத்தில் அமைக்கப்படும்.

- **சேலத்தில் சர்க்கரை சேர்க்கப்படாத பால்கோவா அலகு அமைக்கப்படும்**
  - ✓ பால் மற்றும் பால் அபிவிருத்தித் துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், தஞ்சாவூர் மாவட்டம், புதுக்கோட்டையில், ரூ.25 கோடி செலவில் கால்நடை தீவன உற்பத்தி அலகு அமைக்கப்படும் என்று அறிவித்ததார்.
  - ✓ மேலும், பால் உற்பத்தியாளர்களின் வருவாயைப் பெருக்குவதற்காகவும், சர்க்கரை சேர்க்கப்படாத பால்கோவாவின் தேவை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டும், சேலத்தில் சர்க்கரை சேர்க்கப்படாத பால்கோவா அலகு அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இதற்காக மொத்தம் ரூ.8.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

- **தமிழ்நாடு – செப்டம்பர் 2019 முதல் போக்குவரத்து விதிமீறல்களுக்காக மின்-சலான்கள் வாயிலாக அபராதம் வசூலிப்பதில் ஐந்தாவது இடத்தில் உள்ளது. இதன்மூலம் ரூ.140.9 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.**

- **ஆகஸ்ட் மாதத்தில், வ.உ.சிதம்பரனார் துறைமுகம் - 93,719 டன்கள் எடை கொண்ட மிகப்பெரிய பார்சலைக் கொண்டு வந்த கப்பலைக் கையாண்ட ஒரு புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளது.**

- **ஆகஸ்ட் 15 அன்று, முதலமைச்சர் முக ஸ்டாலின் - 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கோட்டை கொத்தளத்திலிருந்து இந்தியாவின் மூவர்ணக் கொடியை முதல்முறையாக ஏற்றி வைத்து, காவல் துறையினர் வழங்கிய அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.**
  - ✓ அவருடைய உரையின்போது, தன்னுடைய தந்தையும், முன்னாள் முதலமைச்சருமாகிய டாக்டர். கலைஞர். மு. கருணாநிதி அவர்கள், முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு கடிதம் எழுதியதையும், அதைத் தொடர்ந்து 1974 முதல் ஆகஸ்ட் 15 அன்று முதலமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் நடைமுறை பின்பற்றப்படுவதாகவும் தெரிவித்தார்.
  - ✓ 1973 ஆம் ஆண்டு வரை, சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் ஆகிய இரண்டு தினங்களிலுமே ஆளுநர்களே தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.
  - ✓ அதே சமயம் இந்திய சுதந்திரத்தின் வைர விழா (75ஆம் ஆண்டு) நிகழ்ச்சிகள் நடைபெறுவதை முன்னிட்டு முதலமைச்சர் முக ஸ்டாலின் ஒரு 'நினைவுத் தூணையும்' திறந்து வைத்தார்.
  - ✓ அதே சமயம் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் ஓய்வூதியம் ரூ.17,000 லிருந்து ரூ.18,000 ஆக அதிகரிக்கப்படுவதாகவும், அவர்களின் குடும்ப ஓய்வூதியம் ரூ.8,500 லிருந்து ரூ.9,000 ஆக அதிகரிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.
  - ✓ இளைஞர்களையும் காந்தியக் கோட்பாடுகளின்பால் ஈர்ப்பதற்காக மதுரையில் உள்ள மகாத்மா காந்தி மியூசியம் ரூ.6.00 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

- **தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - ஆகஸ்ட் 15, 2021 அன்று சுதந்திர தினத்தை முன்னிட்டு பல்வேறு விருதுகளையும் வழங்கியுள்ளார்.**
  - ✓ **துணிச்சல் மற்றும் வீரதீரச் செயல்களுக்கான கல்பனா சாவ்லா விருது, மரணத்திற்கு பிந்தைய விருதாக, மதுரை, அனுப்பானடி, ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் டாக்டர். பி. விஷ்ணுப் பிரியாவுக்கு வழங்கப்படுகிறது. இதை அவரது கணவர் ஏற்றுக் கொண்டார்.**
  - ✓ டாக்டர். ஏபிஜெ அப்துல் கலாம் விருது, டாக்டர் எம். லக்ஷமணன், பாரதிதாசன் பல்கலைக் கழக, புகழ்பெற்ற பேராசிரியருக்கு வழங்கப்படுகிறது.
  - ✓ டாக்டர். எம். லக்ஷ்மணன், கோட்பாட்டு இயற்பியலில் நேரியல் அல்லாத இயக்கவியல் என்ற பிரிவில் ஒரு சிறப்பறிஞராவார். கலிபோர்னியா பல்கலைக் கழகம் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையின்படி, உலகின் தலைசிறந்த 2 விழுக்காடு விஞ்ஞானிகளில் இவர் இடம் பிடித்துள்ளார்.
  - ✓ தூய மசாலா மற்றும் மசாலா தூள் உற்பத்தி வணிகத்தில் சிறந்து விளங்கும், டாக்டர்.. சாந்தி துரைசாமி அவர்களுக்கு, மாற்றுத் திறனாளிகளுக்கு அவர் ஆற்றிய சேவைகளையும், அவரது இதர சமூக சேவை நடடிவக்கைகளையும் பாராட்டி, அவ்வையார் விருது வழங்கப்பட்டுள்ளது.
  - ✓ மூன்றாம் பாலினத்தவரின் சிறந்து விளங்குபவருக்கான விருது, தூத்துக்குடியைச் சேர்ந்த கிரேஸ் பானுவுக்கு, சமூக நலத்திற்காக அவர் ஆற்றிய சேவைக்காக வழங்கப்படுகிறது.
  - ✓ தஞ்சாவூர், சிறந்த மாநகராட்சிக்கான விருதைப் பெற்றது.
  - ✓ உதகமண்டலம், திருச்செங்கோடு மற்றும் சின்னமனூர் ஆகியவை, மாநிலத்தில் உள்ள சிறந்த நகராட்சிகளில் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசுகளைப் பெற்றன.
  - ✓ சிறந்த பேரூராட்சிக்கான விருதுகள் முறையே கள்ளக்குடி (திருச்சி), மேலபட்டாம்பாக்கம் (கடலூர்) மற்றும் கோட்டையூர் (சிவகங்கை) ஆகிய நகரங்களுக்கு வழங்கப்பட்டன.
  - ✓ முதலமைச்சரின் மாநில இளைஞர்களுக்கான விருது சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த அரவிந்த் ஜெயபால், திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த என். பஜுருதீன், நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். ரஞ்சித் குமார், திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த ஜி. மகேஷ்வரி, கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த அமலா ஜெனிபர் ஜெயராணி மற்றும் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த, எஸ். மீனா ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
  - ✓ தனிப்பட்ட ஆர்வத்தைக் காட்டியமைக்காக முதலமைச்சரின் சிறந்த நடைமுறைகளுக்கான விருது, கே. நாராயணசாமி, இயக்குநர், அரசு கொரோனா மருத்துவமனை, கிண்டி அவர்களுக்கு, கிண்டியில் உள்ள கிங் மருத்துவமனை வளாகத்தில் உள்ள வயதானவர்களுக்கான தேசிய நிறுவனத்தின் கட்டிடத்தை கோவிட்-19 நோயாளிகளுக்கான ஒரு பிரத்தியேகமான ஒரு மருத்துவமனை கட்டிடமாக மறுகட்டுமானம் செய்தமைக்காக, வழங்கப்படுகிறது.
  - ✓ வேலூர் மாவட்டத்தின் மாவட்ட வருவாய் அலுவலர் ஜே. பார்த்திபனுக்கு, மின் தொகுதிகளைப் (e-modules) பயன்படுத்தி நிலம் கையகப்படுத்தும் செயல்முறையை எளிமைப்படுத்தியதற்காகவும், இழப்பீட்டை நிர்ணயிப்பதில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ததற்காகவும் விருது வழங்கப்பட்டது.
  - ✓ திருச்சிராப்பள்ளி ஹோலி கிராஸ் சர்வீஸ் சொசைட்டியைச் சேர்ந்த பி. பத்மபிரியா, மருத்துவ அதிகாரி சேலம், நாகர்கோவிலைச் சேர்ந்த மரியா அலோயிசிஸ் நோவாமணி, சென்னையைச் சேர்ந்த 'நாங்கள் உங்கள் குரலாக இருக்கிறோம்', ஈரோடு மத்திய கூட்டுறவு வங்கி ஆகியவற்றிற்கு மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை ஆற்றியமைக்காக விருது வழங்கப்பட்டது.
  - ✓ முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது, காவல்துறை மற்றும் தீயனைப்பு வீரர்களுக்கான விருதுகளையும் முதல்வர் வழங்கினார்.
- **ஆகஸ்ட் 14 அன்று, மூத்த கம்யூனிஸ்ட் தலைவரும் நூற்றாண்டு வயதை எட்டியவருமான என். சங்கரய்யாவுக்கு முதலமைச்சர் முதல் தகைசால் தமிழர் விருதுடன் ரூ.10 லட்சத்திற்கான காசோலையையும் வழங்கினார்.**

- **தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் - நாட்டின் இரண்டாவது சிறந்த வாரியமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.**

- **மாநில அரசு – தமிழ்நாடு மின் ஆளுகை முகமைக்கு முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி பி டபிள்யூசி டேவிதாரை ஆலோசகராக (டிஜிட்டல் மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட நிர்வாகம்) நியமித்துள்ளது.**

- **தமிழ்நாடு – சீர்மிகு நகரங்கள் முன்னேற்றத்தில் சிறப்பாக செயல்பட்ட மாநிலமாகத் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.**
  - ✓ **தமிழ்நாட்டில் உள்ள சென்னை மற்றும் கோயம்புத்தூர், மத்தியப் பிரதேசத்தில் உள்ள இந்தூர், போபால் மற்றும் உஜ்ஜைன், குஜராத்தில் உள்ள சூரத் மற்றும் ராஜ்கோட் ஆகிய நகரங்கள் பல்வேறு பிரிவுகளின்கீழ் சிறப்பாக செயல்பட்ட நகரங்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.**
  - ✓ **நாடு முழுவதிலும் உள்ள 100 மாநகரங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2015ஆம் ஆண்டில் சீர்மிகு நகரங்கள் இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது.**

- **3 பெண் நீதிபதிகள் உள்ளிட்ட 9 புதிய உச்சநீதி மன்ற நீதிபதிகள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்**
  - ✓ 3 பெண் நீதிபதிகள் உள்ளிட்ட 9 புதிய உச்ச நீதி மன்ற நீதிபதிகளுக்கு உச்ச நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி என்.வி. ரமணா அவர்கள் பதவிப் பிரமானம் செய்து வைத்தார்.

  - ✓ நீதியரசர் விக்ரம் நாத்
  - ✓ நீதியரசர் பிவி நாகரத்னா
  - ✓ நீதியரசர் பிஎஸ் நரசிம்மா
  - ✓ நீதியரசர் அபய் ஸ்ரீனிவாஸ் ஓகா
  - ✓ நீதியரசர் ஜிதேந்திர குமார் மகேஸ்வரி
  - ✓ நீதியரசர் ஹிமா கோலி
  - ✓ நீதியரசர் சிடி ரவிகுமார்
  - ✓ நீதியரசர் எம்எம் சுந்த்ரேஷ்
  - ✓ நீதியரசர் பேலா எம் திரிவேதி

- **டாக்டர். ஜெ. ஜெயலலிதா பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது.**
  - ✓ தமிழ்நாடு அரசு – டாக்டர். ஜெ. ஜெயலலிதா பல்கலைக் கழகத்தை அண்ணாமலைப் பலக்லைக் கழகத்துடன் இணைப்பதற்கான மசோதாவை சட்ட மன்றத்தில் நிறைவேற்றியது.
  - ✓ திமுக அரசின் மசோதா டாக்டர். ஜெ. ஜெயலலிதா பல்கலைக் கழக சட்டம் 2021ஐ ரத்து செய்ய முனைகிறது.

- **எதிர்கால நடமாடும் மற்றும் ஆடைகளுக்கான பூங்காவை அமைப்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்தது**
  - ✓ ரூ.400 கோடி செலவில் விருதுநகர் மாவட்டத்தில் ஒரு ஒருங்கிணைந்த ஆடை பூங்கா, 300 கோடி செலவில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு எதிர்கால நடமாடும் பூங்கா மற்றும் 250 கோடி செலவில் திருவள்ளுர் மாவட்டத்தில் ஒரு சிப்காட் தொழிற்பூங்கா ஆகியவை தமிழக அரசு செவ்வாய் கிழமை சட்ட மன்றத்தில் வெளியிட்ட அறிவிப்புகளில் முக்கியமான சில அறிவிப்புகளாகும்.

- **ஒன்பது புதிய மாவட்டங்களின் வாக்காளர் பட்டியல் வெளியீடு**
  - ✓ எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தல் முன்னிட்டு தமிழ்நாடு அரசின் மாநில தேர்தல் ஆணையம் செவ்வாய் கிழமை அன்று, மாநிலத்தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாநிலங்களின் வாக்காளர் பட்டியலை வெளியிட்டது.
  - ✓ வழங்கப்பட்டுள்ள தரவுகளின்படி, செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, தென்காசி, திருநெல்வேலி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 76,59,720 வாக்காளர்கள் உள்ளனர்.

- **தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் இனிமேல் 'தமிழ்நாடு நகர்ப்புற குடியிருப்பு அபிவிருத்தி வாரியம்' என்று அழைக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அறிவித்தார்.**
  - ✓ நகர்ப்புற சேரிப் பகுதிகளில் வசிக்கும் / ஏழை மக்களுக்கு 2030ஆம் ஆண்டுக்குள் வீடு கட்டிக் கொடுப்பதற்காக, 'அனைவருக்கும் வீட்டுவசதி' திட்டம் செயல்படுத்தப்படும்.

- **கடற்பாசி பூங்கா**
  - ✓ பெருநகர சென்னை மாநகராட்சி – மணலி மண்டலத்தில் உள்ள கார்கில் நகர் வெள்ளநீர் இறைக்கும் நிலையத்தில் செயற்கை குளம் மற்றும் மழை தோட்டங்களுடன் கூடிய 'கடற்பாசி பூங்கா'வை அமைக்க திட்டமிட்டுள்ளது.

- **தனித்துவமான சுகாதார அடையாள அட்டை**
  - ✓ தமிழ்நாடு அரசு – மாநிலத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்துவமான சுகாதார அடையாள அட்டையை வழங்கத் திட்டமிட்டுள்ளது.
  - ✓ அந்தப் பதிவில் பயனாளியின் பெயர், வயது, பாலினம், கைபேசி எண், ஸ்மார்ட் குடும்ப அட்டை எண், சுகாதார அடையாள எண், தெரு விபரம், சுகாதார கிளைநிலையம் ஆகிய விவரங்கள் அடங்கியிருக்கும்.
  - ✓ இந்த தனித்துவமான சுகாதார அடையாள அட்டை வழங்கும் திட்டத்தின் முன்னோடிப் பணியை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இரண்டு வட்டாரங்களில் மாநில அரசு ஏற்கனவே தொடங்கியுள்ளது.

- **தமிழ்நாடு சிறுதொழில் கழகம் லிமிடெட் (டான்சிட்கோ) – திருவள்ளுர், செங்கல்பட்டு, திருச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள குறு, சிறு, நடுத்தர தொழில்களுக்காக ரூ.218.22 கோடி செலவில் நான்கு தொழிற்பேட்டைகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.**
  - ✓ தமிழ்நாடு தொடக்க விதை மானிய நிதி (TANSEED) மூலம், இந்த ஆண்டு 50 தொடக்க நிறுவனங்களுக்கு தலா ரூ.10 இலட்சம் மானியம் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

- **தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் - மாநிலத்தில் உள்ள தொழில்துறை மாசுபடுத்துபவர்களை ஜியோ டேக் செய்வதற்காக 'ஜியோ ஸ்பேஷியல் சர்வீசஸ்' என்ற ஒரு போர்ட்டலைத் தொடங்க உள்ளது.**

- **மாநில அரசு – தொழிற்சாலைகளில் இருந்து கழிவுகள் வெளியேறி நீர்நிலைகளில் கலப்பதைத் தடுப்பதற்காக ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 10 இடங்களில் பொதுவான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை (common effluent treatment plants) அமைக்க உள்ளது.**

- **நீலக்கொடி சான்றளிப்பு**
  - ✓ தமிழ்நாடு அரசு – மெரினா மற்றும் மாநிலத்தில் உள்ள ஒன்பது கடற்கரைகளுக்கு மதிப்பு மிக்க நீலக்கொடி சான்றிதழைப் பெறுவதற்காக அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ.100 கோடியை செலவழிக்கத் திட்டமிட்டுள்ளது.

- **தமிழ்நாடு முதலமைச்சர் - 19ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழ் அறிஞர் அயோத்திதாஸ் பண்டிதரின் 175வது பிறந்த நாளை முன்னிட்டு வட சென்னையில் அவருக்கு மணிமண்டபம் கட்ட உள்ளதாக அறிவித்துள்ளார்.**
  - ✓ **அயோத்தி தாஸ் பண்டிதர்** மே 20, 1845 அன்று சென்னையில் உள்ள இராயப்பேட்டையில் காத்தவராயனாகப் பிறந்தார்.
  - ✓ அவரது குருவின் மீதுள்ள மரியாதை மற்றும் பாசத்தின் காரணமாக, அவர் தனது ஆசிரியரான அயோத்திதாச கவிராஜ பண்டிதரின் பெயரால் அயோத்திதாஸ் என்ற பெயரைப் பெற்றார்.
  - ✓ அவரது தாத்தா கந்தப்பன், 'திருக்குறள்' மற்றும் 'நாலடியார்' நூல்களின் பனைஓலை கையெழுத்துப் பிரதிகளை ஆங்கிலேய அரசு ஊழியர் பிரான்சிஜஸ் வைட் எல்லிஸ் என்பவரிடம் கொடுத்து, அவற்றை வெளியிட உதவினார்.
  - ✓ அயோத்தி தாஸ் பண்டிதர், ஜாதி அமைப்பை எதிர்த்துப் போராடும் நோக்கத்துடன், 1870ல் அத்வைத சபாவையும், 1891ல் 'திராவிட மகாஜன சபையை'யும் நிறுவினார்.

- **வ.உ.சிதம்பரனாரின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள்**
  - ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தன்னுடைய சுதந்திர தின உரைக்கு ஏற்ப சட்டசபையில் 14 அறிவிப்புகளை வெளியிட்டார். சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனாரின் 150வது பிறந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்பது அதில் ஒன்று ஆகும்.
  - ✓ இந்த சுதந்திரப் போராட்ட வீரரின் நினைவு நாள் 'தியாக தினமாக' அனுசரிக்கப்படும்.

- **தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்** - பருத்தி மற்றும் பருத்திக் கழிவுகளுககு விதிக்கப்படும் 1 விழுக்காடு சந்தை வரியை ரத்து செய்வதாக அறிவித்தார்.

- **முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்** - செப்டம்பர் 5 அன்று 389 விருது பெறும் ஆசிரியர்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட 15 பேருக்கு டாக்டர். இராதாகிருஷ்ணன் விருதை வழங்கினார்.
  - ✓ இந்த ஆண்டு, புதுமையான கற்பித்தல், கல்விக்கான வடிவமைப்பு, சுற்றுச் சூழல் மேம்பாடு மற்றும் மாணவர் சேர்க்கை ஆகியவற்றில் சிறந்து விளங்கிய 389 ஆசிரியர்களுக்கு டாக்டர். இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்பட்டது.

- **செப்டம்பர் 6 ஆம் தேதி, அரசு நடத்தும் மின்வாரியமான தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் (டாஞ்செட்கோ),** பரஸ்பர ஒத்துழைப்புக்கான இந்திய நிறுவனமாகிய இந்திய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேம்பாட்டு நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
  - ✓ அதன்படி, டாஞ்செட்கோ நிறுவனம், திறமையான புதுப்பிக்கத்தக்க ஒருங்கிணைப்புக்காக, 20,000 மெகாவாட் சூரிய மின்சக்தித் திட்டம், 3,000 மெகாவாட் பம்ப் ஸ்டோரேஜ் நீர்மின்சக்தித் திட்டம் மற்றும் 2,000 மெகாவாட் எரிவாயு அடிப்படையிலான மின்நிலையம் ஆகியவற்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.
  - ✓ 15,000 மெகாவாட் சராசரி தேவையுடன் ஒப்பிடுகையில் அனல் மின் நிலையங்களிலிருந்து மாநிலத்தின் சொந்த உற்பத்தி 4,320 மெகாவாட் மட்டுமே என்பதால் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் முதலீடு செய்ய மாநில அரசு ஆர்வமாக உள்ளது.

- **தமிழ்நாடு அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது: அமர்வதற்கு தொழிலாளர்களுக்கு உரிமை உள்ளது.**
  - ✓ நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுக்கு இருக்கை வசதி வழங்குவதை கட்டாயமாக்கும் ஒரு மசோதாவை தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தியது.
  - ✓ ரோஜா பூவின் மென்மையை அனைத்து ஊழியர்களிடத்தும் கடைபிடிக்க வேண்டும் என்று இதற்கு பொருள் கொள்ள முடியாது. ஆனால், திங்களன்று மாநில அரசு சட்ட மன்றத்தில் அறிமுகம் செய்து வைத்த மசோதா 'தொழிலாளர்களின் அமர்வதற்கான உரிமையை' அங்கீகரிப்பதன்மூலம் புரட்சிகரமான கருத்தை முன்வைத்துள்ளது.

- **செப்டம்பர் மாதம் மாநில அரசு இவ்வாறு அறிவித்தது** – மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைத் தவிர்த்து, மாநிலம் முழுவதும் உள்ள சூரிய மின்சக்தி பூங்காக்கள், 2,000 மெகாவாட் பேட்டரி சேமிப்பு அமைப்புடன், 4,000 மெகாவாட் சூரிய சக்தி ஆற்றலை உருவாக்க உள்ளன.

- **முதலமைச்சர் மு.க ஸ்டாலின்** - தமிழக கடற்கரைகளில் கடல் காற்று ஆலைகளை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக, செப்டம்பர் 8ஆம் தேதி, டென்மார்க்கில் இருந்து வந்துள்ள வணிகக் குழுவுடன் விவாதிக்க உள்ளார்.
  - ✓ கடற்கரைகளில் காற்று ஆலைகளை அமைப்பதற்காக, CoE அலுவலகம் சென்னையில் அமைக்கப்பட வாய்ப்பு உள்ளது.
  - ✓ செப்டம்பர் அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு வழிகாட்டும் குழு ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பேசிய மாநில தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு டென்மார்க் குழுவிடம் பேசினார்.
  - ✓ டென்மார்க்கின் ஆதரவை தமிழ்நாட்டிற்கு வழங்கிய, டென்மார்க்கின் காலநிலை, எரிசக்தி மற்றும் பயன்பாடுகளுக்கான அமைச்சர், டான் ஜானிக் ஜார்ஜென்சன், பசுமை ஆற்றலில் குறிப்பாக காற்றாலை ஆற்றலில் டென்மார்க் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது என்று தெரிவித்தார்.

- **தமிழ்நாடு – டென்மார்க் - மன்னார் வளைகுடாப் பகுதியில் ஒரு ஆற்றல் தீவை அமைப்பதற்காகத் திட்டமிட்டு வருகின்றன.**
  - ✓ இலங்கையின் மேற்கு கடற்கரைக்கும் இந்தியாவின் தென்கிழக்கு முனைக்கும் இடையில் மன்னார் வளைகுடாப் பகுதியில் ஒரு ஆற்றல் தீவை அமைப்பதற்காக தமிழ்நாடும் டென்மார்க்கும் திட்டமிட்டு வருகின்றன.
  - ✓ பசுமை எரிசக்தித் துறையில் தனது தடத்தைப் பதிக்க தமிழ்நாடு விரும்புவதால், இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது.

- **தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - தாமிரபரணி ஆற்றங்கரையில் 3,200 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாகரிகம் செழிப்புற்று இருந்ததாக மாநில சட்டப் பேரவையில் அறிவித்தார்.**
  - ✓ தூத்துக்குடி மாவட்டத்தில் சிவகலையில் கண்டெடுக்கப்பட்ட தாழியில் கண்டுபிடிக்கப்பட்ட நெல் கி.மு.1155க்கு முந்தையது என்பதை கார்பன் டேட்டிங் காட்டியது.
  - ✓ தாமிரபரணி ஆறு மேற்கு தொடர்ச்சி மலையின் பொதிகை மலையில் தொடங்கி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் வழியாகப் பாய்ந்து கொற்கையில் காலியாகிறது. அதாவது திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து மன்னார் வளைகுடாவிற்குச் செல்கிறது.
  - ✓ தூத்துக்குடி மாவட்டத்தில் தாழியில் கண்டுபிடிக்கப்பட்ட நெல் கி. மு. 1,155க்கு முந்தையது ஆகும். இது தற்போது அகழ்வாராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சிவகங்கை மாவட்டம் கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட மாதிரிகளை விட 600 ஆண்டுகள் பழமையானது ஆகும்.
  - ✓ வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி, சிந்து சமவெளி நாகரிகத்திலும் தென்னிந்தியாவிலும் காணப்படும் கிரா∴பிட்டி 80 விழுக்காடு ஒரே மாதிரியாக உள்ளது.
  - ✓ மாநில தொல்லியல் துறை தற்போது ஆதிச்சநல்லூர், சிவகலை, கொற்கை, கொடுமணல், மயிலாடும்பாறை மற்றும் கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் ஆகழ்வாராய்ச்சிப் பணிகளை செய்து வருகிறது என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

- **தமிழ்நாடு அரசு மூன்று புதிய இடங்களில் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது** – அவை, விருதுநகரில் உள்ள வெம்பக் கோட்டை, திருநெல்வேலியில் உள்ள துலுக்கர்பட்டி மற்றும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலை ஆகும்.

- **'பொருணை நாகரிகம் 3,200 ஆண்டுகள் பழமை வாய்ந்தது'**
  - ✓ பொருணை ஆற்று (தாமிரபரணி) நாகரிகம் சுமார் 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

- **தமிழ்நாடு அரசு 'வலிமை' என்ற பெயரிலான ஒரு புதிய சிமெண்ட்டை அறிமுகப்படுத்த உள்ளது.**

- **தமிழ்நாடு அரசு 'நெய்தல்' என்ற பெயரிலான ஒரு புதிய உப்பை அறிமுகம் செய்ய உள்ளது.**

- **சுதந்திரப் பேராட்ட வீரர் சுப்பிரமணிய பாரதியின் 100 வது நினைவு தினம்**
  - ✓ அனைவருக்கும் சமமான சமூக உரிமைகளை வலியுறுத்திய சுதந்திரப் போராட்ட வீரரின் பங்களிப்புகளை நினைவுகூர்ந்த முதலமைச்சர் செப்டம்பர் 11ஐ 'மகாகவி தினம்' என்று அறிவித்தார்.

- **'ஓலா எலக்ட்ரிக்' – தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் வரவிருக்கும் இருசக்கர வாகன தொழிற்சாலையில் 'அனைத்தும் மகளிரைக்' கொண்ட 100 வலிமையான பணியாளர்கள் இருப்பார்கள் என்று அறிவித்தது.**
  - ✓ ∴பாக்ஸ்கான் குழும நிறுவனத்தில் 25,000 அனைத்து மகளிர் குழுவானது சாதனங்கள் மற்றும் உபகரணங்களை உற்பத்தி செய்து வருகிறது.
  - ✓ சிறப்புத் திட்டமான 'தேஜஸ்வினி' திட்டத்தின்கீழ், ஹீரோ மோட்டார்ஸ் நிறுவனம், தன்னுடைய கடைத் தளத்தில் பணியாற்றும் பெண் ஊழியர்களின் எண்ணிக்கையை 1000க்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.

- **கோவில் நிலத்தை ஆக்கிரமிப்பது, ஜாமீனில் வெளிவர முடியாத குற்றமாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**
  - ✓ தமிழ்நாடு அரசு சட்ட மன்றம், செப்டம்பர் 13, 2021 அன்று, மத நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பதை அறியக்கூடிய மற்றும் ஜாமீனில் வெளிவர முடியாத குற்றமாக மாற்றும் மசோதாவை நிறைவேற்றியது.
  - ✓ தமிழ்நாடு மத மற்றும் தொண்டு நன்கொடைச் சட்டம், 1959க்கு திருத்தம் கோரும் மசோதா செப்டம்பர் 13 அன்று சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.
  - ✓ மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கோவில் நிலங்களை மீட்க தமிழக அரசு ஒரு பெரிய இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.

- **தமிழ்நாடு அரசு – சமூக சீர்திருத்தவாதி பெரியார் ஈ.வெ. இராமசாமியின் பிறந்த நாளாகிய செப்டம்பர் 17ஐ, ஒவ்வொரு ஆண்டும் 'சமூக நீதி தினமாகக்' கொண்டாட உள்ளது.**
  - ✓ தந்தை பெரியார் என்று எல்லோராலும் அழைக்கப்படும், அவர் தற்போதைய ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னோடியாகிய திராவிடர் கழகத்தை நிறுவினார்.
  - ✓ முன்னாள் முதலமைச்சரும் திமுக நிறுவனருமாகிய சி.என். அண்ணாதுரை, 1967ஆம் ஆண்டு சட்ட மன்றத்தில் வெளியிட்ட அறிக்கையில் 'முதல் தி.மு.க. அரசு பெரியாருக்கு ஒரு அஞ்சலி' என்று குறிப்பிட்டதை முதலமைச்சர் நினைவுகூர்ந்தார்.
  - ✓ பாராளுமன்றத்திற்கே செல்லாத பெரியார் காரணமாகத்தான் இந்திய அரசியலமைப்பின் முதல் திருத்தம் வந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

- **சமூக சீர்திருத்த வாதியின் 95 அடி உயர சிலை**
  - ✓ இந்த சிலையானது 40 அடி பீடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. திருச்சியில் உள்ள சிறுகனூரில் அமைக்கப்பட்டுள்ள இந்த சிலையின் ஒட்டு மொத்த உயரம் 135 அடி ஆகும்.

- **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்**
  - ✓ தமிழ்நாடு அரசு – நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குறிப்பாக, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் நிலவும் கட்டமைப்பு இடைவெளியைக் குறைப்பதற்காக, ரூ.1,000 கோடி செலவில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

- **தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகள்** - நிரார் - நல்லார் பன்னோக்கு நேரடி திட்டத்தை மதிப்பிடுவதற்கு தொழில்நுட்ப உப குழுக்களை அமைக்க ஒப்புக் கொண்டுள்ளன.
  - ✓ மேல் நிராரிலிருந்து நல்லார் நதிக்கு நீரை அனுப்பும் நீண்ட சுற்றுப் பாதையைத் தவிர்ப்பதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகளைப் பற்றி இந்தக் குழு விவாதிக்கும்.
  - ✓ தமிழ்நாட்டில் உள்ள நொய்யல் மற்றும் பவானி வடிநிலப் பகுதிக்கு நீரைத் திருப்புவதற்காக பாண்டியர்-புன்னம்புழா திட்டத்தின்கீழ் புதிய அணை கட்டுவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

- **ரவீந்திர நாராயண் ரவி – தமிழ்நாட்டின் 26வது ஆளுநராக செப்டம்பரில் பதவி ஏற்றுக் கொண்டார்**
  - ✓ சென்னை, ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற ஒரு விழாவில் சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி எச்சி, சஞ்சிப் பேனர்ஜி, அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
  - ✓ சுமார் பத்து நிமிடங்கள் நடைபெற்ற இந்த பதவி ஏற்பு நிகழ்ச்சியின்போது, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் செப்டம்பரில் கையெழுத்திட்ட 'நியமன ஆணையை' தலைமைச் செயலாளர் வி. இறையன்பு, வாசித்தார்.

- **சாகித்ய அகாடமி விருதுகள்**
  - ✓ இரண்டு தமிழ் எழுத்தாளர்கள் - டி.இ.எஸ். ராகவன் மற்றும் கே. செல்லப்பன் - 2020ஆம் ஆண்டு மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாடமி விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

- **சாகித்திய அகாடமி விருது வென்றவர்களை முதலமைச்சர் பாராட்டினார்**
  - ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாடமி விருது பெற்வர்களை சனிக்கிழமை அன்று பாராட்டினார். அவர்கள் தமிழ் படைப்புகளை இதர மொழிகளிலும் இதர மொழி படைப்புகளை தமிழிலும் மொழிபெயர்த்தனர்.
  - ✓ அவர், ரவீந்திரநாத் தாகூரின், கோரா என்ற வங்காள மொழி நாவலை தமிழில் மொழிபெயர்த்த கே. செல்லப்பனுக்கு தன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.
  - ✓ திரு.டி.இ.எஸ். ராகவன், தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருக்குறளை இந்தியில் மொழிபெயர்த்தார்.
  - ✓ சல்மா அவர்கள் எழுதிய இரண்டாம் ஜாமங்களின் கதை என்ற தமிழ் நாவலை சோனாலி நவங்குள், மராத்தி மொழியில் மொழிபெயர்த்தார்.

- **ஒன்றிய அரசு சிலம்பத்தை அங்கீகரித்தது**
  - ✓ தமிழர்களால் உருவாக்கப்பட்ட இந்திய தற்காப்புக் கலையாகிய சிலம்பம், ஒன்றிய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் 'கேலோ இந்தியா' திட்டத்தின் 'விளையாட்டு

மூலம் உள்ளடக்கிய ஊக்குவிப்பு' திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவா. வி. மெய்யநாதன் சனிக்கிழமை அன்று தெரிவித்தார்.

- **3 விழுக்காடு ஒதுக்கீட்டின்கீழ்** ஆட்சேர்ப்புக்குத் தகுதியான விளையாட்டுத் துறைகளில் ஒன்றாக 'சிலம்பத்தை', மாநிலத்தில் உருவாக்கப்பட்ட வரலாற்றுக்கு முந்தைய தற்காப்புக் கலையாக மாற்ற மாநில அரசு முடிவு செய்துள்ளது.

- **தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென் மண்டல அமர்வு** – எண்ணூர் அனல் மின்நிலையத்தை விரிவுபடுத்துவதற்கான ஒப்புதலை நிறுத்தி வைத்து, முன்மொழிவு குறித்து பொது விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

- **தமிழ்நாட்டில் உள்ள இரண்டு தனியார் பொறியியல் கல்லூரிகள்** 2021-22 ஆம் ஆண்டு முதல் தமிழில் எந்திரப் பொறியியல் மற்றும் கணினி அறிவியல் பொறியியல் படிப்புகளை வழங்க முன்வந்துள்ளன.
  - ✓ அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரி 11 ஆண்டுகளுக்கு முன்பு தமிழில் பொறியியல் படிப்புகளைத் தொடங்கியதற்குப் பிறகு தற்போதுதான் தமிழில் பொறியியல் படிப்புகள் முதன்முறையாக தொடங்கப்படுகின்றன.

- **கிரந்தா எழுத்துரு (Grantha Script)**
  - ✓ மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஒன்றியத்தில் கருவேலம்பட்டி அருகே கிரந்த எழுத்து மற்றும் சிற்பத்துடன் கூடிய கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- **25 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு தமிழ் எழுத்தாளருக்கு கௌரவம்.**
  - ✓ இ.பா. என்று பொதுவாக அழைக்கப்படும் இந்திரா பார்த்தசாரதி, தற்போது ஒரு சாகித்தியா அகாடமி விருது பெற்றவர் ஆவார்.
  - ✓ 25 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு, சாகித்திய அகாடமி, ஒரு தமிழ் எழுத்தாளரைத் தேர்ந்தெடுத்துள்ளது - இ.பா. என்று பொதுவாக அழைக்கப்படும் இந்திரா பார்த்தசாரதியை – அதன் உயரிய விருதுக்குத் தேர்வு செய்துள்ளது.
  - ✓ 1996ஆம் ஆண்டில், மிகக் குறைவாக 62 வயதை எட்டிய டி. ஜெயகாந்தனே, இந்த அகாடமியின் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டவர் ஆவார் - அவருக்கு முன்பாக இருவர் மட்டுமே இந்த விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டனர் - அவர்கள் சி. ராஜகோபாலாச்சாரி (1969) மற்றும் டி.பி. மீனாட்சி சுந்தரம் (1975).
  - ✓ முந்தைய மூன்று வெற்றியாளர்களைப் பற்றி அவர் பேசும்போது, ராஜாஜி தனது நேர்த்தியான தமிழ் உரைநடைகளுக்கு பெயர் பெற்றவர் என்பதையும், மினாட்சி சுந்தரம் ஒரு சிறந்த தமிழ் அறிஞர் மற்றும் பல மொழிகளில் தேர்ச்சி பெற்றவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.
  - ✓ ஜெயகாந்தன் ஒரு முழுமையான முதல் படைப்பு எழுத்தாளர் என்றார்.

- **தமிழ்நாடு அரசு** – 7.5 விழுக்காடு ஒதுக்கீட்டின்கீழ் தொழிமுறை படிப்புகளில் சேரும் அனைத்து அரசுப் பள்ளி மாணவர்களின் முழு கல்விச் செலவையும் ஏற்றுக் கொள்ள உள்ளது.

- **மனச் சிதைவு நோய் ஆராய்ச்சி அறக்கட்டளை (Schizophrenia Research Foundation), இந்தியா** – மூளைத் தேய்வு உள்ளவர்களின் தேவைக்காகவே சென்னையில் ஒரு பிரத்யேக வசதியை ஏற்படுத்தியுள்ளது.

- **சென்னையில் உள்ள கோவளம் கடற்கரை மற்றும் புதுச்சேரியில் உள்ள ஈடன் கடற்கரை ஆகியவை** மதிப்பு மிக்க 'நீலக்கொடி' சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளன.
  - ✓ உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரத்தின்படி சுத்தமாக மற்றும் நன்கு நிர்வகிக்கப்படும் கடற்கரைகளுக்கு வழங்கப்படும் சர்வதேச சுற்றுச்சூழல் அளவிலான அடையாளம் கொண்ட 10 கடற்கரைகள் இந்தியாவில் உள்ளன.
  - ✓ புதுச்சேரியில் உள்ள ஈடன் கடற்கரை யூனியன் பிரதேசத்தில் இந்த பெருமைக்குரிய விருதைப் பெறும் முதல் கடற்கரையாக உருவெடுத்துள்ளது.

- **தமிழ்நாடு அரசு – பிரதமரின் ஆவாஸ் யோஜனா (கிராமின்) திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக நிலத்தைக் கண்டறிதல் மற்றும் வழங்குவதை விரைவுபடுத்துவதற்காக நான்கு பேர் கொண்ட ஒரு சிறப்புக் குழுவை அமைத்துள்ளது.**

- **செப்டம்பரில் தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை 2021 சென்னையில் நடத்தப்பட உள்ளது.**
  - ✓ உலகம் முழுவதும் தேவைப்படும், காஞ்சிபுரம் மற்றும் ஆரணி பட்டுப் புடவைகள், தஞ்சாவூர் கலைப் படைப்புகள், பத்தமடை பாய்கள், மகாபலிபுரம் கல் சிற்பங்கள், மதுரை மல்லிகை, சிறுமலை வாழைப் பழங்கள் மற்றும் திண்டுக்கல் பூட்டுகள் உள்ளிட்ட மாநிலத்தின் பரந்த அளவிலான புவிசார் குறியீடு

பெற்ற பொருள்டகளின் ஏற்றுமதியில் கவனம் செலுத்துமாறு தொழில்துறையை முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

- **செப்டம்பரில் மாநில அரசு** – விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் மின் இணைப்புகளை அங்கீகரித்தது – அவற்றில் பெரும்பாலானவை இலவசமாகும் - இதன்மூலம் மாநில அரசுக்கு ரூ.3,025 கோடி செலவாகும்.
  - ✓ எரிசக்தித் துறைக்கான மானியக் கோரிக்கையின் (2021-22) போது, விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் மின் இணைப்பு வழங்கும் திட்டம் சமீபத்தில் மாநில சட்டசபையில் அறிவிக்கப்பட்டது.
  - ✓ மாநில அரசு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை மேம்படுத்துவதில் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கவும், ரூ.1.32 இலட்சம் கோடிக்கு நிதி திரட்டவும் இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை லிமிடெட் (Indian Renewable Energy Development Agency Limited) உடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

- **தமிழ்நாடு அரசு** – மாநிலத்தின் ஏற்றுமதி உந்துதலுக்கு கவனம் செலுத்த ஆறு சாம்பியன் துறைகளை அடையாளம் கண்டுள்ளது.
  - ✓ 100 பில்லியன் டாலர் இலக்கை அடைவதற்கு அடையாளம் காணப்பட்ட சாம்பியன் துறைகளில் ஆட்டோமொபைல் மற்றும் ஆட்டோ உதிரி பாகங்கள், ஜவுளி, உணவு பதப்படுத்துதல், தோல் மற்றும் காலணி, மின்னணு மற்றும் தகவல் தொடர்பு மற்றும் இயந்திரங்கள் ஆகியவை அடங்கும்.

- **பள்ளிக் கல்வித்துறை** – கற்றல் இழப்பைத் தடுக்கவும், ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான குழந்தைகளிடையே அடிப்படை கல்வியறிவை உறுதி செய்யவும் மாநிலம் தழுவிய பிரச்சாரத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.
  - ✓ இந்தப் பிரச்சாரத்தின்கீழ், ஒவ்வொருவரும் அடிப்படை எண்ணியல் மற்றும் கல்வியறிவு திறன் பெறுவதை உறுதி செய்வதற்காக, உள்ளூர் தொண்டர்களின் உதவியுடன் பள்ளிகளை மாணவர்களுக்கு அருகில் உள்ள இடங்களுக்குக் கொண்டு செல்ல அரசு திட்டமிட்டுள்ளது.
  - ✓ இது ஒரு அரசு சாரா நிறுவனத்தால் பின்பற்றப்படும் 'வீதி வகுப்பறை' (தெருக்களில் வகுப்புகள்) மாதிரியில் வடிவமைக்கப்படும்.
  - ✓ குழந்தைகள் எட்டு வயதை எட்டும்போது, அவர்கள் அடிப்படை எண் கணித திறன்களைப் புரிந்து கொள்வதையும் பெறுவதையும் உறுதி செய்வதற்காக, இந்த பிரச்சாரம் அரசின் 'எண்ணும் எழுத்தும்' திட்டத்துடன் இணைக்கப்பட உள்ளது.

- **சென்னையில் உள்ள எம்ஜிஆர் இரயில் நிலையம் சூரிய சக்தியால் இயங்கும் முழுமையான பசுமை இரயில் நிலையமாக ஆகியுள்ளது.**
  - ✓ புரட்சித் தலைவர் டாக்டர். எம்.ஜி. இராமச்சந்திரன் சென்ட்ரல் அல்லது சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் சூரிய ஆற்றல் மூலம் 100 விழுக்காடு ஆற்றலைப் பெறும். சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் தென் மத்திய இரயில்வே மண்டலத்தின் கீழ் வருகிறது. இது உலகின் மிகப்பெரிய பசுமை நெட்வொர்க்காக மாறும்.

- **தமிழ்நாடு நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன்** - ஜிஎஸ்டி அமைப்பு சீர்திருத்தங்களுக்காக உருவாக்கப்பட்ட அமைச்சர்கள் நிலையிலான குழுவில் ஜிஎஸ்டி கவுன்சிலால் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

- **தமிழ்நாட்டைச் சேர்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் நிறுவனம் போயிங் நிறுவனத்திலிருந்து ஒப்பந்தத்தைப் பெற்றுள்ளது.**
  - ✓ முதன் முறையாக தமிழ்நாட்டைச் சேர்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் நிறுவனம் மிகப்பெரிய விண்வெளி நிறுவனமாகிய போயிங்கிடம் இருந்து ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
  - ✓ சேலத்தில் அமைந்துள்ள ஏரோஸ்பேஸ் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம், உலகளாவிய விண்வெளி நிறுவனத்தின் தயாரிப்புகளுக்கான முக்கியமான விமான பாகங்கள் மற்றும் உறுப்புகளைத் தயாரித்து வழங்குவதற்காக போயிங் நிறுவனத்திடமிருந்து நீண்ட கால ஒப்பந்தத்தை வென்றுள்ளது.
  - ✓ அது ஒசூரில் புதிய உற்பத்தி ஆலையை அமைக்கும்.

- **டிரான்ஸ் சமையலறை (Trans Kitchen)**
  - ✓ மதுரை கோரிப்பாளையம் சந்திப்பு அருகே திருநங்கைகளின் குழு நடத்தும் டிரான்ஸ் கிச்சன் என்ற ஒரு உணவகம் திறக்கப்பட்டது.
  - ✓ இந்த மாநகரத்தில் இதுபோன்ற ஒரு உணவகம் அமைக்கப்படுவது இதுவே முதன் முறை ஆகும்.
  - ✓ ஸ்வஸ்தி அமைப்பு, ஆரோக்கியம், விருத்தி மற்றும் ஸ்ரீலக்ஷ்மி பெண்கள் முன்னேற்ற சங்கம் போன்ற அமைப்புகளுடன் இணைந்து இந்த முயற்சிக்கு நிதியளித்தது.

- **பாதுகாப்பு காரிடர்: ஒன்றிய அரசின் ஆதரவை தமிழ்நாடு நாடுகிறது**
  - ✓ தமிழ்நாடு அரசு, ஆறு முக்கிய முன்மொழிவுகளை அனுமதிக்குமாறு பாதுகாப்பு அமைச்சகத்தை வலியுறுத்தியுள்ளது.

- ✓ பாதுகாப்பு சோதனை உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ், மாநிலத்தில் ஐந்து திட்டங்களுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது – சென்னையில் தகவல் தொடர்பு அமைப்புகள் மற்றும் ஆர்எப் ஆன்டென்னா.
- ✓ உளுந்தூர்பேட்டை / சோழவரத்தில் ஆளில்லா விமான அமைப்புகளுக்கான உள்கட்டமைப்பு சோதனை
- ✓ திருச்சியில் ஒரு இயந்திர மற்றும் பொருள் சோதனை வசதி
- ✓ சென்னையில் மின்காந்த இடையீடு மற்றும் மின்காந்தம் பொருந்து சோதனை, மற்றும் திருச்சியில் வெடிமருந்துகளுக்கான உள்கட்டமைப்பு சோதனை.

➢ **முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - செப்டம்பர் மாதத்தில் சென்னையில் உள்ள எழும்பூரில், தமிழ்நாடு காவலர் அருங்காட்சியகத்தைத் தொடங்கி வைத்தார்.**

➢ **மருத்துவ உபகரணங்கள் பூங்கா, 3,500 கோடி முதலீட்டை ஈர்க்கும்.**

- ✓ ஓரகடத்தில் அமையவுள்ள மருத்துவ உபகரணங்கள் பூங்காவானது, 3,500 கோடி முதலீடுகளை ஈர்க்கும் மற்றும் சுமார் 10,000 பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செவ்வாய் கிழமை அன்று தெரிவித்தார்.

➢ **முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - செப்டம்பரில் சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், வரும் முன் காப்போம் திட்டத்தை 'கலைஞரின் வரும் முன் காப்போம்' என்று பெயர் மாற்றி மீண்டும் தொடங்கி வைத்தார்.**

➢ **மாநில அரசு - ஈரோட்டில் மஞ்சள் ஆராய்ச்சி மையத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.**

- ✓ இதை தமிழ்நாடு வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை ஆணையர் மற்றும் செயலாளர் சி. சமயமூர்த்தி அறிவித்தார்.
- ✓ **திரு. சமயமூர்த்தி,** இந்திய தொழில் கூட்டமைப்பு, ஈரோடு மண்டலத்தால் ஆன்லைனில் ஏற்பாடு செய்யப்பட்ட 'பொன் மஞ்சள்'சிஐஐ மஞ்சள் கலந்தாய்வு 2021' மூன்றாம் பதிப்பில் பங்கேற்றார்.

➢ **செப்டம்பர் மாதத்தில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்,** தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தை உருவாக்கி ஒரு மசோதாவை மாநில சட்ட மன்றத்தில் தாக்கல் செய்தார்.

இந்த மசோதா, தமிழ்நாடு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் சட்டம், 2021 ஆணையம்' என்று அழைக்கப்படும்.

➢ **தமிழ்நாடு அரசு –** அரசுப் பணிகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை 30 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடாக உயர்த்தியுள்ளது.

## ➢ பட்டம் (PATTAM) திட்டம்

- ✓ தமிழ்நாடு சிறைத் துறையானது, 'சிகிச்சை மேலாண்மை மூலம் ஆளுமை மற்றும் அணுகுமுறை மாற்றம்' என்று பொருள்படும்படியான பட்டம் என்ற ஒரு முனைப்புத் திட்டத்தை ஆகஸ்ட் 2 அன்று காந்தி ஜெயந்தி கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக தொடங்கி வைக்க உள்ளது.
- ✓ இது 18 முதல் 24 வயதிற்கு உட்பட்ட இளம் மற்றும் முதல் முறை குற்றவாளிகள்மீது கவனம் செலுத்தி, அவர்கள் மீதான வெறுப்பைக் குறைக்க முனையும்.

## ➢ பாப்பாபட்டி கிராம சபை

- ✓ தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் - மதுரை மாவட்டத்தின் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாப்பாபட்டி கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டார்.
- ✓ 2006 ஆம் ஆண்டில், அப்போதைய தி.மு.க. தலைமையிலான அரசு, பாப்பாபட்டி, கீரிப்பட்டி மற்றும் நாட்டார்மங்கலம் ஆகிய மூன்று சாதிப் பிரச்சினைகளில் சிக்கிய கிராமங்களின் பத்து ஆண்டு கால பகையை முடிவுக்குக் கொண்டு வந்து தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்தது.

## ➢ சாலை ஒன்றுக்கு சுதந்திரப் போராட்ட தியாகி திருப்பூர் குமரன் பெயர் வைக்கப்பட்டது.

- ✓ தமிழ்நாடு மாநில முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர் திருப்பூர் குமரன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஒரு சாலைக்கு அவரது பெயரை வைத்தார்.

- ✓ 11.01.1932 அன்று ஆங்கிலேய அரசுக்கு எதிராக திருப்பூரில் உள்ள நொய்யல் ஆற்றின் கரையில் நடத்திய போராட்டத்தை அடுத்து ஆங்கிலேயர்களால் தாக்கப்பட்டு, திருப்பூர் குமரன் உயிரிழந்தார்.

**➢ சென்னை நீடிக்கத்தக்க நகர்ப்புற சேவைகள் திட்டம்**

- ✓ சென்னையை உலகத் தரம் வாய்ந்த நகரமாக, பசுமையான, வாழத்தகுந்த மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்க்கும் திறனுள்ள ஒரு நகரமாக மாற்றும் நோக்கில், தமிழ்நாட்டின், 'சென்னை நகர கூட்டாண்மை: நிலையான நகர்ப்புற சேவைகள் திட்ட'த்திற்கு உதவுவதற்காக உலக வங்கி 150 மில்லியன் டாலர் (சுமார் ரூ.1112 கோடி) கடனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ இந்தத் திட்டமானது நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர், இயக்கம், சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட நான்கு முக்கிய நகர்ப்புற சேவைகளின் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

**➢ வள்ளலாரின் பிறந்த நாள் 'நல்வாழ்வு நாள்' ஆக கொண்டாடப்படும்.**

- ✓ அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளாரின் பிறந்த நாளை, மாநில அரசு ஒவ்வொரு ஆண்டும் தனிப்பெருங்கருணை (எல்லையில்லா நல்வாழ்வு) நாளாகக் கொண்டாடும் என்று மாநில முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- ✓ வள்ளலாரின் வாழ்க்கையை நினைவுகூர்ந்த திரு. மு.க.ஸ்டாலின், கடலூர் மாவட்டம், வடலூரில் உள்ள அவரது சத்திய ஞான சபையில் உள்ள சமையல்கூடம் பசியால் வாடும் ஏழைகளுக்கு உணவளிக்கும் விதத்தை எடுத்துக் கூறியுள்ளார்.

➢ **மாநில அரசு –** வெளிநாடுகளிலும், நாட்டின் பிற பகுதிகளிலும் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்களின் நலனை உறுதி செய்வதற்காக, புலம்பெயர்ந்த தமிழர்கள் நல வாரியம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டது.

- ✓ புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்கள் பூர்வீக இடத்தில் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் 'எனது கிராமம்' என்ற ஒரு திட்டம் தொடங்கப்படும்.

➢ தமிழ்நாடு – கன்னியாகுமரி கிராம்பு, தஞ்சாவூர் நெட்டி வேலைகள், கருப்பூர் கலம்காரி ஓவியங்கள் மற்றும் அரும்பாவூர் மற்றும் கள்ளக்குறிச்சி மர வேலைப்பாடுகள் ஆகிய ஐந்து பொருட்களுக்கான புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது.

**➢ தீஷா (DISHA)**

- ✓ தமிழ்நாடு அரசு – மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒன்றிய அரசின் திட்டங்களைக் கண்காணிப்பதற்காக மு.க. ஸ்டாலின் தலைமையில் 39 பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.
- ✓ இந்தக் குழுவினால் கண்காணிக்கப்படும் திட்டங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தீன்தயாள் அந்தியோதயா திட்டம் - தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம், தீன்தயாள் உபாத்யாயா – கிராமீன் கௌசல்யா திட்டம் (கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம்) மற்றும் பிரதம மந்திரி கிராம் சதக் யோஜனா (வாழ்விடங்களுக்கான சாலை இணைப்பு திட்டம்) ஆகியவை அடங்கும்.
- ✓ தீஷா குழு என்றும் அழைக்கப்படும், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவானது ஆறு மாதங்களுக்கு ஒருமுறையாவது கூடும்.
- ✓ மாநில அளவிலான குழுவின் இணைத் தலைவராக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் நீடிப்பார்.

**➢ தமிழ்நாடு அரசு – மாநில தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டி. மனோ தங்கராஜ் தலைமையில் 'எதிர்கால தகவல் தொழில்நுட்பம், வளர்ந்து வரும் மற்றும் ஆழமான தொழில்நுட்பங்களுக்கான ஆலோசனைக் குழு'வை அமைத்துள்ளது.**

- ✓ இந்தக் குழு, மாநில தகவல் தொழில்நுட்ப சுற்றுச் சூழல் அமைப்பின் வளர்ச்சிக்காக செயற்கை நுண்ணறிவு, பிளாக்செயின், ரோபோடிக்ஸ் மற்றும் குவாண்டம் கம்ப்யூட்டிங்

போன்ற எதிர்கால தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ✓ 12 உறுப்பினர்களைக் கொண்ட கவுன்சிலில் முதன்மைச் செயல் அலுவலர்கள், கல்வியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொடக்க நிலை சுற்றுச்சூழல் அமைப்பு நிபுணர்கள் ஆகியோர் இடம்பெற்றிருப்பர்.
- ✓ எதிர்காலத்தின் கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பத்தில் இருந்து மாநிலத்தின் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு பயனளிக்கும் வகையில், செயலூக்கமான கொள்கை மாற்றங்களைப் பரிந்துரைப்பதற்கான ஒரு சிந்தனைக் குழுவாக இந்தக் கவுன்சில் செயல்படும்.

➢ **மாநில அரசு –** நதி நீர் மாசுபடுவதைத் தடுக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக காவிரி ஆறு மற்றும் அதன் துணை ஆறுகளில் தொழிற்சாலைகள்மூலம் கழவுகள் வெளியேற்றப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதற்காக மாநில அரசு ஐந்து குழுக்களை அமைத்துள்ளது.

- ✓ இதை சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் வி.மெய்யநாதன் தெரிவித்தார்.
- ✓ இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழு, ஈரோடு, குமாரபாளையம், பள்ளிப்பாளையம், கரூர் பகுதிகளில் செயல்படும் தொழிற்சாலைகளில் இருந்து சுத்திகரிக்கப்படாத கழிவுகள் காவிரி ஆற்றிலும், அதன் கிளை நதிகளிலும் விடப்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்யும்.
- ✓ சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் நடத்திய ஆய்வில், காவிரி ஆற்று நீரில் வலி நிவாரணிகள், கா.ஃபின்கள் போன்ற மருந்துப் பொருட்கள் இதயத் தடைகள், உயர் இரத்த அழுத்தம், மனச்சோர்வு மற்றும் கை-கால் வலிப்பு போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படும் மருந்துப் பொருட்கள் துத்தநாகம், மாங்கனீசு, ஈயம், குரோமியம், நிக்கல், தாமிரம், அலுமினியம், பாதரசம், ஆர்சனிக் மற்றும் காட்மியம் போன்ற கன உலோகங்கள் அதிக அளவில் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

➢ **பெருநகர சென்னை மாநகர காவல் -** பெருநகர சென்னை காவல் ஆணையரகம் மூன்றாகப் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சென்னை விமான நிலையம் உட்பட 104 காவல் நிலைங்கள் அதன் அதிகார எல்லைக்குள் இருக்கும்.

➢ **தமிழ்நாடு பழங்குடியின மக்களின் கூட்டுறவு அமைப்பு ஐ.நா. அபிவிருத்தித் திட்ட (UNDP) பூமத்திய ரேகை பரிசை வென்றுள்ளது.**

- ✓ நீலகிரியில் உள்ள ஆதிமலை பழங்குடியினர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தால் 2021ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க பூமத்திய ரேகை பரிசு வழங்கப்பட்டுள்ளது.

➢ **பல் திறன் லாஜிஸ்டிக்ஸ் பூங்கா (Multi – Modal Logistics Park) – மப்பேடு**

- ✓ தமிழ்நாடு அரசு – குடிசைவாசிகளுக்கான முதலாவது குடியேற்ற மற்றும் மறுவாழ்வுக் கொள்கையின் வரைவை வெளியிட்டது.
- ✓ குடிசைவாசிகளின் இடம் மாற்றம் தொடர்பான பல்வேறு சிக்கல்கள் மற்றும் குடியிருப்புகளுக்குச் சென்ற பிறகு அவர்களுக்கு வழங்கப்படும் வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவது குறித்தும் இந்த கொள்கை பரிசீலிக்கிறது.
- ✓ தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் (**Tamil Nadu Urban Habitat Development Board**) தயாரித்துள்ள வரைவு அறிக்கையின்படி, சென்னை நகர வாழ்விட மேம்பாட்டுக் குழு அமைக்கப்படும்.

➢ **வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தின் www.cra.tn.gov.in என்ற இணைய தளத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.**

- ✓ இந்து சமய அறநிலையத் துறை கோவில்களுக்கு பக்தர்கள் வழங்கும் சிறிய தங்க ஆபரணங்களை பணமாக்கும் திட்டத்தையும் முதலமைச்சர் மீண்டும் தொடங்கி வைத்தார்.

- **குழந்தைகளுக்கு கோவிட்-19 தடுப்பூசி போடும் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்கப் போகிறது.**
  - ✓ 2 முதல் 18 வயது வரை உள்ளவர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசிகளை வழங்குவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.
  - ✓ 2 முதல் 18 வயதுவரை உள்ள குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினருக்காக பாரத் பயோடெக்கின் கோவாக்சினை அவசரகாலத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு மத்திய மருந்து ஆணையத்தின் நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது.
  - ✓ கர்ப்பிணிப் பெண்களுக்கு தடுப்பூசி போடுவதிலும் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

- **இல்லம் தேடி கல்வி**
  - ✓ அரசின் இலட்சிய திட்டமான இல்லம் தேடி கல்வி' என்ற ஒரு பிரச்சாரத் திட்டத்தில் தன்னார்வலர்கள் தங்களைப் பதிவு செய்வதற்காக. 'illamthedikalvi.tnschools.gov.in' என்ற ஒரு புதிய இணையதளத்தை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விழுப்புரம் மாவட்டம் முதலியார் குப்பத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் தொடங்கி வைத்தார்.
  - ✓ இது, கடந்த 18 மாதங்களாக நேரடி வகுப்புகளுக்குச் செல்லாத 1 முதல் 8ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களிடையே கற்றல் இடைவெளிகளைக் குறைக்க முயற்சிக்கும் மாநிலம் தழுவிய ஆறு மாத காலப் பிரச்சாரம் ஆகும்.
  - ✓ அரசு நடத்தும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் சுமார் 34 இலட்சம் மாணவர்களை இலக்காகக் கொண்ட இந்தப் பிரச்சாரம் தொடங்கப்பட்டுள்ளது.
  - ✓ இந்தப் பிரச்சாரத்திற்கான கையேட்டை மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (**State Council for Educational Research and Training**) தயாரித்துள்ளது.

- **கீழடி தளத்தில் ஏழாம் கட்ட அகழாய்வு –** தமிழ்நாடு மாநில தொல்லியல் துறையால் முடிவு செய்யப்பட்டுள்ளது.
  - ✓ கீழடியில் 8ஆம் கட்ட அகழ்வாய்வை மேற்கொள்வது குறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை என்று தொல்லியல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

- **சென்னையைச் சேர்ந்த அரசு சாரா அமைப்பாகிய தி பன்யன் (The Banyan) – 2021ஆம் ஆண்டுக்கான டாக்டர் குயிஸ்லெயினின், 'கறைகளின் சங்கிலியை உடைத்தல் விருதை'ப் (Breaking the Chains of Stigma Award) பெற்றுள்ளது.**
  - ✓ இந்த விருது பெல்ஜியத்தைச் சேர்ந்த மனநல மருத்துவர் டாக்டர். ஜோசப் குயிஸ்லெயின் (1797-1860) பெயரில் வழங்கப்படுகிறது.
  - ✓ இந்தியாவில் பெருமைக்குரிய இந்த விருதைப் பெறும் இரண்டாவது அமைப்பு 'தி பன்யன்' ஆகும்.

- **தமிழ்நாடு ஃபைபர்நெட் கார்ப்பரேஷன் லிமிடெட் -** கணினி ஒருங்கிணைப்பாளர்களுடன் பாரத்நெட் திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கான முதன்மை சேவை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

- **டிவிஎஸ் மோட்டார் நிறுவனம் இந்திய பசுமை ஆற்றல் விருதை வென்றுள்ளது.**
  - ✓ இந்திய பசுமை ஆற்றல் விருது 2020 இன் 3வது பதிப்பில் டிவிஎஸ் மோட்டார் நிறுவனம் 'சிறந்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயனர்' பிரிவில் இந்திய பசுமை ஆற்றல் கூட்டமைப்பால் (Indian Federation of Green Energy) அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- **பரம்பிக்குளம் புலிகள் பாதுகாப்பு அறக்கட்டளையானது, பூமி காப்பாளர் விருதை வென்றுள்ளது.**
  - ✓ இந்த விருது பெற்ற எட்டு வெற்றியாளர்களையும், 'அழிந்துவரும் காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தகத்திற்கான ஐ.நா. மாநாட்டின்' பொதுச் செயலாளர் ஐவோன் ஹிகுவேரோ அவர்கள் மெய்நிகராக நடைபெற்ற ஒரு விழாவில் பாராட்டினார்.

- **இந்தியாவின் முதலாவது நடமாடும் நூல்நிலையம் - மேலவாசல், தமிழ்நாடு**
  - ✓ அக்டோபர் 21, 1931 அன்று மன்னார்குடிக்கு அருகிலுள்ள மேலவாசல் என்ற கிராமத்தில் புத்தகங்கள் ஏற்றப்பட்ட ஒரு மாட்டு வண்டி மக்கள் அனைவரின் ஆர்வத்தைத் தூண்டியது. இது இந்தியாவில் முதல் நடமாடும் நூல்நிலையமாக இருந்திருக்கலாம்.
  - ✓ மன்னார்குடியைச் சேர்ந்த ஒரு பொறியாளராகிய ராவ் பகதூர் எஸ்.வி கனகசபை பிள்ளையின் சிந்தனையில் உதித்த இந்த நூலகத்தை, இந்திய நூலக அறிவியலின் தந்தையாகிய எஸ்.ஆர். ரங்கநாதன், தொடங்கி வைத்தார். இந்த நடமாடும் நூலகம் தன்னுடைய பயணத்தைத் தொடங்கி தொண்ணூறு ஆண்டுகள் ஆகிவிட்டன.

- **மின் - முன்னேற்றம் மற்றும் தகல் தொழில்நுட்ப நண்பன்**
  - ✓ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தகவல் தொழில்நுட்பத் துறையின் போர்ட்டல்களைத் தொடங்கி வைத்தார்.
  - ✓ தகவல் தொழில்நுட்பத் துறையால் உருவாக்கப்பட்ட ‘மின்-முன்னேற்றம்’ (e-Munnetram) மற்றும் ‘தகவல் தொழில்நுட்ப நண்பன் (IT Nanban)’ என்ற இரண்டு இணைய தளங்களை 22.10.2021 அன்று தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.
  - ✓ ‘கீழடி விசைப்பலகை’ மற்றும் ‘தமிழி – தமிழினையம் யூனிகோட் மாற்றி’ ஆகிய இரண்டு தமிழ் கணினி மென்பொருட்களையும் அவர் வெளியிட்டார்.
  - ✓ மின்-முன்னேற்றம் என்பது அனைத்து முக்கிய உட்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்ய உதவும் ஒரு தளமாகும்.

- **பழைய நகராட்சிகளை தரம் உயர்த்தி** கடலூர், காஞ்சிபுரம், சிவகாசி, கரூர் ஆகிய நான்கு மாநகராட்சிகளை உருவாக்குவதற்கான அவசரச் சட்டங்களை தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி பிறப்பித்துள்ளார்.

- **தமிழ்நாடு அரசு – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்,** சமூக நீதிக்காக ஏழுபேர் கொண்ட குழுவை அறிவித்தார்.

| | | |
|---|---|---|
| 1. | சுப வீரபாண்டியன் | தலைவர் |
| 2. | கே. தனவேல் | ஓய்வுபெற்ற அதிகாரி |
| 3. | சுவாமிநாதன் தேவதாஸ் | பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் துணைவேந்தர் |
| 4. | மனுஷ்யபுத்திரன் | கவிஞர் |
| 5. | ஏ. ஜெய்சன் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பினருக்கான சட்ட வல்லுநர் |
| 6. | ஆர். இராஜேந்திரன் | பொருளாதார வல்லுநர் |
| 7. | ஜி. கருணாநிதி | அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் |

  - ✓ மேலும், முதலமைச்சர் ஒரு பெண் உறுப்பினரையும் நியமித்துள்ளார். சிபிஐ மாநிலங்களவை சார்பில் டாக்டர். சாந்தி ரவீந்திரநாத் அவர்களை சமூகநீதி கண்காணிப்புக் குழுவின் உறுப்பினராக நியமித்துள்ளார்.

- **தமிழ்நாடு அரசு –** மாநில பொதுத்துறை நிறுவனமான தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் (**Tancem**) என்ற நிறுவனத்தின்மூலம் ‘வலிமை’ என்ற புதிய சிமெண்ட் பிராண்டை அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளது.
  - ✓ இந்த டான்செம், ஏற்கனவே தனியார் பிராண்டுகளைவிட மிகக் குறைந்த விலையில் அரசு சிமெண்டைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

- ✓ இந்த நிறுவனமானது அரசு சிமெண்ட் என்ற பிராண்டின்கீழ் ஒவ்வொரு மாதமும் 90,000 டன் சிமெண்டை வெளிச்சந்தையில் விற்பனை செய்து வருகிறது.
- ✓ சில்லறை விலையைக் குறைப்பதற்காக ஆரம்ப கட்டத்தில் சுமார் 30,000 டன்கள் குறைந்த விலை மற்றும் உயர்தர வலிமை பிராண்ட் சிமெண்ட் மாதந்தோறும் விற்பனை செய்யப்படும்.

➢ **முதலமைச்சரின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்**

- ✓ தமிழ்நாடு அரசு – முதல்வரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பதிவு செய்வதற்கு, இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றிருக்கும் பெற்றோரின் வயது வரம்பை 35 லிருந்து 40ஆக உயர்த்தியுள்ளது.
- ✓ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி, இந்தத் துறையானது வயது வரம்பை 5 ஆண்டுகள் அதிகரித்துள்ளது.
- ✓ படித்துவிட்டு தாமதமாகத் திருமணம் செய்து கொள்ளும் பெண்கள் அதிக அளவில் பயன்பெற வேண்டும் என்ற வகையில் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

➢ **கலைஞர் பொற்கிழி விருது**

- ✓ இது 2008 ஆம் ஆண்டு முதல் தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் (BAPASI) நடத்தும் புத்தக கண்காட்சியில் தமிழ் மற்றும் பிறமொழி எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் வருடாந்திர இலக்கிய விருது ஆகும்.

| | |
|---|---|
| அபி | செய்யுள் |
| ராஜேந்திர சோழன் | புனைகதை |
| எஸ். ராமகிருஷ்ணன் | வசனம் |
| வெளி ரங்கராஜன் | நாடகம் |
| மருத நாயகம் | ஆங்கிலம் |
| நடித் சாகியா | இதர இந்திய மொழி (காஷ்மீரி) |

➢ **தமிழ்நாடு அரசு –** ஏற்றுமதி சங்கங்கள் மற்றும் பல்வேறு துறை கவுன்சில்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி மாநில ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுவை (**State Export Promotion Committee**) மறுசீரமைத்துள்ளது.

- ✓ இந்தக் குழுவின் தலைவராக அரசின் தலைமைச் செயலாளர் இருப்பார்.
- ✓ இதில் தொழில்துறை, நிதித்துறை, கால்நடை பராமரிப்பு, கைத்தறி, நடுத்தர சிறு மற்றும் குறு நிறுவனங்கள் மற்றும் வேளாண்மைத் துறைகளின் முதன்மைச் செயலாளர்களும், தமிழ்நாடு வழிகாட்டல் குழுவின் மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர் மற்றும் வெளிநாட்டு வர்த்தக கூடுதல் இயக்குநர் ஜெனரல் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
- ✓ இந்தக் குழு மாநில அளவில் தளவாடங்கள், விவசாய ஏற்றுமதி மற்றும் சேவை ஏற்றுமதி உள்ளிட்ட வர்த்தகம் தொடர்பான அனைத்து சிக்கல்களையும் மதிப்பாய்வு செய்யும்.
- ✓ ஏற்றுமதி மூலோபாயத்தின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்காக இந்தக் குழு ஒவ்வொரு ஆண்டும் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கூடும்.

➢ **'முல்லைப் பெரியாறு அணை விவகாரம்' :** குழுவின் பரிந்துரைகளை ஏற்று நடக்குமாறு உச்சநீதி மன்றம் கேரளா மற்றும் தமிழ்நாடு அரசுகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

- ✓ கேரளாவின் பெரியாற்றின்மீது கட்டப்பட்டுள்ள முல்லைப் பெரியாறு அணையில் உரிய நீர்மட்டத்தைப் பராமரிப்பது தொடர்பாக மேற்பார்வைக் குழு எடுத்த முடிவுகளைப் பின்பற்றுமாறு கேரளா மற்றும் தமிழக அரசுகளுக்கு அக்டோபர் 28, 2021 அன்று உச்சநீதி மன்றம் உத்தரவு இட்டுள்ளது.
- ✓ முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 137.45 அடியை எட்டியுள்ளது என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

- ✓ முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதை அடுத்து, கசிவுப் பாதையின் ஷட்டர்களை படிப்படியாகத் திறக்கவும், அணையில் இருந்து தண்ணீரைத் திறக்கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஸ்டாலினிடம் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

- **முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - ஜூலை 18-ம் தேதி தமிழ்நாடு தினமாக கடைபிடிக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.**
  - ✓ 1956-ல் மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டபோது தமிழகத்தின் எல்லையைக் காக்கப் போராடிய 110 ‘எல்லை மீட்பர்களுக்கு’ தமிழக அரசு நவம்பர் 1-ஆம் தேதி அன்று தலா ரூ.1 இலட்சம் ரொக்கப் பரிசை வழங்கும் என்றும் அவர் கூறினார்.
  - ✓ முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில், முன்னாள் முதல்வர் சி.என். அண்ணாதுரை ஜூலை 18, 1967 அன்று அப்போதைய மெட்ராஸ் மாநிலத்தின் பெயரை தமிழ்நாடு என்று மாற்றுவதற்கான தீர்மானத்தை மாநில சட்ட மன்றத்தில் கொண்டு வந்தார் என்று குறிப்பிட்டார்.
  - ✓ தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த சட்டம் ஜனவரி 14, 1969 அன்று அமலுக்கு வந்தது.

- **தமிழ்நாடு அரசு – தீபாவளி மற்றும் பிற சமயங்களில்** பேரியம் உப்புகள் மற்றும் தொடர் பட்டாசுகள் கொண்ட பட்டாசுகளைத் தயாரிக்கவும், சேமித்து வைக்கவும், கொண்டு செல்லவும் மற்றும் விற்பனை செய்வதற்கும் தடை விதித்துள்ளது.

- **தமிழ்நாடு அரசு** – கடந்த ஆட்சியில் நடைமுறையில் இருந்த, ‘பேக்கேஜ் டெண்டர் முறையை’ ரத்து செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

- **ஒன்றிய அரசு** - இந்தக் கல்வி ஆண்டில் 7 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் 850 மாணவர்களை இளங்கலைப் படிப்புகளில் சேர்த்துக் கொள்ள தமிழக அரசுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

## தமிழ்நாடு – அகழ்வாராய்ச்சி

- தொல்லியல் துறையினர் - சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்ட எல்லையான சூரக்குளம் அருகே, குலசேகர பாண்டியன் மன்னர் காலத்தைச் சேர்ந்த, 700 ஆண்டுகள் பழமையான கல்வெட்டு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

- **சுமார் 1000 ஆண்டுகள் பழமையானதாகக் கருதப்படும் சீன பானை ஓடுகள் - இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லானியில் உள்ள பள்ளி அருகே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.**
  - ✓ திருப்புல்லாணியில் உள்ள சுரேஷ் சுதா அழகன் நினைவு அரசு மேனிலைப் பள்ளி மாணவர்கள் தங்கள் பள்ளி வளாகத்திற்கு அருகில் இந்த பானை ஓடுகளைக் கண்டுபிடித்துள்ளனர்.
  - ✓ கி.பி 12 மற்றும் 13 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்த இந்தப் பானை ஓடுகள், சீன வம்சாவளியைக் கொண்ட பீங்கான் மற்றும் செலாடன்-ஆல் செய்யப்பட்டுள்ளன.

- **400 ஆண்டு பழமையான மாவீரன் கல்** - மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள கிராமத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

- **மாநில அரசு கொற்கையில் அகழ்வாராய்ச்சி நடத்த உள்ளது**
  - ✓ பாண்டிய அரசின் தொன்மையான துறைமுக நகரமான கொற்கையானது, ரோம், சீனா, எகிப்து ஆகிய நாடுகளுடன் கடல்சார் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததை நிரூபிக்கும் வகையில், இங்கு கடல்சார் நிபுணர்களின் வழிகாட்டுதலுடன் தொல்லியல் அகழாய்வுகளை நடத்த மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று, தொழில்துறை, தமிழ் கலாச்சார அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

- **13ம் நூற்றாண்டு பாண்டியர் காலத்து கல்வெட்டு**
  - ✓ விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே உள்ள சோழபுரத்தில் உள்ளூர் சிவன் மற்றும் விஷ்ணு கோவில்களுக்கு நன்கொடைகள் அளிக்கப்பட்டது பற்றிய விவரங்கள் அடங்கிய 13ஆம் நூற்றாண்டு பாண்டியர் காலத்து கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது.
  - ✓ இந்தக் கல்வெட்டிலிருந்து இந்த சோழபுரம் இதற்கு முன்பாக உத்தம சோழ சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது.
  - ✓ அந்த சிவன் கோவில் மாறவர்மன் விக்ரம பாண்டியன் (கி.பி. 1250 முதல் கி.பி.1278 வரையிலான காலத்தில்) ஆட்சியின்போது கட்டப்பட்டது.

- **திருச்சி அருகே திருவாசி கிராமத்தில் உள்ள சிவன் கோவிலில் முதலாம் ராஜ ராஜ சோழன் காலத்தைச் சேர்ந்த 10ஆம் நூற்றாண்டு கால கல்வெட்டு சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.**
  - ✓ தமிழில் 293 வரிகள் கொண்ட இந்த கல்வெட்டானது, முதலாம் ராஜராஜ சோழன் அரண்மனையின் பெரிய குடியிருப்பில் (பெரிய வேளம்) 'நக்கன் கற்பகவல்லி' என்ற பணிப்பெண் இருந்ததைக் குறிப்பிடுகிறது.

- **25வது புதுமைப்பித்தன் நினைவு விருது**
  - ✓ தலித் வரலாற்று ஆசிரியர் மற்றும் எழுத்தாளர் ஸ்டாலின் ராஜாங்கம் மற்றும் பெண்ணிய கவிஞர் சுகிர்தாரணி ஆகியோர் 2020ஆம் ஆண்டின், 25வது புதுமைப்பித்தன் நினைவு விருதுக்கு, அமெரிக்காவைச் சேர்ந்த 'விளக்கு இலக்கிய அமைப்பு' என்ற ஒரு மன்றத்தினால் தேர்வு செய்யப்பட்டனர்.

- **இலங்கைத் தமிழர்களுக்காக மாபெரும் வீட்டு வசதித் திட்டம்**
  - ✓ நவம்பர் 2, அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - இலங்கைத் தமிழர்களுக்கான ஒரு மாபெரும் வீட்டு வசதித் திட்டத்தின் முதல் கட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
  - ✓ வேலூர் மாவட்டத்தில் உள்ள மேல்மொனவூர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்காக, அரசு உதவித் திட்டத்தின்கீழ், ரூ.142.16 கோடி செலவில் 3,510 வீடுகள் கட்டப்பட உள்ளன.

- **நடமாடும் தடுப்பூசி முகாம்**
  - ✓ முதல் முறையாக, சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் - நவம்பர் 2 அன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் நடமாடும் தடுப்பூசி முகாமைத் தொடங்கி வைத்தார்.
  - ✓ இந்த முனைப்புத் திட்டத்தின் நோக்கம், நவம்பர் முடிவதற்குள் முதல் டோஸ் தடுப்பூசி எடுத்துக் கொண்டவர்களின் விழுக்காட்டை 71 லிருந்து 100 விழுக்காடாக உயர்த்தி, அனைத்து மக்களையும் இரண்டாவது டோஸ் தடுப்பூசியை போட்டுக்கொள்ள ஊக்குவிக்கச் செய்வதே ஆகும்.

- **தமிழ்நாடு வனம் மற்றும் வனவிலங்கு குற்றக்கட்டுப்பாட்டு பணியகம்**
  - ✓ தமிழ்நாடு வனம் மற்றும் வனவிலங்கு குற்றக்காட்டுப்பாட்டு பணியகத்தை அமைப்பதற்கான அரசாணை வழங்கப்பட்டுவிட்டது.
  - ✓ சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய நான்கு இடங்களில் மண்டல அலுவலகங்களைக் கொண்டு, தமிழ்நாடு வனம் மற்றும் வனவிலங்கு குற்றக்கட்டுப்பாட்டு பணியகத்தை அமைப்பதற்கான ஆணையை தமிழ்நாடு அரசு செவ்வாய்க் கிழமை வழங்கியது.
  - ✓ தமிழ்நாடு வனம் மற்றும் வனவிலங்கு குற்றக் கட்டுப்பாட்டு பணியகம் (Tamil Nadu Forest and Wildlife Crime Control Bureau) மாநில அளவிலான வனம்

மற்றும் வனவிலங்கு குற்றங்கள், வன குற்றவாளிகள் மற்றும் வனவிலங்கு கடத்தல் நிகழ்வுகள் பற்றிய தரவுகளை உருவாக்கி பராமரிக்கும்.

➢ **அரசாணை – தமிழ்நாடு காவலர்களுக்கு வாராந்திர ஓய்வு வழங்குதல்**

✓ நவம்பர் 3 அன்று மாநில அரசு – தலைமைக் காவலர் வரையிலான காவலர்கள் ஒவ்வொரு வாரமும் ஒரு நாள் விடுப்பு எடுத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கி ஆணை பிறப்பித்துள்ளது.

✓ மாநில காவல்துறைத் தலைவராக திரு.சி. சைலேந்திர பாபு, பதவியேற்ற உடன், 'காவலர்கள் தங்கள் உடல்நலத்தைப் பராமரித்துக் கொள்வதற்காகவும், தங்கள் குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிட ஏதுவாகவும் அவர்களுக்கு விடுப்பு வழங்கலாம்' என்று பரிந்துரை செய்ததற்கு ஏற்ப இந்த ஆணை வழங்கப்பட்டுள்ளது.

➢ **கீழடி**

✓ கீழடி 8ஆம் கட்ட அகழ்வாய்வுப் பணிகள் பொங்கலுக்குப் பிறகு தொடங்கப்படலாம்.

✓ சங்க காலத்திற்குரிய தொல்லியல் பொருட்களின் மீதங்கள் கண்டறியப்பட்டுள்ள கீழடியில் 8ஆவது கட்ட அகழ்வாய்வுப் பணிகளை மேற்கொள்வது தொடர்பான தன்னுடைய அறிக்கையை மாநில தொல்லியல் துறை, மத்திய தொல்லியல் ஆலோசனை வாரியத்திற்கு (Central Advisory Board for Archaeology) வழங்கியுள்ளது.

✓ 8வது கட்ட அகழ்வாய்வுப் பணிகள் பெரும்பாலும் ஜனவரி 2022 பொங்கலுக்குப் பிறகு தொடங்கப்படலாம் என்று தெரிய வருகிறது.

➢ **சிறப்பு நோக்கு வாகனம் (Special Purpose Vehicle) – தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்**

✓ தமிழ்நாடு அரசு – முதன் முதலாக சிறப்பு நோக்கு வாகனத்தை அமைத்துள்ளது – தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம் - மாநிலத்தின் மூன்று முக்கியமான இயற்கை பாதுகாப்புப் பணிகளை தொழில்ரீதியாக நிர்வகிப்பதற்காக.

✓ உத்தேசிக்கப்பட்டுள்ள நிறுவனம், தமிழ்நாடு காலநிலை மாற்றப் பணி, தமிழ்நாடு ஈரநிலங்கள் பணி மற்றும் தமிழ்நாடு பசுமை இயக்கப்பணி ஆகிய மூன்று பணிகளை நிர்வகிக்கும்.

✓ இது தமிழ்நாட்டின் நிகர பூஜ்ஜிய கார்பன் எதிர்காலத்திற்கான நீண்ட கால உறுதிப் பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்புகளை மேம்படுத்தி சமூக ஈடுபாட்டை வலுப்படுத்தும்.

➢ **தாம்பரம் மாநகராட்சி**

✓ மாநில அரசு – நவம்பர் 4, 2021 அன்று ஒரு அரசாணையை வெளியிட்டு தாம்பரம் மாநகராட்சி உருவாக்கப்படுவதாக அறிவித்தது.

✓ தாம்பரம் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்துவதற்கான அரசாணையை ஆளுநர் ஆர்.என். ரவி பிறப்பித்துள்ளார்.

✓ தாம்பரம் தமிழ்நாட்டின் 21வது மாநகராட்சியாகும்.

➢ **ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தின் முன்னணி 2 விழுக்காடு விஞ்ஞானிகளின் பட்டியல்** அண்ணா பல்கலைக் கழக துணை வேந்தர் ஆர். வேல்ராஜ் -

ஸ்டாண்ட்போர்டு பல்கலைக் கழகத்தால் பட்டியலிடப்பட்டுள்ள உலகின் முதல் 2 விழுக்காடு விஞ்ஞானிகளில் ஒருவராக இடம் பெற்றுள்ளார்.

➢ **முதன்மைச் செயலாளர் - நிதித் துறை**

✓ நவம்பர் 6ம் தேதி, தமிழக அரசு - கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணனுக்குப் பதிலாக என். முருகானந்தத்தை நிதித் துறை முதன்மைச் செயலாளராக நியமித்தது.

➢ **நிபுணர் மதிப்பீட்டுக் குழு (Expert Appraisal Committee)**

✓ ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் நிபுணர் மதிப்பீட்டுக் குழு – சென்னை - பெங்களூரு விரைவுச் சாலை திட்டத்தின் மூன்றாம் கட்டத்திற்கான சுற்றுச் சூழல் அனுமதியை வழங்கியுள்ளது.

✓ இந்தத் திட்டத்தின் மூன்றாவது கட்டம் ஸ்ரீபெரும்புதூரை ஆந்திராவின் குடிபாலாவுடன் இணைக்கும்.

✓ திட்டமிடப்பட்டுள்ள இந்த மூன்றாம் கட்டத்தின் மொத்த நீளம் 106 கிமீ ஆகும்.

➢ **எஸ்.பி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு பத்ம விபூஷன் விருது வழங்கப்படுகிறது**

✓ புகழ்பெற்ற பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு, புது டெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மரணத்திற்குப் பிந்தையதாக, நாட்டின் இரண்டாவது உயரிய சிவிலியன் விருதான பத்ம விபூஷன் விருது வழங்கப்பட்டது.

✓ பாலசுப்பிரமணியத்தின் மகன் எஸ்.பி. சரண், குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்திடம் இருந்து தனது தந்தையின் சார்பில் விருதினைப் பெற்றார்.

➢ **விதவை மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு இட ஒதுக்கீடு**

✓ அங்கன்வாடி மையங்களில் வேலை வழங்குவதற்காக விதவை மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு 25 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

✓ இந்த வேலைகளில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அங்கன்வாடி பணியாளர், சிறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள் மற்றும் எம்ஜிஆர் மதிய உணவுத் திட்டத்தின்கீழ் சத்துணவு அமைப்பாளர் மற்றும் சமையலர் ஆகிய பணியிடங்கள் அடங்கும்.

➢ **தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (Tamil Nadu Pollution Control Board)**

✓ தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் - நவம்பர் 10ஆம் தேதி, தென்னை நார் பித் அலகுகளை வெள்ளை வகையிலிருந்து ஆரஞ்சு வகைக்கு மறுவகைப்படுத்தி, அவற்றை மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் என்ற பிரிவில் சேர்த்துள்ளது.

✓ பொதுவாக, தொழில்கள், அவற்றின் மாசு உமிழ்வு அளவுகளின் அடிப்படையில் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை மற்றும் வெள்ளை என வண்ண குறியிடப்பட்டுள்ளன.

➢ **முல்லைப் பெரியார்**

✓ முல்லைப் பெரியாறில் பேபி அணை அருகே மரங்களை வெட்ட தமிழக அரசுக்கு அனுமதி அளித்த உத்தரவை ரத்து செய்வது என கேரள அமைச்சரவை நவம்பர் 10ஆம் தேதி முடிவு செய்தது.

✓ இந்த ஆணையை ரத்து செய்யுமாறு முதன்மைச் செயலாளர் (வனம் மற்றும் வனவிலங்கு) அவர்களை அறிவுறுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

✓ ரத்து செய்யப்பட்டுள்ள ஆணையின்படி, பேபி அணையைப் பலப்படுத்தும் வகையில், 40 சென்ட் பரப்பளவில் மரங்கள் மற்றும் மரக்கன்றுகள் என்ற

அளவில் 15 மரங்களை வெட்டுவதற்கு தமிழக அரசுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

- ✓ தமிழகம் சமர்ப்பித்த விண்ணப்பம், ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள கட்டுப்பாடுகளை நிறைவு செய்யவில்லை என்று அமைச்சரவை தெரிவித்துள்ளது.

## ➢ பொருணை அருங்காட்சியகம்

- ✓ பொருணை அருங்காட்சியகம் - திருநெல்வேலி நகரின் புறநகரில் உள்ள அழகிய சிவந்திப்பட்டி மலைக்கு அருகில் 13 ஏக்கரில் அமைக்கப்பட உள்ளது.
- ✓ இந்த அருங்காட்சியகத்தில் ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகாலை ஆகிய இடங்களில் உள்ள தொல்பொருள் இடங்களிலிருந்து அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட கலைப்பொருட்கள் காட்சிப்படுத்தப்படும்.
- ✓ சிவகாலை, கொற்கை, ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களில் சேகரிக்கப்பட்டுள்ள தொல்பொருட்களும், இனிவரும் அகழ்வாய்வுகளில் சேகரிக்கப்படும் தொல்பொருட்களும் காட்சிப்படுத்தலில் சேர்த்துக் கொள்ளப்படும்.

## ➢ முதல்வரின் முகவரி

- ✓ தமிழ்நாடு அரசு – முதல்வரின் முகவரி என்ற பெயரில் ஒரு புதிய துறையை உருவாக்குமாறு ஒரு ஆணையைப் பிறப்பித்துள்ளது.
- ✓ இந்தப் புதிய துறையானது, முதலமைச்சரின் தனிப் பிரிவு, முதலமைச்சரின் உதவி மேஜை, ஒருங்கிணைந்த மற்றும் உள்ளடங்கிய பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் முதல்வரின் உதவி எண் மேலாண்மை அமைப்பு மற்றும் உங்கள் தொகுதியில் முதல்வர் போன்ற பல்வேறு பிரிவுகளை ஒருங்கிணைத்து அமைக்கப்பட்டுள்ளது.
- ✓ உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் சிறப்பு அலுவலரான ஷில்பா பிரபாகர் சதீஷ், புதிய துறையின் தலைவராக செயல்படுவார்.
- ✓ முதல்வரின் முகவரி என்ற துறையில் பெறப்படும் மனுக்களுக்குத் தீர்வு காண ஒரே இணைய தளம் பயன்படுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

## ➢ வெள்ளத் தணிப்புக் குழுத் தலைவர்

- ✓ மோடியுடன் இணைந்து பணியாற்றிய அலுவலர் வெள்ளத்தடுப்புக் குழு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ குஜராத்தில் அப்போதைய முதலமைச்சர் நரேந்திர மோடியின்கீழ் பணிபுரிந்த மற்றும் பிரதமரின்கீழ் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தில் பணியாற்றிய ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரியான வி. திருப்புகழ் அவர்களை நகரில் வெள்ளத் தடுப்பு அபாயங்களை எதிர்கொள்ளும் வெள்ளத் தணிப்பு மற்றும் மேலாண்மை குறித்த ஆலோசனைக் குழுவை வழிநடத்துவதற்காக திமுக அரசு நியமித்துள்ளது.
- ✓ திரு. திருப்புகழ் தமிழக தலைமைச் செயலாளர் வி. இறையன்புவின் உடன் பிறந்த சகோதரரும் ஆவார்.

## ➢ உணவு பாதுகாப்பு அருங்காட்சியகம்

- ✓ ஒன்றிய வர்த்தகம், தொழில், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் அவர்கள் 15 நவம்பர் 2021 அன்று, இந்தியாவின் முதல் உணவுப் பாதுகாப்பு அருங்காட்சியகத்தை மெய்நிகராக தமிழ்நாட்டின் தஞ்சாவூரில் தொடங்கி வைத்தார்.
- ✓ இந்த அருங்காட்சியகமானது இந்தியாவின் விவசாயப் புரட்சியை, சார்ந்து இருத்தலில் இருந்து தன்னிறைவு வரை காட்சிப்படுத்துகிறது.

## ➢ தூய தமிழ் பற்றாளர் விருது

- ✓ 18 வயதான வி. வரதராஜன் 'தூய தமிழ் பற்றாளர்' விருதை வென்றார்.
- ✓ தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த தூய தமிழ் பற்றாளர் விருது, மேலூரைச் சேர்ந்த 18 வயதான மாணவர் வி. வரதராஜனுக்கு வழங்கப்பட்டது.
- ✓ தங்களது அன்றாட வாழ்க்கையில் தூய தமிழைப் பயன்படுத்துவோரை கௌரவிப்பதற்காக இந்த விருது தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

## ➢ தமிழ் திரைப்படம் கூழாங்கல்

- ✓ தமிழ் திரைப்படமான கூழாங்கல் ஐஎப்எப்ஐ 2021இல், 52வது சர்வதேச திரைப்பட விழா கோவாவில் இந்திய பனோரமா பிரிவில் திரையிடுவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- ✓ இந்த கூழாங்கல் ஆஸ்கார் அகாடமி விருதுக்கான இந்தியாவின் அதிகாரப்பூர்வ நுழைவும் ஆகும்.

## ➢ டான்செம்-இன வலிமை சிமெண்ட் பிராண்ட்

- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிட் (டான்செம்) என்ற மாநில அரசு நிறுவனத்தின் புதிய சிமெண்ட் பிராண்டான 'வலிமை'யை செவ்வாய்க் கிழமை தொடங்கி வைத்தார்.
- ✓ வலிமை சிமெண்ட் பிராண்டுகளில் ஒரு மூட்டை ரூ.350 மற்றும் ரூ.365 என்ற இரண்டு விலைகளில் உள்ளன.

## ➢ மெட்ராஸ் சேப்பர்ஸ் (Madras Sappers)

- ✓ மெட்ராஸ் சேப்பர்ஸ் தன்னுடைய 241வது கார்ப்ஸ் தினத்தை 18 நவம்பர் 2021 அன்று கொண்டாடியது.
- ✓ கார்ப்ஸின் பழமையான குழுவான மெட்ராஸ் செப்பர்ஸ் தொடங்கி வைக்கப்பட்டபோது, 1780ஆம் ஆண்டில், இந்திய இராணுவத்தின் பொறியாளர்களின் கார்ப்ஸ் அமைப்பு அது அதிகாரபூர்வமாக தொடங்கி வைக்கப்பட்டதை அறிவித்தது.

## ➢ இன்னுயிர் காப்போம் திட்டம்

- ✓ தமிழ்நாடு – விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இரண்டு நாட்களுக்கு 81 உயிர்காக்கும் அவசர சிகிச்சை முறைகளை இலவசமாக வழங்கும் நாட்டிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.
- ✓ ரூ.1 இலட்சம் மதிப்பிலான இந்த மருத்துவ வசதிகளை மாநிலத்தில் பட்டியலிடப்பட்டுள்ள 609 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பெறலாம்.
- ✓ திட்டம் - நம்மைக் காக்கும் 48 (48 மணி நேரத்தில் நமது உயிரைக் காப்பாற்றுதல்) – நவம்பர் 18 அன்று அரசால் அறிவிக்கப்பட்டது.
- ✓ காப்பீட்டுத் திட்டங்கள் எதுவும் இல்லாத அனைவரையும் இந்தத் திட்டம் உள்ளடக்கும்.
- ✓ 'இன்னுயிர் காப்போம்' (விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றுதல்) திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக முதற்கட்டமாக ரூ.50 கோடியை மாநில அரசு ஒதுக்கியுள்ளது.

- **சிலம்பம்**
- சிலம்பம் அல்லது குச்சி வேலி என்பது தமிழ்நாட்டில் தோன்றிய வரலாற்றுக்கு முந்தைய பண்டைய தற்காப்புக் கலையாகும்.
- நவம்பர் 18 அன்று. தமிழ்நாடு அரசு – பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகளில் ஆட்சேர்ப்புக்கான 3 விழுக்காடு விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் தகுதிபெறும் விளையாட்டுத் துறைகளில் ஒன்றாக சிலம்பத்தைச் சேர்த்தது.
- மருத்துவம், பொறியியல், சட்டம் போன்ற தொழில்முறை படிப்புகளில் சேர்வதற்கான விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் பரிசீலிக்க விளையாட்டுத் துறைகளில் ஒன்றாக சிலம்பம் சேர்க்கப்பட்டுள்ளது.

- **வ.உ. சிதம்பரம் அவர்களின் இலக்கிய படைப்புகள்**

✓ சுத்நதிரப் போராட்ட வீரர் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது இலக்கியப் படைப்புகள் குறித்த புத்தகங்களை நவம்பர் 18ஆம் தேதி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்.

✓ வ.உ.சி-யின் படைப்புகளின் தொகுப்பின் முதல் தொகுதி (வ.உ.சி பன்னூல் திரட்டு) மற்றும் வ.உ.சி உரையின் இரண்டாம் தொகுதி திருக்குறள் (வ.உ.சி திருக்குறள் உரை) ஆகியவற்றை தமிழ்நாட்டு பாடநூல் மற்றும் கல்விப் பணிகள் கழகம் (Tamil Nadu Textbook and Educational Services Corporation) வெளியிட்டுள்ளது.

- **தேசிய நெடுஞ்சாலைகள்**

✓ தமிழகத்தில் உள்ள 8 மாநில சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவிக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடியிடம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நவம்பர் 18ஆம் தேதி அன்று கோரிக்கை விடுத்தார்.

✓ இது சம்பந்தமாக, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும், தேவையான நிதியுதவியுடன் வளர்ச்சிப் பணிகளை மாநில அரசிடம் ஒப்படைக்குமாறும் ஒன்றிய அரசை முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

- **ஃபின் டெக் (FinTech) ஆளுகை குழு**

✓ நவம்பர் 19 அன்று, தமிழ்நாடு அரசு – அரசு மற்றும் தொழில்துறை உறுப்பினர்களைக் கொண்ட ஃபின்டெக் நிர்வாகக் குழுவை அமைத்தது.

✓ இது தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

✓ சந்தைப்படுத்துதல் மற்றும் வர்த்தக அடையாளமிடுதல், வணிக மேம்பாடு மற்றும் அவுட்ரீச், கூட்டாண்மை, கல்வி, துணிகர மூலதனம் மற்றும் ஒழுங்குமுறை போன்று, வரவிருக்கும் ஃபின்- டெக் கொள்கையின் பல்வேறு அம்சங்களைக் கையாள்வதற்காக, இந்தக் கவுன்சில் துணைக் குழுக்களை அமைக்கும்.

- **அவசர உதவி எண் 14417**

✓ மாணவர் சமூகம் மற்றும் பொதுமக்களிடையே சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அனைத்து பள்ளி பாடப் புத்தகங்களிலும் 14417 என்ற அவசர உதவி தொலைபேசி எண்ணை அச்சிட அரசு முடிவு செய்துள்ளது.

✓ இந்த அவசர உதவி எண் 14417, குறிப்பாக பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காகவே உருவாக்கப்பட்டது.

- **தமிழ்நாடு மாநில திட்டக் குழு (Tamil Nadu State Planning Commission)**

- ✓ சென்னை கிரேட் லேக் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்டில் பிஜிடிஎம் பொருளாதாரம் மற்றும் திட்ட இயக்குநர் வித்யா மஹம்பரே, தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின் நிபுணர் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ 'மாற்று பொருளாதாரத்திற்கான வேலைவாய்ப்பு மற்றும் திறன்'குறித்த மாநிலத்தின் வரைவுக் கொள்கையை இந்த ஆணையம் தயாரிக்க வேண்டும் என்பதற்காக இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது.

## ➢ குழந்தைகளுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை 2021

- ✓ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், 20 நவம்பர் 2021 அன்று தமிழ்நாடு மாநில குழந்தைகள் கொள்கையைத் தொடங்கினார்.
- ✓ பல்வேறு நிலைகளில் உள்ள குழந்தைகளின் வளர்ச்சி இலக்குகள், ஊட்டச்சத்து, கல்வி சுகாதாரம் போன்ற தேவைகளை முழுமையாக எடுத்துக் கொண்டு இந்தக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.
- ✓ தொலைந்துபோன குழந்தைகளை அவர்களின் பெற்றோரிடம் மீட்டுக் கொடுக்க உதவும் தடயவியல் டிஎன்ஏ சுயவிவரத் தேடல் கருவியையும் அவர் தொடங்கி வைத்தார்.

## ➢ சென்னை பெருநகரப் பகுதித் திட்டம்

- ✓ ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asian Infrastructure Investment Bank) சென்னை பெருநகரப் பகுதி திட்டத்திற்கு 150 மில்லியன் அமெரிக்க டாலர் கடனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, சென்னை பெருநகரப் பகுதிக்கான (Chennai metropolitan area) நிலையான நகர்ப்புற சேவைகள் திட்டத்தை செயல்படுத்துவதற்காக இந்தியாவிற்கு 150 டாலர் மில்லியன் கடனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

## ➢ முப்பரிமாண (3-D) கண் அறுவை சிகிச்சை வசதி

- ✓ இந்தியாவின் முதலாவது முப்பரிமாண கண் அறுவை சிகிச்சை வசதி சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது.
- ✓ இந்தியாவின் முதலாவது முப்பரிமாண கண் அறுவை சிகிச்சை வசதியை, 19 நவம்பர் 2021 அன்று, சென்னையில் உள்ள அரசு மருத்துவமனையில் தமிழ்நாடு சுகாதார அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.
- ✓ நாட்டின் முதல் முப்பரிமாண கண் அறுவை சிகிச்சை வசதி சென்னை எழும்பூர் கண் மருத்துவமனையில் உருவாக்கப்பட்டுள்ளது.

## ➢ பால சபாக்கள் (Bala Sabhas)

- ✓ தமிழ்நாட்டில் அனைத்து ஊராட்சிகளிலும் 'பாலசபாக்கள்' அமைக்கப்பட உள்ளன.
- ✓ 12 முதல் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கிராம சபைகளைப் போன்று, அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 'பாலசபை' உருவாக்கம், அனைத்து ஊராட்சி மற்றும் நகர்ப்புற அமைப்புகளிலும் குழந்தை பாதுகாப்புக் கொள்கை அறிமுகம் மற்றும் அனைத்து பள்ளிகளிலும் குழந்தை பாதுகாப்புக் கொள்கை ஆகியவை, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் சனிக்கிழமை வெளியிடப்பட்ட 'குழந்தைகளுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை, 2021'இல் இடம் பெற்ற அம்சங்கள் ஆகும்.

## ➢ டிஎன்ஏ சுய விவரம் சார்ந்த தேடல் கருவி (DNA Profile-Based Search Tool)

- ✓ நவம்பர் 20 அன்று, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தலைமைச் செயலகத்தில் டிஎன்ஏ சுயவிவரம் சார்ந்த புதிய தேடல் கருவியைத் தொடங்கி வைத்தார்.

- ✓ இந்தப் புதிய சாதனம் கைவிடப்பட்ட குழந்தைகள், மாநிலங்களுக்கு இடையேயான குற்றவாளிகள் மற்றும் குழந்தைகளைப் பாலியல் பலாத்காரம் செய்பவர்களைக் கண்டறிய உதவும்.
- ✓ மாநில தடயவியல் துறையை நவீனமயமாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, நாட்டிலேயே முதல் மாநிலமாக தமிழகம் அதிநவீன கருவியைப் பெற்றுள்ளது.

## ➢ தூய்மை ஆய்வு அறிக்கை (Swachh Survekshan Report)

- ✓ சென்னை – நவம்பர் 20 அன்று வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டிற்கான தூய்மை ஆய்வு அறிக்கையில் 43வது இடத்தைப் பெற்றதன்மூலம் 2021ஆம் ஆண்டில் தூய்மையில் அதன் தரவரிசையை மேம்படுத்தியுள்ளது.
- ✓ தூய்மை ஆய்வு என்பது இந்தியா முழுவதும் உள்ள மாநகரங்கள் மற்றும் நகரங்களில் நடத்தப்படும் தூய்மை, சுகாதாரம் மற்றும் துப்புறவு பற்றிய வருடாந்திர ஆய்வு ஆகும்.
- ✓ இது, இந்தியாவை தூய்மையாகவும் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாததாகவும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட, தூய்மை இந்தியா இயக்கத்தின் ஒரு பகுதியாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

## ➢ பாலார் ஆறு

- ✓ இதுவரை கண்டிராத வகையில் பாலாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.
- ✓ கர்நாடகாவில் உள்ள நந்தி மலையில் இருந்து உருவாகும் இந்தப் பாலாறு, ஆந்திரா வழியாகத் தமிழகத்திற்குள் பாய்கிறது. அதன் மொத்த நீளமான 348 கிமீ தூரத்தில், 93 கிமீ கர்நாடகத்திலும், 33 கிமீ ஆந்திராவிலும், 222 கிமீ தமிழ்நாட்டிலும் உள்ளது.
- ✓ ஏழு கிளை ஆறுகளைக் கொண்ட இந்த ஆறு வாணியம்பாடி அருகே தமிழ்நாட்டிற்குள் நுழைகிறது. இது வேலூர் மற்றும் காஞ்சிபுரம் போல பல முக்கிய நகரங்களை உள்ளடக்கியதாக உள்ளது.

## ➢ தமிழ்நாடு – முதலீட்டாளர்களின் முதல் 'போர்ட் ஆப் கால்' மாநாடு ( first Port of Call Conclave)

- ✓ நவம்பர் 23 அன்று, தமிழ்நாடு அரசு – 76,795 நேரடி வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படும் விண்வெளி மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 35,208 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு 59 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது.

## ➢ ∴பின் டெக் கொள்கை (FinTech Policy)

- ✓ நவம்பர் 23 அன்று, கோவையில் நடைபெற்ற முதலீட்டு மாநாட்டில், மாநிலத்திற்கான ∴பின்டெக் கொள்கையை முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார் மற்றும் விண்வெளி பாதுகாப்பு அமைப்புகள் குறித்த கையேட்டையும் வெளியிட்டார்.
- ✓ தமிழ்நாடு ∴பின்டெக் கொள்கை 2021ஆனது, 2025ஆம் ஆண்டுக்குள் நமது மாநிலத்தை ∴பின்டெக் நிறுவனங்களுக்கான ஒரு முன்னணி உலகளாவிய இடமாக மாற்றுவதற்கான ஒரு பார்வையை அமைத்துள்ளது மற்றும், சென்னையை ஒரு ∴பின்டெக் மையமாக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை

- ✓ தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை - இந்த ஆண்டு முதல் பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியலில் அனைத்து வகுப்புகளுக்குமான ‘பயிற்றுவிப்பு மொழி’யை சேர்க்க தமிழக பள்ளிக் கல்வித்துறை முடிவு செய்துள்ளது.

## ➢ 4 ஜிகாவாட் ஒருங்கிணைந்த சூரிய ஒளி மின்னழுத்த செல் (Integrated Solar Photovoltaic Cell)

- ✓ டாடா குழுமத்தின் சூரிய சக்தி பிரிவு – திருநெல்வேலி அருகே உள்ள கங்கை கொண்டானில் 4 ஜிகாவாட் ஒருங்கிணைந்த சூரிய ஒளி மின்னழுத்த உற்பத்தி அலகை அமைப்பதற்காக தமிழக அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.

## ➢ வீர் சக்கரா விருது – தமிழ்நாடு போர் வீரர்

- ✓ கடந்த ஆண்டு ஜூன் 15ஆம் தேதி கல்வான் பள்ளத்தாக்கில் சீன-இந்தியப் படைகளுக்கு இடையே நடைபெற்ற மோதலில் 20க்கும் மேற்பட்ட இந்திய வீரர்கள் கொல்லப்பட்டனர்.
- ✓ தமிழ்நாட்டைச் சேர்ந்த பழனி என்பவரும் அதில் குறிப்பிடத்தக்கவர் ஆவார். அவரைக் கௌரவிக்கும் வகையில் வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது.

## ➢ வெல்ஸ்பன் ஒன் (Welspun One)

- ✓ வெல்ஸ்பன் ஒன் நிறுவனம் ரூ.2500 கோடி முதலீடு செய்வதற்காக தமிழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ✓ வெல்ஸ்பன் ஒன் லாஜிஸ்டிக்ஸ் பார்க்ஸ் (Welspun One Logistics Parks) வழிகாட்டுதலுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது – இது தமிழக அரசின் ஒருங்கிணைப்பு முகமை (nodal agency) ஆகும்.
- ✓ முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் ஒற்றைச் சாளர வசதிக்காக இந்தக் கையெழுத்திடப்பட்டுள்ளது.

## ➢ எல் அண்ட் டி (L&T)

- ✓ காஞ்சிபுரத்தில் தரவு மையத்தை உருவாக்குவதற்காக எல் அண்ட் டி தமிழ்நாட்டு அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.
- ✓ லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனம் மாநிலத்தில் ஒரு தரவு மையத்தை நிறுவுவதற்காக தமிழ்நாடு அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

## ➢ நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals) நகர்ப்புற வளர்ச்சிக் குறியீடு

- ✓ சென்னை – நிலையான வளர்ச்சி இலக்குகள் நகர்ப்புற குறியீட்டில் 56 நகரங்களில் 11வது இடத்தைப் பெற்றுள்ளது.
- ✓ இந்த நிலையான வளர்ச்சி இலக்குகள் நகர்ப்புற வளர்ச்சிக் குறியீட்டை மதிப்பிடுவதற்கு நித்தி ஆயோக் அமைப்பு அறிக்கையானது வறுமை இன்மை, நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு, தரமான கல்வி, ஏற்றத் தாழ்வுகள் குறைப்பு, காலநிலை நடவடிக்கை, தண்ணீருக்கு அடியிலும் நிலத்திலும் வாழ்க்கை மற்றும் அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் ஆகியவை உள்ளிட்ட 16 இலக்குகளை கருத்தில் கொண்டுள்ளது.

## ➢ தேசிய குடும்ப சுகாதார ஆய்வு (National Family Health Survey) 5

- ✓ தமிழ்நாடு, இனப்பெருக்கம், குழந்தை ஆரோக்கியம் ஆகியவற்றில் முன்னணியில் உள்ளது.

- ✓ முந்தைய பதிப்புடன் ஒப்பிடும்போது, பல சமூக மற்றும் சுகாதார அளவுருக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுடன், தேசிய குடும்ப சுகாதார ஆய்வு 5, மாநிலத்தை அதன் வழக்கமான பாதையில் மீண்டும் முன்னெடுத்துச் செல்வதாகத் தெரிகிறது, குறிப்பாக இனப்பெருக்கம் மற்றும் குழந்தை ஆரோக்கியத்தில்.

➢ **பசுமை சான்றிதழ்**

- ✓ தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் - சென்னையில் உள்ள பள்ளிகளுக்கு 'பசுமை சான்றிதழை' அறிவித்துள்ளது.
- ✓ குழந்தைகள் நடந்து அல்லது சைக்கிள் ஓட்டி வரும் பள்ளிகளுக்கு இந்தச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

➢ **ஆலோசனைக் குழு**

- ✓ நவம்பர் 25 அன்று, தமிழ்நாடு அரசு – புலம்பெயர்ந்த தமிழர்களின் வலிமையைப் பயன்படுத்துவதற்கும், மாநிலத்தில் முதலீடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும் ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்தது.
- ✓ அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் பல்வேறு பதவிகளில் உள்ள உறுப்பினர்கள், மாநிலத்திற்கு வணிக முதலீடுகளை ஊக்குவிக்க உலகளாவிய தமிழ் சமூகத்தின் திறனைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்தக் குழு முயற்சி செய்யும்.

➢ **ஆயுள் தண்டனைக் கைதிகள் 700 பேரை விடுதலை செய்வதற்கான வழிகாட்டுதல்கள்**

- ✓ தமிழ்நாடு அரசு – மாநில சிறைகளில் உள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள் 700 பேரின் விடுதலைக்கான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.
- ✓ குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவித்து முடித்திருப்பது முன்கூட்டியே விடுதலை பெறுவதற்கான அடிப்படைத் தகுதி ஆகும்.
- ✓ முன்னாள் முதல்வர் சி.என். அண்ணாதுரையின் 113வது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தின் 161வது பிரிவின்கீழ் முன்கூட்டியே விடுதலை செய்வதற்கான இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

➢ **கோவிட் தடுப்பூசி**

- ✓ **காஞ்சிபுரம் மாவட்டத்தில் முதல் தவணை தடுப்பூசி 100 விழுக்காடு போடப்பட்டுள்ளது.**
- ✓ **தமிழ்நாட்டில் இதுவரை 76 விழுக்காட்டிற்கும் அதிகமானோருக்கு முதல் டோஸ் தடுப்பூசியும், 40 விழுக்காட்டினருக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசியும் போடப்பட்டுள்ளது.**

  காஞ்சிபுரம் மாவட்டம் முதல் தவணை தடுப்பூசி 100 விழுக்காடு போடப்பட்ட மாவட்டமாகத் திகழ்கிறது.

➢ **நிமிர்ந்து நில், துணிந்து சொல்**

- ✓ கரூர் மாவட்ட நிர்வாகம் - பள்ளி மாணவிகள் பாலியல் வன்கொடுமை குறித்து புகார் அளிக்கும் அச்சத்தைப் போக்குவதற்காக, 'நிமிர்ந்து நில், துணிந்து சொல்' என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.
- ✓ இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பெயர், வகுப்பு, பள்ளி, முகவரி, பெற்றோரின் மொபைல் எண் உள்ளிட்ட தனிப்பட்ட விவரங்கள் மற்றும் அவர்களுக்கோ அல்லது அவர்களது நண்பர்களுக்கோ பள்ளியிலோ அல்லது அவர்கள் வீடுகளுக்கு அருகிலோ பாலியல் துஷ்பிரயோகம் நடந்திருந்தால் அதுகுறித்த தகவல்களை வழங்குமாறு கேட்கும் கேள்வித்தாள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

➢ **100 செமீ மழை**

✓ சென்னை – சுமார் 100 ஆண்டுகளில் மூன்றாவது முறையாக நவம்பரில் 100 செமீ மழை பதிவாகியுள்ளது. சென்னை நுங்கம்பாக்கம் வானிலை மையத்தில் பதிவு 100 செமீ ஐ தாண்டி பதிவு செய்யப்பட்டுள்ளது.

✓ வானிலை ஆய்வாளர்களின் கூற்றுப்படி, சென்னையில் உள்ள வானிலை ஆய்வு மையம் 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 1088 மிமீ மழையைப் பதிவு செய்துள்ளது. அதைத் தொடர்ந்து 2015இல் 1049 மிமீ மழையைப் பதிவு செய்துள்ளது.

✓ சாதாரண காலங்களில் வடகிழக்கு பருவமழை முழுவதும் சென்னையின் சராசரி மழையளவு 87 செமீ ஆகும்.

➢ **நிறுத்துடா மகளிர் இயக்கம்**

✓ 'பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - நவம்பர் 25' என்பதைக் குறிக்கும் வகையில், கருணாலயா சமூக சேவைச் சங்கத்தால், 'நிறுத்துடா மகளிர் இயக்கம்' வியாழன் அன்று முறையாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

✓ நிறுத்துடா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கடந்த ஆண்டு காவல்துறை அதிகாரிகளைச் சந்தித்து பெண்களுக்கு எதிரான வன்முறை புகார்களை விசாரித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினர்.

➢ **மாற்றுத் திறனாளிகள் நலனுக்கான தேசிய விருதுகள்**

✓ மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக தமிழ்நாட்டிற்கு தேசிய விருது வழங்கப்பட உள்ளது.

✓ 'மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளிக்கும் செயல்முறையில் சிறந்த மாநிலம்' என்று தமிழ்நாடு ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

✓ மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச தினமான வெள்ளிக்கிழமையன்று, சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் புது டெல்லியில் நடத்தும் விழாவில் தமிழ்நாடு இதற்கான விருதைப் பெற உள்ளது.

➢ **ஐஐடி சென்னை**

✓ இந்திய தொழில்நுட்பக்கழகம், சென்னையின் ஆராய்ச்சியாளர்கள் அணியக் கூடிய பிரிவில் சமீபத்திய தொழில்நுட்பங்களை உருவாக்கியுள்ளனர்.

✓ அவை, செவித்திறன் குறைபாடுள்ளவர்கள் மற்றும் மோட்டார் குறைபாடுகள் உள்ளவர்கள் சுதந்திரமாக தொடர்பு கொள்வதற்கு உதவுகின்றன.

✓ 'வைப்' மற்றும் 'ஐஜெஸ்ட்' ('Vibe' and 'iGest') ஆகிய சாதனங்கள் புணர்வாழ்வு பொறியியல் மற்றும் உதவி தொழில்நுட்ப மையத்தால் (Centre for Rehabilitation Engineering and Assistive Technology) உருவாக்கப்பட்டன.

➢ **சமக்கிரக சிக்ஷா அபியான் (Samagraha Siksha Abhiyan)**

✓ சமக்கிரக சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் நடத்தப்பட்ட மாநில அளவிலான கல்வி வினாடி வினா போட்டியில் 15 வயது சங்கீதா, என் வெற்றி பெற்றார்.

✓ சமக்கிரக சிக்ஷா அபியான் என்பது அனைத்து பிரிவினருக்கும் கல்வி வாய்ப்புகளை ஊக்குவிப்பதன்மூலம் சமூகத்தில் உள்ள இடைவெளியைக் குறைக்கும் ஒன்றிய அரசின் ஒரு திட்டமாகும்.

## ➢ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் (Indian Council of Agriculture Research)

- ✓ தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் - நவம்பர் 4 அன்று வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டிற்கான இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் தர வரிசையில் நாட்டிலுள்ள 67 விவசாய நிறுவனங்களில் எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

## ➢ திறந்தநிலை புதுமை சவால் (Open Innovation Challenge)

- ✓ தமிழக அரசின் தமிழ்நாடு தொடக்கநிலை மற்றும் புதுமை இயக்கம் (Tamil Nadu Start-up and Innovation Mission) நடத்திய திறந்தநிலை புதுமை சவாலில், சென்னையைச் சேர்ந்த தொடக்கநிலை நிறுவனமான கோ.ஃ.புளோட்டர்ஸ் (GoFloaters), சிறந்த கண்டுபிடிப்புக்கான விருதை வென்றுள்ளது.
- ✓ கோவிட்-19 தடுப்பூசி விநியோகத்தின் வேகத்தை அதிகரிப்பதற்காக, கோயம்புத்தூர் மாநகராட்சி எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு புதுமையான தீர்வுகளை வழங்கியதற்காக இந்த ஸ்டார்ட்-அப் அமைப்புக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

## ➢ 16வது பறவைகள் சரணாலயம் - தமிழ்நாடு

- ✓ தமிழ்நாட்டின் கழுவேலி சதுப்பு நிலம் 16வது பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்டது.
- ✓ தமிழ்நாடு சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையானது, தமிழ்நாட்டில் விழுப்புரம் அருகேயுள்ள கழுவேலி சதுப்பு நிலத்தை பறவைகள் சரணாலயமாக அறிவித்துள்ளது. இது வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972ன் பிரிவு 18ன் உட்பிரிவு (1)ன்படி, 'கழுவேலி பறவைகள் சரணாலயம்' என்று அழைக்கப்படும்.

## ➢ நம்மைக் காக்கும் 48

- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், டிசம்பர் 18 அன்று செங்கல்பட்டில் மாநில அரசின் சமீபத்திய திட்டமான, 'நம்மைக் காக்கும் 48' திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார்.
- ✓ சாலை விபத்துகளில் காயம் அடைந்தவர்களை உரிய நேரத்தில் மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## ➢ மாற்றுத் திறனாளிகளுக்கான திருமணத் திட்டம்

- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் உள்ள கோயில்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு இடையே இலவசமாக திருமணத்தை நடத்த அனுமதிக்கும் திட்டத்தை புதன்கிழமை தொடங்கி வைத்தார்.
- ✓ திருவல்லிக்கேனியில் உள்ள ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாள கோவிலில் திருமணம் செய்து கொள்ள விண்ணப்பித்திருந்த எஸ். சுரேஷ்குமார் மற்றும் எஸ். மோனிஷா ஆகிய மாற்றுத் திறனாளிகளுக்கு அரசாணை நகலை திரு. ஸ்டாலின் வழங்கினார்.

## ➢ தமிழ் வளர்ச்சித் துறை

- ✓ தமிழ் வளர்ச்சித் துறை – அரசு ஆவணங்களில் முதல் எழுத்து (இனிஷியல்) மற்றும் பெயர் எழுதுவதில் தமிழைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளது.

APPOLO STUDY CENTRE

- ✓ கல்வி நிறுவனங்களும் இந்த நடைமுறையைப் பின்பற்றி, சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களில் மாணவர்களை தமிழில் கையொப்பமிட ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**➢ மிக அதிக எண்ணிக்கையிலான மருத்துவக் கல்லூரிகள்**

- ✓ தமிழ்நாடு - இந்த ஆண்டு 17 புதிய மருத்துவக் கல்லூரிகள் சேர்க்கப்பட்ட பிறகு, நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான மருத்துவக் கல்லூரிகள் உள்ள மாநிலமாகத் திகழ்கிறது.
- ✓ இதன்மூலம், மாநிலத்தில் 69 மருத்துவக் கல்லூரிகளும் 10,375 எம்பிபிஎஸ் இடங்களும் உள்ளன. இது நாட்டிலேயே மிகவும் அதிகம் ஆகும்.

**➢ புதுமைப்படுத்த, ஒருங்கிணைக்க மற்றும் நிலைத்திருக்க மாநகர முதலீடுகள் - CITIIS (City Investments To Innovate, Integrate and Sustain)**

- ✓ சென்னை பெருநகர மாநகராட்சி - CITIIS திட்டத்தின்கீழ், ரூ.99 கோடி செலவில் 28 பள்ளிகளை மாற்றும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ✓ இந்தத் திட்டம் தேசிய நகர்ப்புற விவகார நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது மற்றும் ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம், பிரெஞ்சு மேம்பாட்டு நிறுவனம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தால் நிதியளிக்கப்படுகிறது.

**➢ பசுமை தமிழ்நாடு இயக்கம்**

- ✓ 2030-31ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தில் காடு மற்றும் மரங்களின் பரப்பளவை தற்போதைய 23.8 விழுக்காட்டிலிருந்து 33 விழுக்காடாக உயர்த்துவதை இலக்காகக் கொண்ட, ‘பசுமை தமிழ்நாடு இயக்கத்தை’ 2021-22ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்கு மாநில அரசு அதன் நிர்வாக மற்றும் நிதி அனுமதியை வழங்கியுள்ளது.

**➢ உலகத்தமிழ் பொருளாதாரக் கூட்டம்**

- ✓ எட்டாவது உலகத் தமிழர் மாநாடு மற்றும் சென்னை உலகப் பொருளாதார உச்சி மாநாடு ஆகியவை டிசம்பர் 27 முதல் 29 வரை சென்னையில் நடைபெற உள்ளன.
- ✓ உலகம் முழுவதிலும் உள்ள 10 முக்கிய தமிழர்களுக்கு ‘உலகத் தமிழர்களின் மகுடம்’ என்ற விருது நிகழ்ச்சியின் இறுதி நாளன்று வழங்கப்படும்.

**➢ சுதந்திரத்தின் அமிர்தப் பெருவிழா**

- ✓ ஒன்றிய அரசு தமிழக அரசுக்கு 2 விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளது.
- ✓ தொற்று நோய்களுக்காக 22.88 இலட்சம் பரிசோதனைகளைச் செய்து இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- ✓ தமிழ்நாட்டில் இதற்கான பிரச்சாரம் ‘சுதந்திரத்தின் அமிர்தப் பெருவிழா’ என்ற பெயரில் நடத்தப்படுகிறது.

**➢ இளஞ்சிவப்பு உரிம நாட்கள்**

- ✓ பெண்கள் மற்றும் மாணவிகளுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்காக போக்குவரத்துத் துறை சனிக்கிழமைகளை இளஞ்சிவப்பு உரிம நாளாக ஒதுக்கியுள்ளது என்று புதுச்சேரி போக்குவரத்துத் துறை அமைச்சர் சந்திர பிரியங்கா திங்கட்கிழமை அன்று கூறினார்.

- **இல்லம் தேடி கல்வித் திட்டம்**
- ✓ 2022 ஜனவரி முதல் அனைத்து மாவட்டங்களிலும் வீட்டுக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படும் என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவித்துள்ளார்.
- ✓ இந்த ‘இல்லம் தேடி கல்வித் திட்டம்’ சோதனை அடிப்படையில் 12 மாவட்டங்களில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- **தமிழ்நாடு – சுகாதாரம் தொடர்பான ஐந்து அறிவிப்புகள் செயல்படுத்தப்பட்டன.**
- ✓ ஐந்து நிதிநிலை அறிக்கைகள் - 1) அறிவாற்றல் புனர்வாழ்வு பகல் பராமரிப்பு மையங்களை நிறுவுதல் 2) இணைய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தல் மையங்கள் 3) பிரசவத்திற்குப் பிந்தைய மனச் சோர்வு ஆலோசனை 4) பச்சிளம் குழந்தைகளுக்கு சிறப்பு செவித்திறன் பரிசோதனை மற்றும் 5) மனநலம் குன்றியவர்களுக்கான அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையங்களின் விரிவாக்கம் ஆகிய திட்டங்கள் டிசம்பர் 13, திங்கட்கிழமை அன்று செயல்படுத்தப்பட்டன.

- **நபார்டு (NABARD)**
- ✓ விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (நபார்டு) – 2022-23ஆம் ஆண்டிற்கான பயன்படுத்தக்கூடிய முன்னுரிமைத் துறையின் கடன் சாத்தியம் ரூ.4.13 இலட்சம் கோடி என மதிப்பிட்டுள்ளது.
- ✓ இது 2021-22 ஆம் ஆண்டு கணிப்பான ரூ.3.43 இலட்சம் கோடியை விட 20 விழுக்காடு அதிகம் ஆகும்.

- **மகளிர் சுய உதவிக் குழு பெண்களுக்கான கடன் திட்டம்**
- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், மாநிலத்தில் உள்ள 58,463 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 7.56 இலட்சம் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளையும், 2,750 கோடி ரூபாய் கடனுதவியையும் செவ்வாய்க்கிழமை அன்று வழங்கினார்.
- ✓ 1.06 கோடி உறுப்பினர்களைக் கொண்ட தமிழகத்தில், 7.22 இலட்சத்துக்கும் அதிகமான மகளிர் சுய உதவிக் குழுக்கள் இருப்பதாக திரு. ஸ்டாலின் கூறினார்.
- ✓ மகளிர் சுய உதவிக் குழுக்களின் ரூ.2,756 கோடி கடனையும் அரசு தள்ளுபடி செய்வதாக திரு. ஸ்டாலின் கூறினார்.

- **இண்ட்கோ தேயிலை வாகனங்கள்**
- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், டிசம்பர் 15 ஆம் தேதி, சென்னை தலைமைச் செயலகத்தில் 20 இண்ட்கோ தேயிலை வாகனங்களை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- ✓ இந்த வாகனங்களை அறிமுகப்படுத்துவது, நீலகிரியில் உள்ள 16 தொழில்துறை கூட்டுறவு (இண்ட்கோ) தேயிலை தொழிற்சாலைகளின் உச்ச அமைப்பான இண்ட்கோசெர்வ் இன் முன் முயற்சியாகும்.

- **நகர்ப்புற சதுக்கம்**
- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - க்ளோவர் லீப் வடிவிலான கத்திப்பாரா மேம்பாலத்தின் கீழ், கிட்டத்தட்ட 5.9 இலட்சம் சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற சதுக்கத்தை டிசம்பர் 16ஆம் தேதி திறந்து வைத்தார்.
- ✓ சென்னை பெருநகர மேம்பாட்டு ஆணையத்தின் நிதியைக் கொண்டு, சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் நிறுவனத்தால் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- ✓ ரூ.14.5 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இந்த நகர்ப்புற சதுக்கம், இந்த மாநகரத்திற்கு வருபவர்களுக்கு ஓய்வெடுக்கும் இடமாக இருக்கும்.

## ➢ சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதித் திட்டம்

- ✓ இந்த நிதியாண்டில் மாநில அரசின் முழு நிதியுதவியுடன் கூடிய சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்ட நிதித் திட்டத்தை செயல்படுத்துவதற்காக தமிழக அரசு ரூ.352.5 கோடியை அனுமதித்துள்ளது.
- ✓ ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினருக்கும் தங்கள் தொகுதியில் பட்டியலிடப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு 3 கோடி நிதி வழங்கப்படும்.

## ➢ இந்திய தொல்லியல் துறை (Archeological Survey of India)

- ✓ இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை அதிகாரிகள் குழு – பல்லவர் காலத்திற்கு முந்தைய விநாயகியின் (விநாயகப் பெருமானின் பெண் வடிவம்) ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல் சிற்பத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- ✓ இந்தக் கல்வெட்டுகள் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் எழுத்துக்கள் ஆகும்.

## ➢ தொழுநோய் பரிசோதனை

- ✓ தமிழகத்தில் குழந்தைகளிடையே தொழுநோய் பாதிப்பு அதிகமாக உள்ளதால், பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்துப் பள்ளிகளிலும், அரசுப் பள்ளிகளிலும் பரிசோதனை முகாம்கள் தொடங்கப்படும் என்று சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.
- ✓ தேசிய அளவில், தொழுநோயின் பாதிப்பு விகிதம் 10,000 மக்கள் தொகைக்கு 0.57 ஆக இருந்தது. தமிழ்நாட்டில் இது 10,000 மக்கள் தொகைக்கு 0.19 ஆக இருந்தது. அதாவது, தமிழ்நாட்டில் பரிசோதிக்கப்பட்ட 50,000 பேரில் ஒருவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். ஆனால் குழந்தைகளிடையே பாதிப்பு விகிதம் அதிகமாக உள்ளது.

## ➢ தமிழ்த் தாய் வாழ்த்து

- ✓ தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், டிசம்பர் 17ம் தேதி, 'தமிழ்த் தாய் வாழ்த்து' பாடலை மாநில பாடலாக அறிவித்தார்.
- ✓ அரசு நிகழ்ச்சிகளில் இந்தப் பாடல் பாடப்படும்போது அனைவரும் கட்டாயம் எழுந்து நிற்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
- ✓ மாநிலத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் பிற பொது மன்றங்களில் எந்த ஒரு செயல்பாட்டையும் தொடங்குவதற்கு முன்பாக இந்தப் பாடலைப் பாட வேண்டும்.

## ➢ சென்னைப் பல்கலைக்கழகம்

- ✓ சென்னைப் பல்கலைக் கழகம் - பாதுகாப்பு தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான உத்தேச மையத்திற்கு முன்னாள் ராணுவ தலைமை தளபதி ஜெனரல் பிபின் ராவத்தின் பெயரைச் சூட்ட முடிவு செய்துள்ளது.
- ✓ ஜெனரல் ராவத் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் மாணவர் ஆவார்.
- ✓ புதிய மையம் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் மற்றும் இராணுவ விவகாரங்களில் புரட்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

## ➢ அன்னைத் தெரசா நினைவு விருது

- ✓ டிசம்பர் 17 அன்று, பதின்வயது சுற்றுச் சூழல் ஆர்வலரான வினிஷா உமாசங்கர் - ஹார்மனி அறக்கட்டளையின் சமூக நீதிக்கான அன்னை தெரசா நினைவு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- ✓ திருவண்ணாமலையைச் சேர்ந்த வினிஷா சமீபத்தில் காப் 26இன் உலகத் தலைவர்கள் உச்சி மாநாட்டில் உரையாற்றினார்.

- ✓ 15 வயதான இந்த பத்தாம் வகுப்பு மாணவி, எரியும் கரிக்கு மாற்றாக சூரிய சக்தியில் இயங்கும் இஸ்திரி வண்டியைக் கண்டுபிடித்த தன்னுடைய கண்டுபிடிப்புக்காக புகழ்பெற்றார்.

### ➢ இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48

- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சனிக்கிழமை 'இன்னுயிர் காப்பு – நம்மைக் காக்கும் 48' திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இதன்மூலம் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான அவசர சிகிச்சைக்கான செலவை மாநில அரசே ஏற்கும்.

### ➢ க. அன்பழகன்

- ✓ மாநில அரசு – டிசம்பர் 19ஆம் தேதி, முன்னாள் நிதியமைச்சரும் மறைந்த திராவிட இயக்கத் தலைவருமான க. அன்பழகனின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் நந்தனத்தில் உள்ள ஒருங்கிணைந்த நிதித் துறை வளாகத்திற்கு அவரது பெயரை வைக்க உள்ளது.
- ✓ அரசியலில் தீவிரமாகப் பங்கேற்றதோடு அல்லாமல் பேராசிரியர் க. அன்பழகன், பல்வேறு தலைப்புகளில் 40க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார்.

### ➢ ஆயுஷ்மான் பாரத் - விரிவான ஆரம்ப சுகாதாரத் திட்டம்

- ✓ பெருநகர சென்னை மாநகராட்சி – ஒன்றிய அரசின் முழுமையான ஆயுஷ்மான் பாரத் திட்டமாகிய விரிவான ஆரம்ப சுகாதாரத் திட்டத்தின்கீழ், 15 மண்டலங்களில் 140 நகர்ப்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையங்களை (urban health and wellness centres) அமைக்க உள்ளது.
- ✓ இந்த நகர்ப்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையங்களின் ஒரு பகுதி மே 2022க்குள் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ➢ இராதாகிருஷ்ணன் - SKOCH விருது

- ✓ தமிழ்நாட்டின் சுகாதாரத் துறைச் செயலாளர் திரு. ஜெ. இராதாகிருஷ்ணன், புது டெல்லியில் பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்புக்கான ஸ்காச் பொது சேவை விருதைப் பெற்றார்.
- ✓ 2004ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டம் கும்பகோணத்தில் ஏற்பட்ட தீ விபத்து, சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு மற்றும் கோவிட்-19 தொற்று நோயைக் கையாண்டதற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

### ➢ முதலமைச்சரின் தகவல் பலகை (CM Dashboard ) தமிழ்நாடு 360

- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - பல்வேறு அரசுத் துறைகளின் முடிவெடுக்கும் செயல்முறைகளைக் கண்காணிக்கவும், பகுப்பாய்வு செய்யவும் மற்றும் செயல்திறனை அதிகரிக்கவும், நிகழ்நேர அதிநவீன 'முதலமைச்சரின் தகவல் பலகை தமிழ்நாடு 360' ஐத் தொடங்கி வைத்தார்.
- ✓ மாநிலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களை எளிதாகக் கண்காணிப்பதை உறுதி செய்யவதற்காக, அனைத்து அரசுத் துறைகள், மாவட்ட நிர்வாகங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் காவல்துறையின் தரவுகளை ஒருங்கிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

### ➢ மீண்டும் மஞ்சப்பை

- ✓ மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் நடத்தும், 'மீண்டும் மஞ்சப்பை' பிரச்சாரத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் டிசம்பர் 23ஆம் தேதி தொடங்கி வைக்கிறார்.

- ✓ சுற்றுச் சூழலுக்கும் இயற்கை வளங்களுக்கும் ஈடு செய்ய இயலாத சேதத்தை ஏற்படுத்தும் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கைக் குறைப்பதை இந்த பிரச்சாரம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ வணக்கம் காவல் துறை (Hello Police)

- ✓ செங்கல்பட்டு காவல் கண்காணிப்பாளர் அரவிந்தன் - 'வணக்கம் காவல்துறை' என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். இதன்மூலம், பொதுமக்கள் தங்கள் பகுதியில் நடக்கும் சட்ட விரோத செயல்கள் குறித்த தகவல்களை தொலைபேசியில் தெரிவிக்கலாம்.
- ✓ கஞ்சா விற்பனை, மணல் அள்ளுதல் அல்லது சூதாட்டம் போன்ற சம்பவங்கள் குறித்து பொது மக்கள் 7200102104 என்ற எண்ணை அழைக்கலாம் அல்லது வாட்ஸ் ஆப் செய்திகளை அனுப்பலாம்.

## ➢ தமிழ்நாடு தொடக்கநிலை விதை மானிய நிதி (Tamil Nadu Startup Seed Grant Fund -TANSEED)

- ✓ தமிழ்நாடு தொடக்கநிலை விதை மானிய நிதியின் இரண்டாம் பதிப்பில் தேர்வு செய்யப்பட்ட, தமிழகம் முழுவதையும் சேர்ந்த 19 தொடக்க நிலை நிறுவனங்கள் மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் இருந்து தலா 5 இலட்சத்தை மானியமாக வியாழக்கிழமை அன்று பெற்றன.
- ✓ தமிழ்நாடு தொடக்கநிலை மற்றும் கண்டுபிடிப்பு இயக்கம் (Tamil Nadu Startup and Innovation Mission) ஒரு துடிப்பான சுற்றுச் சூழலை உருவாக்க ஆணையிட்டுள்ளது. அது மாநிலத்தில் தொடக்கநிலை கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்காக டான்சீட்-ஐ செயல்படுத்தி வருகிறத.

## ➢ எம்.எஸ். சுவாமிநாதன் ரோஸ்

- ✓ ஒரு புதிய வகை ரோஜாவுக்கு – புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் பெயரிடப்பட்டுள்ளது.
- ✓ கொடைக்கானலைச் சேர்ந்த முன்னணி தோட்டக்கலை நிபுணரான எம்.எஸ். வீரராகவன், புதிய வகை ரோஜாவை உருவாக்கி அதற்கு, 'எம்.எஸ். சுவாமிநாதன் ரோஸ்' என்று பெயரிட்டுள்ளார்.

## ➢ அம்பேத்கார் சுடர் விருது

- ✓ 2021ஆம் ஆண்டுக்கான அம்பேத்கார் சுடர் விருது முதல்வர் திரு. ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டது. இதனை விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் வழங்கினார். பல ஆண்டுகளுக்குப் பிறகும் சமூக, பொருளாதாரத்தில் ஏற்றத் தாழ்வு நிலவி வருவதாக திமுக தலைவர் தெரிவித்தார்.

## ➢ செறிவூட்டப்பட்ட அரிசி – பொது விநியோகத் திட்டம்

- ✓ விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மேலும் இரண்டு மாவட்டங்கள் - ஒன்றிய அரசு திட்டத்தின் ஒரு பகுதியாக பொது விநியோகத் திட்டத்தின்மூலம் செறிவூட்டப்பட்ட அரிசியைப் பெற உள்ளன.
- ✓ ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் பிரதமரின் போஷன் சக்தி நிர்மான் (Pradhan Mantri Poshan Shakti Nirman) திட்டத்தின்கீழ் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகம் செய்யப்படுகிறது.

## ➢ அகவிலைப்படி

- ✓ டிசம்பர் 28 அன்று தமிழ்நாடு அரசு – தனது ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படியை 17 விழுக்காட்டிலிருந்து 31 விழுக்காடாக உயர்த்தி அறிவித்தது. இதன்மூலம் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.8,724 கோடி கூடுதலாகச் செலவாகும்.
- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், அடுத்த ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி முதல் அகவிலைப்படியை 14 விழுக்காடு உயர்த்தி உத்தரவிட்டுள்ளார்.

## ➢ தமிழ்நாடு சுற்றுலா ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டுக் குழு

- ✓ தமிழ்நாடு சுற்றுலா ஆலோசனைக் குழு – தமிழ்நாடு சுற்றுலா ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டுக் குழு என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- ✓ இந்தக் குழுவின் துணைத் தலைவராக சுற்றுலாத் துறை செயலாளர் இருப்பார்.

## ➢ பெரியார் பல்கலைக் கழகம்

- ✓ பெரியார் பல்கலைக் கழகம் - தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலின் (National Assessment and Accreditation Council) அகில இந்திய தர வரிசையில் A++ உடன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.
- ✓ இந்த தரவரிசையில் இந்தப் பல்கலைக் கழகம் முதலிடத்தைப் பெறுவதே இதுவே முதல் முறை ஆகும்.

## ➢ அட்டல் தரவரிசை 2021

- ✓ இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை அட்டல் தரவரிசை 2021இல் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.
- ✓ ஒன்றிய கல்வி அமைச்சகம், கண்டுபிடிப்புகளின் அடிப்படையிலான நிறுவனங்களின் அட்டல் புதுமை தரவரிசை (Atal Ranking of Institutions on Innovation Achievements) 2021ஐ டிசம்பர் 29, 2021 அன்று வெளியிட்டது.
- ✓ ஐஐடி சென்னை தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக தரவரிசையில் முதலிடத்தையும், ஐஐடி பாம்பே இரண்டாவது இடத்தையும் ஐஐடி டில்லி மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

## ➢ மகாகவி பாரதியார் வாழ்வாதாரப் பூங்காக்கள்

- ✓ தமிழ்நாடு அரசு மூன்று ஆண்டுகளில் மொத்தம் 25 'மகாகவி பாரதியார் வாழ்வாதாரப் பூங்காக்களை' நிறுவ உள்ளது. அவை சுய உதவிக் குழுக்களுக்கு பொதுவான உள்கட்டமைப்பு மையங்களாகச் செயல்படும்.

## ➢ தாய் சேவை சுகாதாரச் சேவைகள்

- ✓ தாய் சேய் சுகாதாரச் சேவைகளில் திருப்பத்தூர் மாவட்டம் முதலிடத்தில் உள்ளது.
- ✓ விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பிறந்த குழந்தை பராமரிப்பு மையங்களில் தாய் சேய் சுகாதாரச் சேவைகளை வழங்குவதில் திருப்பத்தூர் மாவட்டம் முதலிடம் பிடித்துள்ளது. கடலூர் இரண்டாவது இடத்தையும், காஞ்சிபுரம் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

## ➢ தமிழ்நாடு மாநில பெண்களுக்கான புதிய கொள்கை 2021 (வரைவு)

- ✓ தமிழ்நாடு அரசு பெண்களுக்கான தமிழ்நாடு மாநில புதிய கொள்கை 2021 (வரைவு) ஐ, 30 டிசம்பர் 2021 அன்று வெளியிட்டது.
- ✓ இந்தக் கொள்கை ஐந்தாண்டுகளுக்கும் மேல் நடைமுறைப்படுத்தப்படும்.

- ✓ பள்ளி மற்றும் கல்லூரிப் பெண்களுக்கான கட்டாய தற்காப்புக் கலைப் பயிற்சி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின்கீழ் அனைத்து ஒற்றை மற்றும் பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு மேலும் 50 நபர்களுக்கு அல்லது 50 நாட்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பதிவு செய்யப்பட்ட கட்சிகளில் 33.3 விழுக்காடு பிரதிநிதித்துவம் ஆகியவை பெண்களுக்கான தமிழ்நாடு மாநில புதிய கொள்கை 2021இல் இடம்பெற்றுள்ள விதிமுறைகளில் அடங்கும்.
- ✓ இந்தியாவிலேயே முதல்முறையான இந்த வரைவுக் கொள்கையானது, மாநிலத்தில் உள்ள 3.2 கோடி பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் லட்சியமான சூழலை வழங்க முற்படுகிறது.

## ➢ சாகித்ய அகாடமி விருது

- ✓ பெண்களின் ஒரே மாதிரியான பார்வையை எதிர்க்கும், தமிழ் பெண்ணிய எழுத்தாளர் சி.எஸ். லக்ஷ்மி என்ற அம்பை, இந்த ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதை வென்றுள்ளார். சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை என்ற சிறுகதைத் தொகுப்புக்காக அவருக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து இந்த விருதைப் பெறும் நான்காவது பெண் எழுத்தாளர் அம்பை ஆவார்.
- ✓ அவரது முதல் சிறுகதைத் தொகுப்பாகிய சிறகுகள் முறியும் 1976ல் வெளியிடப்பட்டது மற்றும் அந்தத் தொகுப்பின் பெயரிடப்பட்ட கதை 1967இல் எழுதப்பட்டிருந்தாலும், அவர் தனது பதின்ம வயதிலேயே எழுத்தாளராக முத்திரை பதித்தார். இவரது பல கதைகள் தமிழ் இதழான ஆனந்த விகடனில் நட்சத்திரக் கதைகளாக வெளிவந்தன.
- ✓ இவரது மற்ற கதைத் தொகுப்புகளான வீட்டின் மூலையில் ஒரு சமையல், காற்றில் ஒரு மான், வற்றும் ஏரியில் மீன்கள், ஒரு கருப்பு சிலந்தியுடன் ஒரு இரவு மற்றும் அந்தேரி மேம்பாலத்தில் ஒரு சந்திப்பு ஆகியவை காலச்சுவடு பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.
- ✓ அம்மா ஒரு கொலை செய்தாள் மற்றும் சிறகுகள் முறியும் என்ற சிறுகதைகள் எழுதப்பட்டு 50 ஆண்டுகளுக்குப் பிறகும் அந்த அழகை அவை தக்க வைத்துக் கொண்டுள்ளன. அவரது இன்னொரு கதை தனிமை என்னும் இருட்டு என்பதாகும்.

## ➢ பால சாகித்ய புரஸ்கார்

- ✓ இன்னொரு தமிழ் எழுத்தாளரான மு. முருகேஷ் தனது 'அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை' என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக பால சாகித்ய புரஸ்கார் விருதைப் பெற்றார்.

## ➢ தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (Tamil Nadu Innovation Initiatives) திட்டம்

- ✓ தமிழ்நாடு அரசு – மாநிலத்தில் உள்ள அனைத்து பொது நூலகங்களையும் இணைக்கும் ஒரு புதிய அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ இந்தத் திட்டம் தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின்கீழ், மாநில திட்டக் குழுவால் செயல்படுத்தப்படுகிறது.

# ஜனவரி- பிப்ரவரி- மார்ச் 2022

## ➢ புதிய காவல் ஆணையரகங்கள்

✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - ஜனவரி 1, 2022 அன்று சென்னை புறநகர்ப் பகுதிகளில் புதிய ஆவடி மற்றும் தாம்பரம் மாநகராட்சிகளுக்கான புதிய காவல் ஆணையர் அலுவலகங்களைத் தொடங்கி வைத்தார்.

✓ தாம்பரம் ஆணையரகத்துக்கு எம். ரவி, கூடுதல் காவல் துறைத் தலைவர் தலைவராக இருப்பார்.

✓ ஆவடி ஆணையரகத்துக்கு சந்தீப் ராய் ரத்தோர், கூடுதல் காவல் துறைத் தலைவர் தலைவராக இருப்பார்.

## ➢ நிகர பூஜ்ஜியம் (Net Zero)

➢ குத்தம்பாக்கம் மற்றும் கிளாம்பாக்கம் ஆகிய இடங்களில் அமையவுள்ள இரண்டு புதிய புறநகர் பேருந்து முனையங்கள் - வளாகத்தில் உருவாக்கப்படும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தி, சென்னையில் நிகர பூஜ்ஜியத்திற்கு அருகில் இருக்கும் முதல் பொதுக் கட்டிடங்களாக இருக்கும்.

➢ இவை சூரிய சக்தியை உற்பத்தி செய்யும் மையங்களாக செயல்படும். இவை அங்குள்ள மின் வாகனங்களை ரீசார்ஜ் செய்வதற்கும் பயன்படுத்தப்படும்.

## ➢ ராணி வேலு நாச்சியார்

✓ ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போர் தொடுத்த தமிழ்நாட்டின் சிவகங்கை அரசி, ராணி வேலு நாச்சியாரின் பிறந்த நாளான 03 ஜனவரி 2022 அன்று அவருக்கு பிரதமர் நரேந்திர மோடி அஞ்சலி செலுத்தினார்.

✓ இந்தியாவில் கிழக்கிந்திய கம்பெனியுடன் போர் தொடுத்த முதல் இந்திய இராணி இவர் ஆவார்.

✓ இவர் வீரமங்கை என்று தமிழர்களால் அழைக்கப்படுகிறார்.

## ➢ வேளாண்-தொழில்துறை பாதைத் திட்டம் (Agro-industrial Corridor Project)

✓ வேளாண் தொழில்துறை பாதைத் திட்டம் அடுத்த ஆண்டு தொடங்கும் என்று ஆளுநர் ஆர். என். ரவி புதன்கிழமை அன்று தெரிவித்தார். இத்திட்டம், காவிரி டெல்டா மாவட்டங்களில் வேளாண்மை சார்ந்த தொழில்களை ஊக்குவிப்பதன்மூலம் தொழில்துறை உட்கட்டமைப்பு பற்றாக்குறையை சரி செய்யும்.

✓ மருத்துவ சாதனங்கள் துறையானது சூரிய உதயத் துறையாக அடையாளம் காணப்பட்டு, இந்தத் தொழிலுக்கான விரிவான சுற்றுச் சூழல் அமைப்பை உருவாக்குவதற்காக, 150 ஏக்கரில் மருத்துவ சாதனப் பூங்கா நிறுவப்பட்டு வருகிறது.

✓ தூத்துக்குடியில் 1,100 ஏக்கர் பரப்பளவில் நாட்டின் முதலாவது பெரிய மரச்சாமான்கள் பூங்கா அமைக்கப்படும் என்றும் ஆளுநர் கூறினார். இந்த இரண்டு பூங்காக்கள் மூலமாக சுமார் 3 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

✓ மாநில அரசு ஜனவரி 12ஆம் தேதியை 'உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் தினம்' என்று அறிவித்துள்ளது. இந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு நிகழ்வுகளால் குறிக்கப்படும்.

## ➢ கிராம திட்டமிடல் சட்டம், 1971 (Country Planning Act, 1971)

✓ தமிழ்நாடு அரசு – தமிழ்நாடு நகர மற்றும் கிராம திட்டமிடல் சட்டம், 1971இல் திருத்தம் செய்து, அதன்மூலம் திட்ட அனுமதிகளின் செல்லுபடி காலத்தை ஐந்து ஆண்டுகளில் இருந்து எட்டு ஆண்டுகளாக நீட்டிக்க முடிவு செய்துள்ளது.

 PH: 044-24339436, 42867555, 9840226187

- **சென்னை விமான நிலையம்**
  - விமானப் போக்குவரத்து பகுப்பாய்வு நிறுவனமாகிய, ‘சிரியம்’படி, 2021ஆம் ஆண்டில், சரியான நேரத்தில் சிறப்பான செயல்திறனுக்கான மிகச் சிறந்த (டாப்) 10 உலகளாவிய பட்டியலில், இந்தியாவில் இருந்து, சென்னை விமான நிலையம் மட்டுமே இடம் பெற்றுள்ளது.
  - இந்தப் பட்டியலில் சென்னை 8வது இடத்தில் உள்ளது.

- **புதிய உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்துவதற்கான மசோதாக்கள்**
  - மாநிலத்தில் மேலும் சில மாநகராட்சிகளை உருவாக்குவதற்கான மசோதாக்களை மாநில அரசு மாநில சட்டப்பேரவையில் வியாழக்கிழமை அன்று அறிமுகப்படுத்தியது.
  - நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, கடலூர், காஞ்சிபுரம், சிவகாசி, கரூர், தாம்பரம் மற்றும் கும்பகோணம் ஆகிய மாநகராட்சிகளை உருவாக்குவதற்கான மசோதாக்களை தாக்கல் செய்தார்.
  - மாநிலத்தில் நகரமயமாக்கல் பெற்றுள்ள வேகத்தைக் கருத்தில் கொண்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

- **திருக்குறள் மாநாடு 2022**
  - தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி- கோவையில் ஜனவரி 7, 2022 அன்று சர்வதேச திருக்குறள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.
  - இந்தத் திருக்குறளை உலகம் முழுவதும் பிரபலம் அடையச் செய்யும் வகையில், மொழிபெயர்ப்பாக மட்டுமில்லாமல், ஆன்மீகக் கண்ணோட்டத்துடன் கூடிய கூடுதல் விமர்சனங்களையும் அளிக்க வேண்டும் என்று ஆளுநர் கேட்டுக் கொண்டார்.
  - திருக்குறளின் பெருமையை அங்கீகரித்ததற்காகவும், அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததற்காவும் முன்னாள் சென்னை ஆட்சியர் பிரான்சிஸ் வைட் எலிசின் பணிகளை அவர் நினைவுகூர்ந்தார்.

- **தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம்**
  - கூட்டுறவு சங்கங்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.
  - கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர்கள் குழுவின் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளில் இருந்து 3 ஆண்டுகளாகக் குறைக்கும் வகையில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டம் 1983ஐ மேலும் திருத்துவதற்கான மசோதாவை தமிழக சட்டப் பேரவை வெள்ளிக்கிழமை நிறைவேற்றியது.

- **மின்-வாடகை**
  - விவசாயிகள் தங்களுக்குத் தேவையான இயந்திரங்களை வாடகைக்குப் பெற உதவும் வகையில், கைபேசி செயலியான மின்-வாடகையை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜனவரி 8ஆம் தேதி தொடங்கி வைத்தார்.
  - விவசாயிகள் விவசாய அலுவலகங்களுக்குச் செல்லாமல் தங்களுக்குத் தேவையான இயுந்திரங்களை பதிவு செய்து கொள்வதற்கு இந்த மின்-வாடகை செயலி உதவும்.

- **நெம்மேலி மூன்றாவது சுத்திகரிப்பு (உப்பு நீக்கும்) ஆலை**
  - நெம்மேலி மூன்றாவது சுத்திகரிப்பு ஆலை ஏப்ரல் 2023க்குள் தயாராகிவிடும்.
  - ரூ.1,259.38 கோடி மதிப்பிலான இந்தத் திட்டமானது, அம்ருத் (AMRUT) திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது மற்றும் 10.6 ஏக்கர் நிலத்தில் KfW என்ற ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் 100 mld திறன்கொண்ட உப்பு நீக்கும் ஆலை அமைக்கப்பட்டுள்ள அதே இடத்தில் அமைக்கப்படுகிறது.

- **அனைவருக்குமான அடிப்படை வருமானம் (Universal Basic Income)**
- ✓ முதலமைச்சரின் பொருளாதார ஆலோசனைக் குழு உறுப்பினராக உள்ள அரவிந்த் சுப்பிரமணியன், அனைவருக்கும் அடிப்படை வருமானத்தை அளிக்கும் திட்டத்தை மாநில அரசு அறிமுகப்படுத்துவதற்கு தான் ஆதரவாக இருப்பதாகக் கூறினார்.
- ✓ குறைந்தபட்ச அடிப்படை வருமானம் என்ற எண்ணம் தமிழ்நாட்டின் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புத் திட்டத்தை நிறைவு செய்யவும், தனிநபர்கள் தங்கள் திறனை உணரவும் உதவும். தொழில்நுட்பம் மற்றும் திறமை இருந்தபோதிலும், இந்தியாவில் உள்ள 80 யூனிகார்ன்களில் சென்னையில் மூன்று யூனிகார்ன்கள் (1 பில்லியன் டாலருக்கும் அதிகமான மதிப்பு) மட்டுமே உள்ளன.

- **மத்திய செம்மொழி தமிழ் நிறுவனம் (Central Institute of Classical Tamil) மற்றும் 11 புதிய மருத்துவக் கல்லூரிகள்**
- ✓ பிரதமர் நரேந்திர மோடி, 2022ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் தேதி, சென்னையில் மத்திய செம்மொழி தமிழ் நிறுவனத்தின் புதிய வளாகத்தைத் திறந்து வைத்தார்.
- ✓ இந்த மத்திய செம்மொழி தமிழ் நிறுவனம், செம்மொழித் தமிழை மேம்படுத்துவதில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதில் தனது பங்களிப்பை அளித்து வருகிறது.
- ✓ தமிழகம் முழுவதும் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளையும் பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

- **பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு இயக்கம்**
- ✓ ஜனவரி 12 அன்று, பிரதமர் நரேந்திர மோடி – பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உட்கட்டமைப்பு இயக்கத்தின்கீழ், அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்திற்கு 3,000 கோடி உதவி வழங்கப்படும் என்று அறிவித்தார்.
- ✓ சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் சுகாதார ஆராய்ச்சி, குறிப்பாக மாவட்ட அளவில் உள்ள முக்கியமான இடைவெளிகளை நிரப்புவதற்கு ஒன்றிய அரசின் இந்த உதவி பயன்படுத்தப்படும்.

- **இயற்கை வளங்கள்**
- ✓ மாநில அரசு – சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் தொடர்பான பொருள்களைத் தொழில் துறையிலிருந்து பிரித்து, இயற்கை வளங்கள் என்ற ஒரு புதிய துறையை உருவாக்கியுள்ளது.
- ✓ இந்தப் புதிய ஆணையின்படி, புதிதாக அமைக்கப்படும் துறையின் கட்டுப்பாட்டின்கீழ், துறைகளின் தலைவர்கள், புவியியல் மற்றும் சுரங்க இயக்குநரகம், தமிழ்நாடு கனிமங்கள் மற்றும் தமிழ்நாடு மேக்னசைட் ஆகியவை கொண்டு வரப்படும்.
- ✓ இந்தப் புதிய துறைக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைவராக இருப்பார்.

- **தந்தை பெரியார் மற்றும் டாக்டர் அம்பேத்கார் விருது**
- ✓ ஜனவரி 13 அன்று, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - திராவிட அறிஞரும் வரலாற்று ஆசிரியருமான கே. திருநாவுக்கரசுக்கு சமூக நீதிக்கான மாநில அரசின் தந்தை பெரியார் விருதையும், ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி கே. சந்துருவுக்கு டாக்டர். அம்பேத்கார் விருதையும் அறிவித்தார்.

- **புதுப்பிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்**

- ✓ கோவில் பூசாரிகள் மற்றும் ஊழியர்களுக்கான புதுப்பிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஜனவரி 13ஆம் தேதி தொடங்கி வைத்தார்.
- ✓ அர்ச்சகர்கள் மற்றும் கோவில் ஊழியர்களுக்கான ஓய்வூதியத்தை 1,000 ஆக உயர்த்தி மாநில அரசு அறிவித்துள்ளது.

## ➢ புதிய டாப்ளர் வானிலை ரேடார் (New Doppler Weather Radar)

- ✓ ஒன்றிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் துறை இணை அமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் - பள்ளிக்கரணையில் உள்ள தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் நிறுவப்பட்ட புதிய டாப்ளர் வானிலை ரேடாரை ஜனவரி 14 அன்று திறந்து வைத்தார்.
- ✓ புதிய கருவியானது, இரட்டை துருவப்படுத்தப்பட்ட டாப்ளர் வானிலை ரேடார் ஆகும், இது சென்னையைச் சுற்றி 150 கிமீ சுற்றளவு கொண்ட பகுதிக்குச் சேவை செய்யும் திறன் கொண்டது.

## ➢ ஜான் பென்னிகுயிக்

- ✓ முல்லைப் பெரியாறு அணையை 1895-ல் கட்டிய ஆங்கிலேய பொறியாளர் கர்னல் ஜான் பென்னிகுயிக்கின் சிலை, இங்கிலாந்தில் உள்ள அவரது சொந்த ஊரான கேம்பர்லியில் உள்ள பூங்காவில் மாநில அரசால் நிறுவப்படும் என்று ஜனவரி 15ஆம் தேதி முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.
- ✓ பென்னிகுயிக்கின் பிறந்த நாளான ஜனவரி 15 அன்று இதை அறிவிப்பதில் தாம் மகிழ்ச்சி அடைவதாக முதல்வர் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.
- ✓ அவர் கட்டிய அணை தற்போது தமிழக அரசால் இயக்கப்படுகிறது.

## ➢ குமரி அனந்தன்

- ✓ ஜனவரி 15, தமிழ்நாடு அரசு – 2021ஆம் ஆண்டுக்கான பெருந்தலைவர் காமராஜர் விருதுக்கு காங்கிரஸ் மூத்த தலைவர் குமரி அனந்தனை தேர்வு செய்தது.
- ✓ இந்த அறிவிப்பினை வழங்கியபோது, அகில இந்திய தமிழ்ச்சங்க பேரவை தலைவர் மீனாட்சிசுந்தரத்துக்கு, இந்தஆண்டுக்கான அய்யன் திருவள்ளுவர் விருது வழங்கப்படும் என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.
- ✓ மேற்கண்ட ஒவ்வொரு விருதும் ஒரு இலட்சம் ரொக்கப் பரிசு, தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுப் பத்திரம் ஆகியவற்றைக் கொண்டதாகும்.

## ➢ புவிசார் குறியீடு

- ✓ கும்பகோணம் வெற்றிலை, தோவாளை மாணிக்க மாலை ஆகியவற்றுக்கு புவிசார் குறியீடு வேண்டப்பட்டுள்ளது.
- ✓ கும்பகோணம் வெற்றிலை மற்றும் தோவாளை மாணிக்க மாலை ஆகிய இரண்டு பிரபலமான தமிழக தயாரிப்புகளுக்கு புவிசார் குறியீடு கோரி, சென்னையில் உள்ள புவிசார் குறியீடுகள் பதிவகம் விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது.

## ➢ மாநகராட்சிகளின் மேயர்கள்

- ✓ ஜனவரி 17ஆம் தேதி, மாநில அரசு – மாநராட்சி மேயர்களுக்கான இட ஒதுக்கீடுகளை அறிவித்தது.
- ✓ திங்கட்கிழமை அரசு வெளியிட்டுள்ள அறிவிக்கையில் உள்ள இடஒதுக்கீட்டின்படி, வரும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில், சென்னை மற்றும் தாம்பரம் மாநகராட்சிகள், பட்டியல் சாதி பெண்களை மேயர்களாகத் தேர்வு செய்ய உள்ளன.

- ✓ ஆவடி மேயர் பதவி பட்டியல் சாதி (பொது) வேட்பாளருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதர ஒன்பது மாநகராட்சிகளின் மேயர் பதவிகள் பெண்களுக்கு (பொது) ஒதுக்கப்பட்டுள்ளன.

## ➢ மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் (Central Institute of Classical Tamil)

- ✓ மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் - அடுத்த கல்வியாண்டில் (2022-23) தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ள முக்கியப் பல்கலைக் கழகங்களில் நான்கு செம்மொழித் தமிழ் இருக்கைகளை நிறுவத் திட்டமிட்டுள்ளது.
- ✓ தமிழ் மக்கள் தொகை அதிக உள்ள மற்றும் தமிழ்நாட்டுடன் பழங்கால கலாச்சாரத் தொடர்பு உள்ள நாடுகளில் தமிழ் இருக்கைகள் அமைக்கப்படும்.

## ➢ மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் எட்டு புத்தகங்களை வெளியிட்டுள்ளது

- ✓ சென்னையில் உள்ள மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் வெளியிட்ட 8 புத்தகங்களை, முதல்வர் மு.க. ஸ்டாலின், திங்கட்கிழமை பெரும்பாக்கத்தில் உள்ள அதன் புதிய வளாகத்திற்குச் சென்றபோது வெளியிட்டார்.
- ✓ அந்த நூல்களாவன: தொல்காப்பிய ஆய்வு, தெய்வச் சிலையார் உரைநெறி, ஐங்குறுநூறு குறிஞ்சி, ஐங்குறுநூறு பாலை, வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம், புதிய நோக்கில் களப்பிரர் வரலாறு, திராவிட ஒப்பீட்டுத் தமிழ் இலக்கணம் - 2 மற்றும் தமிழின் ஒரு வரலாற்று இலக்கணம் ஆகும்.
- ✓ 2010 முதல் 2019 வரையிலான ஆண்டுகளுக்கான கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி விருது, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ஜனவரி 22ஆம் தேதி நடைபெறும் விழாவில் வழங்கப்படும் என்று அவர் அறிவித்தார்.

## ➢ தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் (Tamil Nadu Adi Dravidar Housing Development Corporation)

- ✓ தமிழ்நாடு அரசு – தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக உ. மதிவாணனை நியமித்து ஆணையிட்டுள்ளது.
- ✓ இந்த முகமை 1974ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் கருணாநிதியால் தொடங்கப்பட்டது.
- ✓ பட்டியலின பழங்குடியினர் மற்றும் பட்டியல் சாதியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், திறன் மேம்பாடு மற்றும் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் இது அமைக்கப்பட்டது.

## ➢ பெருநகர சென்னை மாநகராட்சி

- ✓ பெருநகர சென்னை மாநகராட்சி – 50 விழுக்காட்டிற்கும் அதிகமான வார்டுகளை பெண்களுக்கு ஒதுக்கிய முந்தைய உத்தரவை ரத்து செய்து விட்டு, 100 வார்டுகளை பெண்களுக்காக ஒதுக்கியுள்ளது.
- ✓ புதிய ஆணையின்படி, 16 வார்டுகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு (பெண்கள்), 84 வார்டுகள் பெண்கள் (பொது) மற்றும் 16 வார்டுகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பொது) என ஒதுக்கப்பட்டுள்ளன.
- ✓ பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழுள்ள –சென்னை, தாம்பரம் மற்றும் ஆவடி ஆகிய மூன்று மாநகராட்சிகளின் மேயர்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் சென்னை மற்றும் தாம்பரம் மாநகராட்சிகள் தங்களது முதல் மேயர்களைத் தேர்ந்தெடுக்க உள்ளன.

## ➢ திட்டங்களைக் கண்காணிப்பதற்காக மாநில திட்டக் குழு

- ✓ மாநிலத்தின் வளர்ச்சிக்கு விரிவான ஆலோசனைகளை வழங்குமாறு மாநில திட்டக்குழு உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை அன்று அழைப்பு விடுத்தார். அரசு செயல்படுத்தி வரும் நலத் திட்டங்கள் அடித்தட்டு மக்களைச் சென்றடைந்ததா என்பதை கண்காணிக்க வேண்டும் என்று அவர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.
- ✓ வாழ்க்கைத் தரம், ஆயுட்காலம், கல்வி, குழந்தை வளர்ப்பு, வறுமை ஒழிப்பு, பொது சுகாதாரம், மனித உரிமைகள், சமூக நீதி மற்றும் விளிம்புநிலை சமூகங்களின் நலன் போன்ற பல்வேறு அம்சங்களில் வளர்ச்சியை எட்ட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.
- ✓ அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியை உறுதி செய்வதற்கான வழிகாட்டுதல்களைக் கொண்டு வருமாறு ஆணையத்தை ஊக்குவித்த முதலமைச்சர், 'நமது வளர்ச்சி சமமாக பகிரப்படவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்' என்று சுட்டிக்காட்டினார்.
- ✓ 'தொழில்வளர்ச்சி மாவட்டங்களுக்கு இடையே மாறுபடுகிறது. அதேபோலத்தான் கல்வியும் மாறுபடுகிறது. ஒரு சில மாவட்டங்களில் வறுமை குறைவாக இருந்தாலும், மற்ற மாவட்டங்களில் அதிகமாக உள்ளது. நிதிநிலைமையைப் பற்றி உங்களுக்கு நன்கு தெரியும். நிதியை எவ்வாறு சேமிப்பது என்பது குறித்த உங்கள் ஆலோசனைகள் எங்களுக்குத் தேவைப்படுகின்றன. பத்திரப்பதிவு மற்றும் கலால் வரி மூலம் மட்டுமே வருவாய் கிடைக்கிறது. சுற்றுலா, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள். கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறி போன்ற துறைகளில் இருந்தும் வருவாய் ஈட்ட வேண்டும்'

## ➢ குடியரசு தின விழா கொண்டாட்டங்கள்

- ✓ சென்னையில் கோவிட் பாதிப்பு அதிகரித்து வருவதால், தமிழக அரசின் குடியரசு தின விழாவில் இந்த ஆண்டு அரசுத்துறை ஊர்திகள் எதுவும் இடம் பெறாது.
- ✓ மாறாக, ஒன்றிய அரசால் நிராகரிக்கப்பட்ட மாநில அரசின் அலங்கார ஊர்தி சென்னை காமராஜர் சாலையில் விடப்படும். இதில் சுப்பிரமணிய பாரதியார், வ.உ. சிதம்பரம், வேலு நாச்சியார் மற்றும் மருது சகோதரர்களின் உருவங்கள் காட்சிப்படுத்தப்படும்.
- ✓ இரண்டு அலங்கார ஊர்திகளில் மாற்றங்கள் செய்யப்படும். மூன்றாவது ஊர்தியில் 'சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாடு' என்ற கருப்பொருளை உணர்த்தும் வகையில் தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவுகூர்வதாக அமையும்.

## ➢ காவல் ஆணையம்

- ✓ புதிய காவல் ஆணையம் அமைப்பதற்கான உத்தரவை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கினார். ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சி.டி. செல்வம், இந்த ஆணையத்தின் தலைவராக இருப்பார்.
- ✓ இந்த ஆணையம் காவல்துறை பணியாளர்களின் நலனுக்கான நடவடிக்கைகளையும், காவ்லதுறை தொடர்பான அம்சங்களையும் ஆய்வு செய்து, குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் தன்னுடைய அறிக்கையை சமர்ப்பிக்கும்.
- ✓ காவல்துறையை மேம்படுத்துதல், காவல்துறை மற்றும் பொதுமக்களுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்துதல், இணைய குற்றங்களைத் தடுத்தல் மற்றும் மனிதாபிமான அணுகுமுறையுடன் காவல்துறையை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை இந்த ஆணையம் பரிந்துரைக்கும்.

## ➢ கொற்கை

- ✓ சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டம் கொற்கை கடற்கரையில் உள்ள கடலில் உளவுத் துறை ஆய்வு, இந்திய கடல்சார் பல்கலைக் கழகம் மற்றும் தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாடு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்படும்.

- ✓ பிப்ரவரி முதல் வாரத்தில் இருந்து, மாநிலம் முழுவதும் ஏழு இடங்களில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். சிவகங்கை மாவட்டத்தில் கீழடி மற்றும் அருகிலுள்ள இடங்களில் (கொந்தகை, அகரம் மற்றும் மணலூர்) அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும் (கட்டம் 8), தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சிவகலை (3ஆம் கட்டம்), அரியலூர் மாவட்டத்தில் உள்ள கங்கைகொண்ட சோழபுரம் (இரண்டாம் கட்டம்), கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மயிலாடும்பாறை (இரண்டாம் கட்டம்), விருதுநகர் மாவட்டத்தில் வெம்பக்கோட்டை (1ஆம் கட்டம்), திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள துள்ளுக்காரப்பட்டி (1ஆம் கட்டம்) மற்றும் தருமபுரி மாவட்டத்தில் பெரும்பாளை (1ஆம் கட்டம்).

## ➢ CLAPP

- ✓ ஜனவரி 21ஆம் தேதி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - கிளாப் (CLAPP) என்ற ஒரு புதிய ஆன்லைன் செயலியை தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.
- ✓ இந்த கிளாப் செயலியைப் (முழுமையான விடுப்புச் செயலி) பயன்படுத்தி, அனைத்து நிலைகளிலும் உள்ள காவலர்களும் இப்போது விடுப்புக்கு விண்ணப்பித்து உடனடியாக அனுமதி பெறலாம்.
- ✓ இந்த புதிய கைப்பேசி செயலியானது தாமதங்கள், கட்டாய நிராகரிப்புகள் அல்லது பாரபட்சம் ஆகியவற்றைத் தடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் விடுப்பு இசைவு அளிக்கும் செயல்முறையில் அதிக வெளிப்படைத் தன்மையை உறுதி செய்கிறது.

## ➢ அலங்காநல்லூர்

- ✓ ஜனவரி 21ஆம் தேதி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் - உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்வை ஆயிரக் கணக்கான மக்கள் காணும் வகையில், உலகத் தரம் வாய்ந்த வசதிகளுடன்கூடிய அதிநவீன அரங்கை அலங்காநல்லூரில் மாநில அரசு கட்டும் என்று கூறினார்.

## ➢ மின்-சேவை சேவைகள் (E-Seva Services)

- ✓ ஜனவரி 22 அன்று, தமிழக அரசு – தனியார் பிரவுசிங் மையங்களில் மின் சேவை சேவைகளை குறைந்த செலவில் வழங்குவதாக அறிவித்துள்ளது.
- ✓ தனியார் பிரவுசிங் மையங்களில் மின்-சேவை சேவைகளை வழங்குவதற்கான 36 உரிமங்களை தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டி. மனோ தங்கராஜ் வழங்கினார்.
- ✓ தற்போது, இத்துறையின்கீழ், மாநிலத்தில் 2,457 மின்-சேவா சேவை மையங்கள் உள்ளன.

## ➢ செம்மொழி தமிழ் விருதுகள்

- ✓ 10 அறிஞர்களுக்கு செம்மொழி தமிழ் விருதுகள் வழங்கப்பட்டன.
- ✓ 2008ஆம் ஆண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அமைக்கப்பட்ட பிறகு முன்னாள் முதல்வர் அவர்களால் அமைக்கப்பட்ட கலைஞர் மு. கருணாநிதி தமிழ் அறிவு அறக்கட்டளை மூலம் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
- ✓ இந்த நிறுவனத்தின் புதிய வளாகம் அமைக்கப்படும், மேடவாக்கம்-சோழிங்கநல்லூர் இணைப்புச் சாலைக்கு ‘செம்மொழிச் சாலை’ என்று பெயரிடப்படும் என்றும், தென்கிழக்கு ஆசியாவில் உள்ள ஐந்து பல்கலைக் கழகங்களில் செம்மொழி தமிழ் இருக்கை உருவாக்கப்படும் என்றும் திரு. ஸ்டாலின் கூறினார்.

- **கீழடி அகழ்வாராய்ச்சிக்குப் பின்னால் இருந்த கைகள்**
- ✓ சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகள், வைகை பள்ளத்தாக்கு கி.மு. 6ஆம் நூற்றாண்டில் எப்படி இருந்தது என்பதை எடுத்துக்காட்டுவதாய் உள்ளன. இப்போது, ஒரு கலைஞர் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கையையும் பணியையும் ஆவணப்படுத்தியுள்ளார்.
- ✓ தரமணியில் உள்ள ராஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் சென்னை புகைப்பட பையனலெ (Chennai Photo Biennale) பதிப்பு 3ன் ஒரு பகுதியாக, வி. சரண்ராஜின் புகைப்படங்கள். 'கீழடி' என்ற தலைப்பில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அகழ்வாராய்ச்சியில் இந்தத் தொழிலாளர்களின் பங்கு மற்றும் கலைப்பொருட்களைக் காட்சிப் படுத்துவதற்கு முன்னதாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை அவை வெளிப்படுத்துகின்றன.

- **உலக சமூக ஆஸ்கர் விருது (Global Community Oscar Award) 2021**
- ✓ சூர்யா, ஜோதிகா மற்றும் உதயநிதி ஆகியோர் உலகளாவிய சமூக ஆஸ்கார் விருதுகளுக்கான பட்டியலில் உள்ளனர்.
- ✓ இந்த விருதுகள் மனித சமூகங்களை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்த மற்றும் சர்வதேச அளவில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய பிரபலங்களை அங்கீகரிக்கின்றன.

- **70 குடிமை உட்கட்டமைப்புத் திட்டங்கள் (Civic Infrastructure Projects)**
- ✓ நமக்கு நாமே திட்டத்தின்கீழ், சென்னை மாநகராட்சியின் 70 குடிமை உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு, மாநில அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மேலும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ நமக்கு நாமே திட்டம் என்ற ஒரு திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது. இதில் உங்கள் பங்களிப்பு 33 விழுக்காட்டிற்கு மேல் இருந்தால் இந்தத் திட்டங்களை நீங்கள் மேற்கொள்ளலாம்.
- ✓ உங்களிடம் 50 விழுக்காடு பங்களிப்பு இருந்தால், நன்கொடையாளர்களே திட்டத்தைச் செயல்படுத்த முடியும். உங்கள் பங்களிப்பு 33 விழுக்காட்டிற்கு மேல் 50 விழுக்காட்டிற்குக் கீழ் இருந்தால் ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டும். ஆனால் மீதமுள்ள தொகை அரசால் வழங்கப்படும்.

- **மாநிலத்தின் ஆறாவது புலிகள் காப்பகம்**
- ✓ தமிழக வனத்துறை - ஈரோடு வனக் கோட்டத்தில், மாநிலத்தின் ஆறாவது புலிகள் காப்பகத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.
- ✓ 82,144 ஹெக்டேர் பரப்பளவுக்கு பரந்து விரிந்துள்ள ஈரோடு கோட்டத்தில், யானைகள், சிறுத்தைகள், காட்டு நாய்கள், காட்டுப்பன்றிகள், இந்திய மான்கள், மான்கள் மற்றும் இதர அரிய வகை உயிரினங்கள் மற்றும் 20 வகையான புலிகள் உள்ளன.
- ✓ ஓராண்டிற்கு முன்பாக, ஸ்ரீவில்லிப்புத்தூர் - மேகமலை புலிகள் காப்பகத்தை இந்தியாவின் 51 வது புலிகள் காப்பகமாகவும், தமிழ்நாட்டின் ஐந்தாவது காப்பகமாகவும் ஒன்றிய அரசு அங்கீகரித்தது.

- **2022ஆம் ஆண்டுக்கான பத்ம ஸ்ரீ விருதுகள் - தமிழ்நாடு**
- ✓ தமிழகத்தைச் சேர்ந்த ஏழு முக்கிய பிரமுகர்களுக்கு – கலை, சமூகப்பணி, மருத்துவம் ஆகிய துறைகளில் அவர்கள் ஆற்றிய சாதனைக்காக, 2022ஆம் ஆண்டிற்கான பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது.
- ✓ பத்மஸ்ரீ விருது பெற்ற 7 பேர் - இலக்கியம் மற்றும் கல்விக்காக சிற்பி பாலசுப்பிரமணியன், சமூகப் பணிக்காக எஸ் தாமோதரன், கலைத்துறைக்காக

எஸ். பல்லேஷ் பஜேந்திரி, செளகார் ஜானகி, ஆர். முத்துக் கண்ணம்மாள் மற்றும் ஏ.கே. சி. நடராஜன், மருத்துவத்திற்காக டாக்டர். வீராசாமி சேஷையா ஆகியோர் ஆவர்.

➢ **பொது நூலகங்கள் சட்டம்**

✓ பொது நூலகங்கள் சட்டம், விதிகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

✓ பொது நூலகங்கள் எதிர்கொள்ளும் நிதிப் பற்றாக்குறை மற்றும் நூலகத் துறையின் வளர்ச்சிப் பணிகளில் ஏற்படும் பாதிப்புகளை உணர்ந்து, தமிழ்நாடு அரசு பொது நூலகச் சட்டம், 1948 மற்றும் பொது நூலக விதிகள், 1950 ஆகியவற்றை மறுபரிசீலனை செய்ய முடிவு செய்துள்ளது.

➢ **சோழர் கால கல்வெட்டுகள்**

✓ அவை முதலாம் குலோத்துங்கன், விக்ரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்தவை.

✓ விழுப்புரம் மாவட்டம் ஆங்கூரில் உள்ள விஷ்ணு கோவிலில் சோழர் கால கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

✓ அவை முதலாம் குலோத்துங்கன் (1070-1120), விக்ரம சோழன் (1118-1135) மற்றும் இரண்டாம் குலோத்துங்கன் (1133-1150) காலத்தைச் சேர்ந்தவை ஆகும்.

➢ **தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனங்கள் கழக கண்காட்சி (T.N. Unmanned Aerial Vehicles Corpn. Expo)**

✓ இந்த நிறுவனம் ரூ.10 கோடி செலவில் நிறுவப்பட்டது.

✓ ரூ.10 கோடியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனங்கள் கழக கண்காட்சியை சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் தொடங்கி வைத்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஆளில்லா விமானங்களின் தேவை அதிகரித்து வருவதாக செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

➢ **சமூ நீதிக்கான அகில இந்திய கூட்டமைப்பு**

✓ குடியரசு தினத்தையொட்டி, முதல்வர் மு.க. ஸ்டாலின், சமூக நீதிக்கான அகில இந்திய கூட்டமைப்பை விரைவில் தொடங்க உள்ளதாகவும், அதில் 'அனைத்து மாநிலங்களில் இருந்தும் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தலைவர்கள்' இருப்பார்கள் என்றும் கூறினார்.

✓ 'சமூக நீதிக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது மற்றும் சமூக நீதி இயக்கத்திற்கான கூட்டு தேசிய திட்டம்' என்ற தலைப்பில் நடைபெற்ற தேசிய வலைத்தளத்தில் உரையாற்றிய திரு. ஸ்டாலின், 'சமூக நீதி தொடர்பான சட்டங்கள் குறித்து அனைத்து மாநிலங்களுக்கும் இந்தக் கூட்டமைப்பு ஆலோசனைகளை வழங்கும் என்றும் தெரிவித்தார்.

➢ **அறிஞர்களுக்கான விருதுகள்**

✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் புதன்கிழமை அன்று, தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பங்களித்த அறிஞர்கள், அமைப்புகள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கான 2021 ஆம் ஆண்டு விருதுகளை அறிவித்தார்.

✓ இந்த விருதுத் தொகையானது, இந்த ஆண்டு முதல் ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்படுவதாக அவர் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார். விருதுபெறுபவர்களுக்கு ஒரு சவரன் தங்கப் பதக்கம், சால்வை மற்றும் பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்படும்.

✓ பேரறிஞர் அண்ணா விருது நாஞ்சில் சம்பத்துக்கும், மகாகவி பாரதியார் விருது பாரதி கிருஷ்ணகுமாருக்கும் வழங்கப்படும்.

- ✓ பாவேந்தர் பாரதிதாசன் விருது செந்தலை கவுதமனுக்கும், சொல்லின் செல்வர் விருது சூர்யா சேவியருக்கும் வழங்கப்படும்.
- ✓ சிங்காரவேலர் விருதுக்கு மதுக்கூர் இராமலிங்கமும், தமிழ்த்தாய் விருதுக்கு மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கமும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- ✓ இந்த அறிவிப்பின்படி, திருவள்ளுவர் விருது சஞ்சீவிராயருக்கும், சி.பா. ஆதித்தனார் விருது உயிர்மை இதழுக்கும் வழங்கப்படும்.
- ✓ பாரதி பாஸ்கருக்கு கம்பர் விருதும், ஜி.யு.போப் விருது மூத்த பத்திரிகையாளரும், தி இந்து பத்திரிகையின் முன்னாள் வாசகர்கள் ஆசிரியருமான ஏ.எஸ். பன்னீர் செல்வத்துக்கும் வழங்கப்படும்.
- ✓ மறைமலை அடிகளார் விருது சுகி சிவம் அவர்களுக்கும், இளங்கோ அடிகள் விருது நெல்லை கண்ணனுக்கும் வழங்கப்படும். ஞான அலோசியசுக்கு அயோத்திதாஸ் பண்டிதர் விருது வழங்கப்பட உள்ளது.

### ➢ புலிகள் காப்பகம் TX2 விருதை வென்றது

- ✓ 2010 ஆம் ஆண்டு முதல் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கியதற்காக, தமிழ்நாட்டின் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திற்கு சர்வதேச TX2 விருது வழங்கப்பட்டுள்ளது.
- ✓ இது ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்போது அதன் 1408 ச.கிமீ வளாகத்தில் 80 புலிகள் உள்ளன.
- ✓ காட்டுப் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கியதற்காக, நேபாளத்தின் பார்டியா தேசிய பூங்காவிற்கும் இந்த விருது கூட்டாக வழங்கப்பட்டுள்ளது.

### ➢ தொலைத் தொடர்பு கட்டமைப்பு கொள்கை, 2022

- ✓ தமிழ்நாடு தொலைத் தொடர்பு கட்டமைப்புக் கொள்கை, 2022ஐ மாநில அரசு வகுத்துள்ளது. இது ஒரு வலுவான மற்றும் பாதுகாப்பான அதிநவீன தொலைத் தொடர்பு வலையமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்மூலம் விண்ணப்பம் அனுப்புதல், ஒப்புதல் மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பின் நிறுவல் செயல்முறை எளிதாவதன்மூலம் தடையற்ற கவரேஜ் கிடைக்க ஏதுவாகிறது.

### ➢ நியாய விலைக் கடைகளில் சிறு தானியங்கள் விற்பனை செய்யப்படும்

- ✓ சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு குடிமைப் பொருள் கழகம் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மூலம் சிறுதானியங்களை சோதனை அடிப்படையில் விற்பனை செய்ய மாநில அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
- ✓ சிறு தானியங்களை பதப்படுத்துவதற்கும் மதிப்பு கூட்டுறவதற்கும் விலை நிர்ணயம் செய்வதற்கும் மாநில அளவிலான குழுவை மாநில அரசு அமைத்துள்ளது. இந்தக் குழுவின் தலைவராக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் இருப்பார் என ஜனவரி 25ஆம் தேதி வெளியிடப்பட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ➢ 2030ஆம் ஆண்டுக்குள் 46 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

- ✓ விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி, சிவகங்கை, தேனி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, திண்டுக்கல், திருநெல்வேலி ஆகிய இடங்களில் புதிய தொழிற் பூங்காக்களை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவற்றில் ஆறு மாவட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ✓ தொழில்துறை வளாகங்கள் மற்றும் மேம்பாட்டு மையங்களை அமைப்பதற்காக, சிப்காட் 50 விழுக்காடு மானியத்துடன் நிலத்தை ஒதுக்கும். அத்துடன் முத்திரை வரியில் இருந்து 100 விழுக்காடு விலக்கும் அளிக்கும்.

➢ **மூத்த குடிமக்களுக்கான வரைவுக் கொள்கை**

- ✓ மாநிலத்தின் தற்போதைய மக்கள் தொகை மாற்றத்தை அங்கீகரிக்கும் வகையில், மூத்த குடிமக்களுக்கான வரைவுக் கொள்கையை தமிழ்நாடு அரசு வகுத்துள்ளது.
- ✓ மூத்த குடிமக்கள் நலனுக்காக தனியாக ஒரு இயக்குநரகமும் திட்டமிடப்பட்டுள்ளது.
- ✓ வரைவு ஆவணம் அரசியலமைப்பின் 41வது பிரிவை அடிப்படையாகக் கொண்டது. இது வேலையின்மை, முதுமை, நோய் மற்றும் இயலாமை போன்ற காரணங்களின் அடிப்படையில், வேலை, கல்வி மற்றும் பொது உரிமையைப் பெற்றுத்தருவதற்கு மாநில அரசுக்குத் தேவைப்படுகிறது.
- ✓ தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் 13.6 விழுக்காடு மூத்த குடிமக்கள் இருந்தனர். இந்த எண்ணிக்கை 2031ஆம் ஆண்டில் 18.2 விழுக்காட்டு உடன், 60 வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதுடையவர்களின் எண்ணிக்கையில் (கேரளாவிற்குப் பிறகு) இரண்டாவது அதிக விகிதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

➢ **கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம்**

- ✓ கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டத்தைத் தொடங்க மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதன்கீழ் பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.4 இலட்சம் உதவித் தொகை வழங்கப்படும்.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ் இரண்டு கூறுகள் உள்ளன. அவற்றில் ஒன்று பயனாளிகள் தலைமையிலான பங்களிப்பு ஆகும். மற்றொன்று நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளை வாங்குவது ஆகும்.
- ✓ பயனாளர் மற்ற கூறைத் தேர்வு செய்தால், பிரதமரின் வீட்டு வசதித் திட்டம் (நகர்ப்புறம்) இல் உள்ள விதிமுறைகளின்படி அதிகபட்சமாக ரூ.4 இலட்சம் உதவி வழங்கப்படும்.

➢ **பிரதமர் இளநீர் வியாபாரியைப் பாராட்டினார்**

- ✓ திருப்பூர் மாவட்டம் உடுமலைப் பேட்டையில் இளநீர் வியாபாரியாக உள்ள மு. தாயம்மாள் (43) என்பவர் தனது பகுதியில் உள்ள அரசுப் பள்ளிக்கு ரூ.1 லட்சம் நன்கொடை வழங்கியதற்காக, பிரதமர் நரேந்திர மோடி அவரை ஞாயிற்றுக் கிழமை அன்று பாராட்டினார். நாட்டு மக்களுக்கான தனது மாதாந்திர வானொலி உரையில் பிரதமர் நரேந்திர மோடி, சின்ன வீரம்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு நிதி தேவைப்படுவதை திருமதி தாயம்மாள் எவ்வாறு தெரிந்து கொண்டார் என்பதை விளக்கினார். திருமதி. தாயம்மாள் தனது சேமிப்பில் இருந்து ரூ. 1 இலட்சத்தை வழங்கினார்.

➢ **தடையற்ற சூழல் - 10 அரசு கட்டிடங்கள்**

- ✓ அணுகக்கூடிய இந்தியா பிரச்சாரத்தின்கீழ் தடையற்ற சூழல் உருவாக்கப்படும் 10 மாநில அரசு கட்டிடங்களின் பட்டியலில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவை அடங்கும்.
- ✓ மாநில தலைநகரைப் பொறுத்தவரையில், அரசு அருங்காட்சியகம் மற்றும் வேளாண்மை இயக்குநரகம் ஆகியவை மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் தடையற்ற சூழலைக் கொண்டிருக்கும்.

➢ **தமிழ் இலக்கியப் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தல்**

- ✓ ‘தமிழை உலகுக்கு எடுத்துச் செல்லுதல்’ என்ற திட்டத்தின்கீழ், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட சிலப்பதிகாரம் உள்ளிட்ட புத்தகங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட உள்ளார்.
- ✓ ‘தமிழை உலகுக்கு எடுத்துச் செல்லுதல்’ என்பது தமிழ்நாட்டின் வளமான இலக்கிய வரலாறு மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக தமிழ்நாட்டு பாடநூல் மற்றும் கல்விச் சேவைகள் கழகம் மற்றும் தனியார் பதிப்பகங்கள் இணைந்து செயல்படுத்தும் ஒரு திட்டம் ஆகும்.

### ➢ மாநிலம் பெற்ற கடன் தொகை சுட்டிக் காட்டப்பட்டதைவிட குறைவு ஆகும்.

- ✓ 2022 நிதியாண்டின் நான்காவது காலாண்டில் மாநில வளர்ச்சிக் கடன்கள் எனப்படும் பத்திரங்களை வெளியிடுவதன்மூலம் தமிழ்நாடு இதுவரை 4.400 கோடி கடன்களை வாங்கியுள்ளது. இது, இந்திய ரிசர்வ் வங்கியின் தரவுகளின்படி, ஜனவரி 4 முதல் பிப்ரவரி 1 வரை சுட்டிக்காட்டப்பட்ட 9,000 கோடி கடனைவிடக் குறைவு ஆகும்.

### ➢ அரண்

- ✓ புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் - பள்ளிக் குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் தங்களது படிப்பு மற்றும் மனநலம் பாதிக்கப்படும் பிரச்சினைகளைப் பற்றி மனம் திறந்து பேசுவதற்காக ‘அரண்’ என்ற ஒரு முயற்சியைத் தொடங்கியுள்ளது.
- ✓ இந்த முயற்சியானது குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கு அவர்களின் உரிமைகள், தேவைகள், பாதுகாப்பு, சட்ட உதவி, மனம் மற்றும் உடல் ஆரோக்கியம், பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பான தகவல்கள் மற்றும் ஆதரவை அணுக அவர்களுக்கு உதவுகிறது.

### ➢ அக்குவா மேப் (AquaMAP)

- ✓ சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம், இந்தியாவில் தண்ணீர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, ‘அக்குவா மேப்’ என்ற ஒரு புதிய துறைகளுக்கு இடையேயான மேலாண்மை மற்றும் கொள்கை மையத்தை நிறுவுகிறது.

### ➢ நீட் மசோதா (NEET Bill)

- ✓ நீட் மசோதா இன்று மீண்டும் சட்டப் பேரவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அது ஒரு வரலாற்று சாதனை ஆக ஆகும்.
- ✓ தமிழகத்தில் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வை (நீட்) ரத்து செய்வதற்கான மசோதாவை தமிழ்நாடு சட்டமன்றம் மீண்டும் ஏற்றுக் கொண்டால், செவ்வாய்க் கிழமை ஒரு வரலாறு உருவானதாகக் கருதப்படும்.
- ✓ மாநில ஆளுநர் ஆர்.என். ரவியால் திருப்பி அனுப்பப்பட்ட அதே வரைவு மசோதாவை, சட்டசபை மீண்டும் ஏற்றுக் கொள்வது, மாநில சட்டசபை வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

### ➢ மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (State Environment Impact Assessment Authority -SEIAA)

- ✓ மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், தூத்துக்குடியில் மரச்சாமான்கள் பூங்காவைத் தவிர, தொழிலாளர்களுக்கான முதல் தொழில்துறை வீட்டு வசதித் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ வல்லம் - வடகல் விரிவாக்கம் (பாகம் 2) இன் ஒரு பகுதியாக 353 ஏக்கர் நிலப்பரப்பில் வீட்டு வசதியுடன் தொழில் பூங்கா அமைக்கப்படும்.

- ✓ தமிழ்நாடு மாநில தொழில்கள் மேம்பாட்டுக் கழகம் தொழில்துறை வீட்டுவசதித் திட்டத்தை நிறைவேற்றும்.

## ➢ இந்திய தொழில்நுட்பக் கழகம் (Indian Institute of Technology)

சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் - உயிர்ப் பொருளை வாயு எரிபொருளாக மாற்றுவதில் ஈடுபட்டுள்ள செயல்முறைகளைப் படிப்பதற்காக செயற்கை நுண்ணறிவு கருவியை உருவாக்கியுள்ளனர்.

லிங்கோ-செல்லுலோசிக் பயோமாசை ஆற்றல்-அடர்த்தியான சின்காஸாக (பயோமாசின் வாயுவாக்கம்) மாற்றும்போது ஏற்படும் எதிர்வினைகளை ஆய்வு செய்ய, ஆராய்ச்சிக் குழு. ரிகரண்ட் நியூரல் நெட்வொர்க்ஸ் (Recurrent Neural Networks) எனப்படும் இந்தியரக் கற்றல் முறையைப் பயன்படுத்தியது.

## ➢ திருக்குறள் கருப்பொருள் காலண்டர்கள்

- ✓ மாநில தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் தமிழ் மெய்நிகர் அகாடமியின் திருக்குறள் கருப்பொருள் டெஸ்க்டாப் காலண்டர்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.
- ✓ குழந்தைகளால் வரையப்பட்ட 365திருக்குறள் கருப்பொருள் ஓவியங்களைக் கொண்ட டெஸ்க்டாப் நாட்காட்டியை மாதம் மற்றும் தேதிகளுடன் எந்த ஆண்டும் பயன்படுத்தலாம்.

## ➢ வறுமைக் குறைப்பில் தமிழ்நாட்டின் வெற்றி

- ✓ ஒன்றிய அரசின் கொள்கை சிந்தனைக் குழுவாகிய நிதி ஆயோகின் மூன்று பதிப்புகளும் நிலையான வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதில் ஒரு பொதுவான அம்சத்தைக் கொண்டுள்ளது - இலக்கு -1 'வறுமை இல்லாமை' இல் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

## ➢ கீழடி – அகழ்வாராய்ச்சியின் எட்டாவது பகுதி

- ✓ சிவகங்கை மாவட்டம் கீழடியில் அகழ்வாராய்ச்சியின் எட்டாம் பாகத்தை பிப்ரவரி 11ஆம் தேதி தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சென்னை அரசு தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.
- ✓ மேலும், மூன்றாம் பாகத்தை தூத்துக்குடி மாவட்டம் சிவகலையிலும், முதல் அகழ்வாய்வை விருதுநகர் மாவட்டம் வெம்பக் கோட்டையிலும், தர்மபுரி மாவட்டம் பெரும்பாலையிலும், திருநெல்வேலியில் துலுக்கர் பட்டியிலும் முதல்வர் தொடங்கி வைத்தார்.
- ✓ இந்த நிகழ்ச்சியில் அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை ஆகிய இடங்களில் இரண்டாம் கட்ட அகழாய்வு பணிகளும் தொடங்கப்பட்டன.
- ✓ கீழடியில் அகழ்வாராய்ச்சியின் எட்டாவது பகுதி மற்றும் கொந்தகை, மணலூர் மற்றும் அகரம் ஆகிய கிராமங்களில் மேற்கொள்ளப்படும் அகழ்வாய்வுப் பணிகள் செங்கல் கட்டுமானங்களின் முந்தைய கண்டுபிடிப்புகளை முன்னெடுத்துச் செல்லும்.

## ➢ இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை (ஐஐடி, மெட்ராஸ்)

- ✓ பிப்ரவரி 11 அன்று, இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை பிரவர்த்தக் தொழில்நுட்ப அறக்கட்டளை – ஆஷா ஃபார் எஜுகேஷன் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாட்டில் இரண்டு கிராமப்புற தொழில்நுட்ப மையங்களைத் தொடங்க உள்ளது.

- ✓ இந்தக் கூட்டாண்மையின்கீழ், திருவள்ளூர் மாவட்டத்தில் கனகம்மாசத்திரம் மற்றும் சீத்தஞ்சேரி கிராமங்களில் இரண்டு ஆஷா – ஐஐடி மெட்ராஸ் பிரவர்த்தக் கிராமப்புற தொழில்நுட்ப மையங்கள் திறக்கப்பட்டன.
- ✓ 9 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் இந்த மையங்களுக்கு ஐஐடி மெட்ராஸ் பிரவர்த்தக் தொழில்நுட்ப அறக்கட்டளைமூலம் நிதியளிக்கப்படுகிறது.

### ➢ பசுமை முறை (Green Methodology)

- ✓ ஒரு பசுமை முறையை உருவாக்கியதற்காக, பெண் விஞ்ஞானிக்கு காப்புரிமை வழங்கப்பட்டது.
- ✓ சென்னை. இந்திய தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த பெண் விஞ்ஞானி டாக்டர். இ. பூங்குழலி, பென்சோ(பி)தியோபீன் என்ற மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சேர்மத்தை தயாரித்ததற்காக பசுமை முறையை உருவாக்குவதற்கான காப்புரிமையைப் பெற்றுள்ளார்.

### ➢ சர்வதேச கால்-கை வலிப்பு தினம் (International Epilepsy Day)

- ✓ மாநிலத்தில் சுமார் 3.94 இலட்சம் பேர் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- ✓ சர்வதேச வலிப்பு தினத்தை முன்னிட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி திங்கட்கிழமை நடைபெற்றது.

### ➢ உள்நாட்டு சதுப்புநில ஆய்வு (Inland Wetland Survey)

- ✓ உள்நாட்டு சதுப்புநில ஆய்வில், திருநெல்வேலியில் 41 இனங்களைச் சேர்ந்த 33,000 பறவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- ✓ கடலோர சதுப்பு நிலங்களுக்குப் பிறகு, தமிழ்நாட்டில் 25 மாவட்டங்களில் இருந்து 339 சதுப்பு நிலங்களை உள்ளடக்கிய உள்நாட்டு சதுப்பு நிலங்களுக்கான கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- ✓ இது வேடந்தாங்கல் போன்ற வரலாற்று நீர்ப்பறவை சரணாலயம் உட்பட 14 உள்நாட்டு நீர்ப்பறவை சரணாலயங்களை உள்ளடக்கியது.
- ✓ சேலத்தில் 97 உள்நாட்டு சதுப்பு நிலங்கள் உள்ளன. இதற்கு அடுத்தபடியாக 28 சதுப்பு நிலங்களுடன் சென்னை இரண்டாவது இடத்தில் உள்ளது.

### ➢ தமிழ்நாடு பத்திரிகை கவுன்சில்

- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - பிரத்யேக ஊடக அமைப்பான தமிழ்நாடு பத்திரிகை கவுன்சில் அமைப்பதற்கான சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.
- ✓ தமிழ்நாடு பத்திரிகை கவுன்சில் அமைப்பதற்கான செயல்முறைக்கு தகுதிவாய்ந்த அதிகாரிகளிடமிருந்து ஒப்புதல் பெறும் நடைமுறை விரைவில் முடிவடையும்.
- ✓ திருத்தப்பட்ட தமிழ்நாடு மாநில செய்தி ஊடக பிரதிநிதி அங்கீகார விதிகள், 2021, பின்னர் அரசு ஆணையாக வெளியிடப்படும்.

### ➢ தமிழ்நாடு சதுப்பு நிலங்கள் இயக்கம்

- ✓ தமிழ்நாடு அரசு – மாநிலத்தில் உள்ள சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த 13 சாத்தியமான சதுப்பு நிலங்களை ராம்சார் தளமாக அறிவிக்க ஒன்றிய அரசுக்கு ஒரு முன்மொழிவை அனுப்பியுள்ளது.
- ✓ உள்ளூர் சமூகங்களுக்கு அதிக வாழ்வாதார வர்ய்ப்புகளை உருவாக்குவதற்காக சதுப்பு நிலங்களை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் ஒரே நோக்கத்துடன், ‘தமிழ்நாடு சதுப்பு நிலங்கள் இயக்கத்தின்’ ஒரு பகுதியாக இந்த முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

- ✓ ஐந்து ஆண்டுகளில் 100 சதுப்பு நிலங்களை மீட்டெடுப்பதற்காக தமிழ்நாடு சதுப்பு நிலங்கள் இயக்கத்தை (Tamil Nadu Wetland Mission) ஆகஸ்ட் 2021 அன்று மாநில அரசு தொடங்கி வைத்துள்ளது.

➢ **இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) , சென்னை**

- ✓ சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அதிர்ச்சியைக் குறைக்கக் கூடிய ஓரிகேமி மெட்டா மெட்டீரியல்களின் சிறப்பு வகுப்பை உருவாக்கியுள்ளனர். மன அழுத்தத்திற்கு ஆளாகும்போது அது பாய்சன் விகிதத்தின் நிலையான மதிப்பைக் (constant value of Poisson's Ratio) கொண்டுள்ளது.
- ✓ ஓரிகமி மெட்டா மெட்டீரியல்களின் இந்த சிறப்பு வகுப்பானது ஜப்பானிக் கலையான காகித மடிப்பு (ஓரிகமி) மற்றும் தற்போதுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள் ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

➢ **தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்**

- ✓ சமீபத்தில் மறுசீரமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவராக ஏ.எஸ். குமாரி நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக் குழுவில் ஏழு புதிய உறுப்பினர்கள் உள்ளனர்.

➢ **உ.வே. சாமிநாத ஐயரின் 167வது பிறந்த நாள் : பிப்ரவரி 19**

- ✓ இவர் தமிழ் கலாச்சாரம் மற்றும் மொழிக்கான அவரது பங்களிப்புகளுக்காக போற்றப்பட்ட ஒரு புகழ்பெற்ற தமிழ் அறிஞர் ஆவார். அவர் சங்க காலத்திலிருந்து படைப்புகளைப் பிரபலப்படுத்தினார் மற்றும் மதிப்புமிக்க பாரம்பரியத்தைப் பாதுகாக்க உதவினார்.
- ✓ சாமிநாத அய்யர் தனது வாழ்நாளில் செம்மொழியான தமிழ் இலக்கியம் தொடர்பான பல்வேறு விஷயங்களில் 90 புத்தகங்களை வெளியிட்டார். மேலும் 3,000 காகித கையெழுத்துப் பிரதிகள், பனை ஓலை கையெழுத்துப் பிரிதிகள் மற்றும் பல்வேறு வகையான குறிப்புகளைச் சேகரித்தார்.

➢ **பெருங்கடல்கள் 2022**

- ✓ இந்திய தொழில்நுட்ப நிறுவனம் சென்னையின் ஆராய்ச்சி பூங்கா மற்றும் தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை இணைந்து, இந்தியாவில் முதல் முறையாக, உலக கடல் ஆராய்ச்சியாளர்களின் இரு வருட நிகழ்வான பெருங்கடல்கள் 2022 (OCEANS 2022) மாநாட்டை நடத்துகின்றன.
- ✓ இன்ஸ்டிடியூஷன் ஆப் எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் ஓஷன் இன்ஜினியரிங் சொசைட்டி மற்றும் மரைன் டெக்னாலஜி சொசைட்டி சார்பில் பெருங்கடல்கள் பொறியியல் துறை இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கிறது.

➢ **ஆம்புலன்ஸ் திட்டத்திற்கு 188 வாகனங்கள்**

- ✓ செங்கல்பட்டு மாவட்டம் சிட்லப்பாக்கத்தில் புதன்கிழமை அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 188 புதிய ஆம்புலன்ஸ் வாகனங்களைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- ✓ மேலும், 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தின் 50 இலட்சமாவது பயனாளிக்கு மருத்துவப் பெட்டியையும் அவர் வழங்கினார். மேலும், இத்திட்டத்தின்கீழ் நோயாளிக்கு அளிக்கப்படும் இயன்முறை மருத்துவ (பிசியோதெரபி) சிகிச்சையையும் பார்வையிட்டார்.

- ✓ புதியதாக அமைக்கப்பட்டுள்ள 188 ஆம்புலன்ஸ்களில் நான்கு வாகனங்கள் உதகமண்டலம், வால்பாறை, அரசூர் (பொள்ளாச்சி), மொட்டம்பட்டி (கள்ளக்குறிச்சி) ஆகிய பகுதிகளில் உள்ள மலைப் பகுதி மக்களுக்கு சேவை செய்வதற்காக ஒதுக்கப்படும்.

## ➢ பன்ரூட்டி முந்திரிக்கு புவிசார் குறியீடு

- ✓ தமிழ்நாடு முந்திரி பதப்படுத்துபவர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கம் பன்ரூட்டி முந்திரிக்கு புவிசார் குறியீடு கோரி விண்ணப்பித்துள்ளது.
- ✓ பன்ரூட்டி முந்திரி முக்கியமாக செம்புரை மண், சிவப்பு மற்றும் கடற்கரை மணலில் பயிரிடப்படுகிறது.

## ➢ வடக்குப்பத்து

- ✓ இந்திய தொல்லியல் துறை – காஞ்சிபரம் மாவட்டம் ஒரகடம் அருகே வடக்குப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள ஒரு இடத்தை 2022 ஏப்ரல் முதல் அகழாய்வு செய்யத் தொடங்கும்.
- ✓ சென்னைக்குத் தெற்கே சுமார் 75 கிமீ தொலைவில் அமைந்துள்ள இந்த இடத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பானை ஓடுகள் மற்றும் கல் கருவிகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

## ➢ டான்சிம் (TANSIM)

- ✓ தமிழ்நாடு தொடக்கநிலை மற்றும் புதுமை இயக்கம் (Tamil Nadu Startup and Innovation Mission - TANSIM) மாநிலத்தில், ஆரம்பநிலையில் உள்ள தொடக்கநிலை நிறுவனங்களுக்கு மூலதனத் தொகையை வழங்கி ஆதரவு அளிப்பதற்காக – டான்சீட் (Tamil Nadu Startup Seed Grant Fund) இன் மூன்றாவது பதிப்பைத் தொடங்கி வைத்துள்ளது.
- ✓ இந்த டான்சீட் திட்டத்தின்கீழ், தகுதியான தொடக்கநிலை நிறுவனங்களை ஒரு சிறந்த நடுவர் குழு கண்டறிந்து, அவர்களுக்கு ரூ.10 இலட்சம் மானிய நிதியுதவியை வழங்கும்.

## ➢ உங்களில் ஒருவன்

- ➢ பிப்ரவரி 27 அன்று, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி – தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினின் சுயசரிதையான 'உங்களின் ஒருவன்' புத்தகத்தின் முதல் தொகுதியை சென்னை வர்த்தக மையத்தில் வெளியிட்டார்.
- ➢ முதல் பதிப்பில், முதல்வர் தனது பள்ளி மற்றும் கல்லூரி நாட்கள், இளமைப் பருவம், ஆரம்ப கால அரசியல் பங்களிப்புகள், திருமண வாழ்க்கை மற்றும் அவசர காலத்தின் போது மிசா (உள்நாட்டு பாதுகாப்புச் சட்டத்தைப் பராமரித்தல்) போராட்டம் ஆகியவற்றைப் பற்றி விவரித்ததுடன், மார்ச் 1, 1953இல் பிறந்ததிலிருந்து 1976 வரையிலான 23 ஆண்டுகளை நினைவு கூர்ந்தார்.

## ➢ நான் முதல்வன்

- ➢ 'நான் முதல்வன்' என்ற ஒரு இலட்சிய புதிய முயற்சியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மார்ச் 1ஆம் தேதி தொடங்கி வைத்தார்.
- ➢ இந்த முன்னோடித் திட்டமானது மாநிலத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான மிகப்பெரிய திறன் மற்றும் தொழில் வழிகாட்டுதல் திட்டமாகும்.

- ஒவ்வொரு ஆண்டும் 10 இலட்சம் மாணவர்களின் கல்வித் திறன், அறிவு, திறமை மற்றும் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதுடன், வேலைவாய்ப்பு சந்தையில் உள்ள திறமை இடைவெளியைக் குறைப்பதும் இந்த முயற்சியின் நோக்கமாகும்.

- **வாழ்ந்து காட்டுவோம்**

- ✓ பண்ணையில், பண்ணைக்கு வெளியே மற்றும் பண்ணை அல்லாத துறைகளில் கிராமப்புற தொழில்களை ஊக்குவிப்பதற்காக உலக வங்கியுடன் இணைந்து தமிழக அரசு கிராமப்புற உருமாற்ற திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இதில் உலகவங்கி 70 விழுக்காடு நிதியுதவியை அளித்தபோதிலும், மீதியை மாநில அரசு ஏற்கிறது.
- ✓ தமிழ்நாடு கிராமப்புற உருமாற்றத் திட்டம் (The Tamil Nadu Rural Transformation Project) தற்போது 'வாழ்ந்து காட்டுவோம்' என்ற ஒரு அதிகாரபூர்வ பிராண்ட் பெயரைக் கொண்டுள்ளது. இது சுய உதவிக் குழுக்கள் மற்றும் அவர்களது குடும்பங்களிடையே திறன்களை வளர்க்கும் மற்றும் தொழில்முனைவோர் திறன்களை வளர்க்கும் வணிக சூழலை உருவாக்குவதற்காக வறுமை ஒழிப்புக்கு அப்பாலும் முனைகிறது.

- **தெரு விலங்குகளுக்காக இந்தியாவின் முதலாவது மருத்துவ ஊர்தி (ஆம்புலன்ஸ்)**

- ✓ தெரு விலங்குகளுக்கான இந்தியாவின் முதலாவது மருத்துவ ஊர்தி தமிழ்நாட்டில் உள்ள சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது.
- ✓ இது சர்வதேச விலங்கு நல அமைப்பான 'நான்கு பாதங்கள்' (Four Paw) என்ற அமைப்புடன் இணைந்து இந்தியாவின் புளுகிராஸ் அமைப்பினால் தொடங்கப்பட்டது.

- **சென்னை மேயர்**

- ✓ சென்னை மேயர் பதவிக்கு வெள்ளிக்கிழமை நடைபெற்ற மறைமுகத் தேர்தலில் ஆர். பிரியா (28) போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர். தி.மு.க வைச் சோந்தவர்.
- ✓ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி, நகரின் மேயர் பதவியை ஏற்கும் 49வது நபரான திருமதி பிரியாவுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

- **ஜல் ஜீவன் இயக்கம் (Jal Jeevan Mission) – தமிழ்நாடு**

- ✓ ஐந்து மாவட்டங்களில் பரந்து விரிந்துள்ள தொள்ளாயிரத்து பதினெட்டு குடியிருப்புகள், ஜல் ஜீவன் இயக்கத்தின்கீழ் சுமார் 1,473 கோடி செலவில் ஒருங்கிணைந்த நீர்வழங்கல் திட்டங்களைப் பெறப் போகின்றன.
- ✓ அவற்றில் 667 குடியிருப்புகள் திருவாரூர் மாவட்டத்தில் உள்ளன. திருச்சியில் 109. ராணிப்பேட்டையின் செம்பேடு ஊராட்சியில் 88, மயிலாடுதுறையில் 32 மற்றும் திருநெல்வேலியில் உள்ள 22 குடியிருப்புகளும் இதில் அடங்கும்.

- **மாநில பேரிடர் தணிப்பு நிதி**

- ✓ பேரிடர் தணிப்பு நோக்கத்திற்காக பிரத்தியேகமான திட்டங்களை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு அரசு மாநில பேரிடர் தணிப்பு நிதியை (State Disaster Mitigation Fund) அமைத்துள்ளது. இந்த நிதியானது மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (State Disaster Response Fund) மாறுபட்டது.

- ✓ மாநில பேரிடர் தணிப்பு நிதியானது பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005ன் பிரிவு 48 (1)(சி)யின்கீழ் ஏற்படுத்தப்பட்டது. அதே சமயம் தற்போது உள்ள பேரிடர் நிவாரண நிதியானது இந்தச் சட்டத்தின் பிரிவு 48 (1)(ஏ)ன்கீழ் ஏற்படுத்தப்பட்டது.

## ➢ அதிக கடன் வாங்கும் மாநிலம் - தமிழ்நாடு

- ✓ நடப்பு 2022ஆம் நிதியாண்டில் மாநிலங்களிலேயே அதிக கடன் வாங்கும் மாநிலமாக தமிழ்நாடு அரசு விளங்குகிறது.
- ✓ ஒட்டுமொத்தமாக, ஏப்ரல்-பிப்ரவரி 2022ல் மாநில வளர்ச்சிக் கடன்கள் எனப்படும் பத்திரங்களை வெளியிடுவதன்மூலம் நமது மாநிலம் 65,400 கோடிகளை திரட்டியுள்ளது.
- ✓ 2001ஆம் நிதியாண்டில் இதே காலகட்டத்தில் திரட்டப்பட்ட 79,500 கோடியை விட இது 18 விழுக்காடு குறைவாகும்.
- ✓ தமிழகத்திற்கு அடுத்தபடியாக அதிக கடன் பெறும் மாநிலங்களாக மகாராஷ்டிரா, கர்நாடகா, உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவை விளங்குகின்றன.

## ➢ மிதக்கும் சூரிய சக்தித் திட்டம்

- ➢ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தூத்துக்குடியில் 22 மெகாவாட் திறன் கொண்ட ஸ்பிக் சூரிய ஒளி மின்திட்டத்தை மார்ச் 7ஆம் தேதி தொடங்கி வைத்தார்.
- ➢ ஆண்டுக்கு 42 மில்லியன் யூனிட் மின்சாரம் தயாரிக்கும் இந்தத் திட்டமானது, 150.4 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளது.
- ➢ நாட்டிலேயே மிகப்பெரியதாகக் கருதப்படும் மிதக்கும் சூரியசக்தி ஆலையானது. 25.3 மெகாவாட் டிசி-22 மெகாவாட் ஏசி திறன் கொண்டது. இது 75 ஏக்கர் குளத்தில் ஸ்பிக் இன் மின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

## ➢ நாரி சக்தி புரஸ்கார் (Nari Shakti Puraskar)

- ✓ சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8 அன்று புதுதில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் சிறப்பு விழாவில், தமிழகத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் - குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்திடம் இருந்து நாரி சக்தி புரஸ்கார் விருதைப்பெறுவார்கள்.
- ✓ தோடா எம்பிராய்டரி கைவினைஞர்களான ஜெயமுத்து மற்றும் தேஜம்மா ஆகியோருக்கு 2020ஆம் ஆண்டிற்கான விருது வழங்கப்பட உள்ளது. அதே சமயம் மனநல மருத்துவரும் ஆராய்ச்சியாளருமான டாக்டர். தாரா ரங்கசாமி 2021ஆம் ஆண்டிற்கான விருதைப் பெறுவார்.

## ➢ தமிழ்நாடு தொழில்துறை வளர்ச்சி

- ✓ அனைத்து மாவட்டங்களிலும் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதே தமிழ்நாடு அரசின் இறுதி இலக்கு என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் திங்கட்கிழமை தூத்துக்குடியில் தெரிவித்தார்.
- ✓ 1156 ஏக்கர் நிலப்பரப்பில், 1000 கோடி மதிப்பீட்டில் பரந்து விரிந்த உலகத்தரம் வாய்ந்த மரச்சாமான்கள் பூங்கா அமைப்பதற்கான அடித்தளத்தை அமைத்த, மு.க. ஸ்டாலின், வ.உ. சிதம்பரனார் துறைமுகம், தூத்துக்குடி மட்டுமின்றி, தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டமும் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடையும் என்று நம்பிக்கை தெரிவித்தார். 'இது ஆரம்பம்தான்' என்றும் அவர் கூறினார்.
- ✓ நாட்டிலேயே முதன்முறையாக அமைக்கப்பட்டுள்ள இந்த மரச்சாமான்கள் பூங்கா, மாநிலத்திற்கு காலத்தின் தேவையாக விளங்குகிறது.

## ➢ சேவைகளை அங்கீகரிப்பதற்கான பல்வேறு விருதுகள்

- ✓ பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனுக்காக சமூக சேவகர் கிரிஜா குமார் பாபு ஆற்றிய சேவையைப் பாராட்டி, 2022ஆம் ஆண்டுக்கான அவ்வையார் விருதை, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் செவ்வாயக்கிழமை அன்று அவருக்கு வழங்கினார்.
- ✓ ஸ்டாலின் அவர்கள், 'பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். 2020-21ஆம் ஆண்டுக்கான பாரம்பரிய நெல் ரக பாதுகாவலர்' விருதை நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். மூர்த்தி, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கே. பொன்னு புதியவன் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பி. லட்சுமி தேவி ஆகியோருக்கு ரொக்கப் பரிசுடன் விருதை வழங்கினார்.

## ➢ முதலமைச்சரின் ஃபெல்லோஷிப் திட்டம்

- ✓ 2022-24ஆம் ஆண்டில் 5.66 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் ஃபெல்லோஷிப் திட்டத்தை (TNCMFP) செயல்படுத்துவதற்கான ஆணைகளை மாநில அரசு வெளியிட்டுள்ளது.
- ✓ பல்வேறு துறைகள் மற்றும் திட்டங்களைத் தொகுத்து செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக அடையாளம் காணப்பட்ட 12 கருப் பொருள் பகுதிகளில் (ஒவ்வொரு பகுதிக்கும் இரண்டு பேர்) என்ற வகையில் 24 பேர் இந்த உதவித் தொகையைப் பெறுவார்கள். மேலும் ஆறுபேர் சிறப்புத் திட்ட அமலாக்கத்தின் கண்காணிப்புப் பிரிவில் இருப்பவர்கள்.

## ➢ இந்தியப் பல்கலைக் கழகங்கள் - தென் மண்டல துணை வேந்தர்கள் சந்திப்பு

- ✓ ஒன்றிய அரசு (பல்கலைக் கழகங்கள்) பாடத்திட்டத்தில் பிற்போக்குத் தனமான கருத்துக்களை புகுத்துவது கவலையளிக்கும் செயல் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெள்ளிக்கிழமை அன்று தெரிவித்தார். இந்தப் பிரச்சினைக்குச் சிறந்த தீர்வாக கல்வியை அரசமைப்புச் சட்டத்தின் கீழ் மாநிலப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.
- ✓ பாரதியார் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இந்தியப் பல்கலைக் கழகங்களின் சங்கம் - தென் மண்டல துணைவேந்தர்கள் மாநாட்டின் தொடக்க விழாவில் அவர் பேசினார்.

## ➢ சாகர் பரிக்கிரமா (Sagar Parikrama) திட்டம்

- ✓ நாட்டின் சுதந்திரப் போராட்ட வீரர்கள், மாலுமிகள் மற்றும் மீனவர்களுக்கு வணக்கம் செலுத்தும் வகையில், ஒன்றிய அரசின் 'சாகர் பரிக்கிரமா' திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழகம் தொடர்ந்து நீடிக்கும்.
- ✓ 'ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் (சுதந்திர தின அமுதப் பெருவிழா)' முயற்சியின் ஒரு பகுதியாக ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலாவினால், இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் குஜராத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.
- ✓ சாகர் பரிக்கிரமா திட்டம் அனைத்து கடலோர மாநிலங்கள்-யூனியன் பிரதேசங்களில் கொண்டாடப்பட உள்ளது.

## ➢ தமிழ்நாடு பெட்ரோபுராடக்ட்ஸ்

- ✓ பிஐஎஸ் தரச்சான்றிதழைப் பெற்ற உலகின் முதல் லேப் (LAB) உற்பத்தி நிறுவனமாக தமிழ்நாடு பெட்ரோபுராடக்ட்ஸ் நிறுவனம் ஆனது.
- ✓ தமிழ்நாடு பெட்ரோபுராடக்ட்ஸ் லிமிடெட் என்பது இந்திய தரநிலைகள் பணியகத்தால் (பிஐஎஸ்) சான்றளிக்கப்பட்ட உலகின் முதல் லீனியர் அல்கைல் பென்சீன் (linear alkylbenzene) உற்பத்தி நிறுவனமாகும்.

- ✓ தமிழ்நாடு பெட்ரோபுராடக்ட்ஸ் நிறுவனத்தின் சூப்பர்லேப் பிராண்ட் நாட்டில் மிகவும் பிரபலமான ஆய்வக பிராண்டுகளில் ஒன்றாகும்.

**➢ ரோபோடிக் அறுவை சிகிச்சை மையம்**

- ✓ ஓமந்தூரார் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் மேம்பட்ட ரோபோடிக் அறுவை சிகிச்சை மையத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை அன்று திறந்து வைத்தார். 34.60 கோடி ரூபாய் செலவில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ இரண்டு கன்சோல்கள் கொண்ட ரோபோடிக் சிஸ்டம் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் வாங்கப்படடது. சிறுநீரகம், அறுவை சிகிச்சை இரைப்பை குடல், அறுவை சிகிச்சை புற்றுநோயியல், நாளமில்லா அறுவை சிகிச்சை மற்றும் இதய அறுவை சிகிச்சை போன்ற சிறப்புப் பிரிவுகளின் நோயாளிகள் இந்த வசதியின்மூலம் பயனடைவார்கள்.

**➢ சாம்சங்**

- ✓ முன்னணி சர்வதேச நுகர்வோர் மின்னணு மற்றும் ஸ்மார்ட்போன் தயாரிப்பாளரான சாம்சங் நிறுவனம் - மார்ச் 15 அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் மாநில தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில் தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- ✓ இந்த ஒப்பந்தத்தின்படி, சென்னை அருகே ஸ்ரீபெரும்புதூரில் புதிய கம்ப்ரசர் உற்பத்தி ஆலையை நிறுவுவதற்கு சாம்சங் நிறுவனம் ரூ.1.588 கோடி முதலீடு செய்ய முன்வந்துள்ளது.

**➢ 2022இல் உலக செஸ் ஒலிம்பியாட்**

- ✓ நாற்பத்தி நான்காவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டியை 2022ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சென்னையில் நடத்துவதற்கு இந்தியா தயாராக உள்ளது. இந்த நிகழ்வு உக்ரைன் மீதான படையெடுப்பின் காரணமாக ரஷ்யாவிலிருந்து மாற்றப்பட்டது.
- ✓ உலக செஸ் ஒலிம்பியாட், 2013ஆம் ஆண்டு உலக சாம்பியன்ஷிப் போட்டிக்குப் பிறகு இந்தியாவில் நடைபெறும் இரண்டாவது பெரிய உலகளாவிய செஸ் போட்டியாகும்.

**➢ மன்னார் வளைகுடா, இந்தியா மற்றும் அருகாமை நீர்நிலைகளில் காணப்படும் மெல்லுடலிகள் (Molluscs)**

- ✓ மன்னார் வளைகுடா, இந்தியா மற்றும் அதை ஒட்டிய நீர்நிலைகள் என்ற கடல் உயிரினங்கள் குறித்த முதல் விளக்கப்பட புத்தகத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மார்ச் 16 அன்று தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்.
- ✓ தமிழ்நாடு, கேரளா மற்றும் குஜராத்தைச் சேர்ந்த மூன்று கடல்சார் நிபுணர்களால் இந்தப் புத்தகம் எழுதப்பட்டது.
- ✓ மன்னார் வளைகுடாவின் பல்லுயிரியம் 200 ஆண்டுகளுக்கும் மேலாக ஆராய்ச்சி செய்யப்பட்ட போதிலும், அதன் ஆவணங்கள் பற்றிய முதல் புத்தகம் இதுவே ஆகும்.

**➢ வெம்பக்கோட்டை**

- ✓ தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு- சிவகாசி அருகே வைப்பார் ஆற்றங்கரையில் உள்ள வெம்பக் கோட்டையில் முதல் கட்ட அகழாய்வுப் பணியை மார்ச் 16 அன்று தொடங்கி வைத்தார். இந்தப் பகுதியில் உள்ள தொல்லியல் தளங்களில் சிறந்த ஒன்றாக வெம்பக்கோட்டை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- ✓ வெம்பக்கோட்டையில் உள்ள இந்த இடம் வைப்பார் ஆற்றின் வலது புறத்தில் இருந்தது. அங்கு சங்க காலத்தின் பல ஓடு வளையல்கள், டெரகோட்டா காதணிகள் மற்றும் வளையக் கிணறுகள் முன்பு கண்டுபிடிக்கப்பட்டன.

➢ **தமிழ்நாடு தரவுக் கொள்கை, 2022**

- ✓ திறம்பட முடிவெடுப்பதற்காக தரவைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, மாநில அரசு தமிழ்நாடு தரவுக் கொள்கை, 2022ஐ வகுத்துள்ளது.
- ✓ இது கொள்கை உருவாக்கம், திட்ட செயல்பாட்டை மேம்படுத்துதல், மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளை ஊக்குவித்தல் மற்றும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றில் ஆதரவு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ மாநில அளவிலான அதிகாரமளிக்கப்பட்ட தரவு ஆளுமைக் குழு, தலைமைச் செயலாளரின் தலைமையில் தரவுக் கொள்கை கட்டமைப்பதற்கான மூலோபாய வழிகாட்டுதலை வழங்கும்.

➢ **கடன் உத்தரவாத திட்ட போர்ட்டல் (Credit Guarantee Scheme Portal)**

- ✓ தமிழ்நாடு அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் துறை, குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதி அறக்கட்டளையுடன் தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஒரு போர்ட்டலை உருவாக்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ✓ இந்தத் துறை, குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதி அறக்கட்டளை ஆகியவற்றுடன் இணைந்து கூட்டாக செயல்படுத்தப்படும் இந்த கடன் உத்தரவாத திட்ட போர்ட்டலானது, சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

➢ **காரீப் சந்தைப்படுத்துதல் பருவம் (Kharif Marketing Season)**

- ✓ நெல்கொள்முதலில் ஓரளவு உயர்வு பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ✓ மார்ச் 14 வரை 25.07 லட்சம் டன்கள் கொள்முதல் செய்யப்பட்டு, டெல்டா பகுதிக்கு அதிகமாக பங்கு கிடைத்துள்ளது.
- ✓ கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நெல் கொள்முதல் ஓரளவு அதிகரித்துள்ளது.
- ✓ தற்போது வரை (மார்ச் 14), அக்டோபர் 1, 2021 அன்று தொடங்கிய தற்போதைய காரிப் சந்தைப்படுத்துதல் பருவத்தில் சுமார் 25.07 இலட்சம் டன்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

➢ **தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்**

- ✓ புதிதாக மறுசீரமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம், அதன் தலைவியாக எஸ். குமாரியை நியமித்துள்ளது.
- ✓ இந்தக் குழுவில் தலைவியைத் தவிர ஏழு உறுப்பினர்கள் உள்ளனர்.
- ✓ இந்த ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மூன்று வருட பதவிக் காலத்தைக் கொண்டுள்ளனர். ஆணையத்தின் அதிகாரப்பூர்வ உறுப்பினர்களில் எந்த மாற்றமும் இல்லை.

➢ **மாநிலத்தின் முதல் முழு அளவிலான பட்ஜெட்**

- ✓ தமிழக நிதி அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், 2022-23ஆம் நிதியாண்டுக்கான மாநிலத்தின் முதல் முழு பட்ஜெட்டை மார்ச் 18, 2022 அன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.
- ✓ இது தி.மு.க அரசின் இரண்டாவது பட்ஜெட் ஆகும். காகிதமில்லாமல் மின்னணு பட்ஜெட்டாக தாக்கல் செய்யப்பட்டது.
- ✓ நகர்ப்புறத் துறை, நலத்திட்டங்கள், கல்வி மற்றும் வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகள் ஆகியவை பட்ஜெட்டின் முக்கிய மையப் பகுதிகளாக இருந்தன.

## பட்ஜெட்டின் நிதி அம்சங்களின் சிறப்பம்சங்கள்

➢ **கல்வி:**

✓ அடுத்த 5 ஆண்டுகளில் அரசுப் பள்ளிகளை (ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கள்ளர் சீர்திருத்தப் பள்ளிகள் உட்பட) நவீனமயமாக்கும் வகையில், 'பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்' என்ற மாபெரும் திட்டத்தை தமிழ்நாடு தொடங்கவுள்ளது.

➢ **பேரிடர் எச்சரிக்கை அமைப்புகள்**

✓ வெள்ளம் குறித்து சரியான நேரத்தில் எச்சரிக்கைகளைப் பெறுவதற்காக, சூப்பர் கம்ப்யூட்டர்கள், வானிலை பலூன்களின் அமைப்பு, இரண்டு வானிலை ரேடார்கள், 100 தானியங்கி வானிலை நிலையங்கள், 400 தானியங்கி மழை அளவிகள் மற்றும் 11 தானியங்கி நீர்நிலை கருவிகள் ஆகியவற்றைக் கொண்ட மேம்பட்ட முன்னெச்சரிக்கை அமைப்பை அரசு நிறுவும்.

➢ **கடன் தள்ளுபடி:**

✓ விவசாயக் கடன் தள்ளுபடிக்கு ரூ.2.531 கோடியும், நகைக் கடன் தள்ளுபடி செய்ய ரூ.1000 கோடியும், சுய உதவிக் குழுக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு ரூ.600 கோடியும் என மொத்தம் ரூ.4131 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

➢ **மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திட்டம்:**

✓ மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம், மாறிவரும் காலத்துக்கு ஏற்ப மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டமாக மாற்றப்பட்டு வருகிறது.

✓ முந்தைய 'தாலிக்குத் தங்கம்' திட்டம் அல்லது மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் பெண்களின் திருமணங்களுக்கு தங்கம் மற்றும் நிதியுதவியை அளித்து வந்துள்ளது.

✓ புதிய திட்டம், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்த அனைத்து மாணவிகளுக்கும் உயர்கல்வி உறுதியளிக்கும் திட்டமாகும்.

✓ இளங்கலை பட்டப்படிப்பு, டிப்ளமோ மற்றும் ஐடிஐ படிப்புகளை தடையின்றி முடிக்கும் வர, அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக மாதம் 1000 ரூபாய் செலுத்தப்படும்.

➢ **புதிதாக உருவாக்கப்பட்ட மாநகராட்சிகளுக்கான நிதி:**

✓ புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தாம்பரம், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர், சிவகாசி ஆகிய 6 மாநகாட்சிகளில் தலா ரூ.10 கோடியில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காக ரூ.60 கோடி சிறப்பு நிதி வழங்கப்படும்.

✓ மேலும் புதிதாக உருவாக்கப்பட்ட 28 நகராட்சிகளுக்கு தலா ரூ.2 கோடி வழங்கப்படும்.

✓ அடுத்த இரண்டு ஆண்டுகளில் புதிதாக உருவாக்கப்பட்ட 6 மாவட்டங்களில் 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மாவட்ட மைய நூலகங்களை தமிழக அரசு நிறுவும்.

➢ **சமூக ஊடகங்கள்:**

- ✓ போலிச் செய்திகளால் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைத் தடுக்கவும், சமூக ஊடகங்களில் வெறுப்புணர்வைத் தடுக்கவும் மாநில தலைமையகத்தில் காவல் துறையில் புதிய சிறப்பு ‘சமூக ஊடக கண்காணிப்புப் பிரிவு’ ஏற்படுத்தப்படும்.

➢ **<u>சுற்றுச்சூழல்:</u>**

- ✓ அரசு, லண்டனின் கியூ கார்டன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து, சென்னை அருகே ரூ.300 கோடி செலவில் தாவரவியல் பூங்காவை அமைக்கவுள்ளது.
- ✓ தமிழகத்தின் ‘மாநில விலங்குகளை’ பாதுகாப்பதற்காக, ‘நீலகிரி தார்’ திட்டத்தை அரசு அறிவித்துள்ளது.

➢ **<u>பசுமை நிதியம்</u>**

- ✓ காலநிலை மாற்ற முயற்சிகள், தணிப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக, மாநில அரசு ‘தமிழ்நாடு பசுமை காலநிலை மாற்ற நிதி’யை அமைக்க உள்ளது.

➢ **<u>சுற்றுச் சூழல் சுற்றுலா தளங்கள்</u>**

- ✓ கோவை மாவட்டம் சேத்துமடையிலும், திண்டுக்கல் மாவட்டம் மன்னவனூர், தடியன்குடிசையிலும், திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரியிலும் அரசு மற்றும் தனியார் கூட்டு முறையில் சுற்றுச் சூழல் சுற்றுலா தளங்கள் உருவாக்கப்படும்.
- ✓ இந்த பட்ஜெட்டில் சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறைக்கு 849.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

➢ **<u>வரலாற்று முக்கியத்துவம்:</u>**

- ✓ குற்றாலம், பூண்டி, தருமபுரி ஆகிய 3 இடங்களில் அகழாய்வுப் பணிகள் ரூ.10 கோடியில் மேம்படுத்தப்படும்.

➢ **<u>சாலை உட்கட்டமைக்கு ஒரு பெரிய ஊக்கம் கிடைத்துள்ளது.</u>**

- ✓ சென்னை, வெளிவட்டச் சாலை திட்டத்திற்கு சுமார் 2,250 கோடியும், ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் சென்னை-கன்னியாகுமரி தொழில்வழித்தட திட்டத்திற்கு ரூ.1200 கோடியும், தமிழ்சாடு சாலைத் துறைத் திட்டம் 2 திட்டத்திற்கு 628 கோடியும் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

➢ **<u>சென்னை மனநலக் காப்பகத்திற்கு பெரிய மேம்படுத்தல் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.</u>**

- ✓ தரமான மனநலச் சேவைகளை வழங்குவதற்காக, கீழ்ப்பாக்கம் மனநலக் காப்பகத்தை மேம்படுத்தி, தமிழ்நாடு மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் கழகமாக (Tamil Nadu Institute of Mental Health and Neuro Sciences) நிறுவ தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.
- ✓ இந்தத் திட்டத்தின் முதற்கட்டத்திற்காக 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

➢ **<u>மாநில அரசு மனிதவள சீர்திருத்தக் குழுவை அமைக்கத் திட்டமிட்டுள்ளது</u>**

- ✓ தமிழ்நாடு அரசு மனிதவள சீர்திருத்தக் குழுவை அமைக்கும் என்றும், 6 மாதங்களுக்குள் மனிதவள மேலாண்மையில் சீர்திருத்தங்களுக்கான சாலை வரைபடத்தை முன்மொழியும் என்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் சட்டப் பேரவையில் வெள்ளிக்கிழமை அன்று அறிவித்தார்.

➢ **குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான ஒதுக்கீட்டில் 48 விழுக்காடு உயர்வு**

✓ வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யப்பட்ட 2022-23ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு பட்ஜெட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறைக்கான ஒதுக்கீடு கிட்டத்தட்ட 48 விழுக்காடு உயர்த்தப்பட்டுள்ளது.

➢ **சொற்பிறப்பியல் அகராதியைத் தயாரிப்பதற்கான குழு**

✓ திராவிடர் கழக நிறுவனரும் சமூக சீர்திருத்தவாதியுமான 'தந்தை பெரியார்' ஈ.வெ. ராமசாமி அவர்களின் எழுத்துப் படைப்புகள் ரூ.5 கோடி செலவில் 21 இந்திய மற்றும் உலக மொழிகளில் அச்சு மற்றும் டிஜிட்டல் பதிப்புகளில் வெளியிடப்படும் என்று தமிழக அரசு சட்டப்பேரவையில் வெள்ளிக்கிழமை அன்று தெரிவித்தது.

➢ **தொழில்நுட்ப, தொடக்க மையங்கள் நிறுவப்படும்**

✓ தமிழ்நாடு அரசு சென்னையில் ரூ.54.61 கோடி செலவில் ஐ-தமிழ்நாடு தொழில்நுட்ப (i-Tamil Nadu Technology) மையத்தை அமைக்கவுள்ளது. மாநிலத்தின் சிக்கலான சவால்களைத் தீர்ப்பதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த மையம் ஒருங்கிணைக்கும் என்று நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வெள்ளிக்கிழமை அன்று மாநில சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

✓ தமிழ்நாடு தொடக்கநிலை மற்றும் புதுமை இயக்கம் (Tamil Nadu Startup and Innovation Mission) ஈரோடு, மதுரை மற்றும் திருநெல்வேலியில் தொடக்கநிலை சுற்றுச் சூழல் அமைப்பின் வளர்ச்சியை உறுதி செய்வதற்காக மண்டல தொடக்க மையங்களை அமைக்கும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) மூலம் சென்னை நந்தம்பாக்கத்தில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில நிலையில் ஒரு அடையாளச் சின்னமாக தொடக்கநிலை மையம் நிறுவப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

➢ **2022-23ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் விவசாய பட்ஜெட்**

✓ தமிழ்நாடு வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், 2022-23ஆம் ஆண்டுக்கான மாநிலத்தின் இரண்டாவது வேளாண் பட்ஜெட்டை மார்ச் 19 அன்று தாக்கல் செய்தார்.

✓ அமைச்சர் தனது 110 நிமிட உரையின்போது, விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளுக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டை, நடப்பு நிதியாண்டில் ரூ.32,775.8 கோடியிலிருந்து அடுத்த நிதியாண்டில் ரூ.33,007.7 கோடியாக உயர்த்துவதாக அறிவித்தார்.

✓ ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகாவை அடுத்து விவசாயத்திற்காக தனி பட்ஜெட்டை தாக்கல் செய்யும் இந்தியாவின் மூன்றாவது மாநிலமாக தமிழகம் விளங்குகிறது.

**விவசாய பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள்**

✓ 2022-23ஆம் ஆண்டில் 126 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியை எட்ட தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும்.

✓ தமிழக அரசு மாநிலம் முழுவதிலும் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கும். இதற்காக மாநில அரசு, ரூ.5,157.56 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.

✓ 2022-23ஆம் ஆண்டில் பருத்தி விளைச்சலை அதிகரிக்கும் வகையில், ஒன்றிய மற்றும் மாநில அரசு நிதியில் ரூ.15.32 கோடி பட்ஜெட்டில் 'நிலையான பருத்தி சாகுபடி இயக்கம்' செயல்படுத்தப்படும்.

- ✓ முதல் வேளாண் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட 'கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்துக்கு' 2022-23ஆம் ஆண்டு பட்ஜெட்டில் ரூ.300 கோடி ஒதுக்கப்பட்டது.
- ✓ இந்தத் திட்டம் ஆண்டுதோறும் அனைத்தது கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக அடையாளம் காணப்பட்ட கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## <u>தொழில்நுட்பம் மூலம் விவசாயம்</u>

- ✓ தமிழ்நாடு அரசு டிஜிட்டல் விவசாயத்திற்காக ரூ.8 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.
- ✓ விதைப்பு முதல் அறுவடை வரை அனைத்து தொழில்நுட்பங்களையும் உழவன் கைப்பேசி செயலி மூலம் மின்னணு முறையில் பெற முடியும்.
- ✓ உற்பத்திக் காரணிகளின் அடிப்படையில் விவசாயிகளுக்கு புதிய லாபகரமான பயிர்த்திட்டத்தை உருவாக்குவதற்காக காவிரி டெல்டா உள்ளிட்ட ஏழு வேளாண் காலநிலை மண்டலங்கள் 1330 நுண்ணிய வேளாண் காலநிலை மண்டலங்களாகப் பிரிக்கப்படும்.

➢ **<u>உள்நாட்டு பயிர்களைப் பாதுகாப்பதற்காக மரபணு சேமிப்பகம் உருவாக்கப்படும்.</u>**

- ✓ விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சனிக்கிழமையன்று, தமிழ்நாட்டில் பரவலாகப் பயிரிடப்படும் பழங்கள், காய்கறிகள் மற்றும் மருத்துவ தாவரங்களின் உள்நாட்டு வகைகளின் மரபணு சேமிப்பகத்தை உருவாக்கப் போவதாக அறிவித்தார்.
- ✓ 'விதையே ஆயுதம்' என்று மறைந்த இயற்கை ஆர்வலர் நம்மாழ்வாரின் வார்த்தைகளை நினைவுகூர்ந்த அமைச்சர், மாநில தோட்டக் கலைப் பண்ணைகளில் பாரம்பரிய தோட்டக் கலைப் பயிர்களைப் பாதுகாப்பதற்காக மரபணு சேமிப்பகம் ஏற்படுத்தப்படும் என்றார்.

✓ **<u>மாநிலத்தில் இரண்டு சிறுதானிய சிறப்பு மண்டலங்கள் உருவாக்கப்படும்.</u>**

- ✓ விவசாயிகள், தொழில் முனைவோர், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் மத்தியில் சிறுதானிய ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறுதானியத் திருவிழா நடத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

➢ **<u>உணவுப் பூங்காக்களை அமைப்பதற்காக ரூ.381 கோடி செலவிடப்படும்.</u>**

- ✓ விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீனர் செல்வம், ரூ.381.38 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்) மூலம் மூன்று உணவுப் பூங்காக்களில் போதுமான உள்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும் என்று சனிக்கிழமை அன்று தெரிவித்தார்.
- ✓ தேனி, திண்டிவனம் (விழுப்புரம்), மணப்பாறை (திருச்சிராப்பள்ளி) தாலுக்காக்களில் 451 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட உள்ள சிப்காட் நிறுவனத்தால் பதிவு செய்யப்பட்ட மூன்று உணவுப் பூங்காக்கள் ஒன்றிய அரசால் 'மெகா உணவுப் பூங்காக்களாக' அறிவிக்கப்பட்டுள்ளன.

➢ **நுண் காடு (Micro Forest)**

- ✓ சென்னை முழுவதும் 1000 மியாவாக்கி காடுகளை அமைக்கும் திட்டத்தை பெருநகர சென்னை மாநகராட்சி கைவிட்டுள்ளது. அதற்குப் பதிலாக பூர்வீக இனங்களுடன் கூடிய நுண்காடுகளை வளர்க்கத் திட்டமிட்டுள்ளது.

- ✓ கடந்த மூன்று ஆண்டுகளில் பெருநகர மாநகராட்சி சுமார் 50 மியாவாக்கி காடுகளை உருவாக்கியுள்ளது. அவை தொடர்ந்து இருக்கும்.
- ✓ தற்போது, பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின்கீழ், புதிய 'நுண் காடு' கொள்கைக்கு நிதியுதவி அளிக்குமாறு சுற்றுச் சூழல் துறையிடம் பெருநகர சென்னை மாநகராட்சி கேட்டுள்ளது.

## ➢ பசுமை உதவித் தொகை திட்டம் (Green Fellowship Programme)

- ✓ காலநிலை மாற்றம் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளுக்கான முயற்சிகளில் இளைஞர்களை தீவிரமாக ஈடுபடுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு பசுமை உதவித் தொகைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ✓ சுற்றுச் சூழல் கொள்கை வடிவமைப்பு மற்றும் செயல்படுத்துதலில் இளைஞர்களை ஈடுபடச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அவர்கள் விளைவுகளைக் கண்காணித்து மதிப்பீடு செய்வார்கள், கொள்கைகளின் தாக்கத்தைப் பகிர்ந்து கொள்வார்கள் மற்றும் சிறந்த சேவைகளை வழங்குவார்கள்.

## ➢ நரசிங்கப்பேட்டை நாகஸ்வரம்

- ✓ நரசிங்கப்பேட்டை நாகஸ்வரம் - 15ஆம் வகை இசைக் கருவிகள் என்ற வகையின்கீழ் புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது.
- ✓ தமிழ்நாட்டின் பாரம்பரிய காற்றுக் கருவியான நாகஸ்வரம், 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இது சிக்கலான கைவினைத் திறன் கொண்டு, கைவினைஞர்களால் கையால் செய்யப்பட்ட ஒரு பழங்கால இசைக்கருவியாகும்.

## ➢ டைடல் நியோ (TIDEL Neo)

- ✓ பின்னலாடைத் தொழில் நகரமான திருப்பூர் - மாநிலத்தின் முதல் 'டைடல் நியோ'வைக் கொண்டிருக்கும்.
- ✓ 'டைடல் நியோ' என்பது, மாநிலம் முழுவதிலும் சேவைத் துறையை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், அடுக்கு 2 மற்றும் அடுக்கு 3 நகரங்களில் 50,000 முதல் 1 லட்சம் சதுர அடி பரப்பளவில் 'மினி' தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை அமைப்பதைக் குறிக்கிறது.
- ✓ திருப்பூரில் உள்ள ராக்கியாபாளையம் கிராமத்தில் 60000 சதுர அடி பரப்பளவில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்கா தரைத்தளம் மற்றும் 7 தளங்கள் கொண்டதாக இருக்கும்.
- ✓ இந்தப் புதிய வசதி ரூ.32 கோடி நிதிச் செலவில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## ➢ குலசேகரப்பட்டினம்

- ✓ தசரா பண்டிகையின்போது கொண்டாடப்படும் திருவிழாவிற்குப் பெயர் போன தூத்துக்குடியின் தென் மாவட்டத்தில் உள்ள இந்த சிறிய டவுன் பஞ்சாயத்து விரைவில் உலக அறிவியல் வரைபடத்தில் இடம் பெறப் போகிறது.
- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தனது சிறிய செய்றகைக் கோள் ஏவுகணைகளில் 500 கிலோவிற்கும் குறைவான எடையுள்ள செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதற்காக குலசேகரப்பட்டினத்தில் தனது இரண்டாவது விண்வெளித் தளத்தை அமைக்க உள்ளதால், அந்த முதன்மை அடையாளம் வரும் ஆண்டுகளில் மாறும்.

## ➢ மாநில விலங்கினைப் பாதுகாத்தல்

- ✓ மாநில விலங்காகிய புலிகளின் எண்ணிக்கை, பரந்து விரிந்துள்ள அதன் காடுகளில் அருகி வரும் இந்த அசாதாரணமான சூழ்நிலையில், அந்த விலங்கின்

வாழ்விடத்தைப் பாதுகாப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் ஏதுவாக, ரூ.10 கோடி என்ற முதல் கட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில், சரியான நேரத்தில் 'நீலகிரி தார் திட்டம்' (Project Nilgiri Tahr) தமிழ்நாடு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

- ✓ ஆனைமலை புலிகள் காப்பகத்தின் மலைப் புல்வெளிகள் கேரளாவில் உள்ள இரவிகுளம் தேசிய பூங்காவிற்கு அடுத்ததாக தார் (tahr)-இன் இரண்டாவது பெரிய வாழ்விடமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## ➢ அயல்நாடு வாழ் தமிழர்கள் நல வாரியம் (Non-Resident Tamils' Welfare Board)

- ✓ அயல்நாடு வாழ் தமிழர்கள் நல வாரியத்திற்கு மேலும் 2 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- ✓ தமிழ்நாடு அயல்நாடு வாழ் தமிழர்கள் நலச் சட்டம், 2011ஐத் திருத்தும் ஒரு மசோதா, நிர்வாக இயக்குநர் மற்றும் இயக்குநர்களுக்குப் பதிலாகத் தலைவர் மற்றும் உறுப்பினர்களைக் கொண்டதாக, தமிழ்நாடு அயல்நாடு வாழ் தமிழர்கள் நல வாரியத்தின் அமைப்பை மாற்றியமைத்தது.
- ✓ வாரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை 13ல் இருந்து 15 ஆக அதிகரிப்பதுடன், சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி.கே. எஸ். மஸ்தான் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த மசோதாவானது, குடியுரிமை பெறாத தமிழர்களின் மறுவாழ்வு மற்றும் நல ஆணையரை வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர் செயலாளராக ஆக்கியது.

## ➢ அந்நிய நேரடி முதலீடு (Foreign Direct Investment)

- ✓ தமிழ்நாட்டில் அன்னிய நேரடி முதலீடு 2020ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் (கோவிட் 19இன் முதல் அலை ஏற்பட்டபோது) 12,504 கோடியிலிருந்தது (சுமார் 1.7 பில்லியன் டாலர்), 2021 ஏப்ரல்-டிசம்பர் மாதங்களில் 41.5 விழுக்காடு அதிகரித்து 17,696 கோடியாக (சுமார் 2.4 பில்லியன் டாலர்) அதிகரித்துள்ளது.
- ✓ 2020ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, 2021 ஏப்ரல் -டிசம்பர் மாதங்களில், இந்தியாவுக்கான ஒட்டுமொத்த அன்னிய நேரடி முதலீடு 16 விழுக்காடு குறைந்து 3,19,976 கோடியாக இருந்தபோதிலும், தமிழகத்தில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ➢ ஐக்கிய அரபு அமீரகம் வருகை

- ✓ தனது ஐக்கிய அரபு அமீரக பயணத்தின்போது, தமிழகத்தில் 6100 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 6 பெரிய நிறுவனங்களுடன் கையெழுத்தானது என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் செவ்வாய்கிழமை அன்று தெரிவித்தார்.

## ➢ அமேசான்

- ✓ அமேசான் நிறுவனத்தின் மிகப்பெரிய அலுவலகம், தமிழ்நாட்டின் சென்னையில் திறக்கப்பட உள்ளது.
- ✓ 6000 பணியாளர்கள் தங்கி வேலை செய்யும் இந்த வசதியை முதலமைச்சர் தொடக்கி வைக்க உள்ளார்.

## ➢ சாகித்திய அகாடமி ∴பெல்லோஷிப் (Sahitya Akademi Fellowship)

- ✓ இந்திரா பார்த்தசாரதி அவர்களுக்கு சாகித்ய அகாடமி ∴பெல்லோஷிப் வழங்கப்பட்டுள்ளது.
- ✓ பத்மஸ்ரீ விருது பெற்ற இவர் 16 நாவல்கள், 10 நாடகங்கள், சிறுகதைகள் மற்றும் கட்டுரைகளின் தொகுப்புகளை வெளியிட்டுள்ளதாக, திரு. பார்த்தசாரதி மேலும் கூறினார்.

- ✓ 1977ஆம் ஆண்டு தனது குருதிப்புனல் நாவலுக்காக சாகித்ய அகாடமி விருதை அவர் வென்றார். மேலும், சாகித்ய அகாடமி விருது மற்றும் சங்கீத நாடக அகாடமி விருது ஆகிய இரண்டையும் பெற்ற ஒரே எழுத்தாளர் இவரே ஆவார்.

## ➢ சந்தன்ராஜ் தாக்சாயணி (Chandanraj Dakshayani)

- ✓ முதன் முறையாக, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஒரு ஊராட்சியின் செயலாளராக திருநங்கையான சந்தன்ராஜ் தாக்சாயணி நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர். அல்பிஜான் வர்கீஸ் 2022ஆம் ஆண்டு இவரை கருணை அடிப்படையில் பணிக்கு தேர்வு செய்து பணிநியமன ஆணையை வழங்கினார்.
- ✓ பாலினமாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட பிறகு 6 ஆண்டுகள் கழித்து, மார்ச் 24, 2022 அன்று, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கொடிவேலி பஞ்சாயத்து செயலாளராக தாக்சாயணி, 30 வயது, மாநிலத்தின் முதல் திருநங்கை பஞ்சாயத்து செயலாளராக நியமிக்கப்பட்டார்.

## ➢ ஓரியூர் மற்றும் மருங்கூர்

- ✓ ராமநாதபுரம் தொல்லியல் ஆராய்ச்சி அறக்கட்டளையானது – ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி அருகே சங்க காலத்தில் இருந்திருக்கக் கூடிய ஓரியூர் மற்றும் மருங்கூர் ஆகிய இரண்டு பழமையான கிராமங்களின் தடயங்களைக் கண்டுபிடித்துள்ளது.

## ➢ ஐக்கிய அரபு அமீரகத்தைத் தளமாகக் கொண்ட லுலு குழுமம்

- ✓ ஐக்கிய அரபு அமீரகத்தைத் தளமாகக் கொண்ட லுலு குழுமம் - ஷாப்பிங் மால்கள், ஹைப்பர் மார்க்கெட்டுகள் மற்றும் உணவு பதப்படுத்துதல் மற்றும் தளவாட மையத்தை அமைப்பதற்காக ரூ.3500 கோடி முதலீடு செய்ய தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ✓ மொத்தத்தில் ஐக்கிய அரபு அமீரகத்திற்கான ஐந்து நாள் பயணத்தின்போது ரூ.6100 கோடி முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலீட்டாளர்களுடன் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் முதல்வர் தலைமையிலான குழு கையெழுத்திட்டது.

## ➢ தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (Tamil Nadu Urban Employment Scheme)

- ✓ பெருநகர சென்னை மாநகராட்சி – தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் குறைந்தபட்ச ஊதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ இது கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைப் போன்றது. அதே சமயம், தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் சென்னை நகரத்தில் வேலைகளை வழங்கும்.

## ➢ மத்திய சதுக்கம் (Central Square)

- ✓ சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் எதிரே 400 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட 'மத்திய சதுக்கத்தை' முதல்வர் மு.க. ஸ்டாலின் மார்ச் 30ஆம் தேதி திறந்து வைத்தார்.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், சென்னை சென்ட்ரல், மெட்ரோ ரயில் நிலையம், ரிப்பன் கட்டிடம், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பூங்கா இரயில் நிலையம் ஆகியவற்றை இணைக்கும் வகையில் ஒரே சுரங்கப்பாதை அமைக்கப்படும்.

# மாநிலங்கள்

- **புஷ்கர் தாமி உத்தர்காண்ட் மாநில முதலமைச்சராக பொறுப்பு ஏற்றுக் கொண்டார்**
  - ✓ உத்தர்காண்ட்டின் காதிமா தொகுதியிலிருந்து இரண்டு முறை சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட, புஷ்கர் சிங் காமி, 11 உறுப்பினர் அமைச்சரவையுடன் அந்த மாநிலத்தின் 11வது முதலமைச்சராக பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.

- **ஒடிசா மாநில கூட்டுறவு கைவிணைத் தொழில்கள் நிறுவனம்** - புகழ்பெற்ற கட்டாக் வெள்ளி ஜரிகை சித்திர வேலைப்பாடுகளுக்கு புவிசார் குறியீடு கேட்டு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளது.

- **ஜிகா வைரஸ் முதல் நிகழ்வு – கேரள மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**
  - ✓ கேரளாவில் 24 வயது கர்ப்பிணிப் பெண் ஒருவர் கொசுக்களால் தோன்றும் ஜிகா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

- **லடாக் - முழுவதும் தடுப்பூசி போடப்பட்ட முதலாவது யூனியன் பிரதேசம்**
  - ✓ இந்த யூனியன் பிரதேசத்தில் உள்ள அனைத்து குடியிருப்புதாரர்கள், இடம்பெயரும் தொழிலாளர்கள், உணவு விடுதி தொழிலாளர்கள் மற்றும் நேபாள குடிமக்கள் அனைவருக்கும் முதலாவது தவணை கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அந்த வகையில் நாட்டிலேலேயே முதலாவது யூனியன் பிரதேசமாகத் திகழ்கிறது.
- **அஸ்ஸாம் அமைச்சரவை – மாநிலத்தில் உள்ள பழங்குடியினர் மற்றும் இதர பூர்வீக சமூக குடிமக்களின் கலாச்சாரத்தையும், பழக்க வழக்கங்களையும் பாதுகாக்கும் விதமாக 'பூர்வீக நம்பிக்கை மற்றும் கலாச்சாரத்துறை' என்ற ஒரு துறை உருவாக்கப்படும் என்று ஜூலை மாதத்தில் அறிவித்தது.**

- **உத்தரப் பிரதேச மக்கள் தொகை மசோதா 2021**
  - ✓ யோகி ஆதித்யநாத் தலைமையிலான அரசு 2021-30ஆம் ஆண்டுக்கான உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு மக்கள் தொகை கட்டுப்பாடு குறித்த கொள்கையை ஜூலை மாதத்தில் வெளியிட்டது.
  - ✓ உத்தரப் பிரதேசத்தில் தற்போது ஒட்டு மொத்தமாக 2.7 விழுக்காடு கருவுறுதல் வீதம் உள்ளது. ஆனால், இது 2.1 விழுக்காட்டுக்கும் குறைவாக இருப்பதே சிறப்பானது ஆகும். இதைத் தொடர்ந்து வரைவு உத்தரப் பிரதேச மக்கள் தொகை (கட்டுப்பாடு, நிலைப்படுத்துதல் மற்றும் நலன்) மசோதா, 2021 – பொது மக்களின் ஆலோசனைகளுக்காக ஜூலை வரை திறந்த நிலையில் இருக்கும்.
  - ✓ இந்த வரைவு மசோதாவானது, பிற விதிமுறைகளுடன் இரண்டு குழந்தைகள் கொள்கைகையைப் பின்பற்றும் தம்பதிகளுக்கு ஊக்கத் தொகையை வழங்க முயல்கிறது.

- **பெண்கள்(சிறுமிகள்) ஊராட்சி (Balika Panchyat)**
  - ✓ குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் உள்ள குனரியா கிராமம் - நாட்டிலேயே முற்றிலும் பெண்களையே ஊராட்சி உறுப்பினர்களாகத் தேர்வு செய்துள்ள முதலாவது ஊராட்சி என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
  - ✓ இளம்பருவ பெண்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே இந்த ஊராட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது – பெண்களின், பெண்களால். பெண்களுக்காக – கிராமத்தில் உள்ள பெண்களுக்கு அதிகாரமளித்தல்.
  - ✓ 10 முதல் 21 வயது வரையிலான இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள், இந்த தனித்துவமான ஊராட்சியின் ஊறுப்பினர்களுக்கான தேர்தலில் போட்டியிடுவார்கள்.
  - ✓ 'பெண்கள் (சிறுமிகள்) மட்டுமே' என்ற இந்த கவுன்சிலானது, பெரியவர்களுக்கான ஊராட்சிக்கு இணையாகச் செயல்படும். ஆனால், இது அந்த கிராமத்தில் உள்ள வளரிளம் பெண்கள் மற்றும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை மட்டுமே கவனிக்கும்.

- **பரிவார் பொருளாதார உதவித் திட்டம் (Pariwar Aarthik Sahayata Yojana)**
    - ✓ இந்த புதிய திட்டத்தை சமூக நலத்துறை வெளியிட்டுள்ளது.
    - ✓ இந்தத் திட்டத்தின்கீழ், கோவிட்-19 தொற்று காரணமாக உயிரிழப்பைச் சந்தித்துள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.50,000 வழங்கப்படும்.
    - ✓ உயிரிழந்த அந்த நபர் அந்தக் குடும்பத்தின் வருவாயை ஈட்டும் நபராக இருந்தால், அந்தக் குடும்பத்திற்கு கூடுதலாக ஒவ்வொரு மாதமும் ரூ.2,500 வழங்கப்படும்.
    - ✓ தங்களது இரண்டு பெற்றோரையும் அல்லது பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கும் இந்த ரு.2,500 ரூபாய் 25 வயது வரையிலும் வழங்கப்படும். அத்துடன் இலவச கல்வியும் வழங்கப்படும்.

- **தெலுங்கானாவின் ருத்ரேஸ்வரா கோவில் என்று அழைக்கப்படும் ராமப்பா கோவில், ஜூலை மாதத்தில் நாட்டின் 39வது உலக பாரம்பரிய அடையாளத்தைப் பெறும் கோவிலாக ஆனது.**
    - ✓ கல்லால் கட்டப்பட்ட, கட்டிடக் கலை அபூர்வமாகிய வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ருத்ரேஸ்வரா கோவிலானது, தெலுங்கானா மாநிலத்திலிருந்து யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்ன அடையாளத்தைப் பெறும் முதல் பாரம்பரிய சின்னம் ஆகும்.
    - ✓ முலுகு மாவட்டத்தின் பாலம்பட்டு என்ற இடத்தில் உள்ள இந்த புகழ்பெற்ற கோவிலானது, சீனாவின் ஃபுஜோவில் தற்போது மெய்நிகராக நடைபெற்று வரும் யுனெஸ்கோ உலக பாரம்பரிய குழுவின் 44வது அமர்வில், உலக பாரம்பரிய சின்னங்கள் பட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
    - ✓ இந்தக் கோவிலை 40 ஆண்டு காலம் பாடுபட்டு கட்டிய சிற்பியின் பெயராலேயே இந்தக் கோவிலுக்கு ராமப்பா கோவில் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

- **மத்தியப் பிரதேச முதலமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌஹான் - மாநிலத்தில் உள்ள குவாலியர் மற்றும் ஓர்ச்சா நகரங்களின், யுனெஸ்கோவின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நகர்ப்புற நிலப்பரப்பு திட்டத்தை மெய்நிகராக காணொலி காட்சி வழியாகத் தொடங்கி வைத்தார்.**

- **ஒடிசாவின் பூரி – வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும் குழாய் வழியே குடிநீர் வழங்கும் இந்தியாவின் முதல் மாநகரமாகஆகியுள்ளது.**
    - ✓ ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் ‘சுஜால் - குழாயிலிருந்து குடிநீர் இயக்கம்’ என்ற ஒரு திட்டத்தை மெய் நிகராகத் தொடங்கி வைத்தார்.
    - ✓ இந்தத் திட்ட தொடக்கவிழாவின்போது, பூரி நகரம் லண்டன், நியூயார்க் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நகரங்களைப் போன்று, 24 மணி நேரமும் குழாய் மூலமாக தரமான குடிநீரை வழங்கும் சர்வதேச நகரங்களின் பட்டியலில் இடம் பிடித்துள்ளது என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

- **கர்நாடக உள்துறை அமைச்சர் பசவராஜ் பொம்மை – மாநிலத்தின் 23வது முதலமைச்சராக ஜூலை மாதத்தில் பதவியேற்கவுள்ளார்.**

- **தோளவிரா (Dholavira), ஹரப்பா நாகரிகத்தைச் சேர்ந்த நகரம் - ஜூலை மாதத்தில் யுனெஸ்கோ உலக பாரம்பரிய இடமாக அறிவிக்கப்பட்டுள்ளது.**
    - ✓ தோளவிரா கல்வெட்டுகள் பற்றிய முதலாவது குறிப்பு இந்திய அரசால் 2014ல் மேற்கொள்ளப்பட்டது.
    - ✓ 1967ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த பழமையான நகரம் முதன் முறையாக 1989-90 இல் அகழ்வாய்வு செய்யப்பட்டது. இது, இந்தியாவில் ராக்கிகாரிக்கு (Rakhigarhi) அடுத்ததாக கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது மிகப்பெரிய ஹரப்பா நகரம் ஆகும்.
    - ✓ தோளவிராவிற்கு வழங்கப்பட்ட இந்த புதிய கௌரவம் பற்றிய முறையான அறிவிப்பு யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய கமிட்டியின் 44வது அமர்வின்போது மேற்கொள்ளப்பட்டது.
    - ✓ பாகிஸ்தானில் உள்ள மொகஞ்சதாரோவிற்கு அடுத்தபடியாக, இந்தப் புகழைப் பெற்றுள்ள தெற்காசியாவின் இரண்டாவது இந்தியாவின் முதலாவது ஹரப்பா இடம் தோளவிரா ஆகும்.

- **உத்தரப்பிரதேசம் - 2013 மற்றும் 2018ல் மேற்கொள்ளப்பட்ட இரண்டு ஆய்வுகளின்படி, நாட்டிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான கையினால் துப்புரவு செய்யும் தொழிலாளர்கள் (37,379) உள்ளனர். இதற்கடுத்த இடங்களை மகாராஷ்டிரா (7,378) மற்றும் அஸ்ஸாம் (4,295) மாநிலங்கள் பெற்றுள்ளன.**

- **இளஞ்சிவப்பு பாதுகாப்பு (Pink Protection)**
  - ✓ கேரள காவல்துறை, பொது இடங்களிலும் டிஜிட்டல் தளங்களிலும் பெண்களைப் பாதுகாப்பதற்காக, இளஞ்சிவப்பு பாதுகாப்பு என்ற ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

- **நாகாலாந்து மற்றும் அஸ்ஸாம் அரசுகள் - அஸ்ஸாம் மற்றும் நாகாலாந்து எல்லையில், பதற்றத்தைத் தணிக்கும் நோக்கத்தில் படைகளைத் திரும்பப் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.**
  - ✓ இந்த ஒப்பந்தத்தில் நாகாலாந்தின் தலைமைச் செயலாளர் ஜே. ஆலம் மற்றும் அசாம் தலைமைச் செயலாளர் ஜிஷ்ணு பாருவா ஆகியோர் ஜுலை 31 அன்று திமாபூரில் நாகாலாந்து துணை முதலமைச்சர் ஒய். பாட்டன் மற்றும் அசாம் கல்வி அமைச்சர் ரனோஜ் பேகு முன்னிலையில் கையெழுத்திட்டனர்.

- **மேகாலயா இளைஞர் கொள்கை – 2021**
  - ✓ முதலமைச்சர் கான்ராட் கே. சங்மா தலைமையில் நடைபெற்ற மேகாலயா மாநில அமைச்சரவை – மேகாலயா இளைஞர் கொள்கை, 2021க்கு சமீபத்தில் ஒப்புதலை வழங்கியது.
  - ✓ இது மேகாலயாவின் இளைஞர்களுக்கு முழு திறனை அடைவதற்கும், ஈடுபாடு, திறமை, படைப்பாற்றல், பொறுப்பு மற்றும் அதிகாரம் பெற்ற உறுப்பினர்களாக மாறுவதற்கான பாதைகளை உருவாக்கவும் முயல்கிறது.
  - ✓ இந்தக் கொள்கையை மாநில அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத் துறை உருவாக்கியுள்ளது.

- **இந்தியாவின் முதலாவது பூகம்ப எச்சரிக்கை அமைப்பு – ஆகஸ்ட் மாதம் உத்தரகாண்டில் தொடங்கி வைக்கப்பட தயாராக உள்ளது.**
  - ✓ உத்தரகாண்ட் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (Uttarakhand State Disaster Management Authority) மற்றும் இந்திய தொழில்நுட்ப நிறுவனம், ரூர்கே ஆகிய அமைப்புகளால் உத்தரகாண்ட் பூகம்ப எச்சரிக்கை செயலி என்ற ஒரு புதிய செயலி உருவாக்கப்பட்டுள்ளது.
  - ✓ உத்தரகாண்ட் பூகம்ப எச்சரிக்கை செயலியை முதல்வர் புஷ்கர்சிங் தாமி தொடங்கி வைக உள்ளார்.

- **பராக் பள்ளத்தாக்கு**
  - ✓ பராக் பள்ளத்தாக்கு மாவட்டங்களான கச்சர், கரீம்கஞ்ச் மற்றும் ஹைலகண்டி, மிசோரமில் உள்ள மாமித் மற்றும் கோலாசிப்.

- **கிராப் (GRAP)**
  - ✓ **தரப்படுத்தப்பட்ட பதில் செயல் திட்டம் (Graded Response Action Plan - GRAP)**, இதில், சூழ்நிலையின் தீவிரத்தைப் பொறுத்து நான்கு வகையான எச்சரிக்கை நிலைகள் இருக்கும்.
  - ✓ வண்ணக் குறியீடு அடிப்படையிலான நான்கு எச்சரிக்கை நிலைகளாவன – நிலை 1 (மஞ்சள்), நிலை 2 (அம்பர்), நிலை 3 (ஆரஞ்ச்) மற்றும் நிலை 4 (சிவப்பு).

- **ககோரி இரயில் நடவடிக்கை**
  - ✓ உத்தரப் பிரதேச அரசு – 'ககோரி இரயில் சதி' என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க சுதந்திர இயக்கத்தை 'ககோரி இரயில் நடவடிக்கை' என்று பெயர் மாற்றம் செய்துள்ளது.

- கரும்புக்கான மிக அதிக நியாயமான மற்றும் சிறந்த விலைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
  - ✓ ஒன்றிய அமைச்சரவை கரும்பு விவசாயிகளுக்கு ஆகஸ்ட் 25, 2021 அன்று மிக உயர்ந்த நியாயமான மற்றும் சிறந்த விலைக்கு (**fair & remunerative price** - FRP) ஒப்புதல் அளித்துள்ளது.
  - ✓ 2021-22ஆம் ஆண்டிற்கு கரும்பிற்கான நியாயமான மற்றும் சிறந்த விலையானது (FRP) ஒரு குவிண்டாலுக்கு ரூ.290 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த விலையானது, 10 விழுக்காடு மீட்சி அடிப்படையில் இருக்கும்.
  - ✓ மீட்சி விலையானது 9.5 விழுக்காட்டிற்கும் குறைவாக இருந்தால், விவசாயிகளுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ.275 எப்ஆர்பி வழங்கப்படும்.
  - ✓ இந்த ஒப்புதலானது இதுவரை இல்லாத அளவு மிக அதிக எப்ஆர்பி ஆகும். இது 5 கோடி கரும்பு விவசாயிகள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு பயனளிக்கும்.

- **ஒன்றிய அரசு 'பாரத் தொடர்' பதிவுகளை அறிமுகம் செய்துள்ளது**



APOLLO STUDY CENTRE

- ✓ ஒன்றிய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் புதிய வாகனங்களுக்கான புதிய பதிவு அடையாளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அதாவது 'பாரத் தொடர்' வாகனத்தின் உரிமையாளர் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாறினால், பிஎச் தொடர் முத்திரை கொண்ட வாகனங்களுக்கு புதிய பதிவு முத்திரை ஒதுக்கப்பட வேண்டியதில்லை.

➢ **தேசிய கல்விக் கொள்கை – 2020ஐ அமல்படுத்துவது தொடர்பாக உத்தரவு பிறப்பித்த நாட்டின் முதலாவது மாநிலமாக கர்நாடகா மாறியுள்ளது.**

➢ **அசாமில் உள்ள காசிரங்கா தேசிய பூங்கா செயற்கைக் கோள் தொலைபேசிகள் பொருத்தப்பட்ட இந்தியாவின் முதலாவது தேசிய பூங்காவாக மாறியுள்ளது.**

➢ **திரிபுராவில் 'என்னுடைய பேட், என்னுடைய உரிமை' திட்டம்.**

➢ **மேரா காம் மேரா மான் (Mera kaam Mera Maan)**
- ✓ பஞ்சாப் மாநிலம் வேலையில்லாத இளைஞர்களுக்கு உதவுவதற்காக 'மேரா காம் மேரா மான்' என்ற ஒரு திட்டத்தைத் தொடங்க உள்ளது.

➢ **பனிச்சிறுத்தை – லடாக் யூனியன் பிரதேசத்தில் மாநில விலங்காக அறிவிக்கப்பட்டுள்ளது.**
- ✓ கருப்பு கழுத்து கொண்ட கொக்கு, இந்த யூனியன் பிரதேசத்தின் மாநில பறவை என்று அழைக்கப்படுகிறது.
- ✓ கருப்பு கழுத்து கொக்கு (கிரஸ் நிக்ரிகோல்லிஸ்), ஐயூசிஎன் அச்சுறுத்தலுக்குள்ளான விலங்குகளின் பட்டியலில். 'அழிவின் விளிம்பில்' உள்ளது என்று பட்டியலிடப்பட்டுள்ளது. அதே சமயம், பனி சிறுத்தையானது (பாந்தர் யூனிகா) 'பாதிக்கப்படக்கூடிய' வகையின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

➢ **உத்தரகாண்ட் மாநிலம் - அனைத்து புலிகள் காப்பகங்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்களில் பெண்களை ஜிப்சி ஓட்டுநர்கள் மற்றும் இயற்கை வழிகாட்டிகளாக நியமிக்க முடிவு செய்துள்ளது.**
- ✓ மத்தியப் பிரதேசத்தில் உள்ள இரண்டு புலிகள் காப்பகங்கள் - கன்ஹா புலிகள் காப்பகம் - தேசிய பூங்கா மற்றும் பெஞ்ச் புலிகள் காப்பகம் - தேசிய பூங்காவில் புலிகள் வசிக்கும் பகுதிகளுக்கு சுற்றுலாப்பயணிகளுடன் வரும் வழிகாட்டிகளாக பெண்களை நியமித்துள்ளது.

➢ **சமக்ரா சிக்ஷா அபியான் (Samagra Sikhsha Abhiyan)**
- ✓ அசாம் மாநிலத்தில் சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்தின் விளம்பர தூதராக ஒலிம்பியன் லோவ்லினா போர்கோஹெயின் நியமிக்கப்பட்டுள்ளார்.

➢ **தெலுங்கானா – ட்ரோன்கள் மூலம் தடுப்பூசிகளை விநியோகிப்பதற்கான சோதனை ஓட்டத்தை செப்டம்பர் மாதம் தொடங்கியுள்ளது.**

➢ **உத்தரப் பிரதேச அரசு** – கிராமப்புற உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, 'மாத்ர பூமி யோஜனா' (Matra Bhumi Yojana) திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

➢ **சிக்கிம் மாநிலத்தின் மீனாக கேட்லி (Katley) அறிவிக்கப்பட்டுள்ளது**
- ✓ சிக்கிம் அரசு, உள்ளூரில் 'கேட்லி' என்று அழைக்கப்படும் 'கூப்பர் மஹ்சீரை' மாநில மீனாக அறிவித்துள்ளது. இந்த கூப்பர் மஹ்சீரின் அறிவியல் பெயர் Neolissochilus hexagonolepis ஆகும்.

➢ **சத்தீஷ்கர் மாநில அரசு** – மாநிலத்தில் 'தினை இயக்கத்தைத்' தொடங்கி வைப்பதற்காக, ஐதராபாத்தில் உள்ள இந்திய தினை ஆராய்ச்சி நிறுவனத்துடன் முதலமைச்சர் பூபேஷ் பாகெல் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

➢ **அஸ்ஸாமின் நெல் வைன் ஆகிய 'ஜுடிமா'வுக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது.**
- ✓ அசாமின் பாரம்பரியமான ஜுடியா வைனுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- ✓ இது அரிசி மற்றும் ஒரு குறிப்பிட்ட மூலிகையிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இது திமாசா பழங்குடியினரிடையே மிகவும் பிரபலமானது ஆகும்.
- ✓ இந்த ஜுடிமாவை டிமாசாக்களின் சமூக மற்றும் கலாச்சார வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாது.
- ✓ கர்பி ஆங்லாங் மற்றும் டிமாஹசாவோ மலை மாவட்டங்களிலிருந்து கர்பி ஆங்லாங்கின் இஞ்சிக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்ட பிறகு, புவிசார் குறியீடு பெறும் இரண்டாவது தயாரிப்பு இதுவாகும்.
- ✓ வடகிழக்கு மாநிலங்களிலிருந்து இந்த கௌரவத்தைப் பெறும் முதல் பானம் இந்த ஜுடிமா ஆகும்.

- **ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் தரவுகளின்படி, பிரதமரின் விவசாயி ஆற்றல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு மகா இயக்கம் (Pradhan Mantri Kisan Urja Suraksha Evam Utthan Mahaabhiyaan)**
  - ✓ அரியானா அரசு, 2020-21ஆம் ஆண்டுக்கு இசைவளிக்கப்பட்ட 15,000 பம்புகளில் 14,418 பம்புகளை நிறுவியுள்ளது.
  - ✓ அரியானா அரசுக்கு 2020-21ஆம் ஆண்டுக்கு ரூ.520 கோடி மதிப்பில் 15,000 பம்புகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

- **பொன்வாக் (Ponvakk) திட்டம்**
  - ✓ குழந்தைத் திருமணங்களைத் தடுப்பதற்காக கேரள அரசு பொன்வாக் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

- **காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, லடாக் தலைநகர் லேயில் 1,000 கிலோ எடையுள்ள உலகின் மிகப்பெரிய காதி தேசியக் கொடி அறிமுகப்படுத்தப்பட்டது.**
  - ✓ மகாத்மா காந்தியின் 152வது பிறந்த நாளையொட்டி, கையால் நெய்யப்பட்ட பிரம்மாண்டமான தேசியக் கொடியை லெப்டினன்ட் கவர்னர் ஆர்.கே. மதுரா திறந்து வைத்தார்.
  - ✓ லே பள்ளத்தாக்குக்கு மேலே அமைந்துள்ள ஒரு மலையில் லே கேரிசனில் Fire and Fury கார்ப்ஸ் அமைப்பினால் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

- **கோவிட்-19 தடுப்பூசியின் 11 கோடி டோஸ்களைப் போட்டுக் கொண்ட முதல் மாநிலம்**
  - ✓ உத்தரப் பிரதேசம் - கோவிட்-19 தடுப்பூசியை 11 கோடி டோஸ்களுக்கு மேல் செலுத்திய நாட்டின் முதலாவது மாநிலமாக ஆகியுள்ளது.

- **‘ராம் கங்கா தேசிய பூங்கா’**
  - ✓ புலிகள் காப்பகம் ‘ராம்கங்கா தேசிய பூங்கா’ என்று அழைக்கப்பட்டது – அந்தக் காப்பகத்தின் வழியாகப் பாயும் ராம்கங்கா என்ற ஆற்றின் பெயரால் இவ்வாறு அழைக்கப்படுகிறது - இதற்கு முன்பாக கார்பெட்டுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அது பெயரிடப்பட்டிருந்தது.

- **‘என் வீடு என் பெயர்’ (Mera Ghar Mere Naam) திட்டம்**
  - ✓ பஞ்சாப் முதலமைச்சர் சரண்ஜித் சிங் சன்னி, ‘என் வீடு என் பெயர்’ திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
  - ✓ பஞ்சாப் முதலமைச்சர் சரண்ஜித் சிங் சன்னி அக்டோபர் 11 2021 அன்று, கிராமங்கள் மற்றும் நகரங்களின் ‘லால் லகிர்’ பகுதிக்குள் உள்ள வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு தனி உரிமைகளை வழங்கும் நோக்கத்தில் ‘என் வீடு என் பெயர்’ என்ற திட்டத்தை அறிவித்தார்.

- **ராணி சென்னம்மா ஜெயந்தி**
  - ✓ கர்நாடகா அரசு, அக்டோபர் 23 அன்று ‘கிட்டூர் ராணி சென்னம்மா ஜெயந்தி’யைக் கொண்டாடியது.
  - ✓ கிட்டூர் சென்னம்மா அக்டோபர் 23, 1778 அன்று பிறந்தார்.
  - ✓ அவர் லிங்காயத் சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தார்.
  - ✓ அவர் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக 1824ஆம் ஆண்டு ஒரு புரட்சிகர படையை முன்னின்று நடத்தினார்.

- **தேசத்திற்கு வழிகாட்டி (DeshKe Mentor) திட்டம்**
  - ✓ டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், ‘தேசத்திற்கு வழிகாட்டி’ என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இதன்மூலம் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு

வரை பயிலும் சுமார் 9 இலட்சம் மாணவர்கள் தங்களுக்கான வேலைகளைத் தேட முடியும்.

- **சத்தீஸ்கரில் இந்தியாவின் புதிய புலிகள் காப்பகம்**
  - ✓ குரு காசிதாஸ் தேசிய பூங்கா மற்றும் தாமோர் பிங்லா வனவிலங்கு சரணாலயத்தின் ஒருங்கிணைந்த பகுதிகளை புலிகள் காப்பகமாக அறிவிக்கும் சத்தீஸ்கர் அரசின் திட்டத்திற்கு தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

- **மின்சார வாகனங்களுக்கு முழு வரி விலக்கு – ஒடிசா**
  - ✓ ஒடிசா அரசு, மாநிலத்தில் மின்சார வாகனங்களுக்கான மோட்டார் வாகன வரிகள் மற்றும் பதிவுக் கட்டணங்களுக்கு முழு விலக்கு அளிப்பதாக அறிவித்துள்ளது.
  - ✓ மின்சார வாகனங்களை வேகமாக ஏற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஒடிசா மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின்கீழ் இந்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது 2025 வரை பொருந்தும்.
  - ✓ பேட்டரியில் இயங்கும் வாகனங்களுக்கு மோட்டார் வாகன வரி மற்றும் பதிவுக் கட்டணத்தில் 100 விழுக்காடு விலக்கு அளிப்பதாக அரசு அறிவித்துள்ளது.

- **தோற்றுவிக்கப்பட்ட நாள்**
  - ✓ கேரள மாநிலம், அது தோற்றுவிக்கப்பட்ட 65வது நாளை நவம்பர் 1 அன்று கொண்டாடியது.
  - ✓ கேரள மாநிலம், அது உருவான 65வது 'கேரள பிறை' நாளை நவம்பர் 1 அன்று கொண்டாடியது.
  - ✓ மலபார், கொச்சி மற்றும் திருவிதாங்கூர் மாகாணங்களை இணைத்து 1956ஆம் ஆண்டு நவம்பர் 1 அன்று கேரள மாநிலம் உருவாக்கப்பட்டது.
  - ✓ மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டம் 1956 இயற்றப்பட்டதைத் தொடர்ந்து, சென்னை மாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்டு கேரளா உருவாக்கப்பட்டது.

- **டெல்லி பஜார் போர்ட்டல் (Delhi Bazaar Portal)**
  - ✓ வர்த்தகர்கள், தொழிலதிபர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் தங்கள் தயாரிப்புகளை தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் விளம்பரப்படுத்துவதற்காக டெல்லி அரசு டெல்லி பஜார் இணையதள போர்ட்டலைத் தயாரித்து வருகிறது என்று டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் நவம்பர் 3, 2021 அன்று அறிவித்தார்.
  - ✓ டெல்லியின் வருவாய், மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product) மற்றும் பொருளாதாரத்தை பெரிய அளவில் உயர்த்துவதற்கு இந்த போர்ட்டல் உதவும்.

- **பிரம்மாண்டமான வருடாந்திர தீபோத்சவ் கொண்டாட்டங்கள்**
  - ✓ உத்தரப் பிரதேசத்தின் அயோத்தி மாவட்டத்தில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் பிரம்மாண்டமான தீபோத்சவ் கொண்டாட்டங்கள் - இந்த ஆண்டு நவம்பர் 3ஆம் தேதி 12 இலட்சம் மண் விளக்குகளை ஏற்றி தொடங்கி வைக்கப்பட்டது.
  - ✓ இவற்றில், 9 இலட்சம் விளக்குகள் சரயு நதிக்கரையில் ஏற்றப்பட்டன. மீதமுள்ள 3 இலட்சம் விளக்குகள் நகரின் கோவில்களில் ஏற்றி வைக்கப்பட்டு, புதிய கின்னஸ் உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது.

- **பழங்குடியினரின் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்காக 29 அருங்காட்சியகங்கள் திறக்கப்பட்டுள்ளன**
  - ✓ பழங்குடியினரின் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்காக மணிப்பூர் முதலமைச்சர் 29 அருங்காட்சியகங்களைத் திறந்து வைத்தார்.

- ✓ மாநிலத்தின் பத்து வெவ்வேறு மாவட்டங்களில் கட்டப்பட்ட இருபத்தி ஒன்பது பழங்குடியினர் அருங்காட்சியகங்கள் 3 நவம்பர் 2021 அன்று திறந்து வைக்கப்பட்டன.
- ✓ இம்பாலின் முதலமைச்சர் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மணிப்பூர் முதலமைச்சர் என். பிரேன் சிங், இந்த அருங்காட்சியகங்களை மெய்நிகராகத் திறந்து வைத்தார்.

## ➢ கிராமத்திற்குப் போவோம் (Go to Village) 2.0

- ✓ மணிப்பூரில் மாநில அரசு தௌபால் மாவட்டத்தில் 'கோ டு வில்லேஜ் 2.0' திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது.
- ✓ மணிப்பூரில், தௌபால் மாவட்டத்தில் 'கோ டு வில்லேஜ் 2.0' திட்டத்தை அறிமுகப்படுத்தியதன்மூலம், மாநில அரசு வீட்டு வாசலில் நிர்வாகத்தை வழங்குவதற்கும், மாநிலத்தில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்டுவருவதற்கும் அதன் முயற்சியைப் புதுப்பித்துள்ளது.
- ✓ மாநிலத்தின் ஒவ்வொரு மூலைக்கும் நிர்வாகம் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், அரசு அதிகாரிகள் கிராமம் கிராமமாகச் சென்று சேவை செய்வதைத் தொடர்வதற்காக, இந்த 'கோ டு வில்லேஜ் 2.0' திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

## ➢ *சிந்து நதி டால்பின் - அழிவின் விளிம்பில் உள்ள இனம்*

- ✓ பஞ்சாப் அரசு – ஒன்றிய அரசின் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, அழிந்து வரும் நிலையில் உள்ள சிந்துநதி டால்பின்கள் பற்றிய கணக்கெடுப்பைத் தொடங்க உள்ளது.
- ✓ சிந்துநதி டால்பின் 2019இல் பஞ்சாபின் மாநில நீர்வாழ் விலங்காக அறிவிக்கப்பட்டது.
- ✓ இவை பியாஸ் நதியில் காணப்படும் நன்னீர் வகை டால்பின்கள் ஆகும்.
- ✓ சிந்து நதி டால்பின், இயற்கை பாதகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தால் (International Union for the Conservation of Nature) அழிந்து வரும் நிலையில் உள்ள உயிரினம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## ➢ ஜெய்பீம் முதலமைச்சர் பிரதிபா விகாஸ் யோஜனா (Jai Bhim Mukhyamantri Pratibha Vikas Yojana)

- ✓ டெல்லி அரசு – ஜெய்பீம் முதலமைச்சர் பிரதிபா விகாஸ் யோஜனா திட்டத்தின்கீழ், இந்த ஆண்டு விளிம்பு நிலை சமூகங்கள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த 15,000 மாணவர்களுக்கு இலவச பயிற்சியை அளிக்க உள்ளது.
- ✓ மருத்துவராக, பொறியாளர்களாக, அரசு ஊழியர்களாக அல்லது வேறு ஏதேனும் அரசுப் பணிகளில் சேர விரும்பும் பள்ளிக் குழந்தைகளுக்கு இந்தத் திட்டம் பயனளிக்கும்.
- ✓ இந்தத் திட்டம் UPSC, CDS, வங்கித் தேர்வுகள், மருத்துவம் மற்றும் பொறியியல் நுழைவுத் தேர்வுகள் உள்ளிட்ட பல்வேறு போட்டித் தேர்வுகளை உள்ளடக்கியுள்ளது.
- ✓ இந்தத் திட்டம் 2018ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியின மாணவர்களுக்காக மட்டும் தொடங்கப்பட்டது.
- ✓ 2019ஆம் ஆண்டில், இதர பிற்படுத்தப்பட்ட மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களும் சேர்க்கப்பட்டதால், 15,000 மாணவர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

## ➢ திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நிலை (Open Defecation Free Status)

✓ கோவா – திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத அந்தஸ்தைப் பெற்ற நாட்டிலேயே முதல் மாநிலமாக மாறியுள்ளது மற்றும் ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

✓ இதை தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் சமீபத்தில் அறிவித்தார்.

✓ அசல் ODF நெறிமுறை 2016ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

## ➢ ஜனசேவகா திட்டம் (Janasevaka Scheme)

✓ இல்லத்திலேயே சேவை வழங்கும் ஜனசேவகா திட்டத்தை கர்நாடக அரசு தொடங்கி வைத்துள்ளது.

✓ கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை, குடிமக்களின் வீட்டு வாயிலில் 58 அரசு சேவைகளை வழங்கும் 'ஜனசேவகா' திட்டத்தை நவம்பர் 2021இல் தொடங்கி வைத்தார்.

✓ இத்திட்டத்தின்கீழ், சாதிச் சான்றிதழ், சொத்துக் கட்டா சான்றிதழ், முதியோர், விதவை ஓய்வூதியத் திட்டங்கள் போன்ற பல்வேறு சேவைகள் வழங்கப்படும்.

## ➢ கிட்டூர் கர்நாடகா (Kittur Karnataka)

✓ மும்பை – கர்நாடகா பகுதி 'கிட்டூர் கர்நாடகா' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

✓ முன்னதாக பம்பாய் மாகாணத்தின்கீழ் இருந்த, மும்பை – கர்நாடகா பகுதி, 1956இல் கர்நாடகாவில் ஒரு பகுதியாக மாறியது.

✓ 19ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த கித்தூர் ராணி சென்னம்மாவின் நினைவாக இப்பகுதிக்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது.

✓ ஜான்சி ராணி லட்சுமிபாய்க்கு 40 ஆண்டுகளுக்கு முன்பாகவே, கிட்டூர் ராணி சென்னம்மா ஆங்கிலேயர்களிடம் விடுதலைக்காகப் போராடினார்.

➢ ஷ்ரமிக் மித்ரா திட்டம் (**Shramik Mitra Scheme**)

✓ டெல்லி அரசு ஷ்ரமிக் மித்ரா திட்டத்தைத் தொடங்கியுள்ளது. தில்லியில் உள்ள அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்படுவதையும், அரசு திட்டங்களின் பல்னகளைப் பெறுவதையும் உறுதி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

✓ தில்லி துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியா அவர்களின் கருத்துப்படி, பல அரசுத் திட்டங்களின் பலன்களைப் பற்றிய விழிப்புணர்வை தொழிலாளர்களிடையே ஷ்ரமிக் மித்ராக்கள் மூலம் பரப்புவதற்கு இந்தத் திட்டம் உதவும்.

## ➢ மகாத்மா காந்தி கிராமப்புற ஆற்றல் மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (Mahatma Gandhi Institute of Rural Energy and Development)

✓ கர்நாடகா அரசு, 18,000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்க உள்ளது.

✓ மகாத்மா காந்தி கிராமப்புற ஆற்றல் மற்றும் மேம்பாட்டு நிறுவனம், கர்நாடகாவின் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 18,000 கிராமப்புற பெண்களுக்கு பல்வேறு அம்சங்களில் பயிற்சி அளிக்கும்.

✓ கிராமப்புறங்களில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் சூரிய சக்தி பயன்பாடு குறித்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

✓ இது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் செய்யப்படும்.

➢ **கிளாஸ்கோவில் COP26**

- ✓ கிளாஸ்கோவில் நடைபெற்ற கோப்26 இல் மகாராஷ்டிரா மாநிலம் சிறந்த தலைமைத்துவ விருதைப் பெற்றுள்ளது.
- ✓ 7 நவம்பர்21 அன்று கிளாஸ்கோவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டின் (கோப் 26) உச்சி மாநாட்டுடன் இணைந்த யு2சி (U2C) பொதுச் சபையில், மகாராஷ்டிரா ஊக்கமளிக்கும் பிராந்திய தலைமைத்துவ விருதை வென்றுள்ளது.
- ✓ காலநிலை கூட்டாண்மை மற்றும் ஆக்கப்பூர்வமான காலநிலை தீர்வுகள் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் இது அதிக பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

➢ **யுனெஸ்கோ கிரியேடிவ் சிட்டீஸ் நெர்வொர்க் (UNESCO Creative Cities Network) 2021**

- ✓ ஸ்ரீநகர், யுனெஸ்கோ கிரியேட்டிவ் சிட்டீஸ் நெர்வொர்க் 2021இல் கைவினைப் பொருட்கள், நாட்டுப்புறக் கலைகள் பிரிவின்கீழ் இணைகிறது.
- ✓ ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் ஸ்ரீநகரை யுனெஸ்கோ அதன் பெருமைக்குரிய கிரியேட்டிவ் சிட்டீஸ் நெர்வொர்க் பட்டியலில் சேர்த்துள்ளது.
- ✓ யுனெஸ்கோ, தனது வளர்ச்சியின் மையத்தில் கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றலை வைப்பதற்கும், அறிவு மற்றும் நல்ல நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் தனது உறுதிப்பாட்டை அங்கீகரிக்கும் வகையில் அதன் இயக்குநர் ஜெனரல் ஆட்ரி அசோலே இந்த அறிவிப்பை வெளியிட்டார்.
- ✓ யுனெஸ்கோ கிரியேடிவ் சிட்டீஸ் நெர்வொர்க் என்பது 2004இல் தொடங்கப்பட்ட யுனெஸ்கோவின் ஒரு திட்டமாகும். இது நகர்ப்புற வளர்ச்சியில் படைப்பாற்றலை ஒரு முக்கிய காரணியாக அங்கீகரித்துள்ள நகரங்களுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக தொடங்கப்பட்டதாகும்.

➢ **திசு வளர்ப்பு அடிப்படையிலான விதை உருளைக் கிழங்கு விதிகள் (Tissue Culture-Based Seed Potato Rules)**

- ✓ திசு வளர்ப்பு அடிப்படையிலான விதை உருளைக் கிழங்கு விதிகளை அங்கீகரிக்கும் முதல் இந்திய மாநிலமாக பஞ்சாப் ஆனது.
- ✓ பஞ்சாப் முதலமைச்சர் சரன்ஜித் சிங் சன்னி தலைமையிலான பஞ்சாப் அமைச்சரவை, பஞ்சாப்பை நிலையான உருளைக் கிழங்கு விதை மையமாக மேம்படுத்துவதற்காக, 'பஞ்சாப் திசு வளர்ப்பு அடிப்படையிலான விதை உருளைக் கிழங்கு விதிகள்-2021'க்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ திசு வளர்ப்பு அடிப்படையிலான சான்றிதழ் வசதியைப் பெற்ற முதல் இந்திய மாநிலமாக பஞ்சாப் ஆனது, இது பஞ்சாபின் ஜலந்தர் - கபுர்தலா பகுதியை உருளைக் கிழங்கு ஏற்றுமதி மையமாக மேம்படுத்தும்.

➢ **பிஜு ஸ்வஸ்திய கல்யாண் யோஜனா (Biju Swasthya Kalyan Yojana)**

- ✓ ஒடிசா முதலமைச்சர் ஸ்மார்ட் சுகாதார அட்டைகள் விநியோகிக்கும் பணியைத் தொடங்கி வைத்தார்.
- ✓ ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் 8 நவம்பர் 2021 அன்று கலாஹண்டி மற்றும் நுவாபடா மாவட்டத்தில் பஜுஸ்வஸ்த்ய கல்யாண் யோஜனா திட்டத்தின்கீழ் ஸ்மார்ட் சுகாதார அட்டைகளின் விநியோகத்தைத் தொடங்கினார்.
- ✓ இந்த முயற்சியின் காரணமாக கலாஹண்டி மாவட்டத்தில் 14 இலட்சம் பேரும், நுவபாடா மாவட்டத்தில் 1.73 இலட்சம் பேரும் பயனடைவார்கள்.
- ✓ பிஜு ஸ்வஸ்திய கல்யாண் யோஜனா என்பது 2018இல் தொடங்கப்பட்ட அனைவருக்குமான சுகாதாரத் திட்டமாகும்.

- **ஸ்ரீநகர் விமான நிலையம் 'முக்கிய விமான நிலையமாக' அறிவிக்கப்பட்டது.**
  - சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் நவம்பர் 6, 2021 அன்று 'ஸ்ரீநகர் சர்வதேச விமான நிலையத்தை' 'முக்கிய விமான நிலையமாக' அறிவித்தது.
  - இந்திய விமான நிலைய பொருளாதார ஒழுங்குமுறை ஆணையச் சட்டம், 2008ன் பிரிவு 2ன் துணைப் பிரிவு (i)இல் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்த விமான நிலையம் முக்கிய விமான நிலையமாக அறிவிக்கப்பட்டது.

- **ரக்ஷக் (Rakshak)**
  - **முதல் ரெஸ்பாண்டர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒடிசா அரசு சாலைப் பாதுகாப்பு முயற்சியான 'ரக்ஷக்' ஐத் தொடங்கியுள்ளது.**
  - **ஒடிசா அரசு, நவம்பர் 10, 2021 அன்று ரக்ஷக் என்று அழைக்கப்படும் இந்த வகையில் முதலாவதான சாலைப் பாதுகாப்பு முயற்சியைத் தொடங்கியது.**
  - **ரக்ஷக் திட்டத்தின்கீழ், விபத்து ஏற்படும் இடங்களுக்கு அருகில் உள்ள 30,000 தன்னார்வலர்கள் சாலை விபத்துகளில் முதலில் உதவுபவர்களாக பயிற்சி அளிக்கப்படுவார்கள்.**
  - **இந்த 30,000 முதல் ரெஸ்பாண்டர்கள் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி மற்றும் மருத்துவமனைக்கு முந்தைய அவசர சிகிச்சை வழங்குவதற்கு ஏதுவாக இருப்பார்கள்.**

- **கர்நாடகா டிஜிட்டல் பொருளாதார இயக்கம் (Karnataka Digital Economy Mission)**
  - **ஐபிஎம் நிறுவனம் மைசூருவில் வாடிக்கையாளர் பெயரிடும் மையத்தைத் தொடங்கியுள்ளது.**

- **நிரமய் குஜராத் யோஜனா (Niramay Gujarat Yojana)**
  - குஜராத் முதலமைச்சர் பூபேந்திர படேல் 12 நவம்பர் 2021 அன்று, 30 வயதுக்கு மேற்பட்டவர்களைத் தொற்று அல்லாத நோய்கள் இருக்கின்றனவா என்று பரிசோதித்து அவர்களைப் பாதுகாப்பதற்காக 'நிரமய் குஜராத் யோஜனா' திட்டத்தைத் தொடங்கினார்.
  - இந்தத் திட்டமானது மாநிலத்தில் உள்ள 3 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு பயனளிக்கும்.
  - தொற்றா நோய்களில் உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, பக்கவாதம், புற்றுநோய், சிறுநீரக நோய்கள். இரத்த சோகை, நீரிழிவு போன்றவை அடங்கும்.

- நியூமோகாக்கல் காஞ்சுகேட் தடுப்பூசித் திட்டம் (**Pneumococcal Conjugate Vaccine Programme**)
  - நியூமோகாக்கல் காஞ்சுகேட் தடுப்பூசித் திட்டம் கர்நாடக மாநிலத்தில் நவம்பர் 12, 2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.
  - உலக நிமோனியா தினத்தை முன்னிட்டு, உலகளாவிய நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் நியூமோகாக்கல் காஞ்சுகேட் தடுப்பூசித் திட்டம் தொடங்கப்பட்டது.
  - இது குழந்தைகளிடையே நிமோனியாவால் ஏற்படும் இறப்பு மற்றும் நோயுற்ற தன்மையைக் குறைப்பது மற்றும் விழிப்புணர்வைப் பரப்பும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

- **பஞ்சாப் பள்ளிகளில் பஞ்சாபி கட்டாயம் ஆக்கப்பட்டது.**
  - பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் பஞ்சாபி மொழி கட்டாயப் பாடமாக இருக்கும் என பஞ்சாப் முதலமைச்சர் சரன்ஜித் சிங் சன்னி அறிவித்துள்ளார்.
  - 1 முதல் 10 வகுப்புகளில் இருந்து பஞ்சாபி மொழி கட்டாயமாக்கப்படும்.
  - அது தவிர, அலுவலகங்களிலும் இது கட்டாயமாக்கப்படும்.

- ✓ தாய் மொழியை வளர்க்க வேண்டும் என்பதற்காக இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## ➢ உலகின் மிகப்பெரிய சூரிய சக்தி பூங்கா

- ✓ ராஜஸ்தானில் அமைந்துள்ள பட்லா சோலார் பூங்கா, உலகின் மிகப்பெரிய சூரிய சக்தி பூங்காவாகும்.
- ✓ இந்த சூரிய சக்தி பூங்கா, ராஜஸ்தானில் வறண்ட மற்றும் மணல் நிறைந்த பகுதியான பட்லாவில் அமைந்துள்ளது.
- ✓ இது 14,000 ஏக்கர் பரப்பளவில் பரவியுள்ளது.
- ✓ இந்தப் பூங்காவில் 10 மில்லியன் சூரிய சக்தி தகடுகள் உள்ளன. இந்த சூரிய சக்தி தகடுகள் 2245 மெகாவாட் செயல்பாட்டுத் திறனுக்கு பங்களிக்கின்றன.

➢ பகவான் பிர்சா முண்டா அருங்காட்சியகம்

- ✓ பிரதமர் நரேந்திர மோடி, ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் உள்ள பகவான் பிர்சா முண்டா அருங்காட்சியகத்தை மெய்நிகராகத் திறந்து வைத்தார்.
- ✓ நவம்பர் 15 அன்று பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரர் பிர்சா முண்டாவின் பிறந்த நாளை நினைவுகூறும் வகையில் இந்தத் திறப்பு விழா நடத்தப்பட்டது.

## ➢ கைசர்-இ-ஹிந்த (Kaiser-i-Hind): அருணாச்சலப் பிரதேச மாநில பட்டாம்பூச்சி

- ✓ முதலமைச்சர் பெமா காண்டு தலைமையிலான அருணாச்சலப் பிரதேச மாநில அமைச்சரவை, நவம்பர் 13, 2021 அன்று 'கைசர்-இ-ஹிந்த்' ஐ மாநில பட்டாம்பூச்சியாக அங்கீகரித்தது.
- ✓ கைசர்-இ-ஹிந்த் என்பது ஒரு பெரிய மற்றும் பிரகாசமான வண்ணத்துடன்கூடிய வண்ணத்துப்பூச்சி ஆகும்.
- ✓ இது ஒரு மழுப்பலான ஸ்வாலோடெயில் பட்டாம்பூச்சி ஆகும், அதன் பெயரில் 'இந்தியா' என்று உள்ளது.
- ✓ இது சீனாவில் காணப்படுகிறது, இப்போது இது அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் வண்ணத்துப்பூச்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## ➢ பூர்வாஞ்சல் விரைவுச்சாலை

- ✓ உத்தரப்பிரதேச மாநிலம் சுல்தான்பூர் மாவட்டத்தில் 341 கிமீ நீளம் கொண்ட பூர்வாஞ்சல் விரைவு ரயில் பாதையை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.
- ✓ ரூ.22,500 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள இந்த அதிவேக நெடுஞ்சாலையானது, மாநிலத் தலைநகரான லக்னோவை காஜிபூருடன் இணைக்கிறது.
- ✓ இந்திய விமானப் படையின் போர் விமானங்கள் அவசர காலங்களில் தரையிறங்குவதற்கும் புறப்படுவதற்கும் உதவும் வகையில் 3.2 கிமீ நீளமுள்ள வான்வழிப் பாதை இந்த விரைவுச் சாலையின் முக்கிய அம்சமாகும்.

## ➢ பக்கே புலிகள் காப்பகம் 2047 – காலநிலை மாற்றம் குறித்த பிரகடனம்

- ✓ அருணாச்சலப் பிரதேச அமைச்சரவை, பருவநிலை மாற்றம் குறித்த பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
- ✓ முதல்வர் பெமா காண்டு தலைமையிலான மாநில அமைச்சரவை, பருவநிலை மாற்றத்தை எதிர்க்கும் மற்றும் பதில்வினையாற்றக்கூடிய அருணாசலப் பிரதேசம் குறித்த பக்கே புலிகள் காப்பகம் 2047 பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது. இந்தப் பிரகடனம் உமிழ்வைக் குறைப்பது மற்றும் நிலையான வளர்ச்சியை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ தெலுங்கானாவில் உள்ள போச்சம்பள்ளி

- ✓ தெலுங்கானாவில் உள்ள போச்சம்பள்ளி கிராமம் ஐநா உலக சுற்றுலா அமைப்பினால் (UN World Tourism Organisation) சிறந்த சுற்றுலா கிராமங்களில் ஒன்றாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- ✓ 2 டிசம்பர் 2021 அன்று ஸ்பெயினின் மாட்ரிட்டில் நடைபெறும் ஐநா உலக சுற்றுலா அமைப்பு பொதுச் சபையின் 24வது அமர்வின்போது இந்த விருது வழங்கப்படும்.
- ✓ போச்சம்பள்ளி பெரும்பாலும், இந்தியாவின் பட்டு நகரம் என்று குறிப்பிடப்படுகிறது.

## ➢ உலக உணவுத் திட்டம் (World Food Programme)

- ✓ மாநிலத்தில் பொது விநியோக முறையை சீரமைக்கவும் வலுப்படுத்தவும் மேகாலயா அரசு, ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ✓ இந்தக் கூட்டாண்மையானது உலக உணவுத் திட்ட அதிகாரிகள் மற்றும் மாநில அரசு ஆகியவை இணைந்து நிலையான வளர்ச்சி இலக்கு இரண்டை – பூஜ்ஜிய பசியை அடைவதற்கு உதவி செய்யும்.

## ➢ யமுனை ஆற்றைத் தூய்மை செய்தல்

- ✓ 2025ஆம் ஆண்டுக்குள் யமுனை நதியை முழுமையாக தூய்மைப் படுத்துவோம் என்று டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் உறுதியளித்துள்ளார்.
- ✓ இந்தப் புனித நதியை சுத்தம் செய்வதற்கு அவர் ஆறு அம்ச செயல் திட்டத்தை அறிவித்தார்.
- ✓ 2025ஆம் ஆண்டுக்குள் யமுனை நதியை குடிப்பதற்கும் குளிப்பதற்கும் ஏற்றதாக மாற்றுவதாகவும் அவர் உறுதியளித்தார்.

➢ பள்ளி மாற்றல் திட்டம்

- ✓ நவம்பர் 16, 2021 அன்று, ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக், மாநிலத்தின் கல்வி சீர்திருத்த முயற்சியின் ஒரு பகுதியாக 130 புதுப்பிக்கப்பட்ட பள்ளிகளைத் திறந்து வைத்தார்.
- ✓ கல்விச் சாதனையை அடைவதற்காக மாணவர்களிடையே போட்டி மனப்பான்மையை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு பள்ளி மாற்றத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

## ➢ மிகச் சிறப்பாக செயல்படும் கடல் மாவட்டம்

- ✓ பாலசோர் மாவட்டம், இந்தியாவில் 'சிறந்த செயல்திறன் கொண்ட கடல் மாவட்டம்' என்ற விருதைப் பெற்றுள்ளது.
- ✓ முதன்முறையாக ஒடிசா மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டத்துக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- ✓ சிறந்த கடல்சார் மாநிலமாக ஆந்திராவும், சிறந்த உள்நாட்டு மாநிலத்திற்கான விருதை தெலுங்கானாவும் பெற்றன.

## ➢ ராணி கைடின்லியு பழங்குடியின சுதந்திரப் போராளிகள் அருங்காட்சியகம்

- ✓ மணிப்பூரில் உள்ள ராணி கைடின்லியு பழங்குடியின சுதந்திரப் போராளிகளின் அருங்காட்சியகத்திற்கு உள்துறை அமைச்சர் அடிக்கல் நாட்ட உள்ளார்.
- ✓ ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, நவம்பர் 22, 2021 அன்று மணிப்பூரில் உள்ள தமெங்லாங் மாவட்டத்தின் லுவாங்காவ் கிராமத்தில் ராணி கைடின்லியு பழங்குடியின சுதந்திரப் போராளிகள் அருங்காட்சியகத்திற்கு காணொலி காட்சி மூலம் அடிக்கல் நாட்ட உள்ளார்.

## ➢ சால்ட் (SALT) திட்டம்

- ✓ ஆந்திரப் பிரதேச அரசு, ஒன்றிய அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை 'ஆந்திராவின் கற்றல் மாற்றம் திட்டத்திற்கு ஆதரவளிக்கும்' (Supporting Andhra's Learning Transformation) 250 மில்லியன் டாலர் கடனுக்கான சட்ட ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.
- ✓ சால்ட் திட்டமானது ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் 50 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்களின் கற்றல் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ முதலமைச்சர் தீர்த்த யாத்திரை திட்டம் (Mukhyamantri Tirth Yatra Yojana)

- ✓ டில்லி மாநில அரசு – பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள கர்தார்பூர் சாஹிப் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள வேளாங்கண்ணி தேவாலயம் ஆகியவற்றை 'முதலமைச்சரின் தீர்த்த யாத்திரை திட்டம்' என்ற அதன் புனித யாத்திரை திட்டத்தில் சேர்க்க முடிவு செய்துள்ளது.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு டில்லி அரசு இலவச யாத்திரைக்கான பயணப் பொதிகளை வழங்கும்.

## ➢ இந்தியாவின் முதல் சைபர் தாலுக்கா

- ✓ மத்தியப் பிரதேச மாநிலத்தில் சைபர் தாலுக்காக்களை உருவாக்கும் திட்டத்திற்கு மத்தியப் பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ இதற்குப் பிறகு, சைபர் தாலுக்காவைக் கொண்ட நாட்டிலேயே முதல் மாநிலமாக மத்தியப் பிரதேசம் விளங்கப் போகிறது.
- ✓ சைபர் தாலுக்கா என்பது பிறழ்வு செயல்முறையை எளிதாக்கும் மற்றும் மாநிலத்தில் எந்த மூலையிலிருந்தும் மக்கள் அதன் பலனைப் பெறலாம். இதன்மூலம், சர்ச்சைக்குரிய நிலம் தொடர்பான வழக்குகளில் மாற்றம் செய்யும் செயல்முறை எளிதாக இருக்கும்.

## ➢ *ஸ்ட்ரீட் திட்டம் (STREET Project)*

- ✓ ***கேரள சுற்றுலா – பார்வையாளர் அனுபவத்தை வளப்படுத்துவதற்காகவும், மாநிலத்தின் உள் பகுதிகளுக்கு சுற்றுலாவை ஆழமாக எடுத்துச் செல்லவும் ஏதுவாக ஏழு மாவட்டங்களில் 'ஸ்ட்டிரீட் திட்டத்தைத்' தொடங்கி வைக்க உள்ளது.***
- ✓ *ஸ்ட்ரீட் (*The STREET) என்பது "Sustainable, Tangible, Responsible, Experiential, Ethnic, Tourism" hubs-க்கான சுருக்கம ் ஆகும்.
- ✓ இந்தத் திட்டம் பொறுப்பான சுற்றுலா இயக்கத்தால் உருவாக்கப்பட்டது மற்றும் ஐக்கிய நாடுகளின் 'உள்ளடக்கிய வளர்ச்சிக்கான சுற்றுலா' முழக்கத்தால் ஈர்க்கப்பட்டுள்ளது.
- ✓

## ➢ ஜவாத் புயல்

- ✓ ஜவாத் புயல் - இந்திய வானிலை ஆய்வு மையத்தின் ஏறக்குறைய 130 ஆண்டு கால பதிவு செய்யப்பட்ட வரலாற்றின் அடிப்படையில், டிசம்பர் மாதத்தில் ஒடிசா கடற்கரையைத் தாக்கும் முதல் சூறாவளி இதுவாகும்.
- ✓ இந்திய வானிலை ஆய்வு மையம், சூறாவளித் தரவுகளைத் தொகுக்கத் தொடங்கிய 1891ஆம் ஆண்டு முதல் இந்தக் கடலோர மாநிலம் 100க்கும் மேற்பட்ட புயல்களால் பாதிக்கப்பட்டுள்ளது.
- ✓ வெப்பமண்டல சூறாவளிகளின் பட்டியலில் நிலையான நெறிமுறைகளின்படி, சவுதி அரேபியா வழங்கியுள்ள பெயர் 'ஜவாத்' ஆகும்.

➢ **கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்ட மாநிலம்**

✓ இமாச்சலப் பிரதேசம் அதன் வயது வந்தோரில் 100 விழுக்காட்டினருக்கு முழுமையாக தடுப்பூசி போட்ட முதல் மாநிலமாக மாறியுள்ளது.

✓ 100 விழுக்காடு முதல் டோஸை எட்டிய முதல் மாநிலமும் இமாச்சலப் பிரதேசம் ஆகும்.

➢ **ஜெனரல் பிபின் ராவத்**

✓ உத்தராகண்ட் சட்டசபை – தேவ்பிரயாகில் கட்டப்பட்டு வரும் சமஸ்கிருத பல்கலைக் கழகத்திற்கு முப்படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத்தின் பெயரைச் சூட்டுவதற்கான முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ கடந்த டிசம்பர் 8ஆம் தேதி குன்னூர் அருகே நிகழ்ந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த முப்படைகளின் தலைமைத் தளபதி மறைந்த ஜெனரல் பிபின் ராவத் அவர்களுக்கு மாநில சட்ட மன்றப் பேரவையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

➢ **ஜம்மு காஷ்மீரில் அட்டல் டிங்கரிங் ஆய்வகங்கள்**

✓ நித்தி ஆயோக் அமைப்பு, ஜம்மு காஷ்மீரில் 1,000 அட்டல் டிங்கரிங் ஆய்வகங்களை நிறுவும், அவற்றில் 187 இந்த நிதியாண்டின் (2022) இறுதிக்குள் நிறுவப்படும்.

✓ குழந்தைகளுக்கு அறிவியல் நிகழ்வுகள் பற்றிய அவர்களின் புரிதலை பரிசோதனை செய்து விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த ஆய்வகங்கள் அமைக்கப்படும்.

➢ **தேசிய அனல் மின் கழகம் (National Thermal Power Corporation)**

✓ ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள சிம்ஹாத்ரியில் ஒரு முழுமையான எரிபொருள் செல் அடிப்படையிலான பசுமை ஹைட்ரஜன் மைக்ரோகிரிட் திட்டத்தை தேசிய அனல் மின் கழகம் வழங்கியுள்ளது.

✓ இது இந்தியாவின் முதல் பசுமை ஹைட்ரஜன் அடிப்படையிலான ஆற்றல் சேமிப்பு திட்டமாகவும், உலகின் மிகப்பெரிய திட்டமாகவும் இருக்கும்.

➢ **சூரிய குடை**

✓ கொச்சி நகரின் பல்வேறு இடங்களில், கடுமையான வெப்பத்தில் இருந்து போக்குவரத்துக் காவலர்களைப் பாதுகாப்பதற்காக கேரள காவல் துறை டிசம்பர் 15 அன்று 'சூரியக் குடை' திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

✓ உள்ளே பொருத்தப்பட்ட மின்விசிறியுடன் கூடிய பெரிய குடையானது, மேலே பொருத்தப்பட்ட சூரிய தகட்டிலிருந்து உருவாக்கப்படும் சக்தியைக் கொண்டு செயல்படும்.

➢ **பாலின நடுநிலை சீருடை**

✓ டிசம்பர் 15 அன்று, கேரளாவின் கோழிக் கோட்டில் உள்ள பாலுச்சேரி அரசு பெண்கள் மேநிலைப் பள்ளியில் அதன் மாணவர்களுக்கு பாலின நடுநிலை சீருடை அமல்படுத்தப்பட்டது.

✓ முதன்முறையாக அரசுத் துறையில் உள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான பொது சீருடை அமல்படுத்தப்பட்டுள்ளது.

➢ **3 நாள் சர்வதேச தேனி திருவிழா**

✓ முதல் முறையாக, 18 டிசம்பர் 2021 அன்று உத்தராகண்ட் மாநிலம் ஹலத்வானியில், 3 நாள் சர்வதேச தேனி திருவிழா தொடங்கியுள்ளது.

 PH: 044-24339436, 42867555, 9840226187

- ✓ தேன் சேகரிப்பவர்கள் தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்துவதற்கு உலகளாவிய தளத்தை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

**➢ மத மாற்றத் தடை மசோதா**

- ✓ டிசம்பர் 20 அன்று, கர்நாடக அமைச்சரவை – எந்த மாற்றமும் இல்லாமல் மதமாற்றத் தடை மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தது.
- ✓ ஆசை காட்டுதல் அல்லது பலாத்காரம் மூலம் மத மாற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு சிறைத் தண்டனை மற்றும் மிகப்பெரிய அபராதம் உள்ளிட்ட கடுமையான தண்டனைகளை வழங்க இந்த மசோதா முயல்கிறது.

**➢ சாதிச் சான்றிதழ்கள்**

- ✓ ஜார்கண்ட் - அடுத்த ஆறு மாதங்களுக்குள் ஒவ்வொரு குழந்தைக்கும் சாதிச் சான்றிதழ்கள் இருப்பதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு அரசு மற்றும் தனியார் பள்ளி வளாகத்திலிருந்தும் சாதிச் சான்றிதழ் வழங்கும் முதல் மாநிலமாக மாற உள்ளது.
- ✓ இதை அம்மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன் கடந்த டிசம்பர் 21ஆம் தேதி சட்ட சபையில் அறிவித்தார்.

**➢ வன்முறை மற்றும் கும்பல் கொலைகளைத் தடுக்கும் மசோதா 2021**

- ✓ டிசம்பர் 21 அன்று, ஜார்கண்ட் - மேற்கு வங்காளம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களுக்கு அடுத்தபடியாக, கும்பல் படுகொலைகளைத் தடுக்கும் மசோதாவை நிறைவேற்றிய மூன்றாவது மாநிலமாக மாறியுள்ளது.
- ✓ நடப்பு குளிர்காலக் கூட்டத் தொடரின் இறுதி நாளில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜார்கண்ட் (வன்முறை மற்றும் கும்பல் கொலைகளைத் தடுத்தல்) 2021 மசோதாவை மாநில சட்ட மன்றம் நிறைவேற்றியது.

**➢ காவல்துறையில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு இட ஒதுக்கீடு**

- ✓ கர்நாடக அரசு, காவல் துறையில் அனைத்து நிலைகளிலும் உள்ள பதவிகளில் 1 விழுக்காடு இட ஒதுக்கீட்டை மூன்றாம் பாலினத்தவர்களுக்கு வழங்க முடிவு செய்துள்ளது.

**➢ தடுப்பூசி சான்றிதழ்**

- ✓ டிசம்பர் 22 அன்று பஞ்சாப் அரசு – மாநில அரசு ஊழியர்கள் தாங்கள் தடுப்பூசி போட்டுக் கொண்டமைக்கான சான்றிதழைக் கொடுக்காவிட்டால் தங்கள் ஊதியத்தைப் பெற இயலாது என்று அறிவித்துள்ளது.
- ✓ ஒரு டோஸ் அல்லது முழுமையாக தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் தங்கள் சம்பளத்தைப் பெறுவதற்காக மாநில அரசின் ஒருங்கிணைந்த மனித வள மேலாண்மை அமைப்பு (Integrated Human Resource Management System) இணைய தளத்தில் தங்கள் சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**➢ நாசா - இஸ்ரோ செயற்கை துளை ரேடார் பணி (NASA-ISRO Synthetic Aperture Radar Mission – NISAR)**

- ✓ நாசாவும் இஸ்ரோவும் இணைந்து விண்வெளியில் இயங்கும். 'செயற்கை துளை ரேடார்' நிசாரை உருவாக்கி வருகின்றன.
- ✓ நிசார் செயற்கைக் கோள் இந்தியாவில் இருந்து ஜனவரி 29, 2023 அன்று, ஜிஎஸ்எல்வி எம்கே 2 மூலமாக சூரிய ஒத்திசைவு சுற்றுப் பாதைக்கு அனுப்பப்படும்.

- **கோவிட்-19 தடுப்பூசி கவரேஜ்**
  - ✓ டிசம்பர் 28 அன்று தெலுங்கானா – 100 விழுக்காடு முதல் டோஸ் கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்ட, நாட்டிலேயே முதல் பெரிய மாநிலம் ஆனது.
  - ✓ மாநிலத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 2.77 கோடி மக்களுக்கு முதல் டோஸ் வழங்கப்பட்டுள்ளது.

- **ஜார்க்கண்ட்**
  - ✓ ஜார்க்ண்ட் மாநிலம் இரு சக்கர வாகனங்களுக்கான பெட்ரோல் விலையில் பெரிய அளவில் விலை குறைப்பு செய்துள்ளது.
  - ✓ மாநிலத்தில் உள்ள தனது அரசாங்கம், இரு சக்கர வாகனங்களுக்கான பெட்ரோல், டீசல் விலையில் லிட்டருக்கு 25 ரூபாயை குறைத்திருப்பதாக ஜார்கண்ட் மாநில முதலமைச்சர் டிசம்பர் 29, 2021 அன்று அறிவித்தார்.

- நாகாலாந்தில் **AFSPA சட்டம் நீட்டிப்பு**
  - ✓ டிசம்பர் 30, 2021 அன்று ஒன்றிய அரசு AFSPA சட்டத்தின்கீழ், முழு நாகாலாந்தையும் மேலும் ஆறு மாதங்களுக்கு 'தொந்தரவு நிறைந்த பகுதி' என்று அறிவித்தது.
  - ✓ இந்த அறிவிப்பாணை டிசம்பர் 30, 2021 முதல் அமலுக்கு வரும்.

- **வீராங்கனை ராணி லக்ஷ்மிபாய் இரயில் நிலையம்**
  - ✓ உத்தரப் பிரதேசத்தின் ஜான்சி இரயில் நிலையம் இனிமேல், 'வீராங்கனை இலட்சுமிபாய் இரயில் நிலையம்' என்று அழைக்கப்படும்.
    ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் கிளர்ச்சியில் ஈடுபட்ட மிகவும் பிரபலமான தலைவர்களில் லட்சுமிபாயும் ஒருவர்.

## ஜனவரி- பிப்ரவரி- மார்ச் 2022

- **கொச்சி நீர் மெட்ரோ திட்டம்**
  - ✓ முதலாவது நீர் மெட்ரோ படகு திட்டம், கொச்சி மேட்ரோ ரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.
  - ✓ 747 கோடி கொச்சி நீர் மெட்ரோ திட்டத்தின், முழுவதும் குளிரூட்டப்பட்ட, பேட்டரி மூலம் இயங்கும் 23 மின்சார படகுகளில் முதலாவது படகு, கொச்சி ஷிப்யார்ட் லிமிடெட் ஆல், வெள்ளிக் கிழமை காலை கொச்சி மெட்ரோ ரயில் லிட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

- **மேஜர் தியான் சந்த் விளையாட்டுப் பல்கலைக் கழகம்**
  - ✓ உத்தரப் பிரதேசத்தின் மீரட்டில் மேஜர் தியான் சந்த் விளையாட்டு பல்கலைக் கழகத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். இது உத்தரப் பிரதேசத்தின் முதல் விளையாட்டுப் பல்கலைக் கழகமாகவும் இருக்கும்.

- **நல் ஆளுகைக் குறியீடு (Good Governance Index)**
  - ✓ மாவட்ட அளவில் நல் ஆளுகைக் குறியீட்டைக் கொண்ட நாட்டின் முதலாவது யூனியன் பிரதேசமாக ஜம்மு காஷ்மீர் விரைவில் மாற உள்ளது.
  - ✓ மாவட்ட அளவில் உள்ள நல் ஆளுகைக் குறியீடு, ஜம்மு காஷ்மீரின் 20 மாவட்டங்கள் ஒவ்வொன்றும், நாட்டின் சிறந்த நிர்வாகத்தில் உள்ள மாவட்டங்களின் நிலைக்கு உயர்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கும்.

➢ **திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத மாவட்டங்கள்**

✓ டிசம்பர் 31, 2021 வரை தூய்மை இந்தியா (கிராமப்புறம்) திட்டம் கட்டம்-2 திட்டத்தின்கீழ் அதிக எண்ணிக்கையிலான திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமங்களின் பட்டியலில் தெலுங்கானா நாட்டிலேயே முதலாவது இடத்தில் உள்ளது.

✓ இதைத் தொடர்ந்து 4,432 கிராமங்களைக் கொண்ட தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

➢ **முதலாவது எல்பிஜி மூலம் இயக்கப்படும் புகை இல்லாத மாநிலம்**

✓ இந்திய மாநிலங்களிலேயே, இமாசலப் பிரதேசம் திரவ பெட்ரோலிய எரிவாயு மூலம் இயக்கப்படும் முதலாவது புகை இல்லாத மாநிலமாக ஆகியுள்ளது.

✓ இந்த வெற்றிக்குக் காரணம் ஒன்றிய அரசின் பிரதம மந்திரி உஜ்வாலா யோஜனா திட்டம் (Pradhan Mantri Ujjwala Yojana) மற்றும் இமாசலப் பிரதேச அரசின் முதலமைச்சரின் இல்லத்தரசி சுவிதா யோஜனா திட்டம் (Mukhya Mantri Grihini Suvidha Yojana) ஆகிய திட்டங்களின் செயலாக்கமே ஆகும்.

➢ **சைனிக் பள்ளிக்கு ஜெனரல் பிபின் ராவத் பெயர் வைக்கப்பட்டது**

✓ 2021 டிசம்பரில் ஹெலிகாப்டர் விபத்தில் இறந்த முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத்தின் நினைவாக, மைன்புரியில் உள்ள சைனிக் பள்ளிக்கு அவரது பெயரை வைப்பதென்று உத்தரப் பிரதேச அரசு முடிவு செய்துள்ளது.

✓ சைனிக் பள்ளி என்ற பெயரை ஜெனரல் பிபின் ராவத் சைனிக் பள்ளி என்று பெயர் மாற்றம் செய்வது என்று உத்தரப் பிரதேச முதலமைச்சர் முடிவு செய்தார்.

➢ **இந்தியாவின் முதல் காகிதமில்லாத நீதிமன்றம்**

✓ கேரள உயர்நீதி மன்றம், நாட்டின் முதல் காகிதமில்லாத நீதிமன்றமாக மாறத் தயாராக உள்ளது.

✓ உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி டிஒய் சந்திரசூட், 2022 ஜனவரி 1 அன்று ஸ்மார்ட் நீதிமன்ற அறைகளைத் திறந்து வைத்தார்.

➢ **இந்தியாவின் முதலாவது திறந்த நிலை பாறை அருங்காட்சியகம்**

✓ இந்தியாவின் முதலாவது தனித்துவமான ‘பாறை’ அருங்காட்சியகத்தை, ஐதராபாத்தில் மத்திய இணை அமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் திறந்து வைத்தார்.

✓ ஐதராபாத்தில் உள்ள இந்த திறந்த நிலை பாறை அருங்காட்சியகம், அதிகம் அறியப்படாத பல உண்மைகளைப் பற்றி மக்களுக்கு கற்பித்தல் மற்றும் அறிவூட்டுதல் என்ற நோக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

✓ பூமியின் வரலாற்றில் பாறைகளின் வயது 3.3 பில்லியன் ஆண்டுகள் முதல் 55 மில்லியன் ஆண்டுகள் வரை இருக்கும்.

➢ **இந்தியாவின் சானிட்டரி நாப்கின் இல்லாத முதல் ஊராட்சி**

✓ கேரளாவின் குளம்பலங்கி கிராம ஊராட்சி - இந்தியாவின் சானிட்டரி நாப்கின் இல்லாத முதல் ஊராட்சியாக ஆகியுள்ளது.

✓ இதை மாநில ஆளுநர் ஆரிப் முகமது கான், ஜனவரி 13 அன்று அறிவித்தார்.

✓ பிரதமரின் சன்சத் ஆதர்ஷ் கிராம் யோஜனா (Prime Minister's Sansad Adarsh Gram Yojana) திட்டத்தின்கீழ், இந்தச் சுற்றுச் சூழல் நட்பு மாற்றத்தை நோக்கி இந்த ஊராட்சி நகர்கிறது.

➢ **உணவு பாதுகாப்பு**

- ✓ ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டமும், ஒடிசா அரசும் கூட்டு சேர்ந்துள்ளன.
- ✓ பருவநிலை மாற்றத்தை எதிர்க்கும் திறனை வலுப்படுத்துவதன்மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளின் உணவுப் பாதுகாப்பை அவை மேம்படுத்தும்.

### ➢ புகையில்லா மாநிலம்

- ✓ இமாசலப் பிரதேசம் இந்தியாவின் முதல் ‘புகை இல்லாத மாநிலம்’ ஆகியது.
- ✓ உஜ்வாலா திட்டம், இமாச்சல் இல்லத்தரசி சுவிதா திட்டம் போன்ற பல நலத்திட்டங்களின் உதவியுடன் இந்த மாநிலம் இந்த சாதனையை எட்டியுள்ளது.
- ✓ மேலும், நாட்டிலேயே 100 விழுக்காடு திரவ பெட்ரோலி எரிவாயு இயக்க முதல் மாநிலமாகவும் இமாசலப் பிரதேசம் மாறியுள்ளது.

### ➢ தடுப்பூசி மைல் கல்

- ✓ ஜனவரி 23 அன்று, கர்நாடகா அரசு கோவிட்-19க்கு எதிராக தகுதியான அனைவருக்கும் 100 விழுக்காடு முதல் டோஸ் தடுப்பூசியைப் போட்டு ஒரு மைல்கல் சாதனையை நிகழ்த்தியுள்ளது.
- ✓ நான்கு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டு, நாட்டிலேயே இந்த சாதனையை நிகழ்த்திய முதல் மாநிலம் கர்நாடகா ஆகும்.
- ✓ தகுதியான அனைத்து பயனாளிகளுக்கும் குறைந்தது ஒரு டோஸ் தடுப்பூசியாவது போட்ட நாட்டின் முதல் மாநிலம் இமாச்சலப் பிரதேசம் ஆகும்.

### ➢ AVGC உயர் சிறப்பு மையம் (Center of Excellence)

- ✓ இந்தியாவின் முதல் ஏவிஜிசி உயர் சிறப்பு மையத்தை (அனிமேஷன், விஷுவல் எஃபெக்ட்ஸ், கேமிங் மற்றும் காமிக்ஸ்) கர்நாடக அரசு, கர்நாடகாவின் பெங்களூரு மகாதேவபுராவில் தொடங்கியுள்ளது.
- ✓ இதற்கு மின்னணுவியல் தகவல் தொழில்நுட்பத் துறை உயிர் தொழில்நுட்பம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நிதியுதவியை அளிக்கிறது.
- ✓ இத்தகைய ஒரு ஏவிஜிசி உயர் சிறப்பு மையத்தை நிறுவிய இந்தியாவின் முதல் மாநிலமாக கர்நாடகா ஆகியுள்ளது. இது ஆசியாவிலேயே மிகப்பெரிய மையமாகவும் உள்ளது.

### ➢ கிராபீன் கண்டுபிடிப்பு மையம் (Graphene Innovation Centre)

- ✓ நாட்டின் முதலாவது கிராபீன் கண்டுபிடிப்பு மையத்தை கேரளா மாநிலம் பெற உள்ளது.
- ✓ கேரளாவில் டிஜிட்டல் பல்கலைக் கழகம், சிஎம்இடி (CMET) திருச்சூருடன் இணைந்து கிராபீனுக்கான இந்திய கண்டுபிடிப்பு மையத்தை அமைக்க உள்ளது.
- ✓ கிராபீன் என்பது உலகில் இதுவரை கண்டறியப்பட்டவற்றில் மிகவும் மெல்லிய மற்றும் வலிமையான பொருள் ஆகும். இது நல்ல இரசாயண நிலைத்தன்மையைக் கொண்டுள்ளது.

### ➢ மூளை சுகாதார முன் முயற்சி (Brain Health Initiative)

- ✓ கர்நாடக மாநிலத்தில் நித்தி ஆயோக் உடன் இணைந்து NIMHANS (தேசிய மன நலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம்) மேற்கொண்ட ‘மூளை சுகாதார முன் முயற்சியை கர்நாடக அரசு தொடங்கி வைத்துள்ளது.
- ✓ இந்த வகையில் நாட்டிலேயே இது முதலாவது ஆகும்.
- ✓ இந்தத் திட்டத்தின்படி, மனநலம் பாதிக்கப்பட்டவர்களைப் பரிசோதித்து சிகிச்சை அளிப்பதில் மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

➢ **மகிழ்ச்சி**

✓ மத்தியப் பிரதேச அரசு – தனது உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளின் பாடத்திட்டத்தில் அடுத்த கல்வி ஆண்டு முதல் 'மகிழ்ச்சியை' ஒரு பாடமாக அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

✓ இது அறிமுகப்படுத்தப்பட்டவுடன், பள்ளிகளில் இந்தப் பாடம் அறிமுகப்படுத்தப்படும் நாட்டிலேயே முதல் மாநிலமாக இந்த மாநிலம் இருக்கப் போகிறது.

➢ **தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு (National Single Window System)**

✓ ஜம்மு காஷ்மீர் - தேசிய ஒற்றைச் சாரள அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட முதல் யூனியன் பிரதேசம் ஆனது.

✓ இந்திய அரசின் 2020ஆம் ஆண்டின் பட்ஜெட் அறிவிப்புத் திட்டமாகிய தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு, திட்டங்களுக்கான அரசு அனுமதிகளைப் பெற முதலீட்டாளர்களுக்கு ஆதரவை வழங்கும் டிஜிட்டல் தளமாகும்.

➢ **இந்தியாவின் முதல் புல்லட் ரயில் நிலையம்**

✓ சூரத்தில் உள்ள இந்தியாவின் முதல் புல்லட் ரயில் நிலையத்தின் முதல் காட்சிகள் இறுதியாக வெளியாகியுள்ளன. பிப்ரவரி 10 அன்று ரயில்வே அமைச்சகம், மும்பை – அகமதாபாத் இடையே கட்டப்படவுள்ள சூரத்தின் புல்லட் ரயில் நிலையத்தின் வரைபட மாதிரியை பகிர்ந்து கொண்டுள்ளது.

✓ தேசிய அதிவேக ரயில் கார்ப்பரேஷன் லிட், இந்தத் திட்டத்தை நிர்மாணிக்கும். இதை டிசம்பர் 2024க்குள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

➢ **மேடாரம் ஜாதரா (Medaram Jatara)**

நாட்டிலேயே மிகப்பெரிய பழங்குடியினரின் வரலாற்றுச் சிறப்பு மிக்க சங்கமமாகிய மேடாரம் ஜாதரா – தெலுங்கானாவில் பிப்ரவரி 16ஆம் தேதி தொடங்குகிறது. கும்பமேளாவுக்குப் பிறகு இந்தியாவில் நடைபெறும் இரண்டாவது பெரிய திருவிழாவாக மேடாரம் ஜதாரா விளங்குகிறது.
தெலுங்கானாவின் இரண்டாவது பெரிய பழங்குடி சமூகமான கோயா பழங்குடியினரால் இது கொண்டாடப்படுகிறது. கோயா பழங்குடியினர் தெலுங்கானாவின் மிகப்பெரிய ஆதிவாசி பழங்குடியினர் ஆவர்.

➢ **ஸ்மார்ட் கார்டு ஆயுத உரிமம் (Smart Card Arms License)**

✓ 'ஸ்மார்ட் கார்டு ஆயுத உரிமத்தை' முதன்முதலில் அறிமுகப்படுத்தியது டெல்லி காவல் துறை ஆகும்.

✓ டெல்லியின் குடிமக்களுக்கு தொழில்நுட்பத்திற்கு ஏற்ற டிஜிட்டல் சேவைகளை வழங்குவதற்காக, 'ஸ்மார்ட் கார்டு ஆயுத உரிமத்தை' அறிமுகப்படுத்திய நாட்டின் முதலாவது காவல் படை என்ற பெருமையை டெல்லி காவல்துறை பெற்றுள்ளது.

➢ **ஆசியாவின் மிகப்பெரிய பயோ – சிஎன்ஜி ஆலை**

✓ 19 பிப்ரவரி 2022 அன்று மத்தியப் பிரதேசத்தில் உள்ள இந்தூரில் ஆசியாவின் மிகப்பெரிய பயோ-சிஎன்ஜி ஆலையை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்.

✓ இந்த பயோ சிஎன்ஜி ஆலை 100 விழுக்காடு ஈரக் கழிவுகளில் இருந்து இயக்கப்படும். இந்த ஆலை அரசு தனியார் பங்களிப்பு (PPP mode) முறையில் கட்டப்பட்டுள்ளது. பயோ-சிஎன்ஜி ஆலையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் எரிவாயு மூலம் தினமும் 400 பேருந்துகளை இயக்க முடியும்.

## ➢ ஷாஹித் திவாஸ் (Shahid Diwas)

- ✓ பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் - பிப்ரவரி 15 இனிமேல் மாநிலத்தில் 'ஷாஹித் திவாஸ்' என்று நினைவுகூறப்படும் என்று கூறினார்.
- ✓ பிப்ரவரி 15, 1932 அன்று பீகாரின் முங்கர் மாவட்டத்தில் உள்ள தாராபூர் நகரில் காவல்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 34 சுதந்திரப் போராட்ட வீரர்களின் நினைவாக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ✓ 1919ஆம் ஆண்டு அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக்கில் நடைபெற்ற படுகொலைக்குப் பிறகு பிரிட்டிஷ் காவல்துறை நடத்திய மிகப்பெரிய படுகொலை தாராபூர் படுகொலையாகும்.

## ➢ இந்தியாவின் முதல் இரவு வழிசெலுத்துதல் கைபேசி செயலி – நதிகளில்

- ✓ அசாம் மாநிலத்தின் கவுகாத்தியில் உள்ள பிரம்மபுத்திரா நதியில் படகு சேவைகளுக்கான இந்தியாவின் முதலாவது இரவு வழி செலுத்துதல் கைபேசி செயலியை அசாம் முதலமைச்சர் ஹிமந்த பிஸ்வ சர்மா அறிமுகப்படுத்தினார்.
- ✓ இரவு வழிசெலுத்துதல் கைபேசி செயலியானது ஐஐடி சென்னையின் முதன்மை விஞ்ஞானி கே. ராஜுவுடன் இணைந்து போக்குவரத்துத் துறையால் உருவாக்கப்பட்டது. இது நதிகளின் வரைவுகளை ஆய்வு செய்யும்.
- ✓ கௌஹாத்தி மற்றும் வடக்கு கௌஹாத்திக்கு இடையேயான உள்நாட்டு நீர்வழிப் படகுப் போக்குவரத்தின் (Inland Water Transport) முதல் இரவுப் பயணம் 19 பிப்ரவரி 2022 அன்று தொடங்கப்பட்டது.

## ➢ தனிநபர் நிகர வருவாயில் சிறந்த மாநிலம் 2022 (Per Capita Net State 2022)

- ✓ 2022ஆம் ஆண்டில் தனிநபர் நிகர வருவாயில் தெலுங்கானா மாநிலம் மிகச் சிறந்த மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- ✓ தெலுங்கானா மாநிலம், ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள, தற்போதைய விலையில் தனிநபர் நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையில் ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டு, இந்தியாவின் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது.

## ➢ தேசிய குடும்ப நல ஆய்வு (National Family Health Survey) -5

- ✓ ஒடிசா – தேசிய குடும்பநலஆய்வு -5ன்படி, தடுப்பூசி செலுத்துதல் அடிப்படையில் 90.5 விழுக்காட்டை நிறைவு செய்து, தேசிய அளவில் முதலிடத்தில் உள்ளது.
- ✓ இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு முழு நோய்த்தடுப்பு கவரேஜை வழங்குவதற்காக மார்ச் 7 அன்று இந்த மாநிலம் தீவிரப்படுத்தப்பட்ட இந்திரா தனுஷ் 4.0 பணியை அறிமுகப்படுத்தியுள்ளது.

## ➢ 100 விழுக்காடு பெண்களுக்குச் சொந்தமான தொழில் பூங்கா

- ✓ இந்தியாவின் முதல் 100 விழுக்காடு பெண்களுக்குச் சொந்தமான தொழில்துறை பூங்கா- சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8 அன்று ஐதராபாத்தில் செயல்படத் தொடங்கியது.
- ✓ ரூ.250 கோடி முதலீட்டில் 50 ஏக்கரில் நாட்டிலேயே முதன்முறையாக எப்எல்ஓ தொழில்துறை பூங்கா நிறுவப்பட்டது.
- ✓ மாநில அரசுடன் இணைந்து எப்ஐசிசிஐ மகளிர் அமைப்பு மூலம் ஊக்குவிக்கப்பட்ட இந்த பூங்காவில் 25 அலகுகள் உள்ளன. இவை 16 பல்வேறு பசுமை வகை தொழில்களை பிரதிநிதித்துவப்படுத்துவபையாக உள்ளன. இவை அனைத்தும் பெண்களுக்குச் சொந்தமானவை. அவர்களால் இயக்கப்படுபவை ஆகும்.

➢ **இந்திராயணி மருத்துவ நகரம் (Indrayani Medicity)**

✓ அனைத்து வகையான சிறப்பு சிகிச்சைகளையும் ஒரே கூரையின்கீழ் வழங்குவதற்காக, நாட்டின் முதல் மருத்துவ நகரமான 'இந்திராயணி மருத்துவ நகரத்தை' புனேயில் அமைப்பதாக மகாராஷ்டிர மாநில அரசு அறிவித்துள்ளது. இது புனேயின் கேட் தாலுகாவில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட உள்ளது.

✓ இந்தத் திட்டம் ரூ.10,000 கோடி மதிப்பிலான முதலீட்டை ஈர்க்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

➢ **அக்வேரியம் (AQVERIUM)**

✓ கர்நாடகாவின் பெங்களூருவில் 'அக்வேரியம்' என்ற இந்தியாவின் முதல் டிஜிட்டல் நீர் தரவு வங்கியை கர்நாடகாவின் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் என். அஸ்வத் நாராயணன் திறந்து வைத்தார்.

✓ இந்த டிஜிட்டல் நீர் தரவு வங்கியானது, ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகளில் இருந்து நுண்ணறிவு மற்றும் ஆதாரங்களை வழங்குகிறது. இதன்மூலம் நீர் மாசுபாட்டைச் சமாளிப்பதற்கான அடிப்படை நம்பகமான தகவலைப் பெற முடிகிறது.

➢ **உடான் (Udaan)**

✓ ராஜஸ்தானின் கிராமப்புறங்களில் பெண்களுக்கு சிறந்த எதிர்காலத்திற்கான சிறகுகளை 'உடான்' வழங்குகிறது.

✓ வளர்ச்சி ஆலோசனைக் குழுவான 'ஐபிஇ குளோபல்' உடன் இணைந்து ராஜஸ்தான் அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட உடான் திட்டம், பெண்களை இடைநிலை அளவில் சேர்ப்பதன்மூலம் பள்ளிகளில் தக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதே சமயம் அவர்களில் தகுதியானவர்களுக்கு உதவித் தொகை கிடைப்பதையும் உறுதி செய்கிறது.

➢ **பஞ்சாபின் 18வது முதலமைச்சர்**

✓ ஆம் ஆத்மி கட்சியின் பகவந்த் மான் - சுதந்திரப் போராட்ட வீரர் பகத் சிங்கின் சொந்த கிராமமான கட்கர் காலானில் மார்ச் 16 அன்று நடந்த விழாவில் பஞ்சாப்பின் 18வது முதல்வராகப் பதவியேற்றுக் கொண்டார்.

➢ **2050க்குள் நிகர-பூஜ்ஜிய கார்பன் உமிழ்வு**

✓ இதற்காக இலக்கை நிர்ணயித்த முதல் தெற்காசிய நகரமாக மும்பை விளங்குகிறது.

✓ மகாராஷ்டிராவில் உள்ள மும்பை, '2050க்குள் பூஜ்ஜிய கார்பன் உமிழ்வை' உறுதி செய்வதற்கான தன்னுடைய விரிவான கட்டமைப்பை அறிவித்தது. தெற்காசியாவில் அத்தகைய இலக்கை நிர்ணயித்த முதல் நகரமாகவும் ஆனது.

✓ 2070க்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை எட்டுவதான இந்தியாவின் இலக்கைவிட மும்பையின் இலக்கு 20 ஆண்டுகள் முன்னதாக உள்ளது.

➢ **பயிர் பல்வகைப்படுத்துதல் குறியீடு**

✓ தெலுங்கானா – பயிர் பல்வகைப்படுத்துதல் முறைகளை குறியீட்டு வடிவில் பதிவு செய்த நாட்டின் முதல் மாநிலமாக ஆகியுள்ளது.

✓ பயிர் பல்வகைப்படுத்துதல் குறியீட்டின்படி, இந்த மாநிலம் 77 வகை பயிர்களை வளர்க்கிறது. தோராயமாக 10 பயிர்கள், முக்கியமாக தானியங்கள், பல்வகைப்படுத்துதலுக்கு சாதகமாக உள்ளன.

- ✓ மாநிலத்தின் பல மாவட்டங்களில் 0 முதல் 5 வரையிலான குறியீட்டு மதிப்புகள் உள்ளன. அதிக மதிப்பெண் பெறுவது, பல்வகைப்படுத்துதல் அதிகமாக உள்ளது என்பது பொருளாகும்.
- ✓ இந்த மதிப்பெண் மாநிலத்தில் எதிர்கால விவசாய பல்வகைப்படுத்தலுக்கு ஒரு அளவு கோலாக விளங்கும்.

## ➢ தேசிய இ-விதான் (NeVA) திட்டம்

- ✓ தேசிய மின்-விதான் செயலி (National e-Vidhan Application) திட்டத்தை முழுவதுமாக காகிதமற்றதாக மாற்றியமைத்த நாட்டின் முதல் சட்ட மன்றமாக நாகாலாந்து சட்டமன்றம் வரலாறு படைத்துள்ளது.
- ✓ இப்போது உறுப்பினர்கள் சபை நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு மின்னணு சாதனங்களைப் பயன்படுத்தலாம்.
- ✓ தேசிய இ-விதான் என்பது யூனிகோட் இணக்க மென்பொருளாகும். இது கேள்விகளின் பட்டியல் போன்ற பல்வேறு ஆவணங்களை எளிதாக அணுகுவதற்கான வழியைக் கொண்டுள்ளது.

## ➢ கார்பன்-நடுநிலை விவசாயம்

- ✓ தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் கார்பன் நடுநிலை விவசாய முறைகளை அறிமுகப்படுத்திய நாட்டின் முதல் மாநிலமாக கேரளா மாற உள்ளது. இந்த மாநிலம் இதற்காக 2022-23ஆம் ஆண்டு பட்ஜெட்டில் ரூ.6 கோடியை ஒதுக்கியுள்ளது.
- ✓ முதல்கட்டமாக, வேளாண்மைத் துறை மற்றும் பழங்குடியினப் பகுதிகளின் கீழ் உள்ள 13 பண்ணைகளில் கார்பன் நடுநிலை விவசாயம் மேற்கொள்ளப்படும். மேலும், ஆலுவாவில் உள்ள மாநில விதைப் பண்ணையை கார்பன் நடுநிலை பண்ணையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## ➢ டைனமிக் வரைபடங்களைச் செயல்படுத்திய முதல் மாநிலம்

- ✓ கிராமங்களுக்கான டைனமிக் வரைபடத்தை அமல்படுத்திய நாட்டின் முதல் மாநிலமாக பீகார் மாறியுள்ளது. ஒவ்வொரு முறையும் நில உரிமை மாறும்போது, டைனமிக் வரைபடம் தானாகவே புதுப்பிக்கப்படும்.
- ✓ இந்த முயற்சியின் நோக்கம் சட்ட பிரச்சினைகளைக் குறைப்பதாகும்.
- ✓ பீகார் அரசின் கூற்றுப்படி, பிப்ரவரி 2021 முதல் சுமார் 37000 நிலத் தகராறுகள் மற்றும் பிர சிக்கல்கள் வரப்பெற்றுள்ளன.

# தேசிய செய்திகள்

## ➢ ஜம்மு காஷ்மீரில் மறுவரையறை செய்வதற்காக ராஜனா பிரசாத் தேசாய் குழு

- ✓ இந்த மறுவரையறை ஆணையம் - அரசியல் கட்சிகள், பொதுமக்களின் பிரதிநிதிகள் மற்றும் யூனியன் பிரதேச அதிகாரிகளுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களைக் கேட்பதற்காக ஜூலை 6 முதல் ஜூலை 9 வரை ஜம்மு காஷ்மீருக்கு வருகை தர உள்ளது.
- ✓ இந்த ஆணையத்தின் தலைவராக ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் ரஞ்சனா பிரகாஷ் தேசாய் உள்ளார்.

## ➢ CCRISP – உலக வங்கி

- ✓ உலக வங்கி – ஜிக் தொழிலாளர்கள் மற்றும் இடம்பெயரும் தொழிலாளர்கள் உள்ளிட்ட, இந்தியாவின் முறைசாரா தொழிலாளர்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக, 5500 மில்லியன் டாலர் மதிப்பிலான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ மொத்த உறுதித் தொகையில், 112.5 மில்லியன் டாலர் தொகை, உலக வங்கியின் சலுகை கடன் வழங்கும் அமைப்பாகிய சர்வதேச வளர்ச்சி குழுமம் (International Development Association) என்ற கடன் வழங்கும் நிறுவனத்திடம் இருந்து பெறப்படும்.
- ✓ ஏற்கனவே உலக வங்கியால் வழங்கப்பட்ட 1.15 பில்லியன் டாலர் தொகைக்கும் மேலாக, நாட்டில் பிரதமரின் கரிப் கல்யாண் திட்டத்தின்கீழ், திட்டங்களை ஆதரிப்பதற்காக, கூடுதல் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- ✓ ஒருங்கிணைந்த மற்றும் பதிலளிக்கக் கூடிய இந்திய சமூக பாதுகாப்பு அமைப்பை உருவாக்குவதல் (Creating a Coordinated and Responsive Indian Social Protection System) என்ற திட்டத்தின்படி இந்த உதவி வழங்கப்படுகிறது.

## ➢ Zycov – D பிளாஸ்மிட் டிஎன்ஏ தடுப்பூசி

- ✓ அகமதாபாத்தைச் சேர்ந்த ஜைடஸ் கேடிலா – கோவிட்-19க்கு எதிரான தன்னுடைய பிளாஸ்மிட் டிஎன்ஏ தடுப்பூசியாகிய ZyCoV-D யை அவசர கால பயன்பாட்டுக்காக அனுமதிக்க வேண்டி, இந்திய மருந்துகள் கட்டுப்பாட்டுத் துறைத் தலைவருக்கு விண்ணப்பித்துள்ளது.

## ➢ தடுப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு மசோதா, 2021

- ✓ மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் - மனிதர்களைக் கடத்துதல் (தடுப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு) வரைவு மசோதா, 2021ஐ பொதுமக்களின் கருத்துகளைக் கேட்பதற்காக ஜூலை 2021 வரை பொதுவெளியில் விட்டிருக்கிறது.
- ✓ இந்த மசோதா முடிவு செய்யப்பட்டதும் அமைச்சரவையின் ஒப்புதல் மற்றும் இரண்டு அவைகளின் ஒப்புதலைப் பெற்று சட்டமாக மாறும்.
- ✓ இந்த புதிய மசோதா கடத்தலில் ஈடுபடும் நபர்களுக்கு வழங்கப்படும் தண்டனையை அதிகப்படுத்துவதற்கும், இதில் உயிர்பிழைக்கும் நபர்களுக்கு மறுவாழ்வு கட்டமைப்பை உறுதி செய்வதற்கும் முனைகிறது.
- ✓ இந்தப் புதிய மசோதாவின்படி, ''மனிதர்களைக் கடத்தும்'' குற்றத்தில் ஈடுபடும் எந்த ஒரு நபருக்கும் ஏழு ஆண்டுகளுக்குக் குறையாத சிறைத் தண்டனை வழங்கப்படும். மேலும், அது பத்து ஆண்டுகள் வரை நீடிக்கத்தக்கதும் அத்துடன் ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத அபராதம் விதிக்கப்படவும் வாய்ப்பு உண்டு.

## ➢ ஒன்றிய ஆயுஷ் அமைச்சர் கிரன் ரிஜிஜு ஜூலை மாதத்தில் - இந்திய கிளினிகல் மாதிரி பதிவு (Clinical Trial Registry-India) போர்ட்டலில் ஆயுர்வேதத் தரவுத் தொகுப்பைத் தொடங்கி வைத்தார்.

- ✓ இந்திய கிளினிகல் மாதிரி பதிவின் ஆயுர்வேத தரவுத் தொகுப்பானது, ஆயுர்வேத அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின்கீழ், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் மற்றும்

ஆயுர்வேத அறிவியலில் ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சில் ஆகியவற்றால் கூட்டாக உருவாக்கப்பட்டது.

- **பெய்பூர் மற்றும் அழிக்கல் துறைமுகங்களுக்கான கடலோர கப்பல் சேவை, பசுமை சரக்கு நடைபாதை 2, கொச்சி துறைமுகத்திலிருந்து தொடங்கி வைக்கப்பட்டது.**

- **நிபுன் பாரத்**
  - ✓ இதற்கான முயற்சி, கல்வி அமைச்சகத்தின் பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையால் மேற்கொள்ளப்படும்.
  - ✓ நிபுன் என்பது 'National Initiative for Proficiency in Reading with Understanding and Numeracy'இன் சுருக்க வடிவம் ஆகும். இதன் பொருள் புரிந்து கொண்டு வாசித்தல் மற்றும் எண்கணித திறமைக்கான தேசிய முயற்சி என்பதாகும்.
  - ✓ அடிப்படைக் கல்வி மற்றும் எண் அறிவுக்கு எளிதில் அணுகக் கூடிய சூழலை வழங்குவதற்கு இந்தத் திட்டம் முனைகிறது.
  - ✓ இந்த முயற்சியின்கீழ், ஒவ்வொரு குழந்தைக்கும் 2026-27க்குள் 3 ஆம் வகுப்பு முடிவதற்குள் வாசிப்பு, எழுத்து மற்றும் எண் கணிதத்தில் விரும்பிய கற்றல திறன்கள் வழங்கப்படும்.

- **6ஆம் வகுப்பு மாணவர்களுக்கான 'நிதி கல்வியறிவு பணிப் புத்தகம்' (Financial Literacy Workbook)**
  - ✓ இந்தக் புத்தகத்தை மத்திய பள்ளிக் கல்வி வாரியம் மற்றும் இந்திய தேசிய கொடுப்பனவு நிறுவனம் (National Payments Corporation of India) ஆகியவை இணைந்து தயாரித்துள்ளன.
  - ✓ இந்தப் புத்தகம் 6 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு விருப்பப் பாடமாக வழங்கப்படும் 'நிதி கல்வியறிவு' பாடத்தில் பயன்படுத்தப்படும்.
  - ✓ இது வங்கியியல் மற்றும் கொடுப்பனவு விஷயங்களில் மாணவர்களின் அறிவை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- **"ஒருமுறை" ஜிஎஸ்டி வரி செலுத்துபவர்கள்**
  - ✓ ஜிஎஸ்டி வரிவிதிப்பின் 4ஆம் ஆண்டு தினத்தை முன்னிட்டு ஒன்றிய நிதி அமைச்சர் ஜூலை மாதத்தில் - தங்களது வருமான வரித் தாக்கலை குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடித்த மற்றும் வரியை முறையாக செலுத்திய 54,439 ஜிஎஸ்டி வரிசெலுத்துநர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

- **டிஸ்காம் (DISCOM)**
  - ✓ பொருளாதார விவகாரங்களுக்கான கேபினட் கமிட்டி –மின்சக்தி விநியோக நிறுவன (Power Distribution Company (DISCOM)) சீரமைப்புத் திட்டத்திற்காக ரூ.3.03 டிரில்லியனை அங்கீகரித்துள்ளது.
  - ✓ இந்தப் புதிய திட்டம் ஒருங்கிணைந்த மின்சக்தி வளர்ச்சித் திட்டம் மற்றும் தீன்தயாள் உபாத்யாய கிராம ஜோதி யோஜனா ஆகிய திட்டங்களை இணைத்து உருவாக்கப்படுகிறது.
  - ✓ இத்திட்டத்தின்கீழ், முதல் கட்டமாக டிசம்பர் 2023க்குள் சுமார் 10 கோடி பிரீபெய்டு ஸ்மார்ட் மீட்டர்களை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளது.

- **ஜூலை மாதத்தில், பொதுத்துறை நிறுவனங்கள் துறையானது நிதி அமைச்சகத்தின் ஒரு அங்கமாக ஆக்கப்பட்டது.**
  - ✓ இந்த நடவடிக்கையானது, தனியார்மயமாக்கல் செயல்முறையை விரைவுபடுத்துவதோடு, மாநில அரசு நடத்தும் நிறுவனங்களின்மீது அதிக கட்டுப்பாட்டைப் பெறுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **தலைநகரம், டெல்லி –** முக்கிய காற்று மாசுபடுத்தியாகிய நைட்ரஜன் டை ஆக்சைடு அளவு, கடந்த ஆண்டு இதே காலத்தில் இருந்ததைவிட நடப்பு ஆண்டில் ஏப்ரல் 2020 முதல் ஏப்ரல் 2021 வரையிலான காலத்தில் மிக அதிக அளவில் அதிகரித்து 125 விழுக்காடாக கண்டறியப்பட்டது.

- **ஒன்றிய சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் - நிதின் கட்கரி –** ஜூலை மாதத்தில் நாட்டின் முதலாவது வர்த்தக ரீதியிலான திரவ பெட்ரோலிய எரிவாயு நிரப்பும் நிலையத்தை நாக்பூரில் தொடங்கி வைத்தார்.

- **ஜல் சக்தி (நீர்வள அமைச்சகம்) –** தற்போது உள்ள குளங்கள் மற்றும் நீர்நிலைகளை சீரமைத்தும், நீர்த்தேக்கங்களை அமைத்தும் மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு மாநிலங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.
  - ✓ முன்னதாக, 2019ஆம் ஆண்டின் 'ஜல் சக்தி அபியான்-1' திட்டத்தின்கீழ், நாட்டின் 256 மாவட்டங்களில் மொத்தம் உள்ள 2836 ஊராட்சி ஒன்றியங்களில் 1592 நீர்பற்றாக்குறை ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே இப்பணியை மேற்கொள்ள முடிந்தது.
  - ✓ இந்தியாவில் உள்ள 'டைனமிக் நிலத்தடி நீர்வளங்கள்' பற்றிய சமீபத்திய மதிப்பீடு 2017 உடன் ஒப்பிடும்போது 2020ல் முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

- **எல்ஐசி தனியார் மயமாக்கப்படும்**
  - ✓ ஒன்றிய அமைச்சரவை – ஒன்றிய அரசு நடத்தும் மிகப்பெரிய காப்பீட்டு முகமையான இந்திய ஆயுள்காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation of India) இன் பங்குகளை விற்பனை செய்வதற்கு ஒப்புதலை வழங்கியது.
  - ✓ எல்ஐசி-யில் 100 விழுக்காடு பங்குகளை வைத்துள்ள அரசு, படிப்படியாக அதில் ஒரு பகுதியை விற்பனை செய்வதற்கு திட்டமிட்டுள்ளது.
  - ✓ எல்ஐசி-யின் ஐபிஓ (IPO) இந்தியாவின் மிகப் பெரியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பல ஆய்வாளர்கள் ஒரு பங்கு ரூ.1 இலட்சம் கோடிக்கும் மேல் விற்பனை செய்யப்படும் என்று எதிர்பார்க்கின்றனர்.
  - ✓ மார்ச் உடன் முடிவடையவுள்ள நடப்பு நிதியாண்டில் அரசு வசம் உள்ள நிறுவனங்களின் சொத்துகளை விற்பனை செய்வதன் மூலம் 1.75 இலட்சம் திரட்டுவது என்பது அரசின் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
  - ✓ வேறு பல நிறுவனங்களுக்கு இடையில், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிட், கப்பல் கழகம், கன்டெய்னர் கழகம், நீலச்சல் இஸ்பாட் நிகாம் லிட், பவான் ஹன்ஸ் மற்றும் ஏர் இந்தியா ஆகிய நிறுவனங்களின் மூலோபாய விற்பனையை மார்ச் 2022க்குள் முடிக்க வேண்டும் என்று அரசு முனைந்துள்ளது.
  - ✓ மேலும், ஐடிபிஐ வங்கி நடப்பு நிதியாண்டில் தனியார் மயமாக்கப்படும்.

- **ஒன்றிய அரசு – 2019-20ஆம் ஆண்டு, கல்வி பிளஸ்-க்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பு (Unified District Information System for Education Plus-UDISE+) அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டுள்ளது**
  - ✓ 2018-19இல் தொடங்கி வைக்கப்பட்ட UDISE+, பள்ளிக் கல்வியில் உள்ள மிகப்பெரிய மேலாண்மை தகவல் அமைப்பு ஆகும்.
  - ✓ இதில் 1.5 மில்லியன் பள்ளிகள், 8.5 மில்லியன் ஆசிரியர்கள் மற்றும் 250 மில்லியன் குழந்தைகள் இடம் பெற்றுள்ளனர்.
  - ✓ இது 2012-13ல் தொடங்கி வைக்கப்பட்ட கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பின் (UDISE) மேம்பட்ட மற்றும் உயர்தரமான பதிப்பு ஆகும். இதில் தொடக்கக் கல்விக்காக இருந்த மாவட்ட கல்வி தகவல் அமைப்பு (DISE) மற்றும் இடைநிலைக் கல்விக்காக இருந்த இடைநிலைக் கல்வி மேலாண்மை தகவல் அமைப்பு (SEMIS) ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
  - ✓ இந்த UDISE+ ஆனது, இந்தியாவில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் கல்வியின் தரத்தை பல்வேறு அளவீடுகளில் மேற்கொள்வதற்கு உதவுகிறது.

- **இந்திய ஊீநர் நிலையம் (Serum Institute of India) – ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசி உற்பத்தியை செப்டம்பர் 2021 ல் தொடங்க உள்ளது.**

- **ஷாப்ஷி (ShopSy)**
  - ✓ இந்தியாவின் முன்னணி மின் வர்த்தக நிறுவனமான பிளிப்கார்ட் - தன்னுடைய ஆன்லைன் வர்த்தகத்தை எளிதாக்கும் விதமாக 'ஷாப்ஷி' என்ற ஒரு செயலியைத் தொடங்கி வைத்துள்ளது.

- **66A- தகவல் தொழில்நுட்ப சட்டம்**
  - ✓ மத்திய உள்துறை அமைச்சகம் - தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் பிரிவு 66ஏ-ன் கீழ் புதிய வழக்குகளைப் பதிவு செய்ய வேண்டாம் என்று காவல் நிலையங்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று அனைத்து மாநிலங்களையும் யூனயன் பிரதேசங்களையும் கேட்டுக் கொண்டுள்ளது.
  - ✓ ஷ்ரேயா சிங்கல் எதிர் இந்திய அரசு வழக்கில் 24 மார்ச், 2015 அன்று வழங்கிய தீர்ப்பில் உச்ச நீதி மன்றம், தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000ன் பிரிவு 66ஏ 'தெளிவற்றது மற்றும் தன்னிச்சையானது' என்று கூறி நீக்கியது.
  - ✓ உச்ச நீதிமன்றத்தின் கூற்றுப்படி, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 19ல் வழங்கப்பட்டுள்ள சுதந்திரமாகப் பேசுவதற்கான உரிமையை இந்த சட்டப் பிரிவு மீறுவதாக இருப்பதால், இந்தப் பிரிவு நீக்கப்பட்டது. தற்போது நீக்கப்பட்டுள்ள இந்த சட்டப்பிரிவு 66ஏ-ன்படி, அவதூறான செய்திகளை வெளியிடும் எவருக்கும் அபராதத்துடன் மூன்று வருடங்கள் வரையிலான சிறைத் தண்டனையை வழங்கலாம்.
  - ✓ மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000இன் பிரிவு 66ஏ-ன்கீழ் ஏதேனும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தால் அவற்றை உடனடியாக நீக்கும்படி ஒன்றிய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

- **ஒன்றிய அமைச்சரவை – விகிதங்களை மாற்றாமல், ஆடைகள் மற்றும் தயாரிக்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதிக்கான மாநில மற்றும் மத்திய வரிகள் மற்றும் வரிகளில் (Rebate of State and Central taxes and Levies) தள்ளுபடியை நீட்டிக்க ஒப்புதல் அளித்தது.**

- **ட்ரோன் விதிகள் 2021**
  - ✓ பொதுமக்களின் கருத்துக்களை ஆகஸ்ட் 5, 2021 வரை கேட்பதற்காக 'ட்ரோன் விதிகள், 2021' வெளியிடப்பட்டுள்ளன.
  - ✓ ட்ரோனை இயக்குபவர்கள் டிஜிட்டல் ஸ்கை தளத்தில் தேவையான விவரங்களை வழங்கி ஒரு ட்ரோனின் தனித்துவமான அடையாள எண்ணை உருவாக்க வேண்டும்.
  - ✓ இந்த வரைவு விதிகளில் நிகழ்நேர கண்காணிப்பு கலங்கரை விளக்கம் மற்றும் புவி வேலி போன்ற பின்னர் அறிவிக்கப்படும் பாதுகாப்பு அம்சங்கள் இடம்பெற்றிருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - ✓ மேலும், பச்சை, மஞ்சள் மற்றும் சிவப்பு மண்டலங்களைக் கொண்ட ஒரு ஊடாடும் வான்வெளி வரைபடமும் டிஜிட்டல் வான்வெளி தளத்தில் காட்டப்படும்.

- **காதி**
  - ✓ காதி மற்றும் கிராம தொழில் ஆணையம் (Khadi and Village Industry Commission) – அதனுடைய பிராண்ட் பெயராகிய காதி-க்கு மெக்சிகோ, பூட்டான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகங்கள் ஆகிய மூன்று நாடுகளில் வர்த்தக முத்திரைப் பதிவைப் (trademark registration) பெற்றுள்ளது.

**ஒன்றிய அரசு – இதர பிற்பட்ட வகுப்பினரை தீர்மானிப்பதற்கான மாநிலத்தின் அதிகாரத்தை மீட்டெடுப்பதற்காக, 2018இல் இயற்றப்பட்ட 102வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான முன்மொழிவை இயற்றியுள்ளது.**

- ✓ இந்த முன்மொழிவானது, மராத்தா இட ஒதுக்கீட்டு வழக்கில் 5 உறுப்பினர்களைக் கொண்ட அரசியலமைப்பு அமர்வால் மே 5 அன்று வழங்கப்பட்ட உச்ச நிதி மன்ற தீர்ப்பை மாற்றியமைக்க முனையும்.
- ✓ இந்தத் தீர்ப்பின்படி, பிற்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையத்தின் பரிந்துரைக்கு ஏற்ப குடியரசுத் தலைவர் மட்டுமே, எந்த ஒரு சமுதாயத்தையும் இதர பிற்பட்ட வகுப்பாக அறிவிக்க முடியும்.
- ✓ இந்த முன்மொழிவானது, மாநில அரசுகளின்கீழ் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மண்டல் இட ஒதுக்கீட்டிற்கு தகுதியான சாதிகளின் 'மாநில பட்டியலுக்கான'இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைக் கண்டறிவதற்கான மாநிலங்களின் உரிமையை மீட்டெடுக்க முனைகிறது.
- ✓ 102வது அரசிலமைப்புத் திருத்தம், மாநில ஆளுநருடன் கலந்தாலோசித்து, எந்தவொரு சமூக அல்லது கல்வியிலும் பின்தங்கிய வகுப்பை குடியரசுத் தலைவர் அறிவிப்பது குறித்த பிரிவு 342இல் 324ஏ என இரண்டு உட்பிரிவுகளைச் சேர்க்கிறது.
- ✓ இதற்கான வரைவு மசோதாவை சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் தயாரித்து அளித்தது.
- ✓ இது பிரிவு 342ஏ-இல் ஒரு தெளிவுபடுத்தும் உட்பிரிவைச் சேர்க்க முயல்கிறது. அதாவது, மாநில அரசுகளுக்கு இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை அல்லது சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்புகளை அந்த்நத பட்டியலில் அடையாளம் கண்டு சேர்க்கும் அதிகாரம் வழங்கப்படும். மூன்றாவது உட்கூறு, சட்டப் பிரிவு 342ஏ(3) என்று சேர்க்கப்பட வேண்டும்.
- ✓ அதன்படி, மாநில பட்டியலில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை அறிவிக்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு இருக்கும் என்று மூன்றாவது பிரிவு கூறுகிறது.

➢ **மக்களவை – காரணி ஒழுங்குமுறை (திருத்தம்) மசோதா, 2020 மற்றும் தேசிய உணவு தொழில்நுட்ப தொழில்முனைவோர் மற்றும் மேலாண்மை மசோதா, 2021 ஆகியவற்றை நிறைவேற்றியது.**
- ✓ காரணி ஒழுங்குமுறை (திருத்த) மசோதா, 2020 நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.
- ✓ இந்த சட்டத்தின் மாற்றங்கள், தாமதமாக பணம் செலுத்துவதில் உள்ள சிக்கல்களைச் சமாளிப்பதற்கு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறைக்கு (MSME) உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- ✓ காரணிச் சட்டத்தில் திருத்தங்கள் யுகே சின்ஹா குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டவை.

➢ **ஒரு அதி முக்கிய முடிவாக, ஒன்றிய அரசு –** நடப்பு 2021-22 கல்வி ஆண்டு முதல் அனைத்து கல்லூரிகளிலும் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவம் / பல்மருத்துவத்துக்கான அனைத்து இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் 27 விழுக்காடு இடங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காகவும், பொருளாதார ரீதியில் வறிய நிலையில் உள்ளவர்களுக்கு 10 விழுக்காடும் ஒதுக்கீடு செய்வதாக அறிவித்தது.
- ✓ அகில இந்திய ஒதுக்கீடு திட்டமானது 1986இல் உச்ச நீதி மன்றத்தின் வழிகாட்டுதலின்படி அறிமுகம் செய்யப்பட்டது.
- ✓ இது வேறொரு மாநிலத்தில் உள்ள ஒரு நல்ல மருத்துவக் கல்லூரியில் படிக்க விரும்பும் எந்த மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் தகுதி அடிப்படையிலான வாய்ப்புகளை வழங்க முற்படுகிறது.

➢ **ஒன்றிய புவி அறிவியல் இணை அமைச்சர், ஜிதேந்திர சிங் -** ஜூன் மாதத்தில் புவி அறிவியல் அமைச்சகத்தின் 'புவி அமைப்பு அறிவியல் தரவு' (Earth System Science Data) க்காக ஒரு புதிய போர்ட்டலைத் தொடங்கி வைத்தார்.

➢ **ஒன்றிய இரயில்வே அமைச்சகம் -** காரைக்காலிலிருந்து பேரளம் வரை நேரடி இணைப்பை வழங்குவதற்காக 23 கிமீ நீளமுள்ள பாதையை அனுமதித்துள்ளது.
- ✓ ரூ.177.69 கோடி நிதி ஒதுக்கீட்டில் திருச்சி – தஞ்சாவூர் - நாகூர் - காரைக்கால் பாதை மாற்றும் திட்டத்தின் ஒரு பகுதியாக புதிய பாதை அமைக்கப்படும்.

✓ இதை ஒன்றிய இரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அறிவித்தார்.
✓ காரைக்கால், புதுச்சேரியிலிருந்து 140 கிமீ தொலைவு தெற்கில் அமைந்துள்ளது, அதே சமயம் பேரளம் தமிழ்நாட்டின் திருவாரூர் மாவட்டத்தில் உள்ளது.

➢ **ஒன்றிய அரசு –** டெல்லி – தேசிய தலைநகர் பிராந்தியம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் காற்றின் தர மேலாண்மை ஆணையத்தின் அரசியலமைப்பு சட்டத்தை மாற்றுவதற்கான மசோதாவை மக்களவையில் அறிமுகப்படுத்தியது.

➢ **இந்திய புவியியல் ஆய்வு அமைப்பு (The Geological Survey of India) -** அருணாசலப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், சத்தீஸ்கார், ஜார்க்காண்ட், ஜம்மு காஷ்மீர் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் ஏழு லித்தியம் ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

➢ **இந்தியாவின் முதலாவது 'தானிய ஏடிஎம்' குருகிராமில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.**
✓ நாட்டின் முதலாவது 'தானிய ஏடிஎம்' ஹரியானாவின் குருகிராமில் ஒரு முன்னோடித் திட்டமாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இது ஒரு தானியங்கி எந்திரம், இது ஒரு வங்கி ஏடிஎம் போலவே செயல்படுகிறது.

➢ **கர்நாடக முதலமைச்சர் பிஎஸ் எடியூரப்பா –** கர்நாடகாவின் எலக்ட்ரிக் பைக் டாக்சி திட்டம் - 2021ஐ தொடங்கி வைத்தார்.

➢ **காதி மற்றும் கிராம தொழில்கள் ஆணையம் திட்டமாகிய, 'BOLD' பழங்குடியினரின் வருவாயை அதிகரிக்க உள்ளது**
✓ காதி மற்றும் கிராம தொழில்கள் ஆணையம் 'வறண்ட நிலங்களில் மூங்கில் சோலை' (**Bamboo Oasis on Lands in Draught -** BOLD) என்ற பெயரில் ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இது, வறண்ட மற்றும் பகுதி வறண்டநிலப் பகுதிகளில் மூங்கில் அடிப்படையிலான பசுமைத் திட்டுகளை உருவாக்கும் இந்த வகையில் முதல் முயற்சி ஆகும்.

➢ **2022 முதல் ஒன்றிய அரசின் வேலைகளுக்கு பொதுவான தகுதித் தேர்வு -**
✓ தொழில்நுட்பம் அல்லாத குழு பி மற்றும் சி அரசு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான முதல் பொது தகுதித் தேர்வு, கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தாமதமானது. இதை இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்துவதற்கு வாய்ப்பில்லை என்று ஒரு மூத்த ஒன்றிய அமைச்சர் தெரிவித்தார்.

➢ **APMC-க்களுக்கு வேளாண் இன்ஃப்ரா நிதி கடன்களை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்குகிறது**
✓ இத்தகைய சந்தை முற்றங்கள் பலவீனமடைகின்றன என்ற போராடிக் கொண்டிருக்கும் விவசாயிகளின் அச்சத்தைப் போக்குவதற்காக ஒன்றிய அரசு, தனது சந்தையில் உள்ள உட்கட்டமைப்பு நிதியின்மூலம் நிதி வசதிகளை அனுமதிக்க முடிவு செய்துள்ளது.

➢ **இந்தியாவின் முதலாவது ஓட்டுநர் இல்லாத பாட் டாக்சிகள் (pod taxis) ஜேவர் சர்வதேச விமான நிலையத்திற்கும் கிரேட்டர் நொய்டாவிற்கும் இடையே செல்ல உள்ளன.**
✓ இந்தியாவின் முதலாவது பாட் டாக்சி சேவையானது வெகுவிரைவில் வரவிருக்கும் நொய்டா சர்வதேச கிரீன்ஃபீல்டு விமான நிலையம் (அல்லது ஜீவர் விமான நிலையம்) மற்றும் கிரேட்டர் நொய்டாவில் உள்ள நொய்டா திரைப்பட நகரத்திற்கு இடையே உள்ள சுமார் 14 கிமீ தூரத்தைக் கொண்டு இயங்கத் தொடங்குகிறது.

➢ **இந்தியாவின் பணமோசடி தடுப்பு மதிப்பாய்வு FATF, கோவிட் பெருந்தொற்று காரணமாக 2022க்கு ஒத்தி வைக்கப்பட்டது.**
✓ இந்தியாவின் பணமதிப்பிழப்பு எதிர்ப்பு மற்றும் பயங்கரவாத நிதி ஆட்சியை எதிர்ப்பதற்கான உலகளாவிய அமைப்பான நிதி நடவடிக்கை பணிக்குழுவின்

 PH: 044-24339436, 42867555, 9840226187

(**Financial Action Task Force**) மதிப்பீடு கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக இரண்டாவது முறையாக ஒத்தி வைக்கப்பட்டது. இது அடுத்த வருடம் தொடங்கப்படுவதாக தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

➢ **பாரத ஸ்டேட் வங்கி கியோஸ்க் மூலம் வங்கி சேவைகளை வழங்குவதன்மூலம் நிதி சேர்க்கைக்காக வங்கியின் தேசிய பெருநிறுவன வணிக நிருபராக 'பைசலோடிஜிட்டல்' (PaisaloDigital) ஐ தேர்வு செய்துள்ளது.**

➢ ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம் 2019ஐ அமல்படுத்திய தேதியன்று உள்ளபடி, ஜம்மு காஷ்மீர் வங்கி லிமிடெட்-இன் செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனத்தின் 8.23 விழுக்காட்டை பெற்றுக் கொள்ள லடாக் யூனியன் பிரதேச அரசுக்கு இந்திய ரிசர்வ் வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

➢ **இந்தியாவின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிறுவனமான என்டிபிசி லிட், குஜராத் மாநிலம் கவாடாவில் உள்ள ரான் ஆ.ஃப் கட்ச் பகுதியில், நாட்டின் ஒற்றை மிகப்பெரிய சூரிய ஒளி மின்னழுத்தத் திட்டத்தை உருவாக்க உள்ளது.**
  ✓ இந்த சூரிய சக்தி பூங்கா 4.75 ஜிகாவாட் /4750 மெகா திறன் கொண்டதாக இருக்கும்.

➢ **இந்திய கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும் உள்நாட்டு நிறுவனங்களுக்கு ஒரு நிரப்புதலுக்காகவும் மத்திய அரசு ஒரு கூட்டுறவு அமைச்சகத்தை உருவாக்கியுள்ளது.**
  ✓ இந்த புதிய கூட்டுறவு அமைச்சகம் 'சஹ்கர்-சே-சம்ரித்தி' (**Sahkar-se -Samriddhi**)யின் தொலைநோக்குப் பார்வையை உணர்ந்து செயல்படும் மற்றும் ஒரு தனியான நிர்வாக, சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்பை வழங்கும்.

➢ **இந்திய எண்ணெய் கழகம் (IOC) முதலாவது 'பசுமை ஹைட்ரஜன்' ஆலையை மதுராவில் அமைக்க உள்ளது.**
  ✓ இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமான, அரசுக்குச் சொந்தமான இந்திய எண்ணெய் கழகம், எண்ணெய் மற்றும் சுத்தமான ஆற்றல் வடிவங்களுக்கான வளர்ந்து வரும் தேவையைப் பூர்தித செய்வதற்காக நாட்டின் முதலாவது 'பசுமை ஹைட்ரஜன்' ஆலையை மதுரா சுத்திகரிப்பு நிலையத்தில் கட்ட உள்ளது.

➢ **அரசு, நொய்டாவில் இந்திய பாரம்பரிய நிறுவனத்தை அமைக்க உள்ளது**
  ✓ உத்தரப் பிரதேசத்தின் நொய்டாவில் இந்திய பாரம்பரிய நிறுவனத்தை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது.

➢ **விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காக 'கிசான் சாரதி' என்ற டிஜிட்டல் தளம் தொடங்கி வைக்கப்பட்டது.**
  ✓ விவசாயிகள் விரும்பிய மொழியில் சரியான நேரத்தில் சரியான தகவல்களைப் பெற வசதியாக, டிஜிட்டல் தளமான 'கிசான் சாரதி', விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமரால் இணைந்து தொடங்கி வைக்கப்பட்டது.

➢ **ஒன்றிய அரசு இந்திய நீர்வாழ் விவசாயிகளுக்காக 'மத்ஸ்ய சேது' (Matsya Setu) என்ற ஒரு மொபைல் செயலியை அறிமுகப்படுத்துகிறது.**
  ✓ ஒன்றிய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் ஸ்ரீகிரிராஜ் சிங், மீன் விவசாயிகளுக்காக ஜூலை 2, 2021 அன்று 'மத்ஸ்ய சேது' என்ற ஒரு மொபைல் செயலியை அறிமுகப்படுத்தினார்.

➢ **உலகளாவிய பெருமைக்குரிய CA|TS அங்கீகாரம் பெற்ற இந்தியாவில் உள்ள 14 புலிகள் சரணாலயங்கள் பின்வருமாறு:**
  ✓ முதுமலை மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகம், தமிழ்நாடு.
  ✓ பண்டிப்பூர் புலிகள் காப்பகம், கர்நாடகா

- ✓ பரம்பிக்குளம் புலிகள் காப்பகம், கேரளா
- ✓ சுந்தரவன புலிகள் காப்பகம், மேற்கு வங்காளம்
- ✓ துத்வா புலிகள் காப்பகம், உத்தரப் பிரதேசம்
- ✓ வால்மீகி புலிகள் காப்பகம், பீகார்
- ✓ பெஞ்ச் புலிகள் காப்பகம், மகாராஷ்டிரா
- ✓ சத்பூரா. கன்ஹா மற்றும் பன்னா புலிகள் காப்பகம். மத்தியப் பிரதேசம்
- ✓ அசாமில் உள்ள ஒரங், மணஸ் மற்றும் கஜிரங்கா.

➢ **இந்தியா** - இதன் 480 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் அல்லது அதன் மக்கள் தொகையில் சுமார் 40 விழுக்காடு பேர் மாசுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதால், உலகின் மிகவும் மாசுபட்ட நாடாக விளங்குகிறது.

- ✓ செப்டம்பரில் வெளியிடப்பட்ட சிகாகோ பல்கலைக் கழகத்தின் வருடாந்திர காற்று தர வாழ்க்கை குறியீட்டு அறிக்கையில் இந்த விவரம் வெளியிடப்பட்டுள்ளது.
- ✓ உலக சுகாதார அமைப்பின் தர நிலைகளின்படி, சராசரி ஆயுட்காலத்துடன் ஒப்பிடும்போது, டெல்லியில் ஒரு நபர் சராசரியாக 9.7 ஆண்டுகள் வாழ்க்கையை இழக்கும் நிலையில், இதுவே நாட்டில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள மாநிலமாகத் திகழ்கிறது.
- ✓ உத்தரப் பிரதேசத்தில் ஒரு நபரின் ஆயுள் இழப்பு சராசரியாக 9.5 ஆண்டுகள் இருப்பதால் அது இரண்டாவது இடத்தில் உள்ளது.

➢ **புகை மூட்டம் (Smog)**

- ✓ டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் - இந்தியாவின் முதல் புகை கோபுரத்தை கன்னாட் பிளேசில் உள்ள பாபா கரக் சிங் மார்க்கில் சமீபத்தில் திறந்து வைத்தார்.
- ✓ புகை கோபுரங்கள் என்பவை காற்று மாசுபட்ட துகள்களைக் குறைப்பதற்காக பெரிய அளவிலான காற்று சுத்திகரிப்பான்களாக வடிவமைக்கப்பட்ட கட்டமைப்புகள் ஆகும்.
- ✓ பிஎம் 2.5 என்பது உடலில் நுழைந்து நுரையீரல் மற்றும் சுவாசக் குழாயில் வீக்கத்தை ஏற்படுத்தும் நுண்ணிய துகள்களைக் குறிக்கிறது. இது பலவீனமான நோய் எதிர்ப்பு அமைப்பு உட்பட இதய மற்றும் சுவாச பிரச்சினைகளின் அபாயங்களுக்கு வழிவகுக்கிறது.
- ✓ பி.எம் 2.5 செறிவின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் காற்றின் தரத்தை அளவிடும் சுவிட்சர்லாந்தைத் தளமாகக் கொண்ட காற்று தர தொழில்நுட்ப நிறுவனமான 'IQAir', 2020ஆம் ஆண்டில் மூன்றாவது தொடர் ஆண்டாக உலகின் மிகவும் மாசுபட்ட தலைநகராக டெல்லியை தரவரிசைப்படுத்தியது.

➢ **ஒன்றிய அரசு, அஸ்ஸாம் அரசு மற்றும் ஐந்து கர்பி ஆங்லாங் அல்ட்ரா குழுக்கள் - செப்டம்பர் மாதம் முத்தரப்பு அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.**

- ✓ இந்த ஒப்பந்தம் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, ஒன்றிய கப்பல் மற்றும் நீர்வழித்துறை அமைச்சர், அசாம் முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மா மற்றும் புது தில்லியில் உள்ள கர்பி ஆங்லாங் தன்னாட்சி கவுன்சிலின் பிரதிநிதிகள் முன்னலையில் கையெழுத்திடப்பட்டது.
- ✓ இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள ஐந்து குழுக்களாவன: கர்பி லாங்ரி என்சி மலைகள் விடுதலை முன்னணி (Karbi Longri NC Hills Liberation Front), கப்ரி லாங்ரி மக்கள் ஜனநாயக கவுன்சில் (People's Democratic Council of Karbi Longri), குக்கி விடுதலை முன்னணி (Kuki Liberation Front), ஐக்கிய மக்கள் விடுதலை இராணுவம் (United Peoples Liberation Army) மற்றும் கர்பி மக்கள் விடுதலைப் புலி (Karbi People's Liberation Tiger).

➢ **குடியரசுத் தலைவரிடமிருந்து விருது பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த இரண்டு ஆசிரியர்கள் கே ஆஷா தேவி மற்றும் டி. லலிதா ஆவர்.**

- ✓ **ஆஷா தேவி** பிராட்டியூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை ஆவார்.
- ✓ அவர் மாநில அரசின் 2019 சிறந்த பெற்றோர் ஆசிரியர் கழக ஆசிரியர் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர்.
- ✓ டி. லலிதா மொடக்குறிச்சியில் உள்ள அரசு பெண்கள் மேனிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை ஆவார்.
- ✓ அவர் கடந்த 19 ஆண்டுகளாக மாணவர்களுக்கு இயற்பியல் கற்பித்து வருகிறார்.
- ✓ இந்த நாள் கல்வி அமைச்சகத்தின்கீழ், ஷிக்ஷாக் பர்வ்-2021ன் தொடக்கமாக அமைந்துள்ளது.

➢ **ஷிக்ஷாக் பர்வ் (ShikshakParv)** - 2021

- ✓ செப்டம்பர் மாதத்தில் பிரதமர் நரேந்திர மோடி – தேசிய டிஜிட்டல் கல்விக் கட்டிடக் கலையை (National Digital Educational Architecture) தொடங்கி வைத்தார். இது கல்வியில் சமத்துவமின்மையை ஒழிப்பதிலும் அதன் நவீனமயமாக்கலிலும் பெரும்பங்கு வகிக்கும்.

➢ ஜல் சக்தி அமைச்சகம் கிராமப்புற தூய்மை இயக்கம் 2021ஐ தொடங்கி வைத்தது.

- ✓ ஜல் சக்தி அமைச்சகத்தின் இணை அமைச்சர் திரு. பிரகலாத் சிங் பட்டேல், கிராமப்புற தூய்மை இந்தியா இயக்கம் இரண்டாம் கட்டத்தின்கீழ், 'கிராமப்புற தூய்மை இயக்கம் 2021'ஐ தொடங்கி வைத்தார்.
- ✓ செப்டம்பர் 9, 2021 அன்று குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் இது தொடங்கி வைக்கப்பட்டது.
- ✓ கிராமப்புற தூய்மை இயக்கம் 2021, நாடு முழுவதும் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையால் மேற்கொள்ளப்படும்.
- ✓ குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையானது, 2018லும் மற்றும் 2019 தொடக்கத்திலும் தூய்மை திட்டத்தைத் தொடங்கியது.

➢ **தூய கங்கைக்கான தேசிய இயக்கம் (The National Mission for Clean Ganga) –** 'இமயமலையின் பங்களிப்பு மற்றும் நமது பொறுப்புகள்' என்ற தலைப்பில் சமீபத்தில் 'இமயமலை தினத்தைக்' கொண்டாடியது.

➢ **ஆயுஷ் அமைச்சகம் -** இந்தியா முழுவதிலும் உள்ள 45 இடங்களில் இருந்து 'ஆயுஷ் உங்கள் கதவு' (AYUSH AAPKE DWAR) என்ற ஒரு புதிய பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.

➢ **பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் சுப்பிரமணிய பாரதியார் இருக்கை**
- ✓ தமிழுக்காக, பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில், பழம்பெரும் தமிழ் கவிஞர் சுப்பிரமணிய பாரதியின் நினைவாக சுப்பிரமணிய பாரதி இருக்கை அமைக்கப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்தார்.
- ✓ சுப்பிரமணிய பாரதியின் 100வது நினைவு நாளையொட்டி (11 செப்டம்பர் 2021) இந்த இருக்கை அமைக்கப்பட்டது.
- ✓ இந்த இருக்கை பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் கலை புலத்தில் அங்கீகரிக்கப்படும்.

➢ **பிரதமர் சன்சாத் தொலைக்காட்சியைத் தொடங்கி வைத்தார், அதை சபையின் குரல் என்று அழைக்கிறார்.**
- ✓ மக்களவை தொலைக்காட்சி மற்றும் மாநிலங்களவை தொலைக்காட்சி இணைந்த செய்திச் சேனலான சன்சாத் தொலைக்காட்சி, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா முன்னிலையில் மாநிலங்களவைத் தலைவர் எம். வெங்கையா நாயுடு தலைமையில் புதன்கிழமை தொடங்கி வைக்கப்பட்டது.

➢ **45வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் -** ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் செப்டம்பர் 17, 2021 அன்று உத்தரப் பிரதேசத்தின் லக்னோவில் நடைபெற்றது.

➢ இந்தக் கூட்டத்தில் மேகக்கணினி சமையலறைகள் மற்றும் சொமாட்டோ மற்றும் ஸ்விக்கி போன்ற உணவு விநியோக தளங்களின் சேவைகளுக்கு ஜனவரி 1, 2022 முதல் 5 விழுக்காடு ஜிஎஸ்டி வரி வசூலிக்க முடிவு செய்யப்பட்டது.

➢ உணவு விநியோக அமைப்பாளர்கள், உணவகங்களுக்குப் பதிலாக, தாங்கள் விநியோகிக்கும் உணவுகளுக்காக 5 விழுக்காடு ஜிஎஸ்டியை வசூலித்து அரசாங்கத்திடம் வைப்பு செய்ய வேண்டும்.

➢ அதே சமயம், காலணி மற்றும் ஜவுளித் துறைகளில், தலைகீழ் வரி அமைப்பு வேறுபாடுகளைக் களைவதற்காக, ஜிஎஸ்டி விகிதங்களைத் திருத்துவதற்கு இந்தக் கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது ஜனவரி 1, 2022 முதல் அமல்படுத்தப்பட உள்ளது.

➢ குளிர்பானங்கள், புகையிலை, நிலக்கரி மற்றும் கார்கள் போன்ற பொருட்களுக்கு விதிக்கப்படும் செஸ், ஜிஎஸ்டி பற்றாக்குறை மாநிலங்களுக்கு ஈடுசெய்யும் கடன்களைத் திருப்பிச் செலுத்துவது ஆகியவை மார்ச் 2026 வரை தொடரும் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.

➢ **நிதி அமைச்சகம் - லக்னோவில் செப்டம்பர் 17 அன்று நடைபெற்ற 45வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் இரண்டு குழு அமைச்சர்களை நியமித்துள்ளது.**

➢ நித்தி ஆயோக்கின் பங்குதாரர்களாகிய பைஜு, 112 மாவட்டங்களில் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க உள்ளது.
- ✓ நாட்டில் 112 ஆர்வமுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பைஜுவின் உயரதர மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான கற்றல் திட்டங்களுக்கு இலவச அணுகலை வழங்குவதற்காக அரசின் முன்னணி அமைப்பாகிய நித்தி ஆயோக் கல்வித் தொழில்நுட்ப முன்னணி நிறுவனமாகிய பைஜுவுடன் கூட்டு சேர்ந்துள்ளது.

➢ **நித்தி ஆயோக் அமைப்பு இஸ்ரோ, சிபிஎஸ்இ உடன் இணைந்து, பள்ளி மாணவர்களுக்காக, 'விண்வெளி சவாலை' தொடங்குகிறது.**
- ✓ நித்தி ஆயோகின் அட்டல் புதுமை இயக்கமானது, இஸ்ரோ மற்றும் சிபிஎஸ்இ உடன் இணைந்த இந்தியா முழுவதும் பள்ளி மாணவர்களுக்காக, 'விண்வெளி சவாலை' தொடங்கியுள்ளது.
- ✓ இந்த சவால் நாடு முழுவதும் உள்ள, அட்டல் டிங்கரிங் ஆய்வகங்கள் மட்டும் அல்லாது, அட்டல் டிங்கரிங் ஆய்வகங்கள் அல்லாத அனைத்து பள்ளி மாணவர்கள், வழிகாட்டிகள் மற்றும் ஆசிரியர்களுக்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்த சவாலின் நோக்கம், விண்வெளித் துறையில் ஏதாவது ஒன்றை உருவாக்க இளம் பள்ளி மாணவர்களிடையே புதுமையை செயல்படுத்துவதாகும். அந்தப் புதுமைகள் விண்வெளியைப் பற்றி

அறிந்து கொள்ள உதவுவது மட்டுமல்லாமல், விண்வெளித் திட்டமே பயன்படுத்தக் கூடிய ஒன்றை உருவாக்கவும் உதவும்.

- **இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பயணியர் கப்பல் ஐஆர்சிடிசி-ஆல் தொடங்கி வைக்கப்பட்டது.**
  - ✓ இந்திய இரயில்வே உணவு வழங்கல் மற்றும் சுற்றுலா கழகம் (ஐஆர்சிடிசி), திருவாளர்கள் வாட்டர்வேஸ் லீஷர் டூரிசம் பிரைவேட் லிட் மூலம் இயக்கப்படும் கார்டீலியா க்ருசஸ் உடன் இணைந்து இந்தியாவின் முதல் உள்நாட்டு சொகுசு கப்பல் ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்துதலுக்காக, ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
  - ✓ இது ஐஆர்சிடிசி இன் சுற்றுலா சேவைகளின் குடையின்கீழ் பொதுமக்களுக்காக வழங்கப்படும் மற்றொரு நம்ப முடியாத ஆடம்பர பயண சலுகையாகும்.

- **போஷான் அபியான் திட்டத்தின்கீழ் ஒரு மாதம் முழுவதும் நடைபெறும் "போஷான் மாஹ்' அல்லது தேசிய ஊட்டச்சத்து திட்டம்** - செப்டம்பர் மாதத்தில் நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.

- **தேசிய பால் அபிவிருத்தி வாரியம் (The National Dairy Development Board)** – கால்நடை ஆரோக்கியம், ஊட்டச்சத்து மற்றும் இனப்பெருக்கம் குறித்த நிகழ்நேர தகவல்களை பால் பண்ணை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக ஒரு டிஜிட்டல் தளத்தை அறிமுகப்படுத்தியது.

- **டிரான்ஸ் - 2022க்குள் கொழுப்பு இல்லாத நிலை**
  - ✓ இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் ஆய்வின்படி, இந்தியா அனைத்து நிலைகளிலும், 2022ஆம் ஆண்டுக்குள் தொழில்துறை டிரான்ஸ் கொழுப்பு இல்லாத நிலையை அடைவதற்காகவும், சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது.
  - ✓ இந்தியாவில், புதிதாக பரிசோதிக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவு மாதிரிகளில் 1.34 விழுக்காடு மட்டுமே அனுமதிக்கப்பட்ட பொருட்களின் அளவைவிட அதிகமாக உள்ளதாகக் காட்டுகிறது.
  - ✓ பான் இந்தியா கணக்கெடுப்பு முடிவுகளை மேற்கோள் காட்டி, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களில் தொழில்துறை டிரான்ஸ் கொழுப்புகளின் அதிகப்படியான பயன்பாடு உள்ளது என்ற கருத்தை நிராகரித்தது.
  - ✓ உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதலுக்கு ஒரு ஆண்டு முன்னதாக, 2022ஆம் ஆண்டுக்குள் தொழில்துறை ரீதியாக உற்பத்தி செய்யப்படும் டிரான்ஸ் கொழுப்புகளிலிருந்து இந்தியாவை விடுவிப்பதற்காக தொழில்துறை ரீதியாக உற்பத்தி செய்யப்படும் டிரான்ஸ் கொழுப்புகளின் வரம்பை 2 விழுக்காடாகக் குறைக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது.

- ஆயுஷ்மான் பாரத் பிரதமரின் ஜன் ஆரோக்கிய யோஜனா (**Ayushman Bharat Pradhan Mantri Jan Arogya Yojana)**
  - ✓ உலகின் மிகப்பெரிய சுகாதாரத் திட்டமாகிய ஆயுஷ்மான் பாரத் பிரதமரின் ஜன் ஆரோக்கிய யோஜனா மூன்று ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இதுசெப்டம்பர் 23, 2018 அன்று தொடங்கப்பட்டது.

- தேசிய டிஜிட்டல் சுகாதார இயக்கத்தை பிரதமர் மோடி தொடங்கி வைக்க உள்ளார்.
  - ✓ பிரதமர் நரேந்திர மோடி திங்களன்று (செப்டம்பர்27, 2021 அன்று) தேசிய டிஜிட்டல் சுகாதார இயக்கத்தை நாடு முழுவதும் அறிமுகப்படுத்துவார். இது பிரதமரின் டிஜிட்டல் சுகாதார இயக்கம் என மறுபெயரிடப்பட்டுள்ளது.
  - ✓ இதன்கீழ், மக்களுக்கு தனித்துவமான டிஜிட்டல் சுகாதார அடையாள எண் வழங்கப்படும். அதில் அந்த நபரின் அனைத்து சுகாதார பதிவுகளும் இருக்கும். ஆதார் மற்றும் பயனரின் கைபேசி எண் போன்ற விவரங்களைப் பயன்படுத்தி இந்த அடையாள எண் உருவாக்கப்படும்.

- **ஜவுளித் தொழிலுக்காக உற்பத்தி இணைந்த ஊக்கத் திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது**
  - ✓ ஜவுளித் தொழிலுக்காக உற்பத்தி இணைந்த ஊக்கத் திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. ஐந்து ஆண்டுகளில் ஜவுளித் தொழில்களுக்கு ரூ.10,683 கோடி மதிப்பிலான ஊக்கத் தொகையை அரசு வழங்கும்.
  - ✓ இது, மேலும் 7.5 இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு கூடுதல் நேரடி வேலைவாய்ப்புகளை உருவாக்கும். ஜவுளித் தொழிலுக்கான உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத் திட்டமானது, சுமார் 19,000 கோடிக்கு மேலான முதலீட்டைப் பெற்றுத் தரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
  - ✓ இந்தத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக அரசு ஒரு தேசிய தொழில்நுட்ப ஜவுளித் திட்டத்தையும் தொடங்கியுள்ளது.
  - ✓ இது, ஜவுளித் துறையில் முதலீட்டை ஊக்குவிக்கும் மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட இந்த நாரிழை பிரிவுக்கு உந்துதலை அளிக்கும்.

- ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது
  - ✓ ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இது தேசிய டிஜிட்டல் சுகாதார இயக்கம் என்றும் அழைக்கப்படுகிறது.

- ✓ இந்தத் திட்டம் முன்னோடி அடிப்படையில் 6 யூனியன் பிரதேசங்களில் அமல்படுத்தப்படுகிறது.
- ✓ ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தின் தொடக்கமானது ஆயுஷ்மான் பாரத் பிரதமரின் ஜன் ஆரோக்கிய யோஜனாவின் 3வது ஆண்டு விழாவுடன் சேர்ந்தே அமைந்துள்ளது.

➢ **செப்டம்பர் 29 அன்று, ஒன்றிய அரசு – அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சமைத்த சூடான உணவை வழங்குவதற்காக பிரதமரின் POSHAN திட்டத்தை அறிமுகப்படுத்தியது.**

- ✓ தற்போதுள்ள மதிய உணவுத் திட்டம் பிரதமரின் போஷான் சக்தி நிர்மாணத்திற்கான தேசிய திட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்படும்.
- ✓ இந்த மதிய உணவுத் திட்டம் ஆரம்பத்தில் 1995ல் நரசிம்மராவ் அரசால் தொடங்கப்பட்டது.
- ✓ இந்தத் திட்டம் அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளில் இயங்கும் முன்-தொடக்க அல்லது பால்வாடி பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

➢ **டிஜி சக்ஷம் திட்டம்**

- ✓ இந்திய அரசு இளைஞர்களிடையே டிஜிட்டல் கல்வியை ஊக்குவிக்கிறது. எனவே, அது 'டிஜி சக்ஷம்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் மற்றும் மைக்ரோசாப்ட் இந்தியா ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.
- ✓ 'ஆகா கான் கிராமப்புற ஆதரவு திட்டம் இந்தியா' (Aga Khan Rural Support Programme India) மூலம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

➢ **தூய்மை இந்தியா திட்டம் - நகர்ப்புறம் 2.0 மற்றும் அம்ருத் 2.0**

- ✓ பிரதமர் நரேந்திர மோடி தூய்மை இந்தியா இயக்கம் - நகர்ப்புறம் 2.0 மற்றும் புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் மிஷன் 2.0 திட்டங்களைத் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டங்கள் புது டெல்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கார் சர்வதேச மையத்தில் தொடங்கி வைக்கப்பட்டன.
- ✓ தூய்மை இந்தியா திட்டம் - நகர்ப்புறம் 2.0 மற்றும் அம்ருத் 2.0 ஆகிய இரண்டு திட்டங்களும் பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ளன.
- ✓ இந்த இரண்டு திட்டங்களும், நாட்டில் உள்ள அனைத்து நகரங்களையும் குப்பையில்லா மற்றும் தண்ணீர் பாதுகாப்பானதாக மாற்றும் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

➢ **பிரதமரின் போஷான் திட்டம்**

- ✓ ஒன்றிய அரசிடமிருந்து ரூ.54061.73 கோடி மற்றும் மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்களிடமிருந்து ரூ.31733.17 கோடி நிதி ஒதுக்கீட்டில், 2021-22 முதல் 2025-26 வரையிலான ஐந்தாண்டுகளில் 'பள்ளிகளில் பிரதமரின் போஷான்' திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ இந்தத் திட்டம் மூலம், நாடு முழுவதும் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு சூடாக சமைத்த உணவு கிடைக்கும்.
- ✓ தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மதிய உணவுத் திட்டம், பல புதிய கூறுகள் சேர்க்கப்பட்டு பிரதமரின் போஷான் சக்தி நிர்மான் திட்டத்துடன் இணைக்கப்படும்.

➢ **தூய கங்கைக்கான தேசிய இயக்கம் (TheNational Mission for Clean Ganga) –** நமாமி கங்கை – கங்கை புத்துயிர் திட்டத்தின் சின்னமாக பிரபலமான காமிக் புத்தக கதாபாத்திரமான 'சாச்சா சவுத்ரி' அறிவிக்கப்பட்டுள்ளது.

- ✓ தூய்மை கங்கைக்கான தேசிய இயக்கம், காமிக்ஸ், இ-காமிக்ஸ் மற்றும் அனிமேஷன் வீடியோக்களை உருவாக்குதல் மற்றும் விநியோகித்தலுக்காக, டயமண்ட் டூன்ஸ் உடன் கூட்டு சேர்ந்துள்ளது.

- **‘பிராணா (PRANA)**
  - ✓ ஒன்றிய சுற்றுச் சூழல், வனங்கள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் - சமீபத்தில் காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக, ஒரு தேசிய போர்ட்டலான ‘பிராணாவை’ அறிமுகப்படுத்தியுள்ளது.
  - ✓ பிராணா என்பது சமஸ்கிருதத்தில் ‘வாழ்க்கை’ என்று பொருள்படும். இது நாடு முழுவதும் 132 நகரங்களில் காற்று மாசுபாட்டை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு போர்ட்டல் ஆகும்.

- **அமேசான் எதிர்கால பொறியாளர்**
  - ✓ அமேசான் எதிர்கால பொறியாளரின் முக்கிய குறிக்கோள், மாணவர்களுக்கு நேரடித் தொடர்பு, கலப்பு மற்றும் ஆன்லைன் கற்றல் வடிவங்கள்மூலம் கணினி அறிவியல் கல்விக்கான ஆரம்ப வெளிப்பாடு மற்றும் அணுகலை வழங்குவதேயாகும்.

- **அக்டோபர் 7, 2021 அன்று உத்தரகாண்ட் மாநிலம் ரிஷிகேஷில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி வாயிலாக 35 பிரஷர் ஸ்விங் அட்சார்ப்ஷன் (Pressure Swing Adsorption) ஆக்சிஜன் ஆலைகளை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.**
  - ✓ இந்த 35 பிஎஸ்ஏ ஆக்சிஜன் ஆலைகளும் பிஎம் கேர்ஸ் நிதியின்கீழ் 35 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ளன.
  - ✓ இப்போது நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பிஎஸ்ஏ ஆக்ஸிஜன் ஆலைகள் தொடங்கப்பட்டிருக்கும்.
  - ✓ தரவுகளின் அடிப்படையில், நாடு முழுவதும் பிஎம்-கேர்ஸ் (பிரதமரின் குடிமக்கள் உதவி மற்றும் அவசரநிலை நிவாரணம்) நிதியின்கீழ் மொத்தம் 1,224 பிஎஸ்ஏ ஆக்சிஜன் ஆலைகள் இன்றுவரை நிதியளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 1,100க்கும் மேற்பட்ட ஆலைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. இவற்றின்மூலம் ஒரு நாளைக்கு 1,750 மெட்ரிக் டன் ஆக்சிஜன் உற்பத்தி செய்யப்படுகிறது.

- **ஏர் இந்தியா நிறுவனத்தில் 100 விழுக்காடு பங்குகளை டாடா நிறுவனம் வைத்திருக்கும்.**
  - ✓ டாடா நிறுவனம் ஏர் இந்தியாவின் 100 விழுக்காடு பங்குகளை வைத்திருக்கும். அதேபோல அதன் சர்வதேச குறைந்த விலைக் குழுவான ஏர் இந்தியா எக்ஸ்பிரஸில் 100 விழுக்காட்டையும் வைத்திருக்கும்.
  - ✓ மேலும், 141 விமானங்கள் மற்றும் 55 சர்வதேச விமானங்கள் உள்ளிட்ட 173 இடங்களின் நெட்வொர்க்கிற்கான அணுகல் தவிர ஏர் இந்தியா சாட்சின் (SATS) 50 விழுக்காடு தரை கையாளுதல் கூட்டு முயற்சியிலும் 50 விழுக்காட்டை வைத்திருக்கும்.
  - ✓ அத்துடன் ஏர் இந்தியா, இந்தியன் ஏர்லைன்ஸ் மற்றும் மஹாராஜா போன்ற முக்கியமான பிராண்டுகளின் உரிமையையும் டாடா வைத்திருக்கும்.

- **‘கவச குண்டலம்’ இயக்கம்**
  - ✓ மகாராஷ்டிரா மாநில அரசு, தினமும் 15 இலட்சம் பேருக்கு தடுப்பூசி போடும் இலக்குடன், ‘கவச குண்டலம்’ இயக்கம் என்ற ஒரு சிறப்பு கோவிட்-19 தடுப்பூசி இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.

- **ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் சுகாதார பலன்களுக்கான பேக்கேஜ் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.**
  - ✓ ஆயுஷ்மான் பாரத் என்று அழைக்கப்படும் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டமானது, இப்போது திருநங்கைகளுக்கும் மருத்துவ பாதுகாப்பை அளிக்கும். அத்துடன் பாலின மாற்று அறுவை சிகிச்சைகளுக்கும் ஆதரவு அளிக்கும்.
  - ✓ இந்தக் கூடுதல் சேர்க்கையானது தேசிய சுகாதார ஆணையத்தின் திருத்தப்பட்ட சுகாதார பலன்கள் பேக்கேஜ் அல்லது HBP 2.2 அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த சுகாதார பலன்கள் பேக்கேஜ் 2.2 ஆனது நவம்பர் 2021 முதல் செயல்பாட்டுக்கு வரும்.

- ✓ திருத்தப்பட்ட சுகாதார பலன்கள் பேக்கேஜ் 2.2ன்கீழ், சுகாதார பேக்கேஜ்களின் விலைகள் 20 விழுக்காடு முதல் 400 விழுக்காடு வரை அதிகரிக்கப்பட்டுள்ளன.

➢ **பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (Pradhan Mantri Jan Arogya Yojana) ஆனது, 53 கோடி பயனாளிகளுக்கு அனைத்து பொது மற்றும் பட்டியலிடப்பட்ட தனியார் மருத்துவமனைகளிலும் இலவச சிகிச்சைக்காக ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு 5 இலட்சம் ரூபாய் மருத்துவ காப்பீடு வழங்குகிறது.**

- ✓ 'விளிம்பு நிலை மக்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் நிறுவன ஆதரவு' என்ற அரசின் புதிய திட்டத்தின்கீழ் இந்த நன்மையானது இப்போது திருநங்கைகளுக்கும் விரிவுபடுத்தப்படும். திருநங்கைகளுக்கான மருத்துவ உதவி மற்றும் மருத்துவ சிகிச்சை ஆகியவை இந்தச் சுகாதாரக் காப்பீட்டில் அடங்கும்.

➢ **கதி சக்தி (Gatishakti)**

- ✓ பிரதமர் நரேந்திர மோடி – அக்டோபர் 13, 2021 அன்று நாட்டின் முதலாவது தேசிய உட்கட்டமைப்பு பெருந்திட்டமாகிய 'கதி சக்தி'யை வெளியிடுகிறார்.
- ✓ இந்தியாவின் 75வது சுதந்திர தினத்தன்று, 'முழுமையான உட்கட்டமைப்பை' மேம்படுத்துவதற்காக ரூ.100 இலட்சம் கோடி பெருந்திட்டமான 'பிஎம் கதி சக்தி பெருந்திட்டம்'ஐ மத்திய அரசு தொடங்கும் என்று பிரதமர் மோடி அறிவித்தார்.
- ✓ இந்த முயற்சியானது நாடு முழுவதும் உள்ள முக்கிய தொழில் நிறுவனங்களுக்கு இடையே இணைப்பை மேம்படுத்துவதையும், வேலைவாய்ப்பை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இந்த முனைப்புத் திட்டத்தின்கீழ், அனைத்து பொருளாதார மண்டலங்களும், உட்கட்டமைப்பு மேம்பாடுகளும் ஒரே ஒருங்கிணைந்த தளத்தின்கீழ் காட்டப்படும்.
- ✓ இது, போக்குவரத்து மற்றும் தளவாடங்களின் விரிவான மற்றும் ஒருங்கிணைந்த பல்முனை தேசிய நெட்வொர்க்குகளை ஊக்குவிக்கிறது.

➢ **பிரதமர் நரேந்திர மோடி - இந்திய விண்வெளி சங்கத்தை மெய்நிகராகத் தொடங்க உள்ளார்.**

- ✓ ***இந்திய விண்வெளி சங்கம் என்பது இந்திய விண்வெளித் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் விண்வெளி மற்றும் செயற்கைக்கோள் நிறுவனங்களின் முதன்மையான தொழில் சங்கமாகும்.***
- ✓ ***இந்த நிகழ்வின்போது, பிரதமர் விண்வெளித் துறையின் பிரதிநிதிகளுடனும் உரையாடுகிறார்.***
- ✓ ***இந்திய விண்வெளி சங்கம் கொள்கை முடிவுகளை எடுக்கும் மற்றும் அரசு மற்றும் அதன் முகமைகள் உட்பட இந்திய விண்வெளி களத்தில் உள்ள அனைத்து பங்குதாரர்களுடன் இணைந்து செயல்படும்.***

➢ **ZyCoV-D, இந்தியாவில் 12-17 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் பயன்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதல் தடுப்பூசி – அக்டோபரில் நாட்டின் கோவிட் தடுப்பூசி திட்டத்தின்போது அறிமுகப்படுத்தப்படும்.**

- ✓ இந்தத் தடுப்பூசி நாடு முழுவதும் உள்ள தனியார் துறை மருத்துவமனைகளுக்கும் கிடைக்கும்.
- ✓ அரசு மற்றும் தனியார் தடுப்பூசி மையங்களுக்கு 75:25 என்ற விகிதத்தில் தடுப்பூசியை வழங்கும் ஒன்றிய அரசின் கொள்கையானது இந்தத் தடுப்பூசிக்கும் பொருந்தும்.
- ✓ ஜைடஸ் காடிலியா நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஊசியில்லா இந்த ZyCoV-D தடுப்பூசியானது, இந்தியாவில் 12 முதல் 17 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு வழங்குவதற்கான அவசரகால பயன்பாட்டு அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
- ✓ இந்த மூன்று டோஸ் தடுப்பூசியை ஒவ்வொன்றுக்கும் இடையே 28 நாள் இடைவெளியுடன் போட வேண்டும்.

- **இரயில்வே துறையானது 'திரிசூல்', 'கருடா' ஆகிய இரண்டு நீண்ட தூர சரக்கு இரயில்களை அறிமுகப்படுத்தியது.**
    - ✓ இந்திய இரயில்வே துறையானது 'திரிசூல்', 'கருடா' ஆகிய இரண்டு நீண்ட தூர சரக்கு இரயில்களை அறிமுகப்படுத்தியது - இவை சரக்கு இரயில்களின் வழக்கமான கலவையைவிட இரண்டு மடங்கு அல்லது பல மடங்கு நீளமானது.

- **2 முதல் 18 வயதினருக்கு கோவாக்சின்**
    - ✓ மத்திய மருந்துகள் கட்டுப்பாட்டாளரின் இப்பொருள் நிபுணர் குழுவானது – 2 முதல் 18 வயதிற்குட்பட குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கு பாரத் பயோடெக்கின் கோவாக்சின் தடுப்பூசி மருந்தை கட்டுப்பாட்டுடன் கூடிய அவசர கால பயன்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - ✓ 12 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கான ஜைடஸ் ஹெல்த்கேர் இன் ஜைகோவி-டி-க்குப் பிறகு, இந்தியாவில் குழந்தைகளிடையே அவசரகாலப் பயன்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட இரண்டாவது கோவிட்-19 தடுப்பூசி கோவேக்சின் ஆகும்.
    - ✓ இந்த உள்நாட்டுத் தடுப்பூசியானது, முதல் மற்றும் இரண்டாவது டோசுக்கு இடையே 20 நாட்கள் இடைவெளியுடன் போடப்படும்.

- **ஒன்றிய அமைச்சரவை – அரசு மற்றும் தனியார் துறையில்** 100 புதிய அல்லது ஏற்கனவே உள்ள பள்ளிகளை பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ் உள்ள தன்னாட்சி அமைப்பான சைனிக் பள்ளி சங்கத்துடன் இணைக்கும் முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- **அடுத்த ஐந்தாண்டுகளில் தூய்மையான, குப்பைகள் அற்ற மற்றும் 100 விழுக்காடு சுத்தமான குடிநீரைப் பெறுவதற்காக நகர்ப்புறங்களுக்கான இரண்டு முக்கிய திட்டங்களுக்கு 4 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கீடு வழங்க ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.**
    - ✓ பிரதமர் நரேந்திர மோடி தூய்மை இந்தியா இயக்கம் (நகர்ப்புறம்) 2.0 மற்றும் அம்ருத் 2.0 ஆகிய இரண்டு திட்டங்களையும் அக்டோபர் 1ஆம் தேதி தொடங்கி வைத்தார்.
    - ✓ தூய்மை இந்தியா இயக்கத்தை (நகர்ப்புறம்) 2025-26 வரை தொடர்வதற்கும் ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
    - ✓ தூய்மை இந்தியா இயக்கம் (நகர்ப்புறம்) 2.0 இன் முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளில் ஒன்று, 15 கோடி டன் மரபுக் கழிவுகளின்கீழ் கிடக்கும் 14,000 ஏக்கர் பூட்டப்பட்ட நிலத்தை விடுவிப்பதற்காக அனைத்து மரபுவழி குப்பைகளையும் சரிசெய்வதே ஆகும்.
    - ✓ இந்த தூய்மை இந்தியா இயக்கம் (நகர்ப்புறம்), திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத விளைவுகளின் நிலைத்தன்மை, திடக் கழிவுகளை அறிவியல்பூர்வமாக செயலாக்குதல் மற்றும் ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்களில் கழிவுநீரை நிர்வகித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

- **பிரதமர் மோடி, தசரா தினத்தன்று 7 புதிய பாதுகாப்பு நிறுவனங்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார்**
    - ✓ பிரதமர்நரேந்திர மோடி, 15 அக்டோபர் 2021 விஜயதசமி அன்று ஏழு புதிய பாதுகாப்பு நிறுவனங்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
    - ✓ புதிய நிறுவனங்கள்: மியனிஷென்ஸ் இந்தியா லிமிடெட்
    - ✓ கவச வாகனங்கள் நிகாம் லிமிடெட் (Armoured Vehicles Nigam Limited)
    - ✓ மேம்பட்ட ஆயுதங்கள் மற்றும் கருவிகள் இந்தியா லிமிடெட்
    - ✓ ட்ரூப் கம்ஃபோர்ட்ஸ் லிமிடெட் (Troop Comforts Limited)
    - ✓ யந்த்ரா இந்தியா லிமிடெட்
    - ✓ இந்தியா ஆப்டெல் லிமிடெட், மற்றும்
    - ✓ கிளைடர்ஸ் இந்தியா லிமிடெட்

- **நல்ல மேய்ப்பர்கள் (Good Samaritans)**

- ✓ ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் - சமீபத்தில் 'நல்ல மேய்ப்பர்களுக்கு வெகுமதி' திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், சாலை விபத்தில் பாதிக்கப்பட்ட நபரின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு, விபத்து நடந்த 'பொன்மணி நேரத்திற்குள்' அவரை மருத்துவமனையில் கொண்டு போய் சேர்க்கும் எந்த ஒரு நபருக்கும் ரூ.5,000 ரொக்கப்பரிசு வழங்கப்படும்.

➢ **இந்தியா – 21 அக்டோபர் 2021 அன்று 100 கோடி டோஸ் தடுப்பூசி என்ற மைல்கல்லை நிறைவு செய்தது**

- ✓ 100வது கோடி தடுப்பூசியை அருண்குமார் ராய்க்கு எஸ். கிறிஸ்டினா செலுத்திய அன்று, பிரதமர் நரேந்திர மோடி டெல்லியில் உள்ள ராம் மனோகர் லோஹியா மருத்துவமனையில் இருந்தார்.

➢ **அம்ரித் மஹோத்சவத்தின் ஒரு பகுதியாக 15 சக்ஷம் மையங்கள் தொடங்கப்பட்டன.**

- ✓ அக்டோபர் 2021 இல் தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 13 மாநிலங்களின் 77 மாவட்டங்களில் மொத்தம் 152 நிதி கல்வியறிவு மற்றும் சேவை வழங்கல் மையங்கள் (சக்ஷம் மையங்கள்) தொடங்கப்பட்டன.

➢ **நித்தி ஆயோக் அமைப்பு, அடல் புதுமை இயக்கம் டிஜி-புத்தகத்தை அறிமுகப்படுத்தியது**

- ✓ நித்தி ஆயோக்கின் அடல் புதுமை இயக்கம் - உங்களுக்கான கண்டுபிடிப்புகள்-ஐ தொடங்கி வைத்தது.
- ✓ இது அடல் புதுமை இயக்கத்தின் பல்வேறு களங்களில் தொடக்கநிலை அமைப்புகளின் வெற்றிக் கதைகளை காண்பிக்கும் முயற்சியே ஆகும்.
- ✓ இந்தப் புத்தகத்தின் முதல் பதிப்பு சுகாதாரப் பாதுகாப்பில் உள்ள புதுமைகளை மையமாகக் கொண்டது. விரைவில் மற்ற துறைகளும் பின்பற்றும்.
- ✓ இந்தப் புத்தகமானது அடல் இன்குபேஷன் மையங்களில் உருவாக்கப்பட்ட 45 சுகாதாரத் தொழில்நுட்ப தொடக்க நிலை நிறுவனங்களில் தொகுப்பாகும்.

➢ டெல்லி அரசு ரோஜ்கர் பஜார் 2.0 ஐ தொடங்க உள்ளது

- ✓ டெல்லி அரசு ரோஜ்கார் பஜார் 2.0 போர்ட்டலை உருவாக்கத் தயாராக உள்ளது. இது தேசிய தலைநகரில், இளைஞர்களுக்கான நுழைவு நிலை வேலைகளுக்கான பொருந்தக்கூடிய தளமாக இருக்கும்.

➢ **சோதனைக் குழாய் வழியாக செயற்கைக் கருத்தரிப்பு முறையில் இந்தியாவின் முதலாவது 'பன்னி' எருமை கன்று ஈன்றது**

- ✓ கிர் சோம்நாத்தில் உள்ள தனேஜ் கிராமத்தைச் சேர்ந்த பால் பண்ணையாளருக்குச் சொந்தமான 'பன்னி' எருமை ஒன்று சோதனைக் குழாய் வழியாக செயற்கைக் கருத்தரிப்பு முறையில் ஒரு ஆண் கன்றுக்குட்டியை ஈன்றது. ஒன்றிய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகம், இன் விட்ரோ செயற்கைமுறை கருவூட்டலைப் (in-vitro fertilisation) பயன்படுத்தி பிறந்த இந்த இனத்தின் முதலாவது கன்று என்று அறிவித்தது. (24.10.2021)

➢ **கூழாங்கல்**

- ✓ பி.எஸ். வினோத்ராஜின் தமிழ்த் திரைப்படமான 'கூழாங்கல்' – ஆஸ்கார் விருதுகள் 2022க்கான சிறந்த சர்வதேச திரைப்படப் பிரிவிற்கான இந்திய நுழைவுத் தேர்வாக ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

➢ சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கிருஷி உடான் 2.0- ஐ அறிமுகப்படுத்தினார்.

- ✓ சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம், அக்டோபர் 27, 2021 அன்று 'கிருஷி உடான் 2.0 திட்டத்தை' அறிமுகப்படுத்தியது.

- ✓ ‘கிருஷி உடான் 2.0’ திட்டத்தின்கீழ், மலைப்பாங்கான, பழங்குடியினர் வசிக்கும் மற்றும் வடகிழக்கு பிராந்தியங்களில் உள்ள விமான நிலையங்களில் சரக்கு தொடர்பான உட்கட்டமைப்பு ஏற்படுத்தப்படும். இந்த உட்கட்டமைப்பு வசதிகள் விவசாயிகளுக்கு வேளாண் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு உதவும்.
- ✓ கிருஷி உடான் 2.0 திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட விமான நிலையங்களில் விமான நிலைய கட்டணங்களை முழுமையாகத் தள்ளுபடி செய்வதற்கு ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.
- ✓ வேளாண் சரக்குகள், சுமந்து செல்லும் மொத்த எடையில் 50 விழுக்காட்டிற்கும் குறைவாக இருந்தாலும் தள்ளுபடி வழங்கப்படும்.

➢ **‘ஹர் கர் தஸ்தக் (Har Ghar Dastak) பிரச்சாரம் தொடங்கி வைக்கப்பட உள்ளது**

- ✓ கோவிட் தடுப்பூசி போடும் பணியில் மோசமாக செயல்படும் மாவட்டங்களில் கோவிட்-19 தடுப்பூசியை அதிகரிப்பதற்காக ஒன்றிய அரசு ‘ஹர் கர் தஸ்தக்’ பிரச்சாரத்தைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

➢ **2070ஆம் ஆண்டுக்குள் ‘நிகர பூஜ்ஜிய’ இலக்கு (Net zero goal)**

- ✓ பிரதமர் நரேந்திர மோடி – 2030க்குள் புதுப்பிக்கத்தக்க மற்றும் பசுமை இல்ல வாயுக்களைக் குறைப்பதற்கான முக்கிய இலக்குகளுடன் 2070க்குள் ‘நிகர பூஜ்ஜிய’ இலக்கினமூலம் இந்தியாவை ‘கார்பன் நியூட்ரல்’ நாடாக மாற்ற உறுதி பூண்டுள்ளார்.
- ✓ நாட்டிற்கு இப்படி ஒரு ‘நிகர பூஜ்ஜிய இலக்கு நிர்ணயிக்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.

➢ **கங்கா உத்சவ் 2021இன் ஐந்தாவது பதிப்பு**

- ✓ மூன்று நாட்கள் நடைபெறும் கங்கா உத்சவின் 5வது பதிப்பை நவம்பர் 01 முதல் 03, 2021 வரை மெய்நிகராக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ ‘கங்கா உத்சவ் 2021 – ஆற்றுத் திருவிழா’ கங்கை ஆற்றின் பெருமையை மட்டும் போற்றும் திருவிழா அல்ல, ஆனால் நாட்டின் அனைத்து ஆறுகளுக்கும் ‘நதி உத்சவ்’ (ஆற்றுத் திருவிழா) கொண்டாடுவதை ஊக்குவிக்கும்.
- ✓ நவம்பர் 04, 2008 அன்று கங்கை நதி ‘தேசிய நதியாக’ அறிவிக்கப்பட்டதன் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், ஜல் சக்தி அமைச்சகத்துடன் இணைந்து தூய்மை கங்கைக்கான தேசிய இயக்கம் (National Mission for Clean Ganga) இந்த ஆண்டு விழாவுக்கு ஏற்பாடு செய்துள்ளது.
- ✓ 2021ஆம் ஆண்டு கொண்டாட்டங்கள் சுதந்திரத்தின் 75 ஆண்டுகள் மற்றும் ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இருக்கும்.

➢ இந்தியாவும் உலக வங்கியும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன – மேகாலயாவில் சுகாதார அமைப்பை வலுப்படுத்துவதற்காக

➢ இந்திய அரசும், உலக வங்கியும் மேகாலயாவில் சுகாதார சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக 40 மில்லியன் டாலர் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

➢ இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், கோவிட்-19 தொற்றுநோய் போன்ற எதிர்கால சுகாதார அவசர நிலைகளைக் கையாளும் அரசின் திறனை வலுப்படுத்தும். இந்தத் திட்டம் ‘மேகாலயா சுகாதார அமைப்புகளை வலுப்படுத்தும் திட்டம்’ என அழைக்கப்படுகிறது.

➢ **ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் இந்தியாவில் துணை நிறுவனத்தை ஒருங்கிணைக்கிறது.**

- ✓ எலோன் மஸ்கிற்குச் சொந்தமான ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், உள்ளூரில் அகண்ட அலைவரிசை சேவைகளைத் தொடங்குவதற்காக நவம்பர் 1, 2021 அன்று இந்தியாவில் அதற்கு முழுச் சொந்தமான துணை நிறுவனத்தை இணைத்துள்ளது.

- ✓ ஸ்பேஸ் எக்ஸின் செயற்கைக் கோள் அகண்ட அலைவரிசைப் பிரிவான ஸ்டார்லிங்க், இந்தியாவில் அகண்ட அலைவரிசைச் சேவைகளை டிசம்பர் 2022 முதல் தொடங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது இந்திய அரசின் அனுமதிக்கு உட்பட்டு 2 இலட்சம் செயல் டெர்மினல்களைக் கொண்டுள்ளது.

## ➢ நியூமோகாக்கல் 13 வேலண்ட் காஞ்சுகேட் தடுப்பூசி (Pneumococcal 13-valent Conjugate Vaccine)

- ✓ அரசு, நியூமோகாக்கல் 13 – வேலண்ட் காஞ்ஜுகேட் தடுப்பூசியின் நாடு தழுவிய விரிவாக்கத்தைத் தொடங்கியுள்ளது. இது 'ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்' (Azadi ka Amrit Mahotsav) இன் ஒரு பகுதியாக அனைவருக்குமான நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் (Universal Immunisation Programme) உள்ளது. நாட்டிலேயே முதன் முறையாக இந்த நியூமோகாக்கல் 13 வேலண்ட் காஞ்ஜுகேட் தடுப்பூசி அனைவரது பயன்பாட்டிற்கும் கிடைக்கும். இந்த நியூமோகாக்கல் 13 வேலண்ட் காஞ்ஜுகேட் தடுப்பூசியானது நியூமோகாக்கல் நோயை ஏற்படுத்தும் 13 வகை பாக்டீரியாக்களுக்கு எதிராக நம்மைப் பாதுகாக்கிறது.

## ➢ எக்ஸ்ட்ரா கிரீன் (XtraGreen)

- ✓ நவம்பர் 2 அன்று, இந்தியன் ஆயில் - நாட்டின் 63 நகரங்களில் உள்ள 126 எரிபொருள் நிலையங்களில் தூய்மையான மற்றும் பசுமையான டீசலாகிய 'எக்ஸ்ட்ரா கிரீன்'ஐ அறிமுகப்படுத்தியது மற்றும் இந்தியன் ஆயிலின் எரிபொருள் பரிசு அட்டையான ஒன்4யு-ஐயும் (One4U) அறிமுகப்படுத்தியது
- ✓ நாட்டை பசுமையான எதிர்காலத்தை நோக்கி நகர்த்துவது, கார்பன் வெளியேற்றத்தைத் தொடர்ந்து குறைப்பது மற்றும் 2070க்குள் நிகர-பூஜ்ஜிய இலக்கை படிப்படியாக அடைவது போன்ற பிரதமரின் உறுதிப்பாட்டுடன் எக்ஸ்ட்ரா கிரீன் அறிமுகம் ஒத்திசைக்கப்பட்டுள்ளது. .

## ➢ தீன்தயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம் (Deendayal Antyodaya Yojana – National Rural Livelihood Mission)

- ✓ கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் - வால்மார்ட்டுக்குச் சொந்தமான ஃபிளிப்கார்ட் நிறுவனத்துடன் அதிகமான பெண் வணிகர்களை மின் வணிக பணிக்குள் கொண்டு வருவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ✓ இந்தியாவின் உள்நாட்டு மின்-வணிக சந்தையான ஃபிளிப்கார்ட், தீன்தயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ் நவம்பர் 2 அன்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ✓ இந்த ஒப்பந்தம் உள்ளூர் வணிகங்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களை – குறிப்பாக பெண்களால் வழிநடத்தப்படும் சுயஉதவிக் குழுக்களை – மின்-வணிக பணிக்குள் கொண்டு வருதன்மூலம் அவர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது கிராமப்புற பெண்கள் தங்கள் தயாரிப்புகளை 10 கோடிக்கும் அதிகமான ஃபிளிப்கார்ட் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கு உதவும்.

## ➢ காலநிலை சமபங்கு கண்காணிப்பு (Climate Equity Monitor)

- ✓ இந்தியா - ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோவில் COP 26 உச்சி மாநாட்டைத் தொடங்குவதற்கு முன்னதாகவே, 'காலநிலை சமபங்கு கண்காணிப்பு' என்ற ஒரு ஆன்லைன் டேஷ்போர்டை அறிமுகப்படுத்தியது.
- ✓ காலநிலை சமபங்கு கண்காணிப்பானது, காலநிலை நடவடிக்கையில் சமத்துவம், உமிழ்வுகளில் ஏற்றத்தாழ்வுகள், உலகம் முழுவதும் ஆற்றல் மற்றும் வளநுகர்வு மற்றும் பல நாடுகளின் தற்போதைய காலநிலை கொள்கைகளை மதிப்பிடும்.

- ✓ காலநிலை சமபங்கு கண்காணிப்பானது, காலநிலை மாநாட்டின் அடிப்படைக் கொள்கைகளின் அடிப்படையில் UNFCCC (UN Framework Convention on Climate Change) இன்கீழ், இணைப்பு 1 தரப்புகளின் (வளர்ந்த நாடுகள்) செயல்திறனைக் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ கரீப் கல்யாண் ஆன் யோஜனா (Garib Kalyan Ann Yojana)

- ✓ நவம்பர் 5 அன்று, உணவு அமைச்சகம் - பிரதமரின் கரிப் கல்யாண் ஆன் யோஜனா திட்டத்தை நவம்பர் 30, 2021க்கு அப்பால் நீட்டிக்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை என்று கூறியது.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், கிட்டத்தட்ட 80 கோடி மக்கள் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மானிய விலையில் பெறும் 5 கிலோவுக்கு மேல் மேலும் 5 கிலோ உணவு தானியங்களை மாதந்தோறும் பெற்றனர்.
- ✓ தொடக்கத்தில், கோவிட்-19 பெருந்தொற்று முதல் அலையின்போது புலம்பெயர்ந்தோர் மற்றும் ஏழைகளுக்கு விரைவான நிவாரணம் வழங்குவதற்காக பிரதமரின் கரீப் கல்யாண் ஆன் யோஜனா திட்டத்தின்கீழ் கூடுதல் இலவச உணவு தானியங்கள் மூன்று மாதங்களுக்கு (ஏப்ரல் - ஜூன் 2020) வழங்கப்பட்டன.
- ✓ இந்தத் திட்டம் மீண்டும் ஐந்து மாதங்களுக்கு நவம்பர் 2020 வரை நீட்டிக்கப்பட்டது.
- ✓ இரண்டாவது அலை தொடங்கிய பிறகு, இந்தத் திட்டம் மீண்டும் இரண்டு மாதங்களுக்கு (மே-ஜூன் 2021) தொடங்கப்பட்டது. பின்னர் நவம்பர் இறுதி வரை நீட்டிக்கப்பட்டது.

## ➢ சட்ட அளவியல் (சிப்பமிடப்பட்ட பொருட்கள் விதிகள்) [Legal Metrology (Packaged Commodities) Rules]

- ✓ அடுத்த ஆண்டு ஏப்ரல் முதல் பொருட்களை பேக்கேஜிங் செய்வதற்கான புதிய விதிகள் - சட்ட அளவில் (சிப்பமிடப்பட்ட பொருட்கள்) விதிகளை – அரசு செயல்படுத்த உள்ளது.
- ✓ இது, எந்தவொரு பேக்கிங் செய்யப்பட்ட பொருளை வாங்கும் முன் சரியான முடிவுகளை எடுப்பதற்கு வாடிக்கையாளர்களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ புதிய விதிகளின்படி, உற்பத்தியாளர்கள் அதிகபட்ச சில்லறை விலையுடன் கூடுதல் உறுதிமொழிகளைச் சேர்க்க வேண்டும்.
- ✓ ஒரு கிலோ அல்லது ஒரு லிட்டருக்கு மேல் எடையுள்ள பொருட்களுக்கு ஒரு கிலோ அல்லது ஒரு லிட்டருக்கும், ஒரு கிலோ அல்லது ஒரு லிட்டருக்கும் குறைவான பொருட்களுக்கு ஒரு கிராம் அல்லது மில்லி லிட்டருக்கும் - பொருட்களின் அலகுகளுக்கான விலையை அவர்கள் குறிப்பிட வேண்டும்.

## ➢ இந்தியாவின் 52வது சர்வதேச திரைப்பட விழா (The *52nd International Film Festival of India)*

- ✓ இந்தியாவின் 52வது சர்வதேச திரைப்பட விழா – கோவாவில் நவம்பர் 20 முதல் 28 வரை நடைபெறுகிறது.
- ✓ இந்த விழாவை இந்திய திரைப்பட விழா இயக்கநரகம், தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், கோவா மாநில அரசுடன் இணைந்து நடத்துகிறது.
- ✓ இந்தியாவின் அதிகாரபூர்வ ஆஸ்கார் நுழைவாகிய, கூழாங்கல் தமிழ் திரைப்படம், இந்தியாவின் சர்வதேச திரைப்பட விழாவில் இந்திய பனோரமா பிரிவில் திரையிடப்படும்.

- **சைடஸ் கடிலாவின் மூன்று டோஸ் கோவிட் தடுப்பூசி – சைகோவி-டி (ZyCoV-D**

✓ சுகாதார அமைச்சகம் - சைடஸ் கடிலாவின் (Zydus Cadila) மூன்று டோஸ் கோவிட் தடுப்பூசி சைகோவி-டி-யின் ஒரு கோடி டோஸ்களுக்கான கொள்முதல் ஆணையை, ஜிஎஸ்டி நீங்கலாக ஒரு டோஸ் ரூ.358 என்ற விலையில் வழங்கியுள்ளது.

✓ சைகோவி-டி – உலகின் முதல் பிளாஸ்மிட் டிஎன்ஏ தடுப்பூசியானது – பூஜ்ஜியம் நாள், 28வது நாள் மற்றும் 56வது நாள் ஆகிய மூன்று நாட்களில் போடப்படும் மூன்று டோஸ் தடுப்பூசி ஆகும்.

✓ சைகோவி-டி என்பது 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினருக்கு தடுப்பூசி போடுவதற்காக இந்தியாவின் மருந்து கட்டுப்பாட்டாளரால் அனுமதி அளிக்கப்பட்ட முதல் தடுப்பூசி ஆகும்.

- **கிஷோர் வைக்யானிக் ப்ரோட்சஹன் யோஜனா (Kishore Vaigyanik Protsahan Yojana)**

✓ ஒன்றிய அரசு – கிஷோர் வைக்யானிக் ப்ரோட்சஹன் யோஜனா என்ற ஒன்றிய அரசின் உதவித் தொகை திட்டத்திற்கான தகுதித் தேர்வை அனைத்து 22 அதிகாரபூர்வ மொழிகளிலும் நடத்துவதாக சென்னை உயர்நீதி மன்றத்தில் தெரிவித்துள்ளது.

✓ முன்னதாக, ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே நடத்தப்படும் என்றிருந்ததால், நவம்பர் 7ஆம் தேதி நடைபெறவிருந்த தேர்வுகளை நடத்தவிடாமல் சென்னை உயர்நீதி மன்றம் தடை விதித்தது.

✓ கிஷோர் வைக்யானிக் ப்ரோட்சஹன் யோஜனா என்பது இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் நிதியளிக்கப்படும் அடிப்படை அறிவியல் உதவித் தொகை தேசியத் திட்டமாகும்.

- **ஆயுஷ்மான் பாரத் - டிஜிட்டல் இயக்கம் (Ayushman Bharat-Digital Mission)**

✓ **சுகாதார அமைச்சகம் அனைத்து மருத்துவ வசதிகளையும் டிஜிட்டல் முறையில் பதிவு செய்யத் தொடங்கியுள்ளது.**

✓ **நவம்பர் 10, 2021 அன்று, ஒன்றிய அரசின் சுகாதார அமைச்சகம் அனைத்து மருத்துவ வசதிகளையும், அனைத்து மருத்துவர்களையும், ஆயுஷ்மான் பாரத்-டிஜிட்டல் இயக்கம் திட்டத்தின்கீழ் அவர்களின் சுகாதாரப் பதிவுகளை டிஜிட்டல்மயமாக்குவதற்காக டிஜிட்டல் பதிவு செய்யத் தொடங்கியுள்ளது.**

✓ **ஆயுஷ்மான் பாரத் -டிஜிட்டல் இயக்கத்தின்கீழ், ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் தனிப்பட்ட சுகாதார அடையாள எண் கொடுக்கப்படும். அது ஒரு தனிநபரின் அனைத்து தனிப்பட்ட சுகாதாரப் பதிவுகளையும் சேமிக்கும்.**

✓ **இந்த இயக்கம், டிஜிட்டல் சுகாதார சுற்றுச் சூழலுக்குள் இயங்கக் கூடிய தன்மையை உருவாக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.**

- **கோவிட் - 96 நாடுகள் - இந்தியாவின் தடுப்பூசிச் சான்றிதழை அங்கீகரித்துள்ளன.**

✓ ஒன்றிய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியாவின் கூற்றுப்படி, சுமார் 96 நாடுகள் இந்தியாவின் கோவிட்-19 தடுப்பூசிச் சான்றிதழை பரஸ்பரம் அங்கீகரிக்க ஒப்புக் கொண்டுள்ளன.

✓ இந்தியா இதுவரை சுமார் 109.08 கோடி தடுப்பூசிகளைப் போட்டுள்ளது.

- **நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (Member of Parliament Local Area Development Scheme)**

- ✓ அரசு – நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தை மீண்டும் கொண்டு வருவதற்கு முடிவு செய்துள்ளது.
- ✓ 2020-21 மற்றும் 2021-22 நிதியாண்டின்போது கோவிட்-19க்கு எதிரான போராட்டத்தில் நிதியைப் பயன்படுத்தக்கூடிய வகையில் இந்தத் திட்டம் ஏப்ரல் 2020இல் இடைநிறுத்தப்பட்டது.
- ✓ 2021-22 ஆம் ஆண்டுக்கான வளர்ச்சிப் பணிகளுக்காக ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ரூ.2 கோடி பெறுவார்.
- ✓ அடுத்த நிதியாண்டு முதல் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் நிர்ணயிக்கப்பட்டவாறு ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

- ➢ சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் சிவில் விமானப் போக்குவரத்துக்கான மின்-ஆளுகையைத் தொடங்கி வைத்தார்.
- ➢ சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஜோதிர் ஆதித்ய சிந்தியா சிவில் விமானப் போக்குவரத்துக்கான மின் ஆளுகை (e-Governance for Civil Aviation) என்ற ஆன்லைன் தளத்தைத் தொடங்கி வைத்தார்.
- ➢ இது பைலட் உரிமம் மற்றும் மருத்துவப் பரிசோதனை உள்ளிட்ட 298 சேவைகளை வழங்குவதற்கான ஒரு மின் ஆளுமை தளமாகும்.
- ➢ இந்தப் போர்ட்டலானது தகவல்களைப் பரப்புவதற்கும், பாதுகாப்பான சூழலில் ஆன்லைனில் விரைவான சேவை வழங்குவதற்கும் ஆகும்.

- ➢ **இந்திய பருத்திக் கழகம்**
- ✓ **இந்திய பருத்திக் கழகத்திற்கு விலை ஆதரவு வழங்க ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.**
- ✓ **நவம்பர் 10, 2021 அன்று பொருளாதார விவகாரங்களுக்கான கேபினட் கமிட்டி, இந்திய பருத்திக் கழகத்திற்கு ரூ.17,408 கோடிக்கு மேலான விலை ஆதரவுக்கு ஒப்புதல் அளித்தது.**
- ✓ **அக்டோபர் 2014-15 முதல் செப்டம்பர் 2020-21 வரையிலான பருத்திப் பருவங்களில் பருத்திக்கான எம்எஸ்பி (MSP) செயல்பாடுகளின்கீழ் ஏற்படும் இழப்பை ஈடுசெய்வதற்கான செலவினங்களை பொருளாதார விவகாரங்களுக்கான கேபினட் கமிட்டி அங்கீகரித்துள்ளது.**

- ➢ **எத்தனால் கலந்த பேட்ரோல் திட்டம்**
- ✓ **எத்தனால் கலந்த பெட்ரோல் திட்டத்தின்கீழ் எத்தனால் விலையை உயர்த்துவதற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.**
- ✓ **நவம்பர் 10, 2021 அன்று பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, இந்தியாவில் மேம்பட்ட உயிரி எரிபொருள் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு வசதியாக எத்தனால் கலந்த பெட்ரோல் திட்டத்தின்கீழ் 2020-21 சர்க்கரைப் பருவத்திற்கான பல்வேறு கரும்பு அடிப்படையிலான மூலப்பொருட்களிலிருந்து பெறப்பட்ட அதிக எத்தனால் விலையை அனுமதித்தது.**

- ➢ நோரோ வைரஸ் தொற்று
- ✓ இந்தியாவில் - கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் உள்ள வைத்திரி அருகேயுள்ள பூக்கோடு கால்நடை மருத்துவக் கல்லூரியில் 13 மாணவர்களுக்கு அரிய நோரோவைரஸ் நோய்த் தொற்றின் முதல் நேர்வு பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ✓ நோரோவைரஸ் என்பது மிகவும் தொற்றக்கூடிய வைரஸ் ஆகும். இது வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கை ஏற்படுத்தக் கூடியது மற்றும் எல்லா வயதினருக்கும் பரவக் கூடியதாகும்.
- ✓ இது அசுத்தமான நீர் மற்றும் உணவு மூலம் பரவும் ஒரு விலங்கு மூலம் பரவும் நோயாகும். இதனால் இரைப்பை குடல் நோய் ஏற்படுகிறது.

## ➢ நடமாடும் தொலை சட்ட உதவி (Tele-Law on Wheels)

- ✓ நீதித்துறை – 2021 நவம்பர் 8 முதல் 14 வரை ஒரு வாரம் முழுவதும், 'நடமாடும் தொலை சட்ட உதவி' என்ற பிரச்சாரத்தை நடத்துகிறது.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், அருகிலுள்ள பொது சேவை மையங்கள் அல்லது தொலை சட்ட சேவைகளை வழங்கும் பொது சேவை மையங்களுக்குச் சென்று, தொலை மற்றும் காணொலி காட்சி வசதிகள் மூலம் தேவைப்படுபவர்கள் சட்ட ஆலோசனை மற்றும் ஆலோசனையைப் பெறலாம்.
- ✓ இந்தப் பிரச்சாரத்தை ஊக்குவிப்பதற்காக, பிரச்சார செய்தியைக் காண்பிக்கும் சிறப்பு நடமாடும் ஊர்திகள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன.

## ➢ நித்தி ஆயோக் (NITI Aayog)

- ✓ ஒன்றிய அரசின் சிந்தனைக் குழுவான நித்தி ஆயோக் - செப்டம்பர் மாதத்திற்கான கல்வித் துறையில் முதல் ஐந்து மாவட்டங்களை அறிவித்துள்ளது.
- ✓ இந்த ஆர்வமுள்ள மாவட்டங்கள் திட்டம் 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- ✓ நாடு முழுவதிலும் உள்ள மிகவும் வளர்ச்சியடையாத 112 மாவட்டங்களை மாற்றுவதை இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, விவசாயம் மற்றும் நீர்வளம், நிதி உள்ளடக்கம், திறன் மேம்பாடு மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு ஆகிய ஆறு வளர்ச்சித் துறைகளில் அவர்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தை, ஆர்வமுள்ள மாவட்டங்களுக்கான 'டெல்டா தரவரிசை' அளவிடுகிறது.

## ➢ அவசரச் சட்டங்கள்

- ✓ நவம்பர் 14ஆம் தேதி, ஒன்றிய அரசு – அமலாக்க இயக்குநரகம் மற்றும் மத்திய புலனாய்வுத் துறை தலைவர்களின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிப்பதற்கான இரண்டு அவசரச் சட்டங்களை வெளியிட்டது.
- ✓ முன்னதாக, ஒன்றிய முகமையின் தலைவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டனர். குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கையெழுத்திட்ட இரண்டு அவசரச் சட்டங்கள், முறையே அமலாக்கத்துறை மற்றும் மத்திய புலனாய்வுத் துறையை நிர்வகிக்கும் மத்திய விழிப்புப் பணிகள் ஆணையச் சட்டம் மற்றும் டெல்லி சிறப்புக் காவல் ஸ்தாபனச் சட்டம் ஆகியவற்றைத் திருத்துகின்றன.

## ➢ புல் காப்பகம் (Grass Conservatory)

- ✓ இந்தியாவின் முதலாவது புல் காப்பகம் உத்தராகண்ட்டின் அல்மோரா மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- ✓ இந்தியாவின் முதல் புகல் பாதுகாப்பு மையம் உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள ராணிகேட்டின் காளிகா வன ஆராய்ச்சி மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- ✓ அனைத்து பூக்கும் தாவரங்களிலும் புல் அதன் சத்தான தானியங்கள் மற்றும் மண்ணை உருவாக்கும் செயல்பாடு காரணமாக பொருளாதார ரீதியாக முக்கியமானது.

## ➢ வரி பகிர்வு

- ✓ ஒன்றிய அரசு, இந்த மாதம் 95 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மாநிலங்களுக்கு வரியைப் பகிர்ந்தளிக்க முடிவு செய்துள்ளது.
- ✓ ஒன்றிய அரசு, மாநிலங்கள் தனது மூலதனச் செலவினங்களை மேற்கொள்ள ஏதுவாக ஒரு முன்பணத் தவணையைச் சேர்த்து, நடப்பு மாதத்தில் 95 ஆயிரத்து

82 கோடி ரூபாயை வரிப் பகிர்வாக மாநிலங்களுக்கு வழங்கும் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

## ➢ பூமி சம்வாத் (Bhumi Samvaad)

- ✓ ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (Rural Development and Panchayati Raj) அமைச்சர் கிரிராஜ் சிங், 'பூமி சம்வாத்'ஐ தொடங்கி வைத்தார்.
- ✓ இது டிஜிட்டல் இந்தியா நிலப் பதிவேடு நவீனமயமாக்கல் திட்டத்தின் தேசியப் பயிலரங்கமாகும்.

## ➢ ராஷ்ட்ர ரக்ஷா சம்பர்பன் பர்வ் (Rashtra Raksha SamparpanParv)

- ✓ ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக உத்தரப் பிரதேச மாநிலம் ஜான்சியில் மூன்று நாள் ராஷ்ட்ர ரக்ஷா சம்பர்பன் பர்வ் நடைபெறுகிறது.
- ✓ நவம்பர் 19ஆம் தேதி, ராணி லக்ஷ்மிபாயின் பிறந்த நாள் ஆகும். இவர் வீரம் மற்றும் தைரியத்தின் உருவகம் மற்றும் ராஷ்டிர ரக்ஷா மற்றும் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் சிறந்த தேசிய சின்னமும் ஆவார்.

## ➢ உலகளாவிய சேவை கடமை நிதி (Universal Service Obligation Fund)

- ✓ நவம்பர் 17 அன்று, ஒன்றிய அமைச்சரவை - இதுவரை சேவை வழங்கப்படாத 7,287 கிராமங்களில் மொபைல் இணைப்பை வழங்குவதற்காக உலகளாவிய சேவை கடமை நிதியைப் பயன்படுத்த அனுமதி அளித்துள்ளது.
- ✓ ஆந்திரப் பிரதேசம், சத்தீஷ்கர், ஜார்கண்ட், மகாராஷ்டிரா மற்றும் ஒடிசா ஆகிய ஐந்து மாநிலங்களில்உள்ள 44 ஆர்வ மாவட்டங்களின் இந்த வசதி பெறாத கிராமங்கள் 4ஜி அடிப்படையிலான மொபைல் சேவைகளைப் பெறும்.

## ➢ கோவோவாக்! (Covovax)

- ✓ கோவிஷில்டை தயாரித்த சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா (Serum Institute of India) நிறுவனம், இந்தியாவில் உள்ள 10 தளங்களில் 2-6 வயதுக்குட்பட்ட குழந்தைகளை உள்ளடக்கி கோவோவாக்ஸ் இன் குழந்தைகளுக்கான தடுப்பூசி பரிசோதனையைத் தொடங்க உள்ளது.

## ➢ இந்திய இரயில்வே

- ✓ இந்திய ரயில்வேயின் முதல் பாட் ஹோட்டல் - நவம்பர் மாதம் மும்பையில் உள்ள சர்ச்கேட் நிலையத்தில் இருந்து ஒன்றிய இரயில்வே இணை அமைச்சர் ராவ்சாகேப் தன்வே அவர்களால் மெய்நிகராகத் திறந்து வைக்கப்பட்டது.
- ✓ காப்ஸ்யூல் ஹோட்டல்கள் என்றும் அழைக்கப்படும் இந்த பாட் ஹோட்டல், பல சிறிய படுக்கை அளவிலான காப்ஸ்யூல்களைக் கொண்டுள்ளது. இது குறைந்த விலையில் ஒரு தங்குவதற்கான வசதியை வழங்குகிறது.

## ➢ LINAC- NCDC மீன்வள வணிக அடைகாக்கும் மையம் (LINAC- NCDC Fisheries Business Incubation Centre) (LIFIC)

- ✓ உண்மையான சந்தை நிலவரம் சார்ந்த நிலைமைகளின்கீழ் மீன்வளத் தொடக்கநிலைத் தொழில்களை வளர்ப்பதற்காக ஹரியானாவின் குருகிராமில் இந்த வகையிலேயே முதன்மையாக தனித்துவமான மீன்வள வணிக காப்பகம் திறக்கப்பட்டுள்ளது.

- ✓ இந்த இன்குபேட்டர் LINAC- NCDC மீன்வள வணிக அடைகாக்கும் மையம் என்று அழைக்கப்படுகிறது. இந்த மையமானது ஒன்றிய அரசின் முன்னோடித் திட்டமான பிரதமரின் மத்ஸ்ய சம்பட யோஜனா (Pradhan Mantri Matsya Sampada Yojana) திட்டத்தின்கீழ் ரூ.3.23 கோடி செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**➢ புதிய மாதிரி சலுகை ஒப்பந்தம் (Model Concession Agreement) - 2021 அறிவிக்கப்பட்டது**

- ✓ துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகளுக்கான ஒன்றிய அமைச்சர் சர்பானந்தா சோனோவால், 18 நவம்பர் 2021 அன்று, பெரிய துறைமுகங்களில், அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய (Public-Private Partnership) திட்டங்களுக்கான திருத்தப்பட்ட மாதிரி சலுகை ஒப்பந்தம் 2021ஐ அறிவித்தார்.
- ✓ இது எதிர்காலத்தில் பெரிய துறைமுகங்களில் மேற்கொள்ளப்பட உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய திட்டங்களுக்கும், ஏலம் எடுக்கும் கட்டத்தில் உள்ள திட்டங்களுக்கும் பொருந்தும்.

**➢ ரெசாங் (Rezang) போர் நினைவுச் சின்னம்**

- ✓ ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், 18 நவம்பர் 2021 அன்று, லடாக்கின் ரெசாங் லாவின் புதிதாக மாற்றியமைக்கப்பட்ட போர் நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்தார்.
- ✓ ஜுன் 2020இல் கல்வான் பள்ளத்தாக்கில் சீனர்களுடனான மோதலில் இறந்த வீரர்களின் பெயர்கள் இந்த நினைவகத்தில் உள்ளன.
- ✓ நவம்பர் 18ஆம் தேதி இந்தப் போரின் ஆண்டுவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

**➢ ஒன்றிய அரசு மூன்று பண்ணைச் சட்டங்களைத் திரும்பப் பெறுகிறது**

- ✓ சர்ச்சைக்குரிய மூன்று விவசாயச் சட்டங்களை தனது அரசு ரத்து செய்யும் என்று அறிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் வயல்களுக்கும் வீடுகளுக்கும் திரும்பிச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

**➢ சர்ச்சைக்குரிய மூன்று மசோதாக்கள்:**

- ✓ விவசாயிகளின் உற்பத்திப் பொருட்கள் வர்த்தகம் மற்றும் வணிகம் (மேம்படுத்துதல் மற்றும் வசதி) மசோதா, 2020.
- ✓ விவசாயிகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்பு) விலை உத்தரவாதம் மற்றும் பண்ணை சேவைகள் மசோதா, 2020.
- ✓ விவசாயிகளின் உற்பத்திப் பொருட்கள் வர்த்தகம் மற்றும் வணிகம் (மேம்படுத்துதல் மற்றும் வசதி) மசோதா.

**➢ நிலையான வளர்ச்சிப் பிரிவு (Sustainable Development Cell)**

- ✓ நிலக்கரி அமைச்சகம், தூய்மையான எரிசக்தியின் உறுதிப்பாட்டிற்கு ஏற்ப, ‘நிலையான வளர்ச்சிப் பிரிவை’ ஏற்படுத்தியுள்ளது.
- ✓ ‘பஞ்சாமிர்த வியூகத்தின்’கீழ் COP 26இல் புதிய காலநிலை இலக்குகள் குறித்த பிரதமரின் அறிவிப்பின் பின்னணியில் நிலையான வளர்ச்சிப் பிரிவு உருவாக்கப்பட்டது.

**➢ ஊராட்சிகள் (வரையறுக்கப்பட்ட பகுதிகள் நீட்டிப்பு) சட்டம் 1996 (Panchayats (Extension to Scheduled Areas) Act 1996**

- ✓ ஊராட்சிகள் (வரையறுக்கப்பட்ட பகுதிகள் நீட்டிப்பு) சட்டம் 1996 விதிகளை விரைவாக அறிவித்து செயல்படுத்துமாறு ஒன்றிய அரசு, மத்தியப் பிரதேசம்,

சத்தீஸ்கர், ஜார்கண்ட் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

- ✓ இந்த நான்கு மாநிலங்களும் இந்திய பழங்குடியின மக்கள் தொகையில் குறிப்பிடத்தக்க பகுதியைக் கொண்டுள்ளன.
- ✓ இந்த ஊராட்சிகள் (வரையறுக்கப்பட்ட பகுதிகள் நீட்டிப்பு) சட்டத்தின் விதிகள், பழங்குடி சமூகங்களின் மரபுகள் மற்றும் பழக்க வழக்கங்களைப் பாதுகாக்கவும் பின்பற்றுவதற்காகவும் உதவுவதற்காக நாட்டின் அட்டவணை 5 பகுதிகளில் உள்ள உள்ளூர் சுய-அரசுகளுக்கு அதிகாரம் அளிக்க முயல்கிறது.

➢ **இந்தியாவின் மிகவும் தூய்மையான நகரம்**

- ✓ மத்தியப் பிரதேசத்தின் இந்தூர் நகரம் 20 நவம்பர் 2021 அன்று ஒன்றிய அரசின் தூய்மை கணக்கெடுப்பு 2021 திட்டத்தின்கீழ் தொடர்ச்சியாக 5வது முறையாக இந்தியாவின் தூய்மையான நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ சூரத் (குஜராத்) மற்றும் விஜயவாடா (ஆந்திரப் பிரதேசம்) ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்தன.
- ✓ இந்திய மாநிலங்களில் சத்தீஸ்கர், நாட்டின் தூய்மையான மாநிலமாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.

➢ **TRIFED ஆடி மகோத்சவம்**

- ✓ **மேரி கோம், பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு கூட்டமைப்பு நிறுவன (Tribal Cooperative Marketing Development Federation Ltd) ஆடி மகோத்சவத்தின் விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.**
- ✓ **TRIFED ஆடி மகோத்சவம் ஒரு தேசிய பழங்குடியினத் திருவிழாவும் மற்றும் பழங்குடியினர் விவகார அமைச்சகம் மற்றும் டிரை.ஃ.பெட் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.**

➢ **தேசிய வள கணக்கியல் (National Resources Accounting)**

- ✓ கணக்குகள் மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் (The Comptroller and Auditor General) – மாநிலங்களின் கனிம மற்றும் எரிசக்தி வளங்களின் கடுமையான ஆய்வு மற்றும் கணக்கீட்டை உறுதி செய்வதற்காக தேசிய வளக் கணக்கியல் செயல்முறையைத் தொடங்கியுள்ளார்.
- ✓ அனைத்து மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் 2020-21 ஆம் ஆண்டிற்கான கனிம மற்றும் எரிசக்தி வளங்களின் 'சொத்துக் கணக்கை' அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

➢ தூய்மை கணக்கெடுப்பு விருதுகள் - 2021 (**Swachh Survekshan Awards - 2021**)

- ✓ தூய்மை கணக்கெடுப்பு விருதுகள் 2021'ல், குப்பையில்லாத மற்றும் தூய்மையான நகரங்களுக்கான நட்சத்திர மதிப்பீட்டைப் பெற்ற 342 நகரங்களை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கவுரவிப்பார்.
- ✓ 'ச.ஃ.பைமித்ரா பாதுகாப்பு சவால்' திட்டத்தின்கீழ், தூய்மை அமிர்த மகோத்சவ், சிறந்த செயல்திறன் கொண்ட நகரங்களை அங்கீகரிப்பதன்மூலம், துப்புரவுப் பணியாளர்களையும் கௌரவிக்கும்.
- ✓ தூய்மை கணக்கெடுப்பு என்பது இந்தியாவில் சுகாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு அரசு முயற்சியாகும்.

➢ **நானோ தொழில்நுட்பத்திற்காக ஒன்றிய அரசு**

✓ ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஐஐடி கவுகாத்தியில் நானோ தொழில்நுட்பத்திற்கான அதிநவீன மையம் மற்றும் இந்திய அறிவு அமைப்புக்கான மையத்தைத் திறந்து வைத்தார். அவர் தேசிய கல்விக் கொள்கை 2020 செயலாக்கம் பற்றிய புத்தகத்தையும் வெளியிட்டார்.

✓ நானோ தொழில்நுட்த்திற்கான மையம், எதிர்கால சவால்களை எதிர்கொள்ளவும், நானோ தொழில்நுட்பத்தில் தொழில்துறையுடன் இணைந்து கல்விசார் கூட்டாண்மைகளை அதிகரிக்கவும் பாடுபடும்.

➢ **கிரிப்டோ கரன்சி மற்றும் அதிகாரபூர்வ டிஜிட்டல் கரன்சியை முறைப்படுத்துதல் மசோதா, 2021**

✓ ஒன்றிய அரசு – நவம்பர் மாதம் தொடங்கும் நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில், கிரிப்டோகரன்சி மற்றும் அதிகாரபூர்வ டிஜிட்டல் கரன்சியை முறைப்படுத்துதல் மசோதா 2021ஐ அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

✓ உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தச் சட்டமானது, அதிகாரபூர்வ டிஜிட்டல் நாணயத்தை உருவாக்குவதற்கான கட்டமைப்பையும் இந்திய ரிசர்வ் வங்கிக்கு ஏற்படுத்திக் கொடுக்கும்.

➢ **'பாரத் கௌரவ்' இரயில்கள்**

✓ இந்திய இரயில்வே துறை – பயண மற்றும் சுற்றுலா ஆபரேட்டர்கள், மாநில சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் ஆர்வமுள்ள எந்தவொரு தரப்பினரையும் மையக் கருத்து அடிப்படையிலான 'பாரத் கௌரவ்' இரயில்களை இயக்குவதற்கு அனுமதிக்க முடிவு செய்துள்ளது.

✓ அவர்கள் விரும்பும் எந்த வழித்தடத்திலும் இந்த இரயில்களை இயக்கலாம் மற்றும் கட்டணத்தையும் அவர்கள் சுதந்திரமாக நிர்ணயம் செய்து கொள்ளலாம்.

➢ **பிரதமரின் கரிப் கல்யாண் ஆன் யோஜனா (PM Garib Kalyan Ann Yojna)**

✓ நவம்பர் மாதத்தில் ஒன்றிய அமைச்சரவை – பிரதமரின் கரிப் கல்யாண் ஆன் யோஜனா திட்டத்தை மார்ச் 2022 வரை தொடர்வதற்கு அனுமதி அளித்தது.

✓ இதன்மூலம் நாட்டில் உள்ள 81 கோடி மக்களுக்கு மாதம் 5 கிலோ இலவச உணவு தானியம் வழங்கப்படுகிறது.

➢ **பிரதமரின் வீட்டு வசதித் திட்டம் (நகர்ப்புறம்) (Pradhan Mantri Awas Yojana) (Urban)**

✓ 17 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 3.61 இலட்சம் வீடுகள் கட்ட ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 17 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 3.6 இலட்சம் வீடுகளைக் கட்டுவதற்கு நவம்பர் 23, 2021 அன்று மத்திய அனுமதி மற்றும் கண்காணிப்புக் குழு (Central Sanctioning and Monitoring Committee) ஒப்புதல் அளித்துள்ளது.

➢ **பேரிடர் மேலாண்மை (WCDM)**

✓ பாதுகாப்புத் துறை அமைச்சர், ராஜ்நாத் சிங், நவம்பர் 24, 2021 அன்று 'பேரிடர் மேலாண்மைக்கான 5வது உலக மாநாட்டை' மெய்நிகராகத் தொடங்கி வைத்தார்.

✓ மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றிய அமைச்சர், இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படும் பேரழிவுகளை வேறுபடுத்திப் பார்க்காமல், இந்தியாவின்

கூட்டாளிகளுக்குத் தேவைப்படும்போது அக்கறை காட்டுவதையும், துணை நிற்பதையும் இந்திய ஆயுதப்படைகள் மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளன என்று குறிப்பிட்டார்.

➢ **கனிம ஆய்வுக்கான அங்கீகாரத் திட்டத்தின் மின்-போர்ட்டல்**

✓ ஒன்றிய நிலக்கரி, சுரங்கங்கள் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் ஸ்ரீபிரகலாத் ஜோஷி. 23 நவம்பர் 2021 அன்று, கனிம ஆய்வுக்கான அங்கீகாரத் திட்டத்தின் மின்-போர்ட்டலைத் (**E-portal of accreditation scheme for Mineral exploration**) தொடங்கி வைத்தார்.

✓ புதுடெல்லியில் நடைபெற்ற சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் பற்றிய 5வது தேசிய மாநாட்டில் இந்த போர்ட்டல் தொடங்கி வைக்கப்பட்டது.

➢ **இந்தியாவில் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு**

✓ நகர்ப்புறங்களில் விரிவான ஆரம்ப சுகாதார சேவைக்கான அணுகலை வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் இந்திய அரசும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் நவம்பர் 23, 2021 அன்று 300 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

✓ இந்தத் திட்டம் 13 மாநிலங்களில் உள்ள நகர்ப்புறங்களில் செயல்படுத்தப்படும்.

➢ **நொய்டா சர்வதேச விமானநிலையம்**

✓ நவம்பர் 25 அன்று, பிரதமர் நரேந்திர மோடி – உத்திரப் பிரதேசத்தில் உள்ள ஜெவார், கௌதம் புத்தா நகரில் நொய்டா சர்வதேச விமான நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

✓ ஆசியாவிலேயே மிகப்பெரிய விமான நிலையமாக இருக்கும் இந்த விமான நிலையம், தேசியத் தலைநகர் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திலிருந்து சுமார் 72 கிமீ தொலைவில் அமைந்துள்ளது.

✓ இந்த விமான நிலையத்தின் முதல் கட்டப் பணிகளை 2024 ஆம் ஆண்டுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

✓ இது இந்தியாவின் முதல் நிகர பூஜ்ஜிய உமிழ்வு விமான நிலையமாகவும் இருக்கும்.

➢ **ஆற்று நகரங்கள் கூட்டணி**

✓ ஜல் சக்தி அமைச்சர் 25 நவம்பர் 2021 அன்று ஆற்று நகரங்கள் கூட்டணியைத் தொடங்கி வைக்கிறார்.

✓ இந்தக் கூட்டணியானது இந்தியாவில் உள்ள ஆற்று நகரங்களுக்கு, நகர்ப்புற ஆறுகளின் நிலையான மேலாண்மைக்கான தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், விவாதிக்கவும், தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் ஒரு பிரத்யேக தளமாக விளங்குகிறது.

✓ இது நெட்வொர்க்கிங், திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப ஆதரவு ஆகிய மூன்று பரந்த கருப்பொருட்களில் கவனம் செலுத்தும்.

➢ **ஊதிய விகிதக் குறியீடு (Wage Rate Index)**

✓ ஒன்றிய தொழிலாளர் அமைச்சகம் 2016=100 அடிப்படை ஆண்டாகக் கொண்டு, புதிய ஊதிய விகிதக் குறியீட்டின் தொடரை வெளியிட்டுள்ளது. இது பழைய தொடரை 1963-65=100 என்ற அடிப்படையுடன் மாற்றும்.

✓ பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்கவும், தொழிலாளர்களின் ஊதிய முறையைப் பற்றவும் முக்கிய பொருளாதார குறிகாட்டிகளுக்கான அடிப்படை ஆண்டை அரசு அவ்வப்போது திருத்துகிறது.

- **கோவிட்-19 மற்றும் தடுப்பூசி**
- ✓ நவம்பர் 27 அன்று, பிரதமர் நரேந்திர மோடி – நாட்டில் கோவிட்-19 மற்றும் தடுப்பூசி தொடர்பான நிலைமையை மதிப்பாய்வு செய்வதற்கான கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.
- ✓ நவம்பர் 26 அன்று உலக சுகாதார அமைப்பு புதிய மாறுபாடடைந்த பி.1.1.529 அல்லது ஓமிக்ரான்-ஐ (Omicron) 'கவலைப்படத்தக்க மாறுபாடு' என்று அறிவித்த உடனேயே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

- **ஸ்டார் லிங்க் இணைய சேவைகள்**
- ✓ நவம்பர் 26 அன்று, எலோன் மஸ்க் தலைமையிலான ஸ்பேஸ் எக்சின் ஒரு பிரிவான ஸ்டார் லிங்க் இணையச் சேவைகளால் விளம்பரப்படுத்தப்படும் செயற்கைக் கோள் அடிப்படையிலான இணைய சேவைகளுக்கு சந்தா செலுத்தி சேர வேண்டாம் என்று அரசு பொது மக்களுக்கு அறிவுறுத்தியது.
- ✓ எலோன் மஸ்க்-ஆதரவு நிறுவனமானது, தொலைத் தொடர்புத் துறையிடம் அத்தகைய சேவைகளை வழங்குவதற்கான உரிமத்தைப் பெறவில்லை.

- **இந்தோ – ஜெர்மானிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் (Indo-German Science & Technology Centre)**
- ✓ நவம்பர் 26 அன்று, இந்தோ-ஜெர்மன் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் - பக்கவாட்டு நுழைவு மூலம் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் பெண்களை மேம்படுத்துவதற்கான இந்த வகையில் முதலாவதான திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- ✓ இந்தத் திட்டம், 'அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சியில் பெண்களின் ஈடுபாடு (Women's Involvement in Science and Engineering Research)' திட்டம் என்று அழைக்கப்படுகிறது.

- **உலகின் மிக உயரமான தூண் பாலம்**
- ✓ இந்திய இரயில்வே உலகின் மிக உயரமான தூண் இரயில் பாலத்தை மணிப்பூரில் கட்டுகிறது.
- ✓ இந்தப் பாலம் 141 மீட்டர் உயரத்தில் கட்டப்படுகிறது.

- **உதவி இனப்பெருக்க தொழில்நுட்ப (ஒழுங்குமுறை) மசோதா (Assisted Reproductive Technology (Regulation) Bill) 2020**
- ✓ ஒன்றிய சுகாதார அமைச்சர் இன்று மக்களவையில் உதவி இனப்பெருக்க தொழில்நுடப் (ஒழுங்குமுறை) மசோதா, 2020ஐ தாக்கல் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ உதவி இனப்பெருக்க தொழில்நுட்ப மருத்துவமனைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல், தவறான பயன்பாட்டைத் தடுத்தல், இனப்பெருக்க தொழில்நுட்ப சேவைகளின் பாதுகாப்பான மற்றும் நெறிமுறை நடைமுறை ஆகியவற்றை இந்த மசோதா நிறைவு செய்கிறது.

- **நீதிபதிகள் மசோதா மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது**
- ✓ ஒன்றிய சட்டத்துறை அமைச்சர் நீதிபதிகள் மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்தார்.
- ✓ இந்த மசோதா உயர்நீதி மன்ற நீதிபதிகள் (சம்பளம் மற்றும் சேவை நிபந்தனைகள்) சட்டம் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் (சம்பளம் மற்றும் சேவை நிபந்தனை) சட்டத்தில் திருத்தம் செய்ய முனைகிறது.

 PH: 044-24339436, 42867555, 9840226187

- **இந்திய வானிலை ஆய்வு மையம்**

✓ தென் தீபகற்ப இந்தியா - இந்திய வானிலை மையத்தின் கூற்றுப்படி, 1901 ஆம் ஆண்டுக்குப் பிறகு நவம்பர் மாதத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு மிக அதிக மழை பெய்துள்ளது.

✓ ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா மற்றும் தெற்கு உள் கர்நாடாவில் கடந்த மாதம் 169 விழுக்காடு அதிக அளவு மழை பெய்துள்ளது.

- **அணை பாதுகாப்பு மசோதா**

✓ அணை பாதுகாப்பு மசோதா மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. நாட்டில் உள்ள அணைகளில் பெரும்பாலானவை 100 ஆண்டுகளுக்கும் மேலானவை என்பதால், அவற்றில் ஆய்வு செய்தல், பராமரித்தல் மற்றும் இயக்குதல் பணிகளை மேற்கொள்வதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இந்த மசோதா இரண்டு தேசிய அமைப்புகளை உருவாக்குகிறது. அவை அணை பாதுகாப்புக்கான தேசிய குழு மற்றும் தேசி அணை பாதுகாப்பு ஆணையம் ஆகும்.

- **AIRNxt**

✓ நடைபெற்று வரும் ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இளைஞர்கள் தங்கள் குரல்களை எழுப்புவதற்கு ஒரு தளத்தை வழங்குவதற்காக அகில இந்திய வானொலி AIRNxt என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

✓ இது அகில இந்திய வானொலி நிலையம் நடத்தும் மிகப்பெரிய ஒற்றை மையக் கருத்து நிகழ்ச்சியாகும். இது அனைத்து முக்கிய இந்திய மொழிகளிலும் பேச்சு வழக்குகளிலும் ஒளிபரப்பப்படுகிறது.

**சிறப்பாக செயல்படும் யூனியன் பிரதேசம்**

- புதுச்சேரி யூனியன் பிரதேசம் - ஒன்றிய அரசின் முன்னோடித் திட்டமான 'ஆயுஷ்மான் பாரத் பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா' வை செயல்படுத்துவதில் சிறந்த செயல்திறன் கொண்ட யூனியன் பிரதேசமாக உருவெடுத்துள்ளது.
- குறைந்தபட்சம் ஒரு ஆயுஷ்மான் அட்டையுடன்கூடிய அதிக விழுக்காடு குடும்பங்களைக் கொண்ட யூனியன் பிரதேசங்களில் சிறப்பாகச் செயல்படும் யூனியன் பிரதேசத்திற்கான 'ஆயுஷ்மான் உத்கிரிஷ்டா புரஸ்கார்' விருதை இந்த யூனியன் பிரதேசம் வென்றுள்ளது.

- **ஒன்பது புதிய அணுமின் உலைகள் (Nine New Nuclear Power Reactors)**

✓ இந்தியா – 2024ஆம் ஆண்டுக்குள் ஒன்பது புதிய அணுமின் உலைகளையும், புது டெல்லியிலிருந்து 150 கிமீ தொலைவில் ஹரியானாவின் கோரக்பூர் பகுதியில் புதிய அணுமின் திட்டத்தையும் உருவாக்கும்.

✓ நவம்பர் 3ஆம் தேதி மாநிலங்களவையில் அரசு இதனை அறிவித்தது.

- **நட்பு தினம் (Maitiri Diwas)**

✓ வங்காளதேசத்தை இந்தியா முறையாக அங்கீகரித்த டிசம்பர் 6ஆம் தேதியை 'நட்பு தினம்' என்று கொண்டாடுவதற்கு இந்தியாவும் வங்காளதேசமும் முடிவு செய்தள்ளன.

## ➢ இணைய பயிற்சி (Cyber Drill) 2021

- ✓ சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியமும் தொலைத் தொடர்பு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் தொலைத் தொடர்புத் துறையும் இணைந்து 2021ஆம் ஆண்டுக்கான இணைய பயிற்சி 2021 ஐ மேற்கொண்டன.
- ✓ இந்தியாவின் முக்கியமான நெட்வொர்க் உள்கட்டமைப்பு ஆபரேட்டர்களுக்காக இந்த இணையப் பயிற்சி நடத்தப்பட்டது.

## ➢ ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank)

- ✓ ஆசிய வளர்ச்சி வங்கி இந்திய அரசுக்கு சுமார் ரூ.3,752 கோடி நிதியுதவியை அளித்துள்ளது.
- ✓ இது பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதோடு, மாணவர்களின் கற்றலில் கொரோனா வைரஸ் தொற்றுநோயின் தாக்கத்தையும் குறைக்கும்.

## ➢ 2024ஆம் ஆண்டுக்குள் ஒன்பது அணு உலைகள்

- ✓ 2024ஆம் ஆண்டிற்குள் நாட்டில் ஒன்பது அணு உலைகள் இருக்கும். வட இந்தியாவில் முதல் புதிய அணுசக்தி திட்டம், டெல்லியில் இருந்து 150 கிமீ தொலைவில் ஹரியானா மாநிலம் கோரக்பூரில் அமைக்கப்படும் என்று அரசு மாநிலங்களவையில் தெரிவித்துள்ளது. 2024ஆம் ஆண்டிற்குள் இந்தியாவில் ஒன்பது அணு உலைகள் மற்றும் கோவிட் காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட 9000 மெகாவாட் திறன் கொண்ட 12 புதிய கூடுதல் அணு உலைகள் இருக்கும்.

## ➢ இந்தோ-ரஷ்ய ரைபிள்ஸ் பிரைவேட் லிட் (Indo-Russian Rifles Private Ltd)

- ✓ ஒன்றிய அரசு – உத்தரப் பிரதேச மாநிலம் அமேதி மாவட்டத்தில் உள்ள கோர்வா பிரிவில், ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான ஏ.கே. 203 ரக துப்பாக்கிகளைத் தயாரிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.
- ✓ ரஷ்யாவுடன் இணைந்து இந்த துப்பாக்கிகள் தயாரிக்கப்படும்.
- ✓ இந்தோ-ரஷ்ய ரைபிள்ஸ் பிரைவேட் லிட் என்ற சிறப்பு நோக்க கூட்டு முயற்சியால் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

## ➢ உலகின் மிகப்பெரிய தேசியக் கொடி

- ✓ கடற்படை தினத்தையொட்டி, உலகின் மிகப்பெரிய தேசியக்கொடி – மும்பையில் உள்ள கடற்படை கப்பல்துறை தளத்தில், டிசம்பர் 4 அன்று, இந்தியாவின் புகழ்பெற்ற நுழைவாயிலில் (Gateway of India), மேற்கு கடற்படைப் பிரிவால் காட்சிப்படுத்தப்பட்டது.
- ✓ 225 அடி நீளம் மற்றும் 150 அடி அகலம் கொண்ட 1400 கிலோ எடையுள்ள இந்த தேசியக் கொடியானது காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தால் கருத்தியல் செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டது.

## ➢ ஃபார்ச்சூன் இந்தியாவின் சக்திவாய்ந்த பெண்கள்

- ✓ ஃபார்ச்சூன் இந்தியாவின் சக்திவாய்ந்த பெண்கள் பட்டியலில், ரிலையன்ஸ் அறக்கட்டளையின் நிறுவனரும் தலைவருமான நீட்டா அம்பானி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.
- ✓ இந்தப் பட்டியலில் நிர்மலா சீதாராமன் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

## ➢ தூய்மை இந்தியா இயக்கம் நகர்ப்புறம் (Swachh Bharat Mission Urban) 2.0

- ✓ டிசம்பர் 6, 2021 அன்று, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (United Nations Development Programme) ஆகியவை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

- ✓ தூய்மை இந்தியா இயக்கம் நகர்ப்புறம் 2.0 திட்டத்தின்கீழ் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. நாட்டில் கழிவு மேலாண்மைத் துறையை வலுப்படுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

### ➢ ஆத்மநிர்பர் திறன்மிக்க பணியாளர்களைப் பணியமர்த்தல் மேப்பிங் (Aatmanirbhar Skilled Employees Employer Mapping)

- ✓ திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம், ஆத்மநிர்பார் திறன்மிக்க பணியாளர்களைப் பணியமர்த்துதல் போர்ட்டலைத் தொடங்கியுள்ளது.
- ✓ சந்தை தேவைக்கு ஏற்ப திறமையான பணியாளர்களை விநியோகிப்பதற்கு ஏற்ற ஒரு தளத்தை உருவாக்குவதே இதன் நோக்கம் ஆகும்.

### ➢ சீர்மிகு நகரங்கள் இயக்கம் (Smart Cities Mission)

- ✓ ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம், கோவிட் பெருந்தொற்று மற்றும் பிற காரணங்களால் சீர்மிகு நகரங்கள் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காலக்கெடுவை ஜுன் 2023 வரை நீட்டித்துள்ளது.
- ✓ ஒன்றிய அரசு ஜுன் 25, 2015 அன்று சீர்மிகு நகரங்கள் இயக்கத்தைத் தொடங்கி வைத்தது.

### ➢ இந்தியாவின் மிகப்பெரிய உற்பத்தி மையம்

- ✓ இந்தியாவின் மிகப்பெரிய உற்பத்தி மையமாக குஜராத் மாறியுள்ளது.
- ✓ இந்திய ரிசர்வ் வங்கியின் தரவுகளின்படி, குஜராத் மாநிலம், மகாராஷ்டிராவை பின்னுக்குத் தள்ளி நாட்டின் முன்னணி உற்பத்தி மையமாக மாறியுள்ளது.

### ➢ ஆசிய வளர்ச்சி வங்கி

- ✓ அரசு - தமிழகத்தில் மலிவு விலையில் வீடுகட்டும் திட்டம் மற்றும் உத்தரகாண்டில் தண்ணீர் சுத்திகரிப்பு திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களுக்காக ஆசிய வளர்ச்சி வங்கியுடன் ரூ.2074 கோடி கடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.
- ✓ தமிழ்நாட்டின் நகர்ப்புற ஏழைகளுக்கு உள்ளடங்கிய, நெகிழ்ச்சியான மற்றும் நிலையான வீடுகளுக்கான அணுகலை வழங்குவதற்காக அரசும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் 150 மில்லியன் டாலர் (சுமார் 1,132 கோடி) கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

### ➢ ஆர்டி – லாம்ப் (RT-LAMP)

- ✓ ஒன்றிய அரசு - இந்தியா மற்றும் பிற இடங்களில் உள்ள விமான நிலையங்களில் பார்வையில் விளக்கம் அளிக்கப்படும் வகையிலான விரைவான கோவிட் சோதனை 'ஆர்டி-லாம்ப்'ஐ அறிமுகப்படுத்த உள்ளது.
- ✓ இந்தப் பரிசோதனையை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் - தேசிய வைராலஜி நிறுவனம் (Indian Council of Medical Research-National Institute of Virology) உருவாக்கியுள்ளது.

### ➢ தேசிய மகளிர் ஆணையம்

- ✓ தேசிய மகளிர் ஆணையம், டிசம்பர் 7, 2021 அன்று இந்தியா முழுவதும் 'அவள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துபவள்' என்ற ஒரு திறன் மேம்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- ✓ இது கிராம ஊராட்சிகள் முதல் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் பணியாளர்கள் வரையிலான அனைத்து மட்ட பெண் பிரதிநிதிகளுக்கானது ஆகும்.

- ➢ **இனப்பெருக்க உதவி தொழில்நுட்ப (ஒழுங்குமுறை) மசோதா, 2021**
- ✓ டிசம்பர் 8 அன்று மாநிலங்கள் அவை - இனப்பெருக்க உதவி தொழில்நுட்ப மருத்தவமனைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும், மேற்பார்வை செய்வதற்காகவும், இனப்பெருக்க உதவி தொழில்நுட்ப (ஒழுங்குமுறை) மசோதா, 2021க்கு ஒப்புதல் அளித்தது.

- ➢ **CESL உடன் E-Sawari India E-Bus Coalition**
- ✓ நித்தி ஆயோக் அமைப்பு, கர்வர்ஜென்ஸ் எனர்ஜி சேவை லிட் (Convergence Energy Service Ltd) மற்றும் இந்தியாவின் உலக வள நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து 'மின்-சவாரி இந்தியா எலக்ட்ரிக் பஸ் கொலிசன்' ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ இது டிரான்ஸ்பார்மேடிவ் அர்பன் மொபிலிட்டி இனிஷியேட்டிங் ஆதரவுடன் தொடங்கப்பட்டது.

- ➢ **உள்துறை அமைச்சகம்**

டிசம்பர் 8 அன்று உள்துறை அமைச்சம் - பணியின்போது கொல்லப்படும் ஆயுதப்படை வீரர்களுக்கு 'தியாகிகள்' போன்ற அதிகாரப்பூர்வ பெயர்கள் எதுவும் இல்லை என்று தெரிவித்தது.

- ➢ **அட்டூழியங்களுக்கு எதிரான தேசிய உதவி தொலைபேசி எண்**
- ✓ ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், 1989ஆம் ஆண்டு வன்கொடுமை தடுப்புச் சட்டம், 1989ன்கீழ் பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் சரியாக நடத்தப்படுவதை உறுதி செய்யும் நோக்கத்துடன், வன்கொடுமைகளுக்கு எதிரான தேசிய ஹெல்ப்லைனை, 13 டிசம்பர் 2021 அன்று தொடங்கத் திட்டமிட்டுள்ளது. இது பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் உறுப்பினர்கள் மீதான வன்கொடுமைகளைத் தடுப்பதற்காக இயற்றப்பட்டது.
- ✓ நாடு முழுவதும் 14566 என்ற கட்டணமில்லா எண்ணில் 24 மணி நேரமும் இந்த உதவி தொலைபேசி சேவை செயல்பட்டு வருகிறது.

- ➢ **உயர்நீதி மன்ற மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் (சம்பளங்கள் மற்றும் சேவை நிபந்தனைகள்) திருத்த மசோதா, 2021**
- ✓ நாடாளுமன்றம் டிசம்பர் 13, 2021 அன்று, 'உயர்நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் (சம்பளங்கள் மற்றும் சேவை நிபந்தனைகள்) திருத்த மசோதா, 2021'ஐ நிறைவேற்றியது.
- ✓ இந்த மசோதா அவர்களுக்கு ஓய்வூதியம் அல்லது குடும்ப ஓய்வூதியத்தில் கூடுதல் அளவை வழங்குகிறது. இதன்படி, உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் அனைவரும், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உட்பட, ஓய்வூதியம் அல்லது குடும்ப ஓய்வூதியம் பெற அதிகாரம் பெற்றவர்கள் ஆவர்.

- ➢ **உற்பத்தி இணைந்த ஊக்கத் தொகை திட்டம்**
- ✓ டிசம்பர் 15 அன்று, ஒன்றிய அமைச்சரவை – நாட்டில் குறைக் கடத்தி மற்றும் காட்சிப் பலகை உற்பத்திக்கான உற்பத்தி இணைந்த ஊக்கத் தொகை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- ✓ இந்த உற்பத்தி இணைந்த ஊக்கத் தொகை திட்டமானது, அடுத்த 5-6 ஆண்டுகளில் குறைக் கடத்தி உற்பத்திக்காக, 76,000 கோடியை ஒதுக்கியுள்ளது.

- **யுனெஸ்கோ பட்டியலில் துர்கா பூஜை**
- ✓ கொல்கத்தாவின் துர்கா பூஜை யுனெஸ்கோவால் 'மனிதகுலத்தின் அருவமான கலாச்சார பாம்பரியம்' பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- ✓ துர்கா பூஜை என்பது செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் மேற்கு வங்காளத்தின் குறிப்பாக கொல்கத்தாவில் கொண்டாடப்படும் ஒரு முக்கிய ஆண்டு விழா ஆகும்.

- **பெண்களின் சட்டபூர்வ திருமண வயதை உயர்த்துவதற்கான மசோதா**
- ✓ ஒன்றிய அரசு, பிரத்யேகமாக அமைக்கப்பட்ட பணிக் குழுவின் முன்மொழிவை மதிப்பாய்வு செய்த பிறகு, பெண்களின் சட்டப்பூர்வ திருமண வயதை 18 லிருந்து 21 ஆக உயர்த்துவதற்கான மசோதாவை அனுமதித்தது.
- ✓ இந்தியாவில் தற்போது பெண்களுக்கு திருமண வயது 18 ஆகவும், ஆண்களுக்கு 21 ஆகவும் உள்ளது. பெண்களின் திருமண வயதை உயர்த்தும் சமீபத்திய முடிவு ஆண்கள் மற்றும் பெண்களின் திருமண வயதை சமநிலைக்குக் கொண்டு வரும்.

- **2021-26 ஆம் ஆண்டுகளுக்கான பிரதமரின் விவசாய நீர்ப்பாசனத் திட்டம் (Pradhan Mantri Krishi Sinchayee Yojana)**
- ✓ 2021-26 ஆம் ஆண்டுகளுக்கான பிரதமரின் விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ இந்தத் திட்டத்தின்மூலம் 2.5 இலட்சம் பட்டியலின மற்றும் 2 இலட்சம் பழங்குடியின விவசாயிகள் உள்ளிட்ட சுமார் 22 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள்.

- **கோவிட் எதிர்ப்பு தடுப்பூசி கோவோவாக்ஸ்**
- ✓ டிசம்பர் 17 அன்று உலக சுகாதார அமைப்பு – புனேவைத் தளமாகக் கொண்ட இந்திய ஊநீர் நிறுவனம் (சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா) தயாரித்த கொரோனா எதிர்ப்பு கோவோவாக்ஸ் தடுப்பூசியை அவசரகால பயன்பாட்டுக்கான பட்டியலில் சேர்த்து வெளியிட்டது.
- ✓ குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் தடுப்பூசிக்கான அணுகலை அதிகரிக்கும் நோக்கத்துடன், உலக சுகாதார அமைப்பால் அவசரகால பயன்பாட்டுக்காக பட்டியலிடப்பட்ட ஒன்பதாவது கோவிட்-19 தடுப்பூசி இதுவாகும்.

- **வாடகைத்தாய் (ஒழுங்குமுறை) மசோதா, (Surrogacy (Regulation) Bill) 2019**
- ✓ வாடகைத்தாய் (ஒழுங்குமுறை) மசோதா, 2019, டிசம்பர் 17 அன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- ✓ இந்த மசோதாவில் தேசிய வாடகைத் தாய் வாரியம் மற்றும் மாநில வாடகைத் தாய் வாரியங்களை அமைக்க வழிவகை கொடுக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்த மசோதாவின்படி, சட்டபூர்வமாகத் திருமணமாகி ஐந்து ஆண்டுகள் ஆன இந்திய தம்பதிகள் மட்டுமே வாடகைத்தாய் முறையைத் தேர்வு செய்ய முடியும்.

- **கங்கா விரைவுச்சாலை**
- ✓ ஷாஜஹான்பூர் மாவட்டத்தில் உத்தரப்பிரதேச கங்கா விரைவுச் சாலையின் மிக நீளமான விரைவுச் சாலைக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.
- ✓ 594 கிமீ நீளம் கொண்ட இந்த ஆறுவழி விரைவுச்சாலையானது ரூ.36,200 கோடி செலவில் கட்டப்படும்.

- **சர்வதேச நடுவர் மற்றும் மத்தியஸ்த மையம் (Arbitration and Mediation Centre)**

✓ டிசம்பர் 18 அன்று, இந்தியாவின் தலைமை நீதிபதி என்.வி. ரமணா மற்றும் தெலுங்கானா முதலமைச்சர் கே. சந்திரசேகரராவ்- ஐதராபாத்தில் நாட்டின் முதலாவது சர்வதேச நடுவர் மற்றும் மத்தியஸ்த மையத்தை கூட்டாகத் திறந்து வைத்தனர்.

✓ சிங்கப்பூர் மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருந்து சர்வதேச அளவில் பாராட்டப்பட்ட நடுவர்கள் மற்றும் மத்தியஸ்தர்கள் இந்த மையத்தை நிர்வகிப்பவர்களில் அடங்குவர்.

- **தேர்தல் சட்டங்கள் (திருத்தம்) மசோதா, 2021**

✓ தேர்தல் சட்டங்கள் (திருத்தம்) மசோதா, 2021 மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

✓ இந்த மசோதா மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ பல பதிவுகளை அகற்றுவதற்காக தன்னார்வ அடிப்படையில் வாக்காளர் பட்டியலை ஆதாருடன் இணைப்பதும் இதில் அடங்கும்.

✓ இந்த மசோதாவுக்கு முன்னதாக ஒன்றிய அமைச்சரவை டிசம்பர் 15, 2021 அன்று ஒப்புதல் அளித்தது.

- **எல்லை மறுநிர்ணய ஆணையம்**

✓ எல்லை மறுநிர்ணய ஆணையத்தின் முதல் வரைவு – ஜம்மு மற்றும் காஷ்மீருக்கு கூடுதலாக ஏழு சட்ட மன்ற இடங்களைப் பரிந்துரைக்கிறது. அவற்றில் ஜம்மு பிரிவில் ஆறும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் ஒன்றும் அடங்கும்.

✓ உண்மையில், முன்னதாக 1995ல் மாநிலத்தின் எல்லை கடைசியாக நிர்ணயம் செய்யப்பட்டதில் இருந்து ஜம்மு காஷ்மீரில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை 12இல் இருந்த 20 ஆக அதிகரித்துள்ளது.

- **நித்தி ஆயோக் - ஐ.நா அமைப்பு**

✓ நித்தி ஆயோக் அமைப்பு, ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்துடன் ஒரு விருப்பத் திட்ட அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளது.

✓ கையொப்பமிடப்பட்டுள்ள இந்த விருப்ப அறிக்கையின்படி, இந்தியாவில் உணவு மற்றும் ஊட்டச்த்து பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக தினை வகை தானியங்களை முதன்மை நீரோட்டத்திற்குக் கொண்டு வருவதிலும், காலநிலை எதிர்ப்பு விவசாயத்தை வலுப்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்படும்.

- மத்திய ரிசர்வ் காவல் படையில் (CRPF) பெண் கமாண்டோக்கள்

✓ முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பில் பயிற்சி பெற்ற மத்திய ரிசர்வ் காவல் பெண் கமாண்டோக்கள் விரைவில் இசட் பிளஸ் பிரமுகர்களின் பாதுகாப்புப் பணியில் பணியமர்த்தப்படுவார்கள்.

✓ அவர்களில் உள்துறை அமைச்சர் அமீத் ஷா, மூத்த காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி மற்றும் பல கடமைகளுக்காக அதிக ஆபத்தை எதிர்கொள்ளும் பிற தலைவர்களும் அடங்குவர்.

✓ மத்திய ரிசர்வ் காவல் படை தனது விஜபி பாதகாப்புப் பிரிவில் முதன்முறையாக 32 பெண் கமாண்டோக்களைக் கொண்டுள்ளது.

- **அட்டல் புதுமை இயக்கம் (Atal Innovation Mission)**

✓ நித்தி ஆயோக்கின் அடல் புதுமை இயக்கம், உள்ளூர் மொழி புதுமை இயக்கத்தைத் (Vernacular Innovation Programme) தொடங்கி வைத்துள்ளது.

இது இந்தியாவில் உள்ள கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள், கண்டுபிடிப்பு சுற்றுச் சூழல் அமைப்பை 22 திட்டமிடப்பட்ட மொழிகளில் அணுகுவதற்கு ஒன்றிய அரசால் உதவி செய்யப்பட ஏதுவாகும்.

## ➢ கரீப் கல்யாண் அன்ன யோஜனா (Garib Kalyan Anna Yojana)

✓ ஒன்றிய அரசு பிரதமரின் கரீப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தை மார்ச் 2022 வரை நீட்டித்துள்ளது.

✓ இந்தத் திட்டத்தின்கீழ், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் உள்ள அனைத்து பயனரிளகளுக்கும் ஒரு நபருக்கு மாதம் ஐந்து கிலோ உணவு தானியங்களை ஒன்றிய அரசு இலவசமாக வழங்குகிறது.

## ➢ தொலைத் தொடர்பு நிறுவனங்கள்

✓ ஒன்றிய அரசு - இணையப் பயன்பாட்டுத் தரவுகள் மற்றும் சந்தாதாரர்களின் அழைப்புப்ப பதிவுகளை இரண்டு ஆண்டுகளுக்கு வைத்திருக்குமாறு தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு புதிய உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.

✓ ஒருங்கிணைக்கப்பட்ட உரிம ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தத் திருத்தமானது, பாதுகாப்புக் கவலைகள் குறித்த பாதுகாப்பு முகமைகளின் கோரிக்கைகளை அடுத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## ➢ அக்ரோவிஷன் (Agrovision)

✓ 24 டிசம்பர் 2021 அன்று வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், நாக்பூரில் நான்கு நாள் விவசாயக் கண்காட்சியாகிய ‘அக்ரோவிஷன்’ஐ தொடங்கி வைத்தார்.

✓ வேளாண் துறையில் உள்கட்டமைப்பு மேம்பாடு குறித்து வேளாண்துறை அமைச்சர் வலியுறுத்தினார்.

## ➢ பாரத் தர்ஷன் பூங்கா (Bharat Darshan Park)

✓ ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா டெல்லியில் ‘பாரத் தர்ஷன் பூங்கா’வைத் திறந்து வைக்கிறார். இது தேவையற்ற மற்றும் கழிவுப் பொருட்களால் கட்டப்பட்ட இந்தியாவின் முக்கியத்துவம் வாய்ந்த பல நினைவுச் சின்னங்களின் பிரதிகளை காட்சிப்படுத்துகிறது.

## ➢ நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு (Intelligent Transport System)

✓ ஒன்றிய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகளுக்கான அமைச்சர் நிதின் கட்கரி – நாட்டின் முதலாவது ‘நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்பை’ டிசம்பர் 23 அன்று காஜியாபாத்தின் தஸ்னாவில் கிழக்குப்புற விரைவுச் சாலையில் தொடங்கி வைத்தார்.

✓ இந்த நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு, எந்த ஒரு விபத்தையும் கண்டறிந்து 10-15 நிமிடங்களுக்குள் அந்த இடத்திற்கு ஆம்புலன்ஸ் சென்று விடுவதை உறுதி செய்யும் வகையில் எச்சரிக்கை செய்திகளைப் பெறும்.

## ➢ பல ஹைடல் திட்டங்கள் (Multiple Hydel Projects)

✓ டிசம்பர் 27 அன்று, பிரதமர் நரேந்திர மோடி - இமாசலப் பிரதேசத்தில் மொத்தமாக ரூ.11,000 கோடி முதலீட்டில் பல ஹைடல் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

✓ இந்தத் திட்டங்களில், இமாச்சலப் பிரதேசத்தின் சிர்மோர் மாவட்டத்தில் 7,000 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள ரேணுகா அணை திட்டமே மிகவும் பெரியது ஆகும்.

- கோவோவேக்ஸ், கார்பேவேக்ஸ் (**COVOVAX, CORBEVAX)**
- ✓ இந்தியாவிற்கு இரண்டு புதிய கோவிட்-19 தடுப்பூசிகள் கிடைத்துள்ளன - கோவோவேக்ஸ், கார்போவேக்ஸ்
- ✓ இரண்டு தடுப்பூசிகளும் மத்திய மருந்துகள் தரநிலைக் கட்டுப்பாட்டு அமைப்பிடமிருந்து அவசரகால பயன்பாட்டுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.
- ✓ இவற்றுள் கார்பேவேக்ஸ் தடுப்பூசியானது, கோவிட்-19க்கு எதிராக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஆர்பிடி புரத துணை அலகு தடுப்பூசி ஆகும்.

- **உலகின் மிக உயரமான வாகனச் சாலை**
- ✓ எல்லைச் சாலைகள் அமைப்பால் கட்டப்பட்ட 27 சாலைகள் மற்றும் பாலங்களை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்.
- ✓ மெய்நிகராகத் திறக்கப்பட்ட 24 சாலைகளில், தெற்கு லடாக்கில் உள்ள உமிலிங்-லா கணவாயில் 19,000 அடிக்கு மேல் உயரத்தில் கட்டப்பட்ட சாலை, இப்போது உலகின் மிக உயரமான வாகனச் சாலையாக மாறியுள்ளது.

**கான்பூர் மெட்ரோ இரயில் திட்டம்**

- ✓ டிசம்பர் 28 அன்று, பிரதமர் நரேந்திர மோடி – கான்பூர் மெட்ரோ ரயில் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இது நாட்டின் மிக வேகமாகக் கட்டப்பட்ட மெட்ரோ ரயில் திட்டமாகும்.
- ✓ ஐரோப்பிய முதலீட்டு வங்கியும் இந்தத் திட்டத்திற்காக 650 மில்லியன் யூரோ கடனை வழங்க முன்வந்துள்ளது.

- **ஃப்ளெக்ஸ் - எரிபொருள் வாகனங்கள் மற்றும் ஃப்ளெக்ஸ் - எரிபொருள் வலிமையான ஹைப்ரிட் மின்சார வாகனங்கள் (Flex-Fuel Vehicles and Flex-Fuel Strong Hybrid Electric Vehicles)**
- ✓ ஒன்றிய அரசு – பிஎஸ்6 விதிமுறைகளுக்கு இணங்க ஃப்ளெக்ஸ்-எரிபொருள் வாகனங்கள் மற்றும் ஃப்ளெக்ஸ்-எரிபொருள் வலிமையான ஹைப்ரிட் மின்சார வாகனங்களைத் தயாரிக்கத் தொடங்குமாறு வாகன உற்பத்தியாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.
- ✓ ஃபளெக்ஸ்-எரிபொருள் வாகனங்கள் 100 விழுக்காடு பெட்ரோல் அல்லது 100 விழுக்காடு பயோ –எத்தனால் மற்றும் அவற்றின் கலவைகளின் கலவையில் இயங்கும் திறன் கொண்டவை ஆகும்.

- **மறக்க முடியாத டிஜிட்டல் பட்டங்கள் (Unforgeable Digital Degrees)**
- ✓ பிரதமர் நரேந்திர மோடி – டிசம்பர் 28 அன்று நடைபெற்ற ஐஐடி கான்பூரின் 54வது பட்டமளிப்பு விழாவில் மாணவர்களுக்கு ‘மறக்க முடியாத’ டிஜிட்டல் பட்டங்களை வழங்கினார்.
- ✓ தேசிய பிளாக்செயின் திட்டத்தின்கீழ் ஐஐடி- கான்பூர் உருவாக்கிய டிஜிட்டல் பட்டங்கள், உலகளவில் சரிபார்க்கப்படக்கூடியவை மற்றும் மறக்க முடியாதவை.

- **கிராம உஜாலா திட்டம்**
- ✓ அரசுக்குச் சொந்தமான சிஇஎஸ்எல் (CESL) நிறுவனம் - முன்னோடித் திட்டமாகிய கிராம் உஜாலா திட்டத்தின்கீழ், 50 இலட்சம் எல்இடி பல்புகள் விநியோகம் என்ற மைல்கல்லை எட்டியுள்ளது.
- ✓ இந்நிறுவனம் தனது கிராம் உஜாலா திட்டத்தின் ‘திட்டக் கோடி’ திட்டத்தின்கீழ், 50 இலட்சம் எல்இடி பல்புகளை விநியோகித்துள்ளது.

- ✓ இந்த கிராம உஜாலா திட்டம், பீகார், உத்தரப் பிரதேசம், ஆந்திரா, கர்நாடகா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் கிராமப்புற வீடுகளில் செயல்படுத்தப்பட உள்ளது.

**➢ அட்டல் புதுமை இயக்கம்**

- ✓ டிசம்பர் 29 அன்று, நித்தி ஆயோக்கின் அடல் புதுமை இயக்கம் - 'உங்களுக்கான புதுமைகள்' என்ற தலைப்பில் புதுமைகளின் தொகுப்பின் இரண்டாவது பதிப்பை வெளியிட்டது.
- ✓ இது அட்டல் புதுமை இயக்கத்தின் அட்டல் இன்குபேசன் மையங்களால் ஆதரிக்கப்படும் 70 தொடக்க நிலைகளைக் கொண்ட விவசாயத்தில் கவனம் செலுத்துகிறது.
- ✓ இந்தியாவின் அட்டல் டிங்கரிங் ஆய்வகத்தின் 41 கண்டுபிடிப்புகளைக் கொண்ட தொழில்நுட்பத்தின் புதுமைகளின் தொகுப்பான 'தி இஞ்ஜெனியஸ் டிங்கர்ஸ்' என்ற தொகுப்பையும் இது உள்ளடக்கியுள்ளது.

# ஜனவரி- பிப்ரவரி- மார்ச் 2022

**➢ பிரதமரின் கிசான் சம்மான் நிதி (Pradhan Mantri Kisan Samman Nidhi) திட்டம்**

- ✓ பிரதமர் நரேந்திர மோடி – பிரதமரின் கிசான் சம்மான் நிதி திட்டத்தின்கீழ் 10வது தவணை நிதிப் பலனை ஜனவரி 1, 2022 அன்று வெளியிட்டார்.
- ✓ முற்றிலும் இந்திய அரசால் நிதியளிக்கப்படும் இந்தத் திட்டம், ஏழை மற்றும் விளிம்பு நிலை விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**➢ பாதே பாரத் (Padhe Bharat)**

- ✓ ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் - ஜனவரி 1, 2022 அன்று 'பாதே பாரத்' என்ற 100 நாள் வாசிப்புப் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தார்.
- ✓ வாசிப்புப் பிரச்சாரத்தின் தொடக்கமானது தேசிய கல்விக் கொள்கை 2020 உடன் இணைந்துள்ளது. இது குழந்தைகளுக்கான மகிழ்ச்சியான வாசிப்புக் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

**➢ கல்பனா சாவ்லா விண்வெளி அறிவில் ஆராய்ச்சி மையம்**

- ✓ பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ஜனவரி 3, 2022 அன்று, சண்டிகர் பல்கலைக் கழகத்தில் விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கான கல்பனா சாவ்லா மையத்தைத் திறந்து வைத்தார்.

**➢ 25வது தேசிய இளைஞர் திருவிழா**

- ✓ பிரதமர் நரேந்திர மோடி – 25வது தேசிய இளைஞர் திருவிழாவை நடத்துவதற்கு புதுச்சேரியைத் தேர்வு செய்துள்ளார்.
- ✓ பிரதமர் விழாவைத் தொடங்கி வைத்து இளைஞர்கள் மத்தியில் உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ இந்தத் திருவிழாவானது ஜனவரி 12 முதல் 16, 2022 வரை, 'திறமையான இளைஞர், வலிமையான இளைஞர்' என்று பொருள்படும் 'Shaksham Yuva Shashakth Yuva' என்ற கருப்பொருளின்கீழ் நடைபெறும்.

## ➢ ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு

- ✓ உணவு பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சர் பசுபதி ''குமார் பராஸ், 'ஒரு மாவட்டம் - ஒரு தயாரிப்பு' அணுகுமுறையின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட ஆறு பிராண்டுகளை அறிமுகப்படுத்தினார்.
- ✓ அவை 5 ஜனவரி 2022 அன்று புது தில்லியில் பிரதமரின் முறைப்படுத்தப்பட்ட மைக்ரோ உணவு பதப்படுத்தும் நிறுவனங்களின் திட்டத்தின்கீழ் (Pradhan Mantri Formalisation of Micro food processing Enterprises Scheme) தொடங்கப்பட்டன.

## ➢ அக்ஷய பாத்ரா அறக்கட்டளை

- ✓ இந்தியாவில் உள்ள அக்ஷய பாத்ரா அறக்கட்டளை மற்றும் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் ஆகியவை பிரதமரின் போஷன் சக்தி நிர்மானின் (முன்னதாக மதிய உணவுத் திட்டம் என்று பெயரிடப்பட்டிருந்தது) செயல்திறனை மேம்படுத்துவதற்காக ஒரு கூட்டாண்மைக்குள் நுழைந்துள்ளன.
- ✓ உலக அளவில் மிகப்பெரிய பள்ளி உணவுத் திட்டத்தைச் செயல்படுத்திய, உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து 2020இல் ஒரு ஒருங்கிணைப்பு அமைப்பாகத் தொடங்கப்பட்ட பள்ளி உணவுக் கூட்டணிக்கு இந்தியா மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கிறது.

## ➢ பசுமை ஆற்றல் வழித்தடம் கட்டம் 2 (**Green Energy Corridor Phase 2)**

- ✓ பசுமை ஆற்றல் வழித்தடத்தின் இரண்டாம் கட்டத்திற்கு ரூ.12,000 கோடியை ஒதுக்கீடு செய்து, ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- ✓ இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டமானது 2030ஆம் ஆண்டுக்குள் 450 ஜிகா வாட் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை அடையும் இலக்கை அடைய உதவும்.

## ➢ தடுப்பூசித் திட்டம்

- ✓ ஜனவரி 7 அன்று இந்தியா – அதன் தடுப்பூசித் திட்டத்தின்கீழ் அதன் குடிமக்களுக்கு 150 கோடி தடுப்பூசி டோஸ்களை வழங்கிய வரலாற்று மைல் கல்லை எட்டியுள்ளது.
- ✓ சுகாதார அமைச்சகத்தின் கூற்றுப்படி, வயது வந்தோரில் 91 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் குறைந்தபட்சம் ஒரு டோஸ் பெற்றுள்ளனர். அதே சமயம் 66 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் முழுமையாக தடுப்பூசி பெற்றுள்ளனர்.

## ➢ தேசிய நீர் விருதுகள் - 2020

- ✓ தேசிய நீர் விருதுகள் - 2020இல் 'சிறந்த மாநிலங்கள் பிரிவில்' உத்தரப் பிரதேசம் முதலிடம் பிடித்துள்ளது.
- ✓ 3வது தேசிய நீர் விருதுகள் - 2020, ஜனவரி 7, 2022 அன்று ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் கஜேந்திர சிங்-ஆல் அவர்களால் அறிவிக்கப்பட்டது.
- ✓ 'சிறந்த மாநிலங்கள் பிரிவில்' உத்தரப் பிரதேசம் முதலிடத்தையும், இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடும் பெற்றுள்ளன.

## ➢ இந்தியாவில் சிறுத்தை அறிமுகம்

- ✓ இந்தியாவில் சிறுத்தையை தத்தெடுப்பதற்கான செயல் திட்டத்தை ஒன்றிய அரசு ஜனவரி 5 அன்று அறிவித்தது.
- ✓ தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் 19வது கூட்டத்தின்போது, சுற்றுச் சூழல் அமைச்சகம், 'இந்தியாவில் சிறுத்தையைத் தத்தெடுப்பதற்கான செயல் திட்டத்தை' வெளியிட்டது.
- ✓ இந்தியாவில், இந்த செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக அடுத்த ஐந்து ஆண்டுகளில் 50 சிறுத்தைகள் அறிமுகப்படுத்தப்படும்.

## ➢ வீர் பால் திவாஸ் (Veer Bal Diwas)

✓ ஜனவரி 9 அன்று, பிரதமர் நரேந்திர மோடி – குரு கோவிந்த் சிங்கின் மகன்களின் நினைவாக டிசம்பர் 26ஆம் தேதியை 'வீர் பால் தினம்' ஆகக் கடைபிடிக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள முடிவை அறிவித்தார்.

## ➢ தூய்மையான நடுத்தர நகரம்

✓ நொய்டா, தூய்மை கணக்கெடுப்பு 2021இல் தூய்மையான நடுத்தர நகரம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

✓ இது இந்தியாவில் மேற்கொள்ளப்படும் சுகாதாரம், தூய்மை மற்றும் சுகாதாரம் பற்றிய வருடாந்திர கணக்கெடுப்பாகும்.

## ➢ குடியரசு தின விழா கொண்டாட்டங்கள்

✓ நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிறந்த நாளை உள்ளடக்கி, ஒவ்வொரு ஆண்டும் 24ஆம் தேதிக்குப் பதிலாக ஜனவரி 23 முதல் தொடங்கும்.

✓ இந்தியாவின் வரலாறு மற்றும் கலாச்சாரத்தின் முக்கிய அம்சங்களை நினைவுகூறும் வகையில், அரசு கவனம் செலுத்துவதற்காக, இந்த ஒரு நாள் சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✓ கடந்த ஆண்டு, நேதாஜியின் பிறந்த நாளான ஜனவரி 23ஆம் தேதியை 'பராக்கிரம தினம்' (parakram Diwas) ஆகக் கொண்டாட ஒன்றிய அரசு முடிவு செய்தது.

## ➢ உலகின் மிகப்பெரிய காதி தேசியக் கொடி

✓ ஜனவரி15, 2022 அன்று, 'இராணுவ தினத்தைக்' கொண்டாடுவதற்காக காதி துணியால் செய்யப்பட்ட உலகின் மிகப்பெரிய தேசியக் கொடி காட்சிக்கு வைக்கப்பட்டது.

✓ இது ஜெய்சல்மாரில் உள்ள இந்தியா – பாகிஸ்தான் எல்லையில் உள்ள லோங்கேவாலாவில் காட்சிப்படுத்தப்பட்டது. 1971ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வரலாற்றுப் போரின் மையக் கட்டமாக லோங்கேவாலா இருந்தது.

## ➢ தேசிய தொழில்நுட்ப ஜவுளி இயக்கம் (National Technical Textiles Mission)

✓ தேசிய தொழில்நுட்ப ஜவுளி இயக்கத்தின்கீழ் 20 திட்டங்களுக்கு ஒன்றிய அரசு அனுமதியளித்துள்ளது.

✓ ஜவுளித்துறை அமைச்சகம் சிறப்பு இழைகள் மற்றும் ஜியோடெக்ஸ்டைல்களில் 30 கோடி மதிப்பிலான 20 மூலோபாய ஆராய்ச்சித் திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது.

✓ இந்த மூலோபாய ஆராய்ச்சித் திட்டங்கள் ஒன்றிய அரசின் முன்னோடித் திட்டமான 'தேசிய தொழில்நுட்ப ஜவுளி இயக்கத்தின்'கீழ் வருகின்றன.

## ➢ காலர்வாலி புலி (Collarwali Tigress)

✓ 'காலர்வாலி' என்று பிரபலமாக அழைக்கப்படும் இந்தியாவின் 'சூப்பர்மாம்' புலி, மத்தியப் பிரதேசத்தில் உள்ள பெஞ்ச் புலிகள் காப்பகத்தில் (Pench Tiger Reserve) வயது முதிர்வு காரணமாக உயிரிழந்தது.

✓ 'காலர்வாலி' புலி தனது வாழ்நாளில் 29 குட்டிகளைப் பெற்றெடுத்ததாக அறியப்பட்டது. இது உலக சாதனையாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

- ✓ 2008இல் பூங்காவில் ரேடியோ காலர் பொருத்தப்பட்ட முதல் புலி என்ற பெருமையை இது பெற்றதால், இது ‘காலர்வாலி’ என்ற பட்டத்தைப் பெற்றது.

## ➢ ச.ஃபாய் கரம்சாரிகளுக்கான தேசிய ஆணையம் (National Commission For Safai Karamcharis)

- ✓ 31.03.2022க்குப் பிறகு மூன்று ஆண்டுகளுக்கு ச.ஃபாய் கரம்சாரிகளுக்கான தேசிய ஆணையத்தின் பதவிக் காலத்தை நீட்டிக்க ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ மூன்றாண்டு நீட்டிப்பின் மொத்தத் தாக்கம் தோராயமாக ரூ.43.68 கோடியாக இருக்கும்.
- ✓ 31.03.2022க்கு அப்பால் இன்னும் 3 ஆண்டுகளுக்கு ச.ஃபாய் கரம்சாரிகளுக்கான தேசிய ஆணையத்தின் முக்கிய பயனாளிகளாக, ச.ஃபாய் கரம்சாரிகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட கையால் துப்புரவு செய்பவர்கள் இருப்பார்கள். 31.12.2021 அன்று எம்எஸ் சட்ட சர்வேயின்கீழ் அடையாளம் காணப்பட்ட கையால் சுத்தம் செய்பவர்களின் எண்ணிக்கை 58098 ஆகும்.

## ➢ நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்

- ✓ நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 125 ஆவது பிறந்த நாளான ஜனவரி 23ஆம் தேதி இந்தியா கேட்டில் அவரது ஹாலோகிராம் சிலையைத் திறந்து வைப்பதாக ஜனவரி 21ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.
- ✓ அன்றைய தினம், பேரிடர் மேலாண்மைத் துறையில் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் வழங்கப்படும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அபதா பிரபந்தன் விருது வென்றவர்களைக் கவுரவிக்கும் சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும்.

## ➢ புலிகள் காப்பக நிலை

- ✓ மூன்று புதிய தளங்களுக்கு புலிகள் காப்பக அந்தஸ்து வழங்குவதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அத்துடன் மேலும் இரண்டு இடங்களுக்கு அனுமதி வழங்க கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது.
- ✓ இந்த ஐந்து புதிய தளங்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியாவில் புலிகள் காப்பகங்களாக முறையாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் மொத்த புலிகள் காப்பகங்களின் எண்ணிக்கை 56 ஆக இருக்கும்.
- ✓ விளாடிவோஸ்டோக்கில் நடைபெறவுள்ள உலகளாவிய புலிகள் உச்சி மாநாட்டிற்கு முன்பாக, இந்த 5 புதிய தளங்களும் முறையாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றன.
- ✓ தமிழ்நாட்டில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலைதான் கடைசியாக (51வது) புலிகள் காப்பகமாக 2021ல் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

## ➢ ஊரகப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் (Rural Area Development Plan Formulation and Implementation)

- ✓ ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங் - ஜனவரி 20, 2022 அன்று பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட ஊரகப் பகுதி மேம்பாட்டுத் திட்ட உருவாக்கம் மற்றும் செயலாக்கத்தின் வழிகாட்டுதல்களை வெளியிட்டார்.
- ✓ ஊரகப்பகுதி மேம்பாட்டுத் திட்ட உருவாக்கம் மற்றும் செயலாக்க வழிகாட்டுதல்களின் வெளியீடு, பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் ஸ்வாமித்வா (SVAMITVA) திட்டம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் ரர்பன் (RURBAN) இயக்கம் போன்ற ஒன்றிய அரசின் முயற்சிகளுக்குத் துணை புரியம் மற்றும் புவி சார் தகவல்களை சிறப்பாகப் பயன்படுத்த உதவும்.

- **பனாரஸ் இந்து பல்கலைக் கழகம்**
  - ✓ பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் - தன்னுடைய வழக்கமான பாடத்திட்டத்தில் ‘இந்து தர்மத்தை’ அறிமுகப்படுத்திய நாட்டின் முதலாவது பல்கலைக் கழகமாகத் திகழ்கிறது.
  - ✓ புதிய கல்விக் கொள்கை 2020ன்படி, ஒரு இடைநிலைத் திட்டமான இந்து ஆய்வுகளில் இரண்டு வருட முதுகலைப் படிப்பை இந்தப் பல்கலைக் கழகம் தொடங்கியுள்ளது.
  - ✓ நாட்டில் எந்த ஒரு பல்கலைக் கழகமும் இதுவரை வழங்காத முதல் பாடநெறி இதுவாகும்.

- **பராக்கிரம தினம் (Parakram Diwas)**
  - ✓ 23 ஜனவரி 2022, சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 125வது பிறந்த நாள் ஆகும்.
  - ✓ .இந் நாள் 2022 ஆண்டு முதல் ‘பராக்ரம் தினம்’ என்றும் கொண்டாடப்படும்.

- **வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம்**
  - ✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் - ஆன்லைன் நிகழ்வில் Cycles4Change சவால் மற்றும் Streets for people Challenge இன் சீசன் 2 ஆகியவற்றை அறிமுகப்படுத்தியது.
  - ✓ 'Streets for people Challenge' இன்கீழ், 38 இடங்கள் பாதசாரிகளுக்கு முன்னுரிமை அளிப்பதன்மூலம், முக்கியமான தெருக்கள் ஒவ்வொன்றையும் புதுமைப்படுத்தின.
  - ✓ பொது இடங்களை மக்களுக்கு ஏற்றதாக மாற்றுவதற்காக, The Smart Cities Mission 2020ஆம் ஆண்டு முதல் நகரங்களுக்கு இடையேயான சவால்களை ஏற்பாடு செய்து வருகிறது.
  - ✓ இந்த சவால்கள், ‘2006 தேசிய நகர்ப்புற போக்குவரத்துக் கொள்கைக்கு’ ஏற்ப ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

- **Abide With Me Hymn**
  - ✓ குடியரசு தின ஊர்வலத்தின்போது பாரம்பரியமாகப் பாடப்படும் ‘அபைட் வித் மீ’ என்ற பாடலுக்கு பதிலாக கவி பிரதீப் எழுதிய ‘ ஏ மேரே வதன் கே லோகன்’ என்ற பாடல் மாற்றி பாடப்படுகிறது.
  - ✓ இந்தப் பாடல் இந்தியா – சீனா போரின்போது கவி பிரதீப் என்பவரால் எழுதப்பட்டது. இது முதன் முதலில் லதா மங்கேஷ்கரால் 27 ஜனவரி 1963இல் பாடப்பட்டது. இதற்கு சி. ராமச்சந்திரா இசையமைத்தார்.

- **குடியரசு தின விழா கொண்டாட்டங்கள்**
  - ✓ ராஜ்பாத்தில் நடைபெற்ற ஃப்ளைபாஸ்ட் மற்றும் ஸ்டேட் டேப்லாக்ஸ் ஆகியவை இந்த ஆண்டு கொண்டாட்டங்களாக விளங்கின.
  - ✓ முதல் பெண் ரஃபேல் போர் விமான பைலட் ஷிவாங்கி சிங் இந்திய விமானப் படை வருகையில் ஒரு பகுதியாக இருந்தார்.

- **ட்ரோன் சான்றிதழ் திட்டம்**
  - ✓ ஜனவரி 26 அன்று, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் - ட்ரோன்களுக்கு சான்றிதழ் வழங்குவதை எளிமையாகவும், வேகமாகவும்,

வெளிப்படைத் தன்மையுடனும் செய்வதற்காக ட்ரோன் சான்றிதழ் வழங்கும் திட்டத்தை அறிவித்தது.

- ✓ தாராளமயமாக்கப்பட்ட ட்ரோன் விதிகள், 20201இன் விதி 7இனகீழ் ட்ரோன் சான்றிதழ் திட்டம் அறிவிக்கப்பட்டது.
- ✓ 2030க்குள் இந்தியாவை ‘ உலகின் ட்ரோன் மையமாக’ மாற்றுவதற்கான ஒன்றிய அரசின் முயற்சிக்கு ஏற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ➢ 6% குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பு தொழில்முனைவோருக்குச் சொந்தமாக உள்ளன

- ✓ மகாராஷ்டிராவில் 96,805 நிறுவனங்கள் தாழ்த்தப்பட்ட தொழில்முனைவோருக்குச் சொந்தமாக உள்ளதால், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தொழில்முனைவோருக்குச் சொந்தமான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் இந்தியாவில் மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது.
- ✓ தேசிய அளவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கையில் பட்டியல் வகுப்பு தொழில்முனைவோருக்குச் சொந்தமான நிறுவனங்களின் விகிதம் 6 விழுக்காடு ஆகும்.

## ➢ சிறந்த கிராமங்கள்

- ✓ இந்தியா 150 கிராமங்களை சிறந்த கிராமங்களாக மாற்றுகிறது.
- ✓ இஸ்ரேல் அரசின் தொழில்நுட்ப உதவியுடன் 12 மாநிலங்களில் உள்ள 150 கிராமங்களை ‘சிறந்த கிராமங்களாக’ மாற்ற ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது.

## ➢ மசாலா பொருட்கள் பரிமாற்ற போர்ட்டல் (Spice Exchange Portal)

இந்திய மசாலா பொருட்கள் பரிமாற்ற போர்ட்டல் - சமீபத்தில் ஸ்பைஸ் எக்சேஞ் போர்ட்டலை அறிமுகப்படுத்தியது. இது இந்திய மசாலா ஏற்றுமதியாளர்களை உலகம் முழுவதிலுமிருந்து வாங்குபவர்களுடன் இணைக்கும்.

- ✓ The spicexchangeindia.com என்பது மசாலா ஏற்றுமதிக்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட ஒரு முப்பரிமான மெய்நிகர் தளமாகும்.
- ✓ இந்த வகையில் முதலாவதாகிய இந்தத் தளம் ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

## ➢ இந்தியாவின் முதல் புவியியல் பூங்கா (India’s First Geological Park)

- ✓ நாட்டின் முதலாவது ‘புவியியல் பூங்கா’ மத்தியப் பிரதேசத்தின் ஜபல்பூர் மாவட்டத்தில் நர்மதா நதிக்கரையில் உள்ள லாம்ஹெட்டா கிராமத்தில் கட்டப்படும்.
- ✓ இந்தப் பூங்காவிற்கு சுரங்க அமைச்சகத்தின்கீழ் இந்திய புவியியல் ஆய்வு மையம் ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ குறிப்பிடத்தக்க வகையில், இந்த தளம் ஏற்கனவே யுனெஸ்கோவின் இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான புவிசார் பாரம்பரியத்தின் தற்காலிக பட்டியலில் உள்ளது.

## ➢ ஒன்றிய அரசின் பட்ஜெட் (Union Budget)

- ✓ ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பிப்ரவரி 1, 2022 அன்று மத்திய பட்ஜெட் 2022-2023ஐ தாக்கல் செய்தார்.
- ✓ டிஜிட்டல் சொத்துக்களை விற்பனை செய்வதன்மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு நாட்டிலேயே அதிக வரியான 30 விழுக்காடு வரி விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

- ✓ 2022-23 முதல் ரிசர்வ் வங்கியால் பிளாக்செயின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் ரூபாய் வழங்கப்படும்.

➢ **பட்ஜெட் - மின்-கடவுச்சீட்டுகள் (e-Passports)**

- ✓ 2022-23 நிதியாண்டில் ஒன்றிய அரசு மின் கடவுச்சீட்டுகளை வழங்கும்.
- ✓ இந்தக் கடவுச்சீட்டில் அடையாளத்தைச் சரிபார்ப்பதற்கு மின் பாஸ்போர்ட் ரேடியோ அதிர்வெண் அடையாளம் (Radio-Frequency Identification) மற்றும் பயோ மெட்ரிக்ஸ் பயன்படுத்தப்படும்.

✓ **பட்ஜெட் 2022-23**

- ✓ ஒன்றிய அரசு தேசிய தொலை மனநல மருத்துவத் திட்டத்தைத் (National Tele Mental Health) தொடங்கி வைக்கஉள்ளது.
- ✓ சாதனை அளவாக 25,000 கி.மீ தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்படும்.
- ✓ மக்கள் மற்றும் சரக்குகளின் விரைவான இயக்கத்தை எளிதாக்குவதற்காக, 2022-23ல் விரைவுச் சாலைகள் குறித்த தேசிய மாஸ்டர் பிளான் வகுக்கப்படும்.
- ✓ ஆத்மநிர்பர் பாரதத்தை மேம்படுத்துவதற்காக பாதுகாப்புக்கான மூலதனக் கொள்முதல் பட்ஜெட்டில் சுமார் 68 விழுக்காடு உள்நாட்டு தொழில்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

➢ **ஒன்றிய பட்ஜெட் 2022-23**

- ✓ பிப்ரவரி 1 ஆம் தேதி, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் - 2022-23ஆம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்தார் மற்றும் நிதி மசோதா 2022ஐ நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.
- ✓ மத்திய பட்ஜெட் வளர்ச்சியின் 4 தூண்களில் கவனம் செலுத்துகிறது – பிரதமர் கதி சக்தி, முதலீட்டு நிதி, உற்பத்தி மேம்பாடு, ஆற்றல் மாற்றம் மற்றும் காலநிலை நடவடிக்கை.
- ✓ நிதியமைச்சர் தனது உரையில், 'அம்ரித் கால்'க்கு அடித்தளம் அமைப்பதாக அறிவித்தார். இது 100ஐ நோக்கிய இந்தியாவின் பயணத்தில் புதிய 25 ஆண்டு காலம் ஆகும்.

➢ **தூய்மை சார்த்தி உதவித் தொகை (SwachhtaSaarthi Fellowship) 2022**

- ✓ இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகரின் அலுவலகம் 'தூய்மை சார்த்தி உதவித் தொகை 2022'ஐ அறிவித்துள்ளது.
- ✓ 'கழிவிலிருந்து செல்வம்' என்ற திட்டத்தின்கீழ் இது தொடங்கப்பட்டுள்ளது.
- ✓ கழிவு மேலாண்மை, கழிவு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் போன்ற சமூகப் பணிகளில் ஈடுபடும் இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கு இது தூய்மை சார்த்திகளாக அதிகாரம் அளிக்கும் மற்றும் பசுமையான கிரகத்திற்கான கழிவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளைச் செயல்படுத்தும்.

➢ **சாகர்மாலா திட்டம் (Sagarmala Scheme)**

- ➢ ஒன்றிய அரசு – சாகர்மாலா திட்டத்தின்கீழ் 304.8 கோடி ரூபாய் செலவில் புதுச்சேரி துறைமுகத்தை மூன்று கட்டங்களாக மேம்படுத்துவதாக அறிவித்துள்ளது. இந்தத் துறைமுகம் சென்னைத் துறைமுகத்திற்கு ஒரு ஃபீடர் துறைமுகமாக விளங்கும்.
- ➢ ஒன்றிய அமைச்சரின் கூற்றுப்படி, புதுச்சேரியில் உள்ள துறைமுகத்தை சென்னை துறைமுகத்திற்கு ஃபீடர் துறைமுகமாகப் பயன்படுத்துவதற்கு ஒன்றிய கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் ஒப்புதலுடன், சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் மற்றும் புதுச்சேரி துறைமுகத்துறை மார்ச் 2017இல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

## ➢ இதர பயனுள்ள பகுதி அடிப்படையிலான பாதுகாப்பு நடவடிக்கைகள் (Other Effective Area-Based Conservation Measures)

- ✓ அரியானாவின் குருகிராமில் உள்ள ஆரவல்லி பல்லுயிர் பூங்கா - இந்தியாவின் முதல் 'மற்ற பயனுள்ள பகுதி அடிப்படையிலான பாதுகாப்பு நடவடிக்கைகள்' தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ பிப்ரவரி 2ஆம் தேதி உலக சதுப்பு நில தினத்தையொட்டி ஒன்றிய சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் இதனைத் தெரிவித்துள்ளது.

## ➢ சமத்துவ சிலை (Statue Of Equality)

- ✓ ஐதராபாத்தில் 11ஆம் நூற்றாண்டின் பக்தித் துறவி ஸ்ரீராமானுஜாச்சாரியாரின் நினைவாக 216 அடி உயர 'சமத்துவ சிலையை' பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

## ➢ இந்திர தனுஷ் 4.0 (Indradhanush)

- ✓ பிபர்வரி 7 ஆம் தேதி, ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா – தீவிரப்படுத்தப்பட்ட இந்திர தனுஷ் 4.0 இயக்கத்தை மெய்நிகராகத் தொடங்கி வைத்தார்.
- ✓ அனைவருக்கும் தடுப்பூசித் திட்டத்தின் (Universal Immunisation Programme) நான்காவது சுற்று குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களை உயிருக்கு ஆபத்தான நோய்களிலிருந்து பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ உலகின் மிகப்பெரிய இந்தத் தடுப்பூசி இயக்கத்தின்கீழ், ஆண்டுதோறும் 3 கோடி கர்ப்பிணிப் பெண்களும், 2.6 கோடி குழந்தைகளும் சேவை பெறுகின்றனர்.

## ➢ ஆபரேஷன் AAHT

- ✓ ஆளகடத்தலைத் தடுப்பதற்கு இரயில்வே பாதுகாப்புப் படை நாடு முழுவதும் நடவடிக்கை எடுத்துள்ளது. 'ஆபரேஷன் ஏஏஎச்டி திட்டத்தின் ஒரு பகுதியாக, கடத்தல்காரர்களின் பிடியில் இருந்து பாதிக்கப்பட்டவர்களை, குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளை மீட்பதில் கவனம் செலுத்தி அனைத்து நீண்ட தூர இரயில்கள் - வழித்த தடங்களிலும் சிறப்புக் குழுக்கள் நிறுத்தப்படும்.
- ✓ நாள்தோறும் நாடு முழுவதும் சுமார் 21,000 இரயில்களை இயக்கும் இரயில்வே துறையானது, பாதிக்கப்பட்டவர்களை நீண்ட தூர இரயில்களில் கொண்டு செல்வதற்கு கடத்தல்காரர்களுக்கு மிகவும் நம்பகமான போக்குவரத்து முறையாகும்.

## ➢ நைட்ரிக் ஆக்சைடு நாசி ஸ்ப்ரே (Nitric Oxide Nasal Spray)

- ✓ பிப்ரவரி 9 அன்று, க்ளென்மார்க் பார்மசூட்டிகல்ஸ் நிறுவனம், கோவிட் -19 நோயால் பாதிக்கப்பட்ட அதிக ஆபத்துள்ள வயது வந்த நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக இந்தியாவில் முதல் நாசி ஸ்ப்ரேயை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ அதிக ஆபத்துள்ள நோயாளிகளில் தடுப்பூசி போடாத நோயாளிகள், நடுத்தர மற்றும் வயதான நோயாளிகள் மற்றும் இணை நோயுற்ற நோயாளிகள் அடங்குவர்.
- ✓ இந்த நிறுவனம், கனடிய மருந்து நிறுவனமான சானோடைஸ் ரிசர்ச் மற்றும் அபிவிருத்திக் கழகம் உடன் இணைந்து ∴பேபிஸ்ப்ரே என பெயரிடப்பட்ட நைட்ரிக் ஆக்சைடு நாசல் ஸ்ப்ரேயை அறிமுகப்படுத்தியுள்ளது.

➢ **பயோமாஸ் அடிப்படையிலான ஹைட்ரஜன் ஆலை**

✓ இந்தியாவின் முதல் வணிக அளவிலான பயோமாஸ் அடிப்படையிலான ஹைட்ரஜன் ஆலை மத்தியப் பிரதேசத்தின் கந்த்வா மாவட்டத்தில் அமைக்கப்படும்.

✓ இந்த ஆலை தினமும் ஒரு டன் ஹைட்ரஜனை, 30 டன் உயிர்த் தீவனத்தில் இருந்து உற்பத்தி செய்யும்.

➢ **இந்திய இரயில்வே மேலாண்மை சேவை (Indian Railways Management Service)**

✓ பிப்ரவரி 9 அன்று, மத்திய சிவில் சேவைகளின் கீழ் இந்திய ரயில்வே தொடர்பான எட்டு சேவைகளை, புதிதாக உருவாக்கப்பட்ட குரூப் 'ஏ' ஒன்றிய சேவையான 'இந்திய இரயில்வே மேலாண்மை சேவையில் ஒன்றிணைத்து ஒன்றிய அரசு ஆணையிட்டுள்ளது.

✓ இந்த ஒன்றிணைத்தல் மூலம், இரயில்வே பாதுகாப்புப் படை மற்றும் மருத்துவ சேவைத் துறை ஆகிய இரண்டு துறைகள் மட்டுமே இரயில்வேயிடம் உள்ளன.

➢ **புதுமையான சுகாதார வழங்கலுக்கான சந்தைகள் மற்றும் வளங்களுக்கான நிலையான அணுகல் (Sustainable Access to Markets and Resources for Innovative Delivery of Healthcare -SAMRIDH)**

✓ அடல் புதுமை இயக்கம், நித்தி ஆயோக் மற்றும் சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க முகமை – புத்தாக்கமான சுகாதாரப் பாதுகாப்புக்கான முயற்சிக்கான சந்தைகள் மற்றும் வளங்களுக்கான நிலையான அணுகலின்கீழ் ஒரு புதிய கூட்டாண்மையை அறிவித்தது.

✓ அடுக்கு 2 மற்றும் அடுக்கு 3 நகரங்கள் மற்றும் கிராமப்புற மற்றும் பழங்குடியினப் பகுதிகளில் பாதிக்கப்படக் கூடிய மக்களுக்கு மலிவுவிலை மற்றும் தரமான சுகாதாரத்திற்கான அணுகலை மேம்படுத்துவதற்காக இந்த இணைப்பு முயல்கிறது.

➢ **PMKSY மார்ச் 2026 வரை**

✓ பிரதமரின் கிசான் சம்படா யோஜனா திட்டம் மார்ச் 2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

✓ இந்தத் திட்டம் ஒன்றிய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

✓ இந்தத் திட்டம் உணவு பதப்படுத்தும் துறையின் ஒட்டு மொத்த வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டுள்ளது.

➢ **100வது ஜவுளி இரயில்**

✓ மேற்கு இரயில்வே மண்டலத்தின் மும்பை மத்திய பிரிவு – நாட்டின் 100வது ஜவுளி இரயிலை இயக்கும் மைல்கல் சாதனையை எட்டியுள்ளது.

✓ சூரத் பிராந்தியத்தின் ஜவுளி சந்தைக்கு ஜவுளி இரயில்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை, ஏனெனில் அவை சிக்கனமான, வேகமான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து முறையாகும்.

➢ **தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் பிரிவு 69(ஏ)**

✓ பிப்ரவரி 14 அன்று, தனியுரிமை, பாதுகாப்பு மற்றும் உளவு தொடர்பான கவலைகள் காரணமாக தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 69(ஏ) பிரிவின்கீழ் 54 சீனச் செயலிகளை ஒன்றிய அரசு தடை செய்துள்ளது.

✓ தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் அவசரச் சட்டத்தின்கீழ், இந்தச் செயலிகளைத் தடுப்பதற்கான கோரிக்கை உள்துறை அமைச்சகத்திடம் இருந்து பெறப்பட்டது.

## ➢ புதிய எல்லைகள் திட்டம்

- ✓ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், 'பதிய எல்லைகள்' திட்டத்தை நடத்துகிறது.
- ✓ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் 'ஆசாதி கா அம்ரித் மஹோத்சவின்' ஒரு பகுதியாக 'புதிய எல்லைகள்' என்ற ஒரு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பற்றிய ஒரு திட்டத்தை நடத்தி வருகிறது.
- ✓ 2070க்குள் நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வை அடைவதற்கான சாலை வரைபடம் குறித்த கூட்டம், பிப்ரவரி 18 அன்று நடைபெறும்.

## ➢ அனைத்து கிராமங்களின் டிஜிட்டல் வரைபடங்கள்

- ✓ இந்தியா தனது 6,00,000 கிராமங்களின் டிஜிட்டல் வரைபடங்களைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது. 100 நகரங்களுக்கு பான்-இந்தியா முப்பரிமான வரைபடங்களும் தயாரிக்கப்படும்.
- ✓ பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் முன்னோடியாகச் செயல்படுத்தப்படும், கிராமங்களில் கணக்கெடுப்பு மற்றும் கிராமப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் மேப்பிங் (Survey of Villages and Mapping with Improvised Technology in Village Areas) SVAMITVA என்று அழைக்கப்படும் திட்டம் ஏப்ரல் 2020 இல் பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்டது.

## ➢ தேசிய ஹைட்ரஜன் கொள்கை

- ✓ இந்தியா தேசிய ஹைட்ரஜன் கொள்கையின் முதல் பகுதியை 17 பிப்ரவரி 2022 அன்று தொடங்கும்.
- ✓ இந்தக் கொள்கையானது, நாட்டில் பச்சை ஹைட்ரஜன் உற்பத்தியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ ஒன்றிணைந்த தளவாட இடைமுக பிளாட்பார்ம் (Unified Logistics Interface Platform)

- ✓ ஒன்றிய அரசு – தளவாடச் செலவுகளைக் கடுமையாகக் குறைப்பதற்கும் இந்தியப் பொருட்களைப் போட்டித் தன்மையடைச் செய்வதற்காகவும் ஒன்றிணைந்த தளவாட இடைமுக பிளாட்பார்ம் ஐ விரைவில் வெளியிட உள்ளது.
- ✓ 6 அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் 24 தளவாட அமைப்புகளை ஒருங்கிணைத்து அனைத்து பங்குதாரர்களுக்கும் நிகழ்நேரத் தரவை வழங்கவும், வெவ்வேறு முறைகள் மூலம் சரக்குகளின் திறமையான இயக்கத்தை உறுதி செய்வதையும் இந்தத் தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ உயிரியல் பாதுகாப்பு நிலை 3 நடமாடும் ஆய்வகம் (Biosafety Level-3 Mobile Laboratory)

- ✓ இந்தியாவின் முதல் உயிரியல் பாதுகாப்பு நிலை 3 கட்டுப்பாட்டு மொபைல் ஆய்வகம் 18 பிப்ரவரி 2022 அன்று மகாராஷ்டிராவின் நாசிக்கில் தொடங்கப்பட்டதாக சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் அறிவித்துள்ளது.
- ✓ மனிதர்களுக்கு மிகவும் தொற்றக்கூடிய மற்றும் உயிரிழப்பை ஏற்படுத்தும் திறன் கொண்ட வைரஸ் தொற்றுகள் புதிதாக உருவாகியும் மீண்டும் உருவாகி வருவதையும் ஆய்வு செய்வதற்காக இது அமைக்கப்பட்டுள்ளது.
- ✓ இதை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் வடிவமைத்துள்ளது.

### ➢ இந்தியாவின் முதலாவது வாட்டர் டாக்சி சேவை

- ✓ இந்தியாவின் முதல் வாட்டர் டாக்சி சேவை, வியாழக்கிழமை அன்று நவி மும்பை பகுதியை மும்பையின் பிரதான நிலப் பகுதியுடன் இணைக்கும் வகையில் மகாராஷ்டிராவில் தொடங்கப்பட்டது.
- ✓ பெலாப்பூர் ஜெட்டியை முதலமைச்சர் உத்தவ் தாக்கரே திறந்து வைத்தார். ஒன்றிய அரசின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் சர்பானந்த் சோனோவால் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

### ➢ *கிசான் ட்ரோன்கள் (Kisan Drones)*

- ➢ பிப்ரவரி 18 அன்று, பிரதமர் நரேந்திர மோடி - இந்தியாவின் பல்வேறு மாநகரங்கள் மற்றும் நகரங்களில் பூச்சிக் கொல்லிகள் மற்றும் பண்ணை இரசாயனங்கள் தெளிப்பதற்கான 100 ‘கிசான் ட்ரோன்களை’ மெய்நிகராக கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- ➢ குர்கானுக்கு அருகிலுள்ள மனேசரில் கூடியிருந்த விவசாயிகள் குழுவிடம் அவர் உரையாற்றினார். அங்கு இருந்துதான், ‘ட்ரோன் கிசான் யாத்ரா’ கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது.
- ➢ இந்திய விவசாயத்திற்கு இது ஒரு ‘மைல்கல்’ என்று பிரதமர் குறிப்பிட்டார். புதிய தொழில்நுட்பங்கள் ‘விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு வாய்ப்புகள் நிறைந்த உலகத்தைக்’ கொண்டு வரும் என்று அவர் தெரிவித்தார்.

### ➢ **ஆசியாவின் மிகப்பெரிய பயோ-சிஎன்ஜி ஆலை (Bio-CNG plant)**

- ✓ 19 பிப்ரவரி 2022 அன்று மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் ஆசியாவின் மிகப்பெரிய பயோ-சிஎன்ஜி ஆலையை பிரதமர் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.
- ✓ அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாடு முழுவதிலும் உள்ள 75 பெரிய மாநகராட்சிகளில் இதேபோன்ற கோபர்தன் பயோ-சிஎன்ஜி ஆலைகளை அமைக்கும் பணி நடைபெற்று வருவதாக பிரதமர் கூறினார்.
- ✓ இந்தியாவின் நகரங்களை தூய்மையான, மாசு இல்லாத, சுத்தமான எரிசக்தி நகரங்களாக மாற்ற இந்தப் பிரச்சாரம் பெரிதும் உதவும்.

### ➢ **ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து மேலாண்மை மசோதா**

ஒன்றிய உரக அமைச்சகம் - உயிர் உரங்கள் மற்றும் ரசாயனம் அல்லாத உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்க ‘ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து மேலாண்மை மசோதாவை’ கொண்டு வர முன் வந்துள்ளது.

முன்மொழியப்பட்ட இந்த மசோதாவில் உரங்களின் விலை, விநியோகம் மற்றும் இறக்குமதி ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக ஒழுங்குமுறை ஆணையத்தை அமைக்க அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.

இந்த வரைவு மசோதாவின்படி, உரத்தை விற்க வேண்டிய அதிகபட்ச விலையை ஒன்றிய அரசே நிர்ணயிக்கும்.

### ➢ **இந்திய சுற்றுலா தொலைநோக்கு ஆவணம் 2035**

- ✓ இந்திய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சங்கங்களின் கூட்டமைப்பு (Federation of Associations in Indian Tourism & Hospitality - FAITH) ∴பெய்த் 2035 தொலைநோக்கு ஆவணத்தை வெளியிட்டுள்ளது.
- ✓ 2035ஆம் ஆண்டிற்குள் இந்திய சுற்றுலாவை உலகமே விரும்பி வரவேற்கக் கூடியதாக மாற்றுவதற்கான இலக்குகள் மற்றும் செயல்படுத்தும் பாதையை இது கொண்டுள்ளது.
- ✓ இந்திய சுதந்திரத்தின் 75வது ஆண்டை நினைவுகூறும் வகையில் தொலைநோக்கு ஆவணம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

## ➢ விக்யான் சர்வத்ர பூஜ்யதே திட்டம் (Vigyan Sarvatra Pujyate Programme)

- ✓ ஒன்றிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் இந்தத் திட்டத்தை ஏற்பாடு செய்வதற்காக மத்தியப் பிரதேசத்தில் உள்ள மூன்று நிறுவனங்களைத் தெர்ந்தெடுத்துள்ளது.
- ✓ இது பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள் மற்றும் விரிவுரைகளின் ஒரு வார கால, தேசிய அளவிலான திட்டமாகும்.
- ✓ விக்யான் சர்வத்ர பூஜ்யதே திட்டம், அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்கள் பற்றிய அறிவியல் அறிவை நோக்கி மாணவர்களை ஈர்க்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

## ➢ வந்தே பாரதத்தின் சிக்னேச்சர் டியூன் (Signature Tune of VandeBharatam)

- ✓ ஆசாதி கா அம்ரித் மஹோத்சவின் கீழ் கொண்டாட்டத்தில், சர்வதேச தாய்மொழி தினமான 'ஏகம்பரதம்' என்ற பெயரில் ஒரு கலாச்சார மாலை நிகழ்வும், கலாச்சார மாலையும் 22 பிப்ரவரி 2022 அன்று டெல்லியில் உள்ள IGNCA வில் நடத்தப்பட்டது.
- ✓ கிராமி விருது பெற்ற ரிக்கி கேஜ் மற்றும் ஆஸ்கார் போட்டியாளர் பிக்ரம் கோஷ் இசையமைத்த 'வந்தேபாரதம்' சிக்னேச்சர் ட்யூனை கலாச்சாரம் மற்றும் வெளிவிவகார அமைச்சர் திருமதி மீனகாசிலேகி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

## ➢ வரைவு இந்திய தரவு அணுகல் மற்றும் பயன்பாட்டுக் கொள்கை, 2022 (Draft India Data Accessibility & Use Policy, 2022)

- ✓ மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (The Ministry of Electronics and Information Technology) – பொது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களுக்காக. 'வரைவு இந்திய தரவு அணுகல் மற்றும் பயன்பாட்டுக் கொள்கை, 2022' என்ற தலைப்பில் வரைவு தரவுக் கொள்கையை வெளியிட்டுள்ளது.
- ✓ இந்தக் கொள்கை தேசிய தரவு பகிர்வு மற்றும் அணுகல் கொள்கை மற்றும் திறந்த அரசாங்க தரவு தளம் இந்தியா ஆகியவற்றிற்கு மேம்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

## ➢ ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் (Ayushman Bharat Digital Mission)

- ✓ பிப்ரவரி 26 அன்று, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை – 1600 கோடி ஐந்தாண்டு பட்ஜெட்டில் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷனை நாடு முழுவதும் செயல்படுத்த ஒப்புதல் அளித்தது.
- ✓ 2022-23 யூனியன் பட்ஜெட்டின் முக்கிய பகுதிகளில் டிஜிட்டல் மிஷன் ஒன்றாகும்.
- ✓ சுகாதார சுற்றுச் சூழலுக்குள் சுகாதார தரவுகளின் இயங்குநிலையை செயல்படுத்த ஆன்லைன் தளத்தை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ ஒளி மின்னழுத்த ஆலை (Photovoltaic Plant)

- ✓ பாரத் ஹெவி எல்கட்ரிக்கல்ஸ் லிமிடெட் - இந்திய இரயில்வேக்காக மத்தியப் பிரதேசத்தில் உள்ள பினாவில் 1.7 மெகாவாட் சூரிய ஒளி மின்னழுத்த ஆலையை நிறுவியுள்ளது.
- ✓ இழுவை அமைப்புகளுக்கு மின்சாரத்தை நேரடியாக வழங்குவதற்காக இந்திய ரயில்வே நெர்வொர்க்கில் இயக்கப்பட்ட முதல் சூரிய மின்நிலையம் இதுவாகும்.
- ✓ 'நெட் ஜீரோ கார்பன் உமிழ்வு' ரயில் நெட்வொர்க்காக மாறுவதற்காக, இந்திய ரயில்வே தனது காலி நிலத்தைப் பயன்படுத்தி 2030க்குள் 20 ஜிகாவாட் திறன்

கொண்ட சூரிய மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கும் திட்டத்தை உருவாக்கியுள்ளது.

➢ **ஆபரேஷன் கங்கா**

✓ பிப்ரவரி 27, 2022 அன்று, உக்ரைனில் இருந்து இந்திய பிரஜைகளை வெளியேற்றுவதற்கு உதவுவதற்காக வெளியுறவு அமைச்சகம் 24x7 கட்டுப்பாட்டு மையங்களை அமைத்தது.

✓ இந்தியா 'ஆபரேஷன் கங்கா' என்ற பெயரில் பலமுனை வெளியேற்றும் திட்டத்தைத் தொடங்கியது.

➢ **சர்வதேச பருவமழைத் திட்ட அலுவலகம் (International Monsoons Project Office)**

✓ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் அமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் - 2022ஆம் ஆண்டு தேசிய அறிவியல் தினத்தின்போது சர்வதேச பருவமழைத் திட்ட அலுவலகத்தைத் தொடங்கி வைத்தார்.

✓ உலக காலநிலை ஆராய்ச்சித் திட்டம் மற்றும் உலக வானிலை ஆராய்ச்சி திட்டத்தின்கீழ் அடையாளம் காணப்படும் சர்வதேச பருவமழை ஆராய்ச்சி தொடர்பான நடவடிக்கைகளை இந்த அலுவலகம் மேற்கொள்ளும்.

➢ **ஆரோக்கிய வனம்**

✓ குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், மார்ச் 1, 2022 அன்று புது தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் முதல் பெண்மணி சவிதா கோவிந்த் முன்னிலையில், குடியரசுத் தலைவர் மாளிகையில் மருத்துவ மூலிகைகள் மற்றும் தாவரங்களின் மையமான 'ஆரோக்கிய வனம்' ஒன்றைத் திறந்து வைத்தார்.

✓ இந்த ஆரோக்கிய வனத்தின் நோக்கம், ஆயுர்வேத தாவரங்களின் முக்கியத்துவத்தையும் அவை மனித உடலில் ஏற்படுத்தும் விளைவுகளையும் ஊக்குவிப்பதாகும்.

➢ **புலம் பெயர்ந்தோர் மற்றும் தாயகம் திரும்பியவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு**

✓ 'புலம்பெயர்ந்தோர் மற்றும் தாயகம் திரும்பியவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு' என்ற குடைத் திட்டத்தின்கீழ், தற்போதுள்ள ஏழு துணைத் திட்டங்களைத் தொடர்வதற்கான முன்மொழிவுக்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

✓ 2021-22 முதல் 2025-26 வரையிலான காலத்திற்கு ரூ.1.452 கோடி ஒதுக்கீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

✓ இந்தத் திட்டம் புலம்பேயர்ந்தோர் மற்றும் நாடு திரும்பியவர்கள் நியாயமான வருமானம் ஈட்டவும், முக்கிய பொருளாதார நடவடிக்கைகளில் தங்களை இணைத்துக் கொள்ளவும் உதவுகிறது.

➢ **ஸ்திரீ மனோரக்ஷா திட்டம்**

✓ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், பெங்களூருவின் நிம்ஹான்ஸ் (NIMHANS) அமைப்புடன் இணைந்து 'ஸ்திரீ மனோரக்ஷா திட்டத்தைத்' தொடங்கியுள்ளது.

✓ இந்தியா முழுவதும் பெண்களின் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இது தொடங்கப்பட்டது.

➢ **கன்யா சிக்ஷா பிரவேஷ் உத்சவ் (Kanya Shiksha Pravesh Utsav)**

- ✓ ஒன்றிய அரசு – சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ‘கன்யா சிக்ஷா பிரவேஷ் உத்சவ்’ என்ற ஒரு புதிய தேசிய அளவிலான பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- ✓ இந்தப் பிரச்சாரத்தை பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், கல்வி அமைச்சகம் மற்றும் யூனிசெப் இந்தியாவுடன் இணைந்து தொடங்கியுள்ளது.
- ✓ இது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் கல்வி அமைச்சகத்துக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மாதிரி மூலமாக பள்ளிக்கு வெளியே உள்ள பெண்களை முறையான கல்வி முறைக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இந்தப் பிரச்சாரம், 11-14 வயதுக்கு இடைப்பட்ட நான்கு இலட்சம் பள்ளி செல்லாத, பருவ வயதுப் பெண்களின் சேர்க்கை மற்றும் தக்க வைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ளது.

## ➢ பிரச்சார் பாரதி

- ✓ இந்தியாவின் பொது சேவை ஒளிபரப்பு நிறுவனமான பிரச்சார் பாரதி – முன்னணி நிறுவனமான யூப் டிவி (Yupp TV) யுடன் இணைந்துள்ளது.
- ✓ யூப் டிவி மற்றும் பிரச்சார் பாரதி இடையேயான இந்த ஒப்பந்தம், தூர்தர்ஷனின் டிடி இந்தியாவின் உலகளாவிய அணுகலை விரிவுபடுத்துவதற்கும், இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் மதிப்புகளை உலகிற்கு வெளிப்படுத்துவதற்கும் ஒளிபரப்பாளரின் ‘தொலைநோக்குப் பார்வையின்’ ஒரு பகுதியாகும்.
- ✓ இந்த இணைப்புடன், டிடி இந்தியா இப்போது அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா, மத்திய கிழக்கு, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் உள்ள யூப் டிவியின் ஓடிடி இயங்கு தளத்தில் கிடைக்கிறது.

## ➢ சமர்த்

- ✓ பெண்களுக்கான தொழில்முனைவு ஊக்குவிப்பு இயக்கம் - ‘சமர்த்’ தொடங்கப்பட்டது.
- ✓ ஒன்றிய அரசின் குறு, சிறு, நடுத்தர தொழில்களுக்கான அமைச்சர் நாராயண் ரானே, பெண்களுக்கான சிறப்பு தொழில் முனைவோர் ஊக்குவிப்பு இயக்கமாகிய ‘சமர்த்’ஐ, 7 மார்ச் 2022 அன்று புது தில்லியில் தொடங்கினார்.
- ✓ சுயதொழில் வாய்ப்புகளை மேற்கொள்வதன்மூலம் அவர்கள் தன்னம்பிக்கை பெறவும் சுதந்திரமாக இருப்பதற்கும் இது வாய்ப்பளிக்கும்.

## ➢ ‘ஓய்வூதியத்திற்கு கொடையளிப்போம்’ திட்டம்

- ✓ பிரதமரின் ஷ்ரம் யோகி மான்-தன் (Pradhan Mantri Shram Yogi Maan-Dhan) திட்டத்தின்கீழ் எந்த ஒரு குடிமகனும் ஒரு அமைப்பு சாரா தொழிலாளியின் சார்பாக சந்தாத் தொகையை செலுத்த அனுமதிக்கும், ‘ஓய்வூதியத்திற்கு கொடையளிப்போம்’ திட்டத்தை ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் திங்கட்கிழமை அறிமுகப்படுத்தியது.
- ✓ 2019ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம், 18 முதல் 40 வயதுக்குட்பட்ட, மாதம் 15000 வரை சம்பளம் வாங்கும் அமைப்புசாராத் துறைத் தொழிலாளர்கள், தங்களது வயதைப் பொறுத்து ரூ.55 முதல் 200 வரை சந்தா தொகையை செலுத்தி பதிவு செய்ய அனுமதிக்கிறது. அதற்கு இணையான தொகையை அரசு செலுத்தும்.
- ✓ 60 வயதை எட்டினால், பயனாளிகளுக்கு மாதந்தோறும் 3000 ஓய்வூதியம் கிடைக்கும். மார்ச் 3ஆம் தேதிய நிலவரப்படி, இந்தத் திட்டத்தில் 46.34

இலட்சம் பேர் பதிவு செய்துள்ளனர் என்று தொழிலாளர் அமைச்சகத்தின் போர்டல் தெரிவிக்கிறது.

➢ **ஸ்வதந்த்ரதா சைனிக் சம்மான் யோஜனா (Swatantrata Sainik Samman Yojana)**

✓ சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருக்கும் தகுதியுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற நிதிப் பலன்களை 2025-26ஆம் ஆண்டு வரை வழங்க ஏதுவாக, ஸ்வதந்த்ரதா சைனிக் சம்மான் யோஜனா திட்டத்தின்கீழ் ரூ.3,274.87 கோடியை ஒதுக்கீடு செய்ய ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ இந்த முடிவானது ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் ஆண்டில் சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகங்களை நினைவுகூர்வதற்கும் அவர்களிடமிருந்து உத்வேகம் பெறுவதற்கும் அரசின் அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகிறது.

➢ **சுரங்கங்கள் மற்றும் கனிம (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் [Mines and Mineral (Development and Regulation) Act]**

✓ சுரங்கங்கள் மற்றும் கனிம (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் திருத்தம் செய்வதற்கு மார்ச் 9 அன்று, ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்தது.

✓ இந்தத் திருத்தம் பொட்டாசியம், மரகதம் மற்றும் பிளாட்டினம் உலோகக் குழு போன்ற கனிமங்களின் ராயல்டி விகிதங்களை நிர்ணயிக்க முயல்கிறது.

✓ கிளாக்கோனைட், போட்டாசியம், மரகதம், பிளாட்டின உலோகங்கள், ஆண்டலூசைட் மற்றும் மாலிப்டினம் ஆகியவற்றின் கனிமத் தொகுதிகளின் ஏலத்தையும் இது உறுதி செய்கிறது.

✓ இந்த நடவடிக்கை காரணமாக இந்த கனிமங்களின் இறக்குமதியைக் குறைக்க வழி ஏற்படும்.

➢ **குறு, சிறு, நடுத்தர தொழில்கள் புதுமை திட்டம் (MSME Innovative Scheme)**

✓ குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சகம் - எம்எஸ்எம்இ புதுமை திட்டம் (இன்குபேஷன், வடிவமைப்பு மற்றும் அறிவுசார் சொத்துரிமைகள்) மற்றும் எம்எஸ்எம்இ ஐடியா ஹேக்கத்தான் 2022 ஆகியவற்றை அறிமுகப்படுத்தியது.

✓ எம்எஸ்எம்இ-களுக்கான இன்குபேஷன், வடிவமைப்பு மற்றும் அறிவுசார் சொத்துரிமைகள் ஆகியவற்றைச் சுற்றியுள்ள துணைத் திட்டங்களின் கலவையுடன் புதுமைத் திட்டம் தொடங்கப்படும். ஒன்றிய அரசின் எம்எஸ்எம்இ அமைச்சர் நாராயண் தத்யா ரானே இத்திட்டத்தை மார்ச் 10ஆம் தேதி தொடங்கி வைத்தார்.

➢ **தேசிய மருத்துவ சாதனங்கள் கொள்கை 2022**

✓ தற்போது மருந்துகளாகக் கட்டுப்படுத்தப்படும் மருத்துவ சாதனத் துறைக்கான வரைவுக் கொள்கையை அரசு, பிரத்யேகமாக மார்ச் 12 அன்று வெளியிட்டது.

✓ முன்மொழியப்பட்ட தேசிய மருத்துவ சாதனக் கொள்கை 2022, மெட்டெக் துறையின் நீடித்த வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை உறுதி செய்வதற்கான ஒரு விரிவான நடவடிக்கைகளை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இந்திய மருத்துவ சாதனங்கள் துறையானது அனைத்து மருத்துவ நிலைமைகள், நோய்கள் மற்றும் குறைபாடுகள் ஆகியவற்றைத் தடுத்தல், கண்டறிதல், சிகிச்சை மற்றும் மேலாண்மை ஆகியவற்றுக்கான இந்திய சுகாதாரத் துறையின் இன்றியமையாத மற்றும் ஒருங்கிணைந்த அங்கமாகும்.

➢ **சதீஷ் தவான் விண்வெளி அறிவியல் மையம்**

- ✓ ஒன்றிய விண்வெளி அமைச்சர் ஜிதேந்திர சிங் - ஜம்மு மத்திய பல்கலைக் கழகத்தில் விண்வெளி அறிவியலுக்கான சதீஷ் தவான் மையத்தை மார்ச் 12 அன்று திறந்து வைத்தார்.
- ✓ இது வட இந்தியாவின் முதல் பெரிய விண்வெளி மையம் மற்றும் திருவனந்தபுரம் மையத்திற்குப் பிறகு இந்த வகையான நாட்டின் இரண்டாவது விண்வெளி பயிற்சி நிறுவனம் ஆகும்.

## ➢ தேசிய நில பணமாக்கல் கழகம் (National Land Monetization Corporation)

- ✓ ஒன்றிய அமைச்சரவை – மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசுடன் இணைக்கப்பட்ட பிற நிறுவனங்களின் உபரி நிலம் மற்றும் கட்டிட சொத்துக்களை பணமாக்குவதற்கு தேசிய நில பணமாக்கல் கழகத்தை அமைப்பதற்கு சமீபத்தில் ஒப்புதல் அளித்தது.
- ✓ நிதி அமைச்சகத்தின்கீழ் வரும் இந்திய அரசின் முழுச் சொந்தமான இந்த நிறுவனம், பொதுத்துறை நிறுவனங்களின் நிலம் மற்றும் முக்கிய சொத்துக்களின் பணமாக்குதலை விரைவாக கண்காணிக்கும்.

## ➢ உலக சுகாதார மையத்தின் பாரம்பரிய மருத்துவத்திற்கான உலகளாவிய மையம் (WHO Global Centre for Traditional Medicine)

- ✓ பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற ஒன்றிய அமைச்சரவைக்கூட்டம் சமீபத்தில் குஜராத்தின் ஜாம் நகரில் உலக சுகாதார மையத்தின் பாரம்பரிய மருத்துவத்திற்கான உலகளாவிய மையத்தை நிறுவுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ உலகெங்கிலும் பாரம்பரிய மருத்துவத்திற்கான முதல் மற்றும் ஒரே உலகளாவிய அவுட்போஸ்ட் மையம் (அலுவலகம்) இதுவாகும்.
- ✓ ஒரு ஹோஸ்ட் நாடு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் வாயிலாக, இந்த மையத்தை அமைப்பதற்கான ஒப்பந்தம் இந்திய அரசுக்கும் உலக சுகாதார அமைப்புக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.

## ➢ விரிவான திட்ட அறிக்கைகள் (DPRs)

- ✓ வனத்துறையின் உதவி மூலம் 24 மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களில் பரவியுள்ள 13 நதிகளுக்கு புத்துயிர் அளிக்கும் திட்டத்தை ஒன்றிய அரசு மார்ச் 14 அன்று அறிவித்தது.
- ✓ இது தொடர்பாக, ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்தர் யாதவ், ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்துடன் இணைந்து 13 நதிகளின் விரிவான திட்ட அறிக்கைகளை வெளியிட்டார்.
- ✓ முன்மொழியப்பட்ட இந்தத் திட்டத்தின்கீழ், இந்த நதிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பல்வேறு காடு வளர்ப்புத் திட்டங்கள் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## ➢ எஃகு கசடு சாலை (Steel Slag Road)

- ✓ ஹசிரா துறைமுகத்திற்கு 1.2 கிமீ நீள ஆறுவழி இணைப்புச் சாலையைப் போட்டதை அடுத்து, நாட்டின் முதல் ‘எஃகு கசடு சாலை’ சூரத்திற்கு வெற்றிகரமாக வந்துள்ளது.
- ✓ இந்தப் புதிய தொழில்நுட்பம், நாடு முழுவதும் கழிவுகளாகக் கிடக்கும் எஃகு கசடுகளின் பெரிய மேடுகளைப் பயன்படுத்துவதற்கும் வழிவகுக்கும்.

- ✓ மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனத்தின் (CSIR-CRRI) தொழில்நுட்ப வழிகாட்டுதலின்கீழ் உள்ள இந்த ஆராய்ச்சித் திட்டத்திற்கு ஆர்செலர் மிட்டல் நிப்பான் ஸ்டீல் நிதியுதவி அளித்துள்ளது.

## ➢ நான்கு ஆண்டு இளங்கலை திட்டம் (Four-Year-Undergraduate Programme)

- ✓ மார்ச் 17 அன்று, பல்கலைக் கழக மானியக் குழு – புதிய நான்காண்டு இளங்கலை திட்டத்தையும் திருத்தப்பட்ட பிஎச்டி விதிமுறைகளையும் வெளியிட்டது.
- ✓ இந்தப் புதிய வழிகாட்டுதல்களின்படி, 160 கிரெடிட் நான்கு ஆண்டு இளங்கலை திட்டமானது தற்போதைய மூன்று ஆண்டு விருப்ப அடிப்படையிலான கிரெடிட் முறைக்குப் (choice-based credit system) பதிலாக கொண்டுவரப்படுகிறது. மேலும், மாணவர்கள் நான்கு ஆண்டு பட்டப் படிப்புகளை முடித்தவுடன் நேரடியாக பிஎச்.டி திட்டங்களில் சேர முடியும்.

## ➢ சுஜலம் 2.0

- ✓ மார்ச் 22 அன்று, ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் – காணொலி காட்சி வாயிலாக பழுப்பு நீர் மேலாண்மைக்கான சுஜலம் 2.0 பிரச்சாரத்தைத் தொடங்கினார்.
- ✓ 2022 ஆம் ஆண்டு உலக தண்ணீர் தினத்தைக் குறிக்கும் வகையில், ஜல் சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை மூலம் இந்த பிரச்சாரம் தொடங்கப்பட்டது.
- ✓ இந்த பிரச்சாரத்தின்கீழ், பழுப்பு நீர் மேலாண்மையை மேற்கொள்ளுமாறு சமூகங்கள், ஊராட்சிகள், பள்ளிகள், அங்கன்வாடிகளை அரசு கேட்டுக் கொள்ளும்.

## ➢ 2025க்குள் 220 புதிய விமான நிலையங்கள்

- ✓ ஒன்றிய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, சிவில் விமானப் போக்குவரத்துத் துறையை இந்திய பொருளாதாரத்தின் முக்கிய அங்கமாக மேற்கோள் காட்டி, 2025ஆம் ஆண்டுக்குள் 220 புதிய விமான நிலையங்களைக் கட்ட இலக்கு நிர்ணயித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
- ✓ 2022-23ஆம் ஆண்டிற்கான சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் மானியக் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, கோவிட்-19 காலகட்டத்தில் இந்தியா உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணங்களில் முன்னேற்றம் கண்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

## ➢ தேசிய சட்ட ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி அகாடமி (நல்சார்)

- ✓ ஐதராபாத்தில் உள்ள தேசிய சட்ட ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி அகாடமி - இந்தியாவின் முதல் முழு பாலின-நடுநிலை கல்வி நிறுவனமாக மாற உள்ளது.
- ✓ இது பாலினம் மற்றும் பாலியல் சிறுபான்மையினருக்கு உள்ளடக்கிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ அதன் கொள்கையின் ஒரு பகுதியாக, சட்டப் பள்ளி பாலின நடுநிலை விதிகளைக் கொண்டிருக்கும். இது LGBTQ+ சமூகத்திற்கான உள்ளடங்கிய வளாகங்களுக்கு வழிவகுக்கும்.

## ➢ இந்தியாவின் முதல் எ.்.கு சாலை

- ✓ குஜராத்தின் சூரத் நகரம், 2022 மார்ச் 27 அன்று எ.்.கு கழிவுகளால் உருவாக்கப்பட்ட முதல் எ.்.கு சாலையைப் பெற்றுள்ளது.
- ✓ இந்தத் திட்டத்திற்கு அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனம் நிதியுதவி செய்கிறது.

- ✓ கழிவிலிருந்து சுகாதாரம் மற்றும் தூய்மை இந்தியா பிரச்சாரத்தின் முன் முயற்சியின்கீழ், இந்தச் சாலையானது 1 கிலோ மீட்டர் நீளம் மற்றும் ஆறு வழித் தடங்களைக் கொண்டுள்ளது.

## ➢ அமீரக வேலைகள் மற்றும் திறன்களுக்கான பயிற்சி (Training for Emirates Jobs And Skills' -Tejas)

- ✓ தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், அமீரக வேலைகள் மற்றும் திறன்களுக்கான பயிற்சி – என்ற பெயரில் ஒரு சர்வதேச திட்டத்தைத் தொடங்கினார்.
- ✓ இந்தப் புதிய திட்டமானது ஐக்கிய அரபு அமீரகத்தில் சந்தைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான திறன்களைக் கொண்ட இந்திய பணியாளர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ ஆரம்ப கட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தில் 10,000 இந்திய பணியாளர்களை உருவாக்குவதை இந்தப் பயிற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

### ➢ குற்றவியல் நடைமுறை (அடையாள) மசோதா 2022 [Criminal Procedure (Identification) Bill 2022]

- ✓ குற்றவியல் நடைமுறை (அடையாள) மசோதா 2022ஐ, மார்ச் 28, 2022 அன்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மக்களவையில் அறிமுகம் செய்து வைத்தார்.
- ✓ இந்த மசோதா, குற்றவாளிகள் மற்றும் பிற தக்க வைக்கப்பட்டுள்ள நபர்களை அடையாளம் காணவும், குற்றவியல் விஷயங்களில் விசாரணைக்காகவும், பதிவுகளைப் பாதுகாப்பதற்காகவும் அவர்களின் அளவீடுகளை எடுப்பதற்கு காவல்துறைக்கு அங்கீகாரம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ தேசிய நீர் விருதுகள்

- ✓ ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்தால் நிறுவப்பட்ட தேசிய நீர் விருதுகளின் சிறந்த மாநில பிரிவில் தமிழ்நாடு - மூன்றாம் பரிசு பெற்றது.
- ✓ நீர்வள மேலாண்மையில் முன்னுதாரணமாகச் செயல்பட்டதற்காக சிறந்த மாநிலங்கள் பிரிவில் தமிழகத்தை விட உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்கள் முதல் மற்றும் இரண்டாம் பரிசுகளை வென்றுள்ளன.

## ➢ ஜல் சக்தி அபியான்: மழை நீரைப் பிடிப்போம் பிரச்சாரம் 2022

- ✓ மார்ச் 29 அன்று, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் - 3வது தேசிய நீர் விருதுகளை வழங்கினார் மற்றும் ஜல் சக்தி அபியான்: மழை நீரைப் பிடிப்போம் பிரச்சாரம் 2022ஐ புது தில்லியில் தொடங்கினார்.
- ✓ இந்தப் பிரச்சாரம் நீர் பாதுகாப்பில் கவனம் செலுத்துகிறது மற்றும் மார்ச் 29, 2022 முதல் நவம்பர் 30, 2022 வரையிலான காலகட்டத்தில் நாட்டில் தீவிரமடைந்து வரும் தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# திட்டங்கள்

- **ஒன்றிய அரசு, தன்னம்பிக்கை இந்தியா வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான (ஆத்மநிர்பார் பாரத் ரோஜ்கார் யோஜனா) காலக்கெடுவை மார்ச் 2022 வரை நீட்டித்துள்ளது**
  - ✓ ஒன்றிய அரசின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராம், தன்னம்பிக்கை இந்தியா வேலைவாய்ப்புத் திட்டத்தை மார்ச் 31, 2022 வரை ஒன்பது மாதங்கள் நீட்டிப்பதாக அறிவித்தார்.
  - ✓ இந்த தன்னம்பிக்கை இந்தியா வேலைவாய்ப்புத் திட்டம் ஜூன் 30, 2021 அன்று முடிவடைவதாக இருந்தது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து இதன்மூலம் இதுவரை 21.4 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.
  - ✓ இந்த தன்னம்பிக்கை இந்தியா வேலைவாய்ப்புத் திட்டமானது, நாட்டில் சாதாரண வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை ஊக்குவிக்கும் ஒரு வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டமாகும்.

- **PRAYAS திட்டத்தின்கீழ் ஓய்வூதிய ஆணைகள் வழங்கப்பட்டன.**
  - ✓ தாம்பரத்தில் உள்ள ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு, ஓய்வூதியம் வழங்கும் ஆணைகளை பிரயாஸ் திட்டத்தின்மூலம் இரண்டு நிறுவனங்களின் ஓய்வுபெறும் ஊழியர்ளுக்கு வழங்கியது.
  - ✓ பிரயாஸ் என்பது ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் ஒரு புதிய முன்முயற்சியாகும். இதன்மூலம் ஓய்வூதியம் வழங்கும் ஆணைகள், ஊழியர்கள் ஓய்வுபெறும் நாளிலேயே வழங்கப்படுகின்றன.

- **மத்திய நிதி உதவித் திட்டமான தேசிய ஆயுஷ் திட்டத்தை 2021 முதல் 2026 வரை 5 ஆண்டுகளுக்கு தொடர்வதற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.**
  - ✓ பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை மத்திய நிதியுதவித் திட்டமான 'தேசிய ஆயுஷ் மிஷன்' ஐ மேலும் ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
  - ✓ இந்தத் திட்டத்திற்காக அடுத்த ஐந்தாண்டுகளுக்கு முதலீடு செய்வதற்காக ஒன்றிய அரசு ரூ.4607.30 கோடியை ஒதுக்கியுள்ளது. (ரூ.3,000 கோடி ஒன்றிய அரசின் பங்கு, ரூ.1607.30 கோடி மாநில அரசின் பங்களிப்பு)
  - ✓ இந்த தேசிய ஆயுஷ் மிஷன் முதன் முதலாக செப்டம்பர் 15, 2014 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.
  - ✓ ஆயுஷ், ஆயுர்வேதம், சித்தா, சோவா ரிக்பா, யுனானி மற்றும் ஹோமியோபதி போன்ற முக்கிய திறன் பகுதிகளில் கவனம் செலுத்துவதன்மூலம் செலவு குறைந்த ஆயுஷ் சேவைகளை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் ஆகும். இவை நோய்த்தடுப்பு, ஊக்குவிப்பு மற்றும் குணப்படுத்தும் சுகாதாரத்திற்கான அறிவின் புதையல்கள் ஆகும்.

- **ஒன்றிய அரசு 'நிமிர்ந்து நில் இந்தியா திட்டத்தை' 2025 வரை நீட்டித்துள்ளது.**
  - ✓ இந்திய அரசு 'நிமிர்ந்து நில் இந்தியா திட்டத்தின்' காலத்தை 2025 ஆம் ஆண்டு வரை நீட்டித்துள்ளது.

- **ஒரே பாரதம் உன்னத பாரதம் திட்டம்: கல்வி நிறுவனங்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழுவின் அறிவுரைகள்**
  - ✓ ஒன்றிய அரசின் 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' திட்டத்தின்கீழ், கல்வி நிறுவனங்களில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் பற்றிய அறிக்கையை அனுப்புமாறு பல்கலைக் கழக மானியக் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

- **SMILE திட்டம் - சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்**
  - ✓ ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் 'விளிம்பு நிலையிலுள்ள மக்களுக்கு வாழ்வாதாரம் மற்றும் நிறுவனத்திற்கான ஆதரவு' (Support for Marginalized Individuals for Livelihood and Enterprise - SMILE) என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது. இதில் பிச்சையெடுப்பதில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக, ஒன்றிய அரசு உதவியுடன்கூடிய விரிவான மறுவாழ்வுத் திட்டம் என்ற ஒரு துணை திட்டமும் அடங்கியிருக்கிறது.

## சாத் (Saath)

- ஜம்மு காஷ்மீரில், துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா சுய உதவிக் குழு பெண்களுக்கான 'சாத்' என்ற ஒரு கிராமப்புற தொழில் முடுக்க திட்டத்தைத் தொடங்கினார்.

### சுவாமித்வா (SVAMITVA) திட்டம்

- பஞ்சாயத்து ராஜ் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான ஒன்றிய அமைச்சர் கிரிராஜ் சிங், சுவாமித்வா திட்டத்தின் தேசிய மாநாட்டைத் தொடங்கி வைத்தார்:
- ✓ இது புது தில்லியில் கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான ஒரு படிக்கல் ஆகும்.
- ✓ சுவாமித்வா கிராமப்புற திட்டமிடலுக்கான துல்லியமான நிலப்பதிவுகளுடன் குடிமக்களின் நிதிச் சொத்தாக, கிராமப்புற இந்தியாவில் சொத்துக்களை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த சொத்து சரிபார்ப்பு தீர்வை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **தேசிய கல்விக் கொள்கை-2020 வரைவுக் குழுவின் தலைவராக கே. கஸ்தூரிரங்கன் நியமனம்**
- ✓ பள்ளி, சிறுவயது, ஆசிரியர் மற்றும் வயது வந்தோர் கல்விக்கான புதிய பாடத் திட்டங்களை உருவாக்குவதற்காக ஒன்றிய கல்வி அமைச்சகம் 12 பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.
- ✓ நான்கு தேசிய பாடத்திட்ட கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவின் தலைவராக தேசிய கல்விக் கொள்கை – 2020 வரைவுக் குழுவின் தலைவர் கே. கஸ்தூரிரங்கன் இருப்பார்.
- ✓ மாநில பாடத்திட்ட கட்டமைப்பிலிருந்து உள்ளீடுகளைப் பெற்றுக் கொண்டு, நான்கு பகுதிகளின் பல்வேறு அம்சங்களில் தேசிய கவன குழுக்களால் இறுதி செய்யப்பட்ட 'நிலை ஆவணங்கள்' பற்றி இந்தக் குழு விவாதிக்கும்.
- ✓ என்சிஎப்-கள் இந்தியாவில் உள்ள பள்ளிகளுக்கான, பாடத்திட்டம், பாடநூல் மற்றும் கற்பித்தல் நடைமுறைகளுக்கான வழிகாட்டியாக செயல்படுகின்றன.

- **தூய கங்கை தேசிய இயக்கம் (NMCG) மற்றும் மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான தெற்காசிய நிறுவனம் (SAIARD)**
  - ✓ தூய கங்கை தேசிய இயக்கம், இளம் மாணவர்களை ஈடுபடுத்துவதற்காக ஒரு கல்வித் தளத்தை உருவாக்குவதுடன், கிழக்கு பிராந்தியத்தில் பிராந்திய வளர்ச்சியை ஆதரிக்கு ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டு மையத்தை உருவாக்குவதற்காகவும், மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான தெற்காசிய நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
  - ✓ இந்த இரண்டு அமைப்புகளும் (NMCG and SAIARD) ஆற்றங்கரை சுற்றுச்சூழல் அமைப்புகளில் புவிசார் தொழில்நுட்பத்தில் கவனம் செலுத்தும்.

- **சம்பவ்**
  - ✓ குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம், 'சம்பவ்' (SAMBHAV) எனப்படும் தேசிய நிலை விழிப்புணர்வுத் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

- **“பால் சஹுகார் (Dairy Sahakar)” திட்டம்**

✓ ஒன்றிய உள்துறை அமைச்சர், அமீத் ஷா, அக்டோபர் 31, 2021 அன்று பால் சஹுகார் திட்டத்தைத் தொடங்கினார். விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல் மற்றும் ஆத்மநிர்பர் பாரதத்தை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களுடன் குஜராத் மாநிலம் ஆனந்த் என்ற இடத்தில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

✓ இந்தத் திட்டம் ரூ.5000 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்டது.

✓ ‘கூட்டுறவிலிருந்து செழிப்பு வரை’ என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதற்காக, கூட்டுறவு அமைச்சகத்தின்கீழ் உள்ள தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் (NCDC) ஆல் இது செயல்படுத்தப்படும்.

✓ பால் கொள்முதல், மாடு வளர்ப்பு, தர உறுதி, பிராண்டிங், பேக்கேஜிங், போக்குவரத்து, பால் மற்றும் பால் பொருட்களை சேமித்தல் மற்றும் பால் பொருட்களை ஏற்றுமதி செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்குத் தகுதியுள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கு தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழம் நிதியுதவி அளிக்கும்.

- **ஆயுஷ்மான் மத்திய ஆயுத காவல் படைகள் சுகாதார அட்டை திட்டம் (Ayushman CAPF Health Card Scheme)**

✓ ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா நவம்பர் 3, 2021 அன்று புதுடெல்லியில் தேசிய அளவில் ஆயுஷ்மான் மத்திய ஆயுத காவல் படைகள் திட்ட சுகாதார அட்டைகளை அறிமுகப்படுத்தினார்.

✓ ஆயுஷ்மான் சிஏபிஎப் திட்டம், ஏழு மத்திய ஆயுதப்படை காவல் படைகளில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ ஜனவரி 23, 2021 அன்று, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆயுஷ்மான் மத்திய ஆயுத காவல் படைகள் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

✓ இந்த ஆயுஷ்மான் சிஏபிஎப் திட்டமானது உள்துறை அமைச்சகம், சுகாதார அமைச்சகம் மற்றும் தேசிய சுகாதார ஆணையம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.

- **கிருஷி உடான் (Krishi UDAN) 2.0**

✓ சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் - மலைப் பகுதிகள், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் இருந்து மக்கும் உணவுப் பொருட்களைக் கொண்டு செல்வதில் கவனம் செலுத்துவதற்காக ‘கிருஷி உடான் 2.0’ திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

✓ கிருஷி உடான் 2.0ன்கீழ், இந்தியாவில் ஹப் மற்றும் ஸ்போக் மாதிரியை மேம்படுத்தவும், விமான நிலையங்களில் சரக்கு டெர்மினல்களை கட்டம் வாரியாக உருவாக்கவும் இந்த மையம் ஏற்பாடு செய்யும்.

✓ கிருஷி உடான் 2.0 திட்டம் நாடு முழுவதும் உள்ள 53 விமான நிலையங்களில் முக்கியமாக வடகிழக்கு மற்றும் பழங்குடியினப் பகுதிகளை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்படும் மற்றும் விவசாயிகள், சரக்கு அனுப்புபவர்கள் மற்றும் விமான நி’றுவனங்களுக்குப் பயனளிக்கும்.

- **ஓ-ஸ்மார்ட் (O-SMART)**

✓ பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, 2021-26ஆம் ஆண்டிற்கான, ‘பெருங்கடல் சேவைகள், மாடலிங், அப்ளிகேஷன், வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் (O-SMART)’ என்ற குடை திட்டத்தைத் தொடர ஒப்புதல் அளித்தது.

 PH: 044-24339436, 42867555, 9840226187

- ✓ ஓ-ஸ்மார்ட் என்பது கடல் ஆராய்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் முன்கூட்டியே எச்சரிக்கும் வானிலை அமைப்புகளை அமைத்தல் என்ற நோக்கத்துடன் ஆகஸ்ட் 29, 2018 அன்று தொடங்கப்பட்ட ஒன்றிய அரசின் திட்டமாகும்.

**SRESHTA திட்டம்**

- ✓ SRESHTA திட்டம் – இலக்குப் பகுதிகளில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கான உறைவிடக் கல்வி (Residential Education for Students in High Schools in Targeted Areas)
- ✓ இந்திய அரசு பட்டியலின மாணவர்களுக்காக SRESTHA திட்டத்தைத் தொடங்க உள்ளது. இந்தத் திட்டம் மாணவர்களுக்கு தரமான உறைவிடக் கல்வியை வழங்கும்.

**➢ நை மன்சில் திட்டம் (Nai Manzil Scheme)**

- ✓ நை மன்சில் திட்டம் சிறுபான்மையினர் விவகார அமைச்சகத்தால் 2015இல் தொடங்கப்பட்டது.
- ✓ சிறுபான்மையின இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கு ஏற்ற திறன்களை வழங்குவதே ஆகும்.
- ✓ டிசம்பர் 2021 வரை 6,57,802 சிறுபான்மையினர் இத்திட்டத்தின்கீழ் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.

**➢ ஆத்மநிர்பார் ஹஸ்டில்ப்கார் திட்டம்**

- ✓ வடகிழக்கு பிராந்திய அபிவிருத்தி நிதி கழகம் லிட் (North Eastern Development Finance Corporation Ltd.), ஆத்மநிர்பார் ஹஸ்டில்ப்கார் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு காலக்கடன்கள் வடிவில் நிதியுதவியை வழங்குவதன்மூலம், வடகிழக்கு பிராந்திய கைவினைஞர்களை அபிவிருத்தி செய்வதே இதன் நோக்கம் ஆகும்.

## ஜனவரி- பிப்ரவரி- மார்ச் 2022

**➢ மிஷன் வாத்சல்யா (Mission Vatsalya)**

- ✓ குழந்தைகளின் மறுவாழ்வுக்காக ஒன்றிய அரசு ‘மிஷன் வாத்சல்யா’ திட்டத்தைச் செயல்படுத்துகிறது.
- ✓ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், ஒன்றிய அரசு நிதியுதவியுடன் ‘குழந்தைகள் பாதுகாப்பு சேவைகள் - மிஷன் வாத்சல்யா’ திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.
- ✓ இது அனாதையாக்கப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் உட்பட கடினமான சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளின் மறுவாழ்வுக்கானது ஆகும்.

**➢ பர்வத்மாலா திட்டம் (Parvatmala Scheme)**

- ✓ 2022-23ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் பட்ஜெட்டை வழங்கிய ஒன்றிய நிதியமைச்சர், மலைப்பாங்கான பகுதிகளில் இணைப்பை மேம்படுத்துவதற்காக தேசிய கயிற்றுப்பாதை மேம்பாட்டுத் திட்டம் - பர்வத்மாலா செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்.
- ✓ இதன் நோக்கம் சுற்றுலாவை மேம்படுத்துவதுடன், பயணிகளுக்கான இணைப்பு மற்றும் வசதியை மேம்படுத்துவதே ஆகும்.

## ➢ ஸ்மைல் (SMILE)

- ✓ சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை, 12 பிப்ரவரி 2022 அன்று, "SMILE: Support for Marginalised Individuals for Livelihood and Enterprise" (விளிம்பு நிலை மக்களுக்கு வாழ்வாதாரம் மற்றும் நிறுவனத்திற்கான ஆதரவு) என்ற திட்டத்தைத் தொடங்கி வைக்க உள்ளது.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ் 2 துணைத் திட்டங்கள் உள்ளன - 'திருநங்கைகள் நலனுக்கான விரிவான மறுவாழ்வுக்கான ஒன்றிய அரசு திட்டம்' மற்றும் 'பிச்சையெடுக்கும் செயலில் ஈடுபடும் நபர்களின் மறுவாழ்வுக்கான ஒன்றிய அரசின் விரிவான திட்டம்' ஆகியவை.

## ➢ DNTகளின் பொருளாதார அதிகாரமளித்தலுக்கான திட்டம் (Scheme for Economic Empowerment)

- ✓ பிப்ரவரி 16 அன்று, சமூக நீதி மன்றும் அதிகாரமளித்தல் அமைச்சர், டாக்டர். வீரேந்திர குமார் - அறிவிக்கப்படாத, நாடோடி மற்றும் அரை நாடோடி சமூகங்களின் நலனுக்காக பொருளாதார அதிகாரமளித்தலுக்கான திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், சிவில் சர்வீசஸ் தேர்வுகள், தொழில்முறைப் படிப்புகளில் சேர்வதற்கான போட்டித் தேர்வுகளுக்காக மாணவர்களுக்கு இலவச பயிற்சி. மருத்துவ காப்பீடு, வாழ்வாதார ஆதரவு மற்றும் வீட்டு வசதி ஆகிய சேவைகளை அளிக்க அரசு முயல்கிறது.

## ➢ புதிய இந்தியா எழுத்தறிவு திட்டம்

- ✓ 2022-2027 காலத்திற்கான புதிய திட்டமாகிய, 'புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டத்திற்கு' ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ இது தேசிய கல்விக் கொள்கை 2020 மற்றும் பட்ஜெட் அறிவிப்புகள் 2021-22 அகியவற்றுக்கு இணைய, வயது வந்தோர் கல்வியின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கும்.
- ✓ இந்தத் திட்டம், நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்கள் - யூனியன் பிரதேசங்களில் உள்ள 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வியறிவு இல்லாதவர்களுக்கு சேவை செய்யும்.

## ➢ ராஷ்ட்ரிய உச்சதர் சிக்ஷா அபியான் திட்டம் (RashtriyaUchchatar Shiksha Abhiyan Scheme)

- ✓ ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டமான, ராஷ்ட்ரிய உச்சதர் சிக்ஷா அபியான் திட்டம், மாநில அரசு பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு மார்ச் 31, 2026 வரை நிதியுதவி வழங்கும் வகையில் செயல்படுத்தப்படும்.
- ✓ இந்தத் திட்டம் சமபங்கு, அணுகல் மற்றும் சிறப்பை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ புதிய கட்டத்தின்கீழ், மாநில அரசுகள் தொழில் மயமாக்கல் மற்றும் திறன் மேம்பாடு மூலம், பாலின சேர்க்கை, சமபங்கு, முன் முயற்சிகள் போன்றவற்றை அடைய முடியும்.

## ➢ மகப்பேறு உதவித் திட்டம்

- ✓ முதல் குழந்தைக்கு 5,000 வழங்கும் மகப்பேறு உதவித் திட்டம், பெண் குழந்தையாக இருந்தால் மட்டுமே இரண்டாவது குழந்தைக்கும் வழங்கப்படும் என்ற அரசின் சமீபத்திய அறிவிப்பு - இதை பாரபட்சமின்றி அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்க வேண்டுமென்று ஆர்வலர்களிடமிருந்து கடுமையான விமர்சனங்களை எதிர் கொண்டுள்ளது.

- ✓ 2017இல் தொடங்கப்பட்ட பிரதமரின் மாத்ரு வந்தனா யோஜனா (Pradhan Mantri Matru Vandana Yojana) ஒரு பெண்ணின் ஊதிய இழப்பை ஓரளவு ஈடு செய்ய வேண்டும் என்பதற்காக முதல் குழந்தை பிறந்தால் ரூ.5000 வழங்குகிறது.
- ✓ இது தாய் மற்றும் குழந்தையின் ஊட்டச்சத்து நல்வாழ்வை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதைக் கொண்டு, இந்தத் தொகையானது மூன்று தவணைகளில் வழங்கப்படுகிறது. இது, மற்றொரு திட்டமான ஜனனி சுரக்ஷா யோஜனாவுடன் இணைக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தின்கீழ் மருத்துவமனையில் குழந்தை பிறந்தால் ரூ.1000 வழங்கப்படுகிறது. இதன்மூலம் ஒரு பெண் மொத்தம் ரூ.6000 பெறுகிறார்.

➢ **என் கொள்கை, என் கைகள் (Meri Policy, Mere Haath)**

- ✓ பயிர்க் காப்பீட்டுப் பலன்களை நேரடியாக விவசாயிகளின் இல்லங்களிலேயே கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என்பதற்காக ஒன்றிய அரசு, என் கொள்கை, என் கைகள் என்ற ஒரு திட்டத்தை தொடங்கி வைக்க உள்ளது.
- ✓ தங்களது பாலிசிகள், நிலப்பதிவுகள், பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் உரிமை கோரல் செயல்முறை மற்றும் குறை நிவர்த்தி பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

APOLLO STUDY CENTRE

# நீதி மன்றத் தீர்ப்புகள்

- **சென்னை, உயர்நீதி மன்றம் - மாற்றுத் திறனாளி நபர்களுக்கு கழிப்பறை வசதி ஏற்படுத்தித் தராமல் மாநிலத்தில் எந்த ஒரு அரசு கட்டிடத்தையும் கட்டக்கூடாது என்று ஆணையிட்டுள்ளது.**
  - ✓ இந்தத் தீர்ப்பை தலைமை நீதிபதி சஞ்சீப் பானர்ஜி மற்றும் நீதியரசர் செந்தில் குமரன் இராமமூர்த்தி ஆகியோரைக் கொண்ட முதலாம் அமர்வு ஜூலை மாதத்தில் வழங்கியது.
  - ✓ அதிகாரபூர்வ பிரதிவாதிகள், குறிப்பாக பொதுப்பணித்துறை மற்றும் அதன் அதிகாரிகள், ஆளும் சட்டம் மற்றும் தேசிய கட்டிடக் குறியீட்டை அறிந்திருக்க வேண்டியது அவசியம் என்று இந்த அமர்வு கூறியுள்ளது.
  - ✓ நீதிமன்றத்தின் கூற்றுப்படி, அதில் உள்ள கட்டாய அறிவுறுத்தல்கள் விதிவிலக்கு இல்லாமல் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக இவ்வாறு ஆணையிடப்பட்டுள்ளது.

- **சென்னை உயர்நீதி மன்றம் -** இறப்புக்கான காரணத்தைக் குறிப்பிட்டு தகுதியான அனைத்து கோவிட்-19 பாதித்தவர்களின் குடும்பங்களுக்கும் தனி சான்றிதழ் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க மாநில அரசுக்கு உத்தரவிட்டது.
  - ✓ அரசால் ஏதேனும் நிவாரணம் வழங்கப்படுவதாக இருப்பின் அதனைப் பெறுவதற்கு இந்த புதிய சான்றிதழ் உதவும்.

- **உச்ச நீதி மன்றம் -** நடுவர் நீதி மன்றத்தின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களுக்கான நான்கு ஆண்டு பதவிக்காலம் தொடர்பாக ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்ட தீர்ப்பாய சீர்திருத்த ஆணை 2021ன் விதிகளை ஒதுக்கி வைத்துள்ளது.

- **வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தனது தீர்ப்பில் உச்ச நீதி மன்றம் -** 2021 செம்படம்பர் 5ஆம் தேதி திட்டமிடப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு அகாடமி தேர்வில் பெணகளை அனுமதிக்க இடைக்கால உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

- **உச்ச நீதிமன்றம் -** பின்தங்கிய சமூகத்தினரிடையே 'கிரீமிலேயர்' ஐ, சமூக பொருளாதார மற்றும் பிற தொடர்புடைய காரணிகளின் கலவை அடிப்படையில் மட்டுமே தீர்மானிக்க வேண்டும் அன்றி பொருளாதார அளவுகோல்களின் அடிப்படையில் மட்டும் அல்ல என்று தெரிவித்துள்ளது.

- **சென்னை உயர்நீதி மன்றம் -** அகில இந்திய ஒதுக்கீட்டின்கீழ் எம்பிபிஎஸ் சேர்க்கையில் முன்னேறிய சாதியினரிடையே பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவனருக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்க அனுமதி அளிக்கவில்லை.

- **சென்னை உயர்நீதி மன்றம் -** 'தமிழ்நாடு பத்திரிகையாளர் கவுன்சில்' (**Press Council of Tamil Nadu**) அமைப்பதற்கு மாநில அரசுக்கு மூன்று மாத கால கெடு விதித்துள்ளது.

- **செப்டம்பர் 24 அன்று, உச்ச நீதிமன்றம் - பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்ககு 10 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்குவது குறித்த சென்னை உயர்நிதி மன்றத்தின் உத்தரவை ரத்து செய்தது.**

103வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், 2019, வேலைகள் மற்றும் அரசு கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கைக்கு பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கியது.

- **சென்னை உயர்நீதி மன்றம் -** சாலைகள் மற்றும் பிற பொது இடங்களில் நிறுவப்பட்டுள்ள அனைத்து தலைவர்களின் சிலைகளையும் ஆறு மாதங்களுக்குள் அகற்றி, அவற்றை இடம் மாற்றம் செய்வதற்காக 'தலைவர்கள் பூங்காவை' உருவாக்க வேண்டும் என்று மாநில அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

- **உச்ச நீதிமன்றம் -** இஸ்ரேல் என்எஸ்ஓ குழுமத்தின் முன்னோடி உளவு மென்பொருள் தயாரிப்பான பெகாசஸ்-மீதான, அங்கீகாரம் இல்லாமல் உளவு பார்ப்பது பற்றிய குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்காக ஒரு சுதந்திரமான குழுவை அமைத்தது.



APOLLO STUDY CENTRE

- ✓ இந்தியக் குடிமக்களின் தொலைபேசிகள் அல்லது பிற சாதனங்களில் சேமிக்கப்பட்ட தரவை அணுகவும், உரையாடல்களை உற்று நோக்கவும், தகவல்களை இடைமறிக்கவும் இந்த பெகாசஸ் உளவு மென்பொருள் பயன்படுத்தப்பட்டதா என்பதை விசாரிக்கும் பொறுப்பு இந்தக் குழுவுக்கு விடப்பட்டுள்ளது.
- ✓ இந்தியத் தலைமை நீதிபதி என்.வி. ரமணா மற்றும் நீதிபதிகள் சூர்ய காந்த் மற்றும் ஹிமா கோஹ்லி ஆகியோர் அடங்கிய அமர்வு, தேசிய பாதுகாப்பின் அடிப்படையில், மென்பொருள் எதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்ற விவரங்களை வெளியிட மறுக்கும் அரசாங்கத்தை விமர்சித்தது.
- ✓ இந்த ஆணையானது, தனியுரிமைக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது. இது அரசியலமைப்பில் வெளிப்படையாக வரையறுக்கப்பட்டதைவிட குறைவான கருத்துதான். ஆனால், 2017 உச்ச நீதி மன்றத்தின் மைல்கல் தீர்ப்பின் அடிப்படையில் ஒரு முக்கிய உரிமையாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

## ஜனவரி- பிப்ரவரி- மார்ச் 2022

### ➢ இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு ஒதுக்கீடு

- ✓ ஜனவரி 7 அன்று, உச்ச நீதி மன்றம் - அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களின்கீழ் எம்பிபிஎஸ் மற்றும் எம்டி படிப்புகளில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு ஒதுக்கீடு வழங்குவதற்கு ஒப்புதல் அளித்தது.
- ✓ 2021-22 கல்வியாண்டில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு கூடுதலாக 10 விழுக்காடு இடங்களை ஒதுக்கவும் இது ஒன்றிய அரசுக்கு அனுமதி அளித்துள்ளது.
- ✓ 2021-22ஆம் ஆண்டிற்கான இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைக்காக ஜனவரி 2019ல் அறிவிக்கப்பட்டது.

### ➢ 50 விழுக்காடு முதுநிலை மருத்துவப்படிப்பு இருக்கைகள்

- ✓ சென்னை உயர்நீதி மன்றம் - மாநில ஒதுக்கீட்டில் கிராமப்புறங்களில் பணிபுரியும் பணியில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு 50 விழுக்காடு முதுநிலை மருத்துவ இடங்களையும், ஊக்கமளிக்கும் விதமாக கூடுதலாக 30 மதிப்பெண்களையும் ஒதுக்குவதற்கான தமிழகத்தின் முடிவை உறுதி செய்துள்ளது.
- ✓ இதன்படி, எதிர்காலத்தில் பணியில் உள்ள விண்ணப்பதாரர்கள் 50 விழுக்காடு இட ஒதுக்கீடு மற்றும் திறந்த நிலை ஆகிய இரண்டிலும் போட்டியிடலாம்.
- ✓ சேர்க்கைக்கான நீட் மதிப்பெண்களுடன் பரிசீலிக்கப்படும், மலைப்பாங்கான – கடினமான – கிராமப்புறங்களில் பணிக்கான வெயிட்டேஜ் மதிப்பெண்களை வழங்குவதற்கான ஆட்சேபனைகளையும் நீதிபதி நிராகரித்தார்.
- ✓ அரசியலமைப்புச் சட்டத்தின் 25வது பதிவு பட்டியல் 3 முழுவதுமாக மாநிலத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்று நீதிபதி உறுதிசெய்தார்.

### ➢ இந்து வாரிசுரிமைச் சட்டம் (Hindu Succession Act), 1956

- ✓ ஜனவரி 20 அன்று, உச்ச நீதிமன்றம் - தந்தை உயில் எழுதாமல் இறந்துவிட்டால், அவர் சுயமாகச் சம்பாதித்த மற்றும் பிற பரம்பரைச் சொத்துக்களை வாரிசாகப் பெற இந்து தந்தையின் மகள்களுக்கு உரிமை உண்டு என்று தீர்ப்பளித்துள்ளது.

- ✓ சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்த மேல்முறையீட்டு வழக்கில் வழங்கப்பட்ட இந்த மைல்கல் தீர்ப்பானது, இந்து வாரிசுச் சட்டம், 1956ன்கீழ் இந்துப் பெண்கள் மற்றும் விதவைகளின் சொத்துரிமை தொடர்பானது ஆகும்.

- ✓ இந்தத் தீர்ப்பின்படி, இறந்த தந்தையின் சகோதரர்களின் மகன்கள் மற்றும் மகள்கள் போன்ற குடும்பத்தின் இதர இணை உறுப்பினர்களை விட அத்தகைய மகள்கள் முன்னுரிமை பெறுவார்கள்.

- ✓ 1956ஆம் ஆண்டுக்கு முன்னர் தந்தை இறந்திருந்தாலும், சொத்துக்களை பிரிப்பதில் வாரிசுரிமைச் சட்டம் பொருந்தும் என்று அது கூறியது.

APPOLO STUDY CENTRE

# குழுக்கள்

- **தரவு பாதுகாப்பு மசோதா**
  - ✓ மக்களவை நாடாளுமன்ற உறுப்பினரான தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. தயாநிதி மாறன், தரவு பாதுகாப்பு மசோதா பற்றிய கூட்டுக் குழுவின் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- **பொருளாதார ஆலோசனைக் குழு (Economic Advisory Council)**

✓ ஒன்றிய அரசு – 2021 செப்டம்பரில் அதன் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குப் பிரதமருக்கான ஏழு உறுப்பினர்களைக் கொண்ட பொருளாதார ஆலோசனைக் குழுவை மறுசீரமைத்தது.

✓ இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் தலைவரும், நித்தி ஆயோக்கின் முன்னாள் உறுப்பினரும், பத்மஸ்ரீ விருது பெற்றவருமான பிபேக் டெப்ராய். 2017ஆம் ஆண்டு முதல் பொருளாதார ஆலோசனைக் குழு-பிரதமரின் தலைவராகத் தக்க வைக்கப்பட்டுள்ளார்.

✓ ஒன்றிய அரசால் தக்க வைக்கப்பட்டுள்ள நான்கு உறுப்பினர்களில் அவரும் ஒருவர் ஆவார்.

✓ இந்திய ரிசவர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் ராகேஷ் மோகன். ஐஐஎம் அகமதாபாத் பேராசிரியர் டி.டி. ராம் மோகன், மற்றும் தேசிய பயனுறு பொருளாதார ஆராய்ச்சிக் கவுன்சில் (National Council of Applied Economic Research) தலைமை இயக்குநர் பூணம் குப்தா, ஆகியோர் பகுதிநேர உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள மூவர் ஆவர்.

APOLLO STUDY CENTRE

# சர்வதேச செய்திகள்

- **சீனா** – சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி தோற்றுவிக்கப்பட்டதன் 100வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது.

- **புல்லெட்டின் (Bulletin)**
  - ✓ முகநூல் - தன்னுடைய முழுமையான சந்தா செய்தி மடல் தளமாகிய 'புல்லட்டினை'த் தொடங்கி வைத்தது.

- **நேபாள காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஷேர் பகதூர் தியூபா** – உச்ச நீதிமன்றம் தலையிட்டதை அடுத்து, வரலாற்றை முறியடித்து ஐந்தாவது முறையாக நேபாளத்தின் பிரதமராக ஆனார்.

- **கியூபா** – 'சோபரினா 2' (Sovereign 2) என்று பெயரிடப்பட்ட உலகின் முதலாவது இணைவு கோவிட்-19 தடுப்பூசியை தயாரித்துள்ளது.

- **உலக அளவில் உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை 2021 அறிக்கை : ஐநா – உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு**
  - ✓ உலக அளவில் 720 முதல் 811 மில்லியன் எண்ணிக்கையிலான மக்கள் 2020ஆம் ஆண்டில் பசியை எதிர் கொண்டதாக, 'உலக அளவில் உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை 2021 அறிக்கை' என்ற தலைப்பிலான ஐநா - உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் ஆண்டு இதழ் குறிப்பிடுகிறது.

- **7வது இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கம் பிரான்சில் முடிவுற்றது**
  - ✓ இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கத்தின் 7வது பதிப்பு, ஜூலை 1, 2021 அன்று பிரான்சில் முடிவடைந்தது.
  - ✓ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் இந்த நிகழ்ச்சி பிரான்ஸ் கடற்படையால் ஜுன் 28 முதல் ஜூலை 01, 2021 வரை லா ரீயூனியனில் நடத்தப்பட்டது.

- **எஸ். ஜெய்சங்கர் - ஜி20 வெளியுறவுத்துறை அமைச்சர்களின் கூட்டத்தில் உரையாற்றினார்**
  - ✓ வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர், இத்தாலியின் மட்டேராவில் நடைபெற்ற ஜி-20 வெளியுறவுத் துறை அமைச்சர்களின் கூட்டத்தில் உரையாற்றினார்.
  - ✓ கோவிட் உலக வளர்ச்சியின் வேகத்தைக் குறைத்துவிட்டது என்றும், சமூகங்களில் பாதிப்பை அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
  - ✓ கோவிட்-19 சிக்கல்கள் மற்றும் சவால்களை தீர்ப்பதற்கு சர்வதேச கூட்டுறவே ஒரே திறவுகோல் என்று அவர் குறிப்பிட்டார்.
  - ✓ வாழ்வாதாரம், சுகாதாரம், டிஜிட்டல் அணுகல் மற்றும் காலநிலை நடவடிக்கை ஆகியவை உலகின் புதிய வளர்ச்சி முன்னுரிமைகளாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.
  - ✓ அவர் 12 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் உரையாடினார். அவர் ஆப்பிரிக்காவில் ஜி20 அமர்விலும் பேசினார்.
  - ✓ சுகாதாரம், கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் டிஜிட்டல் ஒத்துழைப்புடன், வளர்ச்சித் திட்டங்களிலும் இந்தியா கவனம் செலுத்தும் என்றும் அவர் கூறினார்.

- **ஐரோப்பிய ஒன்றியத்தின் 'பசுமை கடவுச் சீட்டு'**
  - ✓ ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பிய ஒன்றிய டிஜிட்டல் கோவிட் சான்றிதழ் (EU Digital COVID Certificate) அல்லது 'பசுமை கடவுச்சீட்டு'ஐ நடைமுறைப்படுத்தியுள்ளது. இது ஐரோப்பிய மருந்துகள் நிறுவனம் அங்கீகரித்த நான்கு தடுப்பூசிகளில் ஒன்றை

APOLLO STUDY CENTRE

எடுத்துள்ள பயணிகளுக்கு ஐரோப்பாவிற்குள் பயணம் மேற்கொள்வதை எளிதாக்கியுள்ளது.

- **உலகின் மிகப்பெரிய கார்பன் சந்தை சீனாவில் உள்ளது**
  - ✓ உலகின் மிகப்பெரிய கார்பன் சந்தை சீனாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
  - ✓ இந்த நாடுதான் உலக அளவில் பசுமை இல்ல உமிழ்வை வெளியிடும் மிகப்பெரிய நாடு ஆகும்.
  - ✓ கார்பன் சந்தை குறித்த திட்டமானது சீன அரசால் 3 ஆண்டுகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்டது. ஆனால், பல்வேறு காரணங்களால் தாமதப்படுத்தப்பட்டது.
  - ✓ இந்தத் திட்டம் உமிழ்வு கொடுப்பனவுகளை ஒதுக்குவதன்மூலம் எரிசக்தி ஆலைகளுக்கு ஒரு மகுடத்தை வைக்கும்.

- **மரபணு மாற்றப்பட்ட 'தங்க அரிசியை' வர்த்தக உற்பத்திக்கு அங்கீகரித்த உலகின் முதல் நாடு**
  - ✓ குழந்தைப் பருவ ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைக்க உதவும் மரபணு மாற்றப்பட்ட 'தங்க அரிசி' என்ற ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஒரு வகை அரிசியின் வணிக உற்பத்திக்கான ஒப்புதலைப் பெற்ற உலகின் முதலாவது நாடு பிலிப்பைன்ஸ் ஆகும்.

- **நாகாலாந்தைச் சேர்ந்த 'ராஜா மிர்ச்சா' என்ற, புவிசார் குறியீடு பெறற பெரிய மிளகாய் முதன் முறையாக லண்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.**
  - ✓ நாகாலாந்திலிருந்து கிங் மிளகாய் என்று அழைக்கப்படும் 'ராஜா மிர்ச்சா'வின் ஒரு தொகுதி, ஜூலை 28, 2021 அன்று முதன் முறையாக கவுஹாத்தி வழியாக வான்வழியே லண்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன்மூலம் வடகிழக்கு பிராந்தியத்திலிருந்து புவிசார் குறியீடு பெற்ற பொருட்களின் ஏற்றுமதிக்கு ஒரு பெரிய ஊக்கம் கிடைத்துள்ளது.
  - ✓ ஸ்கோவில் ஹீட் யூனிட்களின் (Scoville Heat Units) கருத்துப்படி, கிங் மிளகாய் உலகிலேயே மிகவும் வெப்பமான மிளகாயாக கருதப்படுகிறது. மேலும், உலகின் வெப்பமான மிளகாய் பட்டியலில் தொடர்ந்து முதல் ஐந்து இடங்களுக்குள் இருந்து வந்துள்ளது.

- **இங்கிலாந்தில் 'நோரோ வைரஸ்' பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது**
  - ✓ இங்கிலாந்தில் தற்போது நோரோ வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.
  - ✓ இங்கிலாந்தின் பொது சுகாதாரத்துறை சமீபத்தில் நோரோ வைரஸ் குறித்து ஒரு எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.
  - ✓ நாட்டில் 154 நோரோ வைரஸ் நேர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இங்கிலாந்து தெரிவித்துள்ளது.

- **நாட்டில் ஹைனான் மாகாணத்தில் உள்ள சாங்ஜியாங் அணுமின் நிலையத்தில் உலகின் முதல் வணிக மட்டு சிறிய உலை 'லிங்லாங் ஒன்' கட்டுமானத்தை சீனா அதிகாரபூர்வமாகத் தொடங்கியுள்ளது.**
  - ✓ இந்தத் திட்டமானது சீன தேசிய அணுசக்தி கழகத்தின் சிஎன்என்சி-யின் லிங்லாங் ஒன் (ஏசிபி 100) தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டது.

- **உலகின் முதலாவது முப்பரிமாணத்தில் அச்சிடப்பட்ட எ.்கு பாலம்** - நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாமில் பொது பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

- **ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி, அஷ்ரப் கனி** – தலைநகர் காபூலின் கட்டுப்பாட்டை தலிபான்கள் கைப்பற்றியதால், நாட்டைவிட்டு வெளியேறி தஜிகிஸ்தானுக்குத் தப்பிச் சென்றார்.
  - ✓ அமெரிக்க தலைமையிலான படையெடுப்பால் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்ட இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, 10 நாட்களில், நாட்டின் பெரும்பகுதியை தலிபான்கள் கைப்பற்றினர்.

- தலிபான் தளபதி அப்துல் கின பரதர் ஆப்கானிஸ்தானின் புதிய அதிபராக உள்ளார்.
  - ✓ ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றிய தலிபானின் புதிய தலைவராக தலிபான் தளபதி அப்துல் கனி பரதர் அறிவிக்கப்பட்டுள்ளார்.
  - ✓ தலைநகர் காபூல் மற்றும் அரண்மனையை தலிபான் போராளிகள் கைப்பற்றியதால் முன்னாள் ஜனாதிபதி அஷ்ரப் கனி தஜிகிஸ்தானுக்குத் தப்பிச் சென்றார்.
  - ✓ ஆப்கானிஸ்தான் தலிபான்களால், ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய குடியரசு' என்று பெயரிடப்பட்டது.

- **பெண்கள் அதிகாரம் குறித்த முதலாவது ஜி20 அமைச்சர்கள் நிலையிலான மாநாடு இத்தாலியின் சாண்டா மார்கெரிட்டா லிகூரில் நடைபெற்றது.**

- **இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு, அமெரிக்கா** – அமெரிக்காவின் மிக நீண்ட போரை முடித்து, காபூலில் இருந்து கடைசி விமானத்தை வெளியேற்றியதன் வாயிலாக, ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறும் பணியை நிறைவு செய்தது.

- **உக்ரைன்** - செப்டம்பரில் பிட்காயின் மற்றும் பிற கிரிப்டோகரன்சிகளின் பயன்பாட்டை சட்டபூர்வமாக்கிய சமீபத்திய நாடாக மாறியுள்ளது.

- சீனா, புதிய புவி கண்காணிப்பு செயற்கைக் கோளான 'கா.்.பென்-502'ஐ வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

- பிட்காயினை தேசிய நாணயமாக ஏற்றுக் கொண்ட முதல் நாடாக எல்சால்வடார் விளங்குகிறது.

- **ஐக்கிய அரபு அமீரகத்தின் பசுமை விசா**
  - ✓ ஐக்கிய அரபு அமீரகம், 2019ஆம் ஆண்டில், பணக்கார குடியிருப்பாளர்கள் மற்றும் திறமையான தொழிலாளர்களை நாட்டிற்குள் வரவேற்பதை நோக்கமாகக் கொண்டு, 10 வருட 'தங்க விசா'வை அறிமுகப்படுத்தியது.

- **ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டம், பகுதி வறண்ட வெப்ப மண்டலத்திற்கான சர்வதேச பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (ICRISAT) இணைந்துள்ளது.**
  - ✓ ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டம், பகுதி வறண்ட வெப்ப மண்டலத்திற்கான சர்வதேச பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (ICRISAT) இணைந்துள்ளது.
  - ✓ இந்தியாவில் உணவு, ஊட்டச்சத்து, பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சிக்காக இந்த இணைப்பு ஏற்பட்டு உள்ளது.
  - ✓ இது சம்பந்தமாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
  - ✓ பாரம்பரிய ஊட்டச்சத்து பயிர் பற்றிய ஆராய்ச்சி மற்றும் விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக இந்த இரண்டு அமைப்புகளும் இணைந்து செயல்படும்.

- **இலங்கை அவசர கால நிலையை பிரகடனம் செய்தது**

✓ இறக்குமதிக்கு நிதியளிக்கும் வகையில் தனியார் வங்கிகளிடம் அன்னியச் செலாவணி இல்லாததால், உணவு நெருக்கடி தீவிரமடைந்துள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

✓ நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி கோத்தபய ராஜபக்சே சர்க்கரை, அரிசி மற்றும் பிற அத்தியாவசிய உணவுகளைப் பதுக்கி வைப்பதைத் தடுக்க அவசரகால விதிமுறைகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு அமெரிக்க டாலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பு 7.5 விழுக்காடு சரிந்துள்ளது.

- **சர்வதேச நாணய நிதியம்** இந்தியாவுக்கு 12.57 பில்லியன் (தோராயமாக 17.86 பில்லியன் அமெரிக்க டாலர்கள்) சிறப்பு எடுப்பு உரிமைகளை வழங்கியுள்ளது. இதன்மூலம் இந்தியாவின் மொத்த சிறப்பு எடுப்பு உரிமைகள் மதிப்பு 13.66 பில்லியனாக உயர்ந்துள்ளது. இது சுமார் 19.41 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்குச் சமம்.

- 2022-2024 வரையிலான புதிய மூன்றாண்டு காலத்திற்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலுக்கு இந்தியா மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
  - ✓ இந்தியா, அக்டோபர் 14, 2021 அன்று, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலுக்கு (United Nations Human Rights Council) ஆறாவது முறையாக அதிக பெரும்பான்மையுடன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
  - ✓ புதிய மூன்றாண்டு பதவிக்காலம் ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2024 வரை அமலில் இருக்கும்.

- **இலங்கை – தனது கச்சா எண்ணெய் கொள்வனவுகளைச் செலுத்துவதற்காக, இந்தியா-இலங்கை பொருளாதார கூட்டாண்மை ஏற்பாட்டின்கீழ், இந்தியாவிடம் இருந்து 500 மில்லியன் டாலர் தொகையை கடனாகக் கேட்டுள்ளது.**

- **உலகளாவிய பசி குறியீடு (Global Hunger Index)**
  - ✓ உலகளாவிய பசி குறியீடு 2021ல், மொத்தம் இடம் பெற்றுள்ள 116 நாடுகளில் இந்தியா 101 வது இடத்தில் உள்ளது.
  - ✓ கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட உலகளாவிய பசி குறியீட்டில், மொத்தம் இருந்த 107 நாடுகளில் இந்தியா 94வது இடத்தில் இருந்தது.
  - ✓ பெரும்பாலானா அண்டை நாடுகளைவிடவும் இந்தியா பின்தங்கி இருந்தது. பாகிஸ்தான் 92வது இடத்திலும், நேபாளம் 76வது இடத்திலும், வங்காளதேசமும் 76 வது இடத்திலும் உள்ளன.
- **உலகளாவிய உணவு பாதுகாப்பு குறியீடு**
  - ✓ உலகளாவிய உணவுப் பாதுகாப்புக் குறியீடு 2021- 113 நாடுகளில் இந்தியா 71வது இடத்தில் உள்ளது.
- சமூக உண்மை (***TRUTH Social)***
  - ✓ முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் - 'சமூக உண்மை' என்ற பெயரில் ஒரு புதிய சமூக ஊடக தளத்தைத் தொடங்கும் திட்டம் கொண்டிருப்பதாக அறிவித்தார்.
  - ✓ டிரம்பின் புதிய சமூக ஊடக தளமான 'சமூக உண்மை' ஆப்பில் செயலி ஸ்டோரில் முன்பதிவு செய்யப்பட உள்ளது.

- முகநூல் தனது பெயரை மெட்டா என்று மாற்றப்போகிறது.
  - ✓ முகநூல் நிறுவனம் தனது பெயரை 'மெட்டா' என்று மாற்றுவதாக அறிவித்துள்ளது. அக்டோபர் 29, 2021 அன்று நடைபெற்ற அந்நிறுவனத்தின் 'மெய்நிகர் உண்மை இணைப்பு மாநாட்டில் (Connect virtual reality conference) முகநூல் தலைமை நிர்வாக அலுவலர் மார்க் ஜுக்கர்பெர்க் இதை அறிவித்தார்.
  - ✓ ஜுக்கர்பெர்க் இவ்வாறு கூறினார், "இன்று முதல் நாம் மெட்டாவெர்ஸ் ஆக இருக்கப் போகிறோம், முதலில் முகநூல் அல்ல".

- **உலகின் 20 மிகப்பெரிய பொருளாதார நாடுகள் (ஜி20) – உலகளாவிய குறைந்தபட்ச பெருநிறுவன வரி விகிதமான 15 விழுக்காடு மீது ஒரு முக்கிய ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளிக்கத் தயாராக உள்ளன மற்றும் அது தொடர்பான விதிகளை 2023க்குள் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.**
  - ✓ விரிவான அமலாக்கத் திட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட மாதிரி விதிகள் மற்றும் பலதரப்பு கருவிகளை உருவாக்குவதற்காக, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு (Organisation for Economic Co-operation and Development) / ஜி20 அடிப்படை அரிப்பு மற்றும் இலாப மாற்றத்திற்கான உள்ளடக்கிய கட்டமைப்பிற்கு ஜி 20 நாடுகள் அழைப்பு விடுத்தன.
  - ✓ இந்த மாதத்தின் தொடக்கத்தில், சர்வதேச வரி முறையின் ஒரு பெரிய சீர்திருத்தம் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைபபில் (OECD) இறுதி செய்யப்பட்டது. இது, பன்னாட்டு நிறுவனங்கள் 2023 முதல் குறைந்தபட்சம் 15 விழுக்காடு வரி விகிதத்திற்கு உட்படுத்தப்படும் என்பதை உறுதி செய்யும்.

- ✓ இந்த நிறுவனங்கள் எங்கு இயங்கினாலும், இலாபம் ஈட்டினாலும் நியாயமான வரி செலுத்துவதை இது உறுதி செய்யும்.

➢ **காப் 26 (COP26)**

- ✓ பிரதமர் நரேந்திர மோடி நவம்பர் 1, 2021 அன்று கிளாஸ்கோவில் காலநிலை மாற்றம் குறித்த நாடுகளின் மாநாட்டின் (காப் 26) 26வது அமர்வில் பங்கேற்க உள்ளார்.
- ✓ காப்-26 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் தற்போது இரண்டு நாள் பயணமாக இங்கிலாந்து சென்றுள்ளார். அவர் காலநிலை மாநாட்டின் பின்னணியில் இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சனைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விவாதிக்க உள்ளார்.

➢ **ஃபைசர்-பயொஎன்டெக் கோவிட் தடுப்பூசி (Pfizer-BioNTech COVID vaccine)**

- ✓ அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம், அக்டோபர் 31, 2021 அன்று, 5 முதல் 11 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஃபைசர் பயோஎன்டெக் கோவிட்1-9 தடுப்பூசியை அவசர கால நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ இந்த ஃபைசர்-பயோஎன்டெக் கோவிட் தடுப்பூசியானது அமெரிக்காவில் 5 முதல் 11 வயது வரையிலான இளம் குழந்தைகளுக்குப் போடப்படும் முதல் கோவிட்-19 தடுப்பூசி ஆகும். உயர்மட்ட மருத்துவக் குழு அமெரிக்க அரசுக்கு ஆலோசனை வழங்கியதை அடுத்து இந்த அனுமதி கிடைத்துள்ளது.

➢ **மைக்ரோசாப்ட்**

- ✓ **மைக்ரோசாப்ட நிறுவனம், எம்-கேப் ஆல் ஆப்பிள் நிறுவனத்தை விஞ்சி உலகின் மிகவும் மதிப்பு மிக்க நிறுவனமாக மாறியுள்ளது.**
- ✓ **மைக்ரோசாப்ட் கார்ப்பரேஷன் ஆப்பிள் இங்க் நிறுவனத்தை விஞ்சி, சந்தை மூலதனத்தின்மூலம் உலகின் மிகவும் மதிப்புமிக்க பொது வர்த்தக நிறுவனமாக மாறியுள்ளது.**
- ✓ **அக்டோபர் 29, 2021 அன்று சந்தையின் முடிவில், ஆப்பிள் சுமார் 2.46 டிரில்லியன் டாலர் மதிப்பைக் கொண்டிருந்தது. ஆனால், மைக்ரோசாப்ட் கிட்டத்தட்ட 2.49 டிரில்லியன் டாலரை எட்டியது. ஆப்பிள் நிறுவனம் ஒரு வருடத்திற்கும் மேலாக முதலிடத்தில் இருந்து வந்துள்ளது. ஜூன் மாதத்தில் 2 டிரில்லியன் டாலர் சந்தை மதிப்பைத் தாண்டிய இரண்டாவது அமெரிக்க பொது நிறுவனமாக மைக்ரோசாப்ட் ஆனது.**

➢ **'Vax' என்ற சொல் 2021ஆம் ஆண்டிற்கான ஆகஸ்ஃபோர்டு ஆங்கில அகராதியின் சிறந்த சொல்லாகத் தேர்வு செய்யப்பட்டது.**

- ✓ 2021ஆம் ஆண்டின் ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியால் ஆண்டின் சிறந்த சொல்லாக 'Vax' தேர்வு செய்யப்பட்டுள்ளது. Vax என்பது பசுவைக் குறிக்கும் Vacca என்ற இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டது.
- ✓ Vax என்பது தடுப்பூசிகளுக்கான ஒரு குறுகிய வடிவமாகப் பயன்படுத்தப்படுகிறது மற்றும் ஒரு நபரின் உடல் நோயைப் பெறுவதைத் தடுப்பதற்காக செலுத்தப்படும் ஒரு பொருளைக் குறிக்கிறது.
- ✓ கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக, 2021 ஆம் ஆண்டில் தடுப்பூசி தொடர்பான சொற்கள் அதிகரித்தன. இதில் double-vaxxed, unvaxxed மற்றும் anti-vaxxer போன்ற சொற்களும் அடங்கும்.

➢ **காப்26 – ஒரு சூரியன், ஒரு உலகம் மற்றும் ஒரு கட்டம் முயற்சி (COP26 - One Sun, One World & One Grid initiative)**

✓ ஒரு சூரியன், ஒரு உலகம் மற்றும் ஒரு கட்டம் என்பது சேமிப்புத் தேவைகளைக் குறைப்பது மட்டுமில்லாமல், சூரிய திட்டங்களின் நம்பகத் தன்மையையும் அதிகரிக்கும் என்று காப்26 தலைவர்கள் மாநாட்டின்போது 'தூய்மையான தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு மற்றும் வளர்ச்சியை துரிதப்படுத்துதல்' என்ற நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி கூறினார். ஆக்கபூர்வமான முன்முயற்சியானது, கார்பன் தடம் மற்றும் எரிசக்தி செலவைக் குறைப்பது மட்டுமல்லாமல், பல்வேறு நாடுகள் மற்றும் பிராந்தியங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பிற்கான புதிய வழியைத் திறக்கும் என்றும் அவர் கூறினார்.

✓ OSOWOG என்பது உலகளாவிய ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட சூரிய சக்தி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கட்டங்களின் முதல் சர்வதேச நெட்வொர்க் ஆகும்.

✓ இந்த நிகழ்ச்சியின்போது, பிரதமர் நரேந்திர மோடி, 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற சர்வதேச சூரியக் கூட்டணியின் முதல் சட்ட மன்றத்தில், ஒரு சூரியன் ஒரு உலகம் ஒரு கட்டம் யோசனையை தாம் முன்வைத்ததாகக் கூறி, அதை மீண்டும் வலியுறுத்தினார்.

➢ முகநூல் **(Facebook)**

✓ **முகநூல் நிறுவனம், முக அங்கீகார அமைப்பை மூடுகிறது.**

✓ **முகநூலில் முக அங்கீகார அமைப்பை மூடப்போவதாக மெட்டா நிறுவனம் நவம்பர் 2, 2021 அன்று அறிவித்தது.**

✓ **அதைத் தேர்வு செய்தவர்கள் இனி புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களில் தானாக அடையாளம் காணப்பட மாட்டார்கள் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களின் முக அங்கீகார மாதிரிகளை மெட்டா நீக்க உள்ளது.**

➢ **காலநிலை நிதியில் 1 டிரில்லியன் டாலர் உயர்வு**

✓ **காலநிலை நிதியில் 1 டிரில்லியன் டாலர் உயர்வுக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.**

✓ **ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்தர் யாதவ், நவம்பர் 2, 2021 அன்று வளரும் நாடுகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, ஒத்த எண்ணம் கொண்ட வளரும் நாடுகள் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.**

✓ **2009இல் முடிவு செய்யப்பட்ட அளவில் காலநிலை நிதியைத் தொடர முடியாது என்றும், காலநிலை நடவடிக்கை இலக்குகளை அடைவதற்காக குறைந்தபட்சம் 1 டிரில்லியன் டாலராக உயர்த்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.**

✓ **காலநிலை மாற்றத்திற்கு எதிரான போரில், உலகளாவிய தெற்கத்திய நாடுகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக LMDCஇன் வலிமை மற்றும் ஒற்றுமையை அமைச்சர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.**

➢ **ஆன்டிவைரல் கோவிட் மாத்திரை**

✓ கோவிட்டின் போக்கை மாற்றும் கோவிட்-19 வைரஸ் தடுப்பு மாத்திரையை அங்கீகரிக்கும் உலகின் முதல் நாடாக இங்கிலாந்து மாறியுள்ளது.

✓ இது கோவிட்-19 தொற்று நோய்க்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மெர்க் மற்றும் ரிட்ஜ்பேக் பயோதெரபியூட்டிக்சால் கூட்டாக உருவாக்கப்பட்டுள்ளது.

✓ இங்கிலாந்தின் மருந்துகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் ஒழுங்குமுறை நிறுவனம் (Medicines and Healthcare products Regulatory Agency) கோவிட்-19 நேர்மறை

 **PH: 044-24339436, 42867555, 9840226187**

முடிவைத் தொடர்ந்து, அறிகுறிகள் தோன்றிய ஐந்து நாட்களுக்குள், மோல்னுபிராவிர் என்ற மருந்தை விரைவில் பயன்படுத்துமாறு பரிந்துரைத்துள்ளது.

## ➢ மகாத்மா காந்தி – நினைவு 5 பவுண்ட் ஸ்டெர்லிங் நாணயம்

- ✓ மகாத்மா காந்தியின் வாழ்க்கை மற்றும் பாரம்பரியத்தை நினைவுகூறும் வகையில் இங்கிலாந்து அரசு 5 பவுண்ட் ஸ்டெர்லிங் நாணயத்தை வெளியிட்டுள்ளது. இங்கிலாந்தின் அதிகாரபூர்வ நாணயத்தில் மகாத்மா காந்தி நினைவு கூறப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.
- ✓ இந்த நாணயம் தங்கம் மற்றும் வெள்ளி உள்ளிட்ட பல்வேறு தரநிலைகளில் கிடைக்கிறது. சிறப்பு சேகரிப்பாளர்களின் நாணயத்தை ஹீனா குளோவர் வடிவமைத்தார்.
- ✓ இந்த நாணயத்தில் இந்தியாவின் தேசிய மலரான தாமரையின் உருவமும், காந்தியின் மிகவும் பிரபலமான மேற்கொள்களில் ஒன்றான, ‘எனது வாழ்க்கையே எனது செய்தி’ என்ற வாசகமும் இடம்பெற்றுள்ளன.

## ➢ நாசாவின் அறிவியல் இயக்கம் (NASA Science Mission)

- ✓ நான்கு விண்வெளி வீரர்கள் - அவர்களின் எண்டவர் என்ற பெயரிலான ஸ்பேஸ் எக்ஸ் க்ரூ டிராகன் காப்ஸ்யூலுடன் சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆறுமாத நாசா சாதனை படைத்துவிட்டு அறிவியல் பணியிலிருந்து திரும்பினர்.
- ✓ அவர்கள் 199 முழு நாட்கள் சுற்றுப் பாதையில் இருந்துவிட்டு பூமிக்குத் திரும்பினர். இது ஒரு முழு அமெரிக்க குழுவிற்கும் மிக நீண்ட காலம் ஆகும்.
- ✓ இது, இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஸ்பேஸ் எக்ஸ்-நாசா இயக்கம் நிகழ்த்திய முந்தைய 168 நாள் சாதனையை முறியடித்தது.
- ✓ ஏப்ரல் 23 அன்று புளோரிடாவில் இருந்து புறப்பட்ட ஸ்பேஸ் எக்ஸ் ஃபால்கன் 9 ராக்கெட்டின்மீது சுற்றுவட்டப் பாதையில் நான்கு விண்வெளி வீரர்களும் ஏவப்பட்டனர்.

## ➢ “குழு 3” இயக்கம்

- ✓ ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் இந்திய வம்சாவளி விண்வெளி வீரர் ராஜா சாரி தலைமையிலான ‘குழு 3’ திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- ✓ அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா மற்றும் எலோன் மஸ்க்கிற்குச் சொந்தமான தனியார் ராக்கெட் நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ் ஆகியவை நவம்பர் 10, 2021 அன்று ‘குழு 3’ பணியைத் தொடங்கியுள்ளன. இந்தக் ‘குழு 3’ பணியானது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நாசா விண்வெளி வீரர் ராஜா சாரியை அதன் பணித் தளபதியாகக் கொண்டுள்ளது.
- ✓ இந்தப் பணியின்கீழ், ஏப்ரல் 2022 வரை ஆறுமாத அறிவியல் பணிக்காக நான்கு விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

## ➢ ‘காலநிலை நிதியில்’ 1 டிரில்லியன் டாலர் ($1 trillion in ‘climate finance’)

- ✓ புவி வெப்பமயமாவதால் எழும் சவால்களுக்கு ஏற்பவும், தணிக்கவும் வளர்ந்த நாடுகளிடம் இருந்து அடுத்த பத்தாண்டுகளில் ஒரு டிரில்லியன் டாலர் தொகையை இந்தியா கோரியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் காலநிலை வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நிபந்தனையாக இந்தியா இதை வைத்துள்ளது. இது கிளாஸ்கோவில் நடந்துகொண்டிருக்கும் காலநிலை ஒப்பந்த பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியாக இருக்கும் ஒரு மூத்த அதிகாரி தெரிவித்தார்.
- ✓ இந்தியாவின் ஐந்து மடங்கு திட்டமானது அதன் பொருளாதாரத்தில் கார்பன் தீவிரத்தைக் குறைத்து இறுதியில் 2070க்குள் நிரக பூஜ்ஜியத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ ஐக்கிய அரபு அமீரகம் COP28ஐ 2023ல் நடத்துகிறது

- ✓ 2023ஆம் ஆண்டு ஐக்கிய அரபு அமீரகம், 28வது, நாடுகளின் உச்சி மாநாட்டை (Conference of the Parties) நடத்தும் என்று ஐ.நா. காலநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பு மாநாடு (The UN Framework Convention on Climate Change) அறிவித்தது.
- ✓ இது இரண்டாவது முறையாக மத்திய கிழக்கு நாடுகளில் நடத்தப்படும் வருடாந்திர பேச்சுவார்த்தை ஆகும். அதே சமயம் பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பின் உறுப்பினர்களால் மூன்றாவது முறையாக நடத்தப்படுகிறது.

## ➢ ஃபுமியோ கிஷிடா ஜப்பானின் பிரதமராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்

- ✓ நவம்பர் 10, 2021 அன்று தனது ஆளும் கட்சி முக்கியமான நாடாளுமன்றத் தேர்தல்களில் பெரும் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து ஃபுமியோ கிஷிடா ஜப்பானின் பிரதமராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ✓ பாராளுமன்றத்தால் ஒரு மாதத்திற்கு முன்பு தேர்ந்தெடுக்கப்பட்ட கிஷிடா ஒரு விரைவான தேர்தலுக்கு அழைப்பு விடுத்தார். அதில் அவரது ஆளும் கட்சி 465 உறுப்பினர்களைக் கொண்ட கீழ் அவையில் 261 இடங்களைப் பெற்றது.
- ✓ அவர் அக்டோபர் 4, 2021 அன்று ஜப்பானின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## ➢ இந்தியா சர்வதேச வர்த்தக கண்காட்சி 2021

- ✓ இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சி 2021, 14 நவம்பர்2021 அன்று புது டெல்லியில் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
- ✓ இந்த கண்காட்சியானது, 'சுயசார்பு இந்தியா' என்ற கருப்பொருளில் கவனம் செலுத்துகிறது.
- ✓ பீகார் மாநிலம் கூட்டாண்மை மாநிலம் ஆகும், அதே சமயம் உத்தரப் பிரதேசம் மற்றும் ஜார்க்காண்ட் ஆகியவை கவனம் செலுத்தப்படும் மாநிலங்கள் ஆகும். ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், பஹ்ரைன், கிர்கிஸ்தான், நேபாளம், இலங்கை, ஐக்கிய அரபு அமீரகம், துனிசியா மற்றும் துருக்கி ஆகியவை அயல்நாட்டு பங்குதாரர்கள் ஆகும்.

## ➢ உலகின் முதலாவது இலாப நோக்கமற்ற நகரம்

- ✓ சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் 14 நவம்பர் 2021 அன்று உலகின் முதலாவது இலாப நோக்கமற்ற நகரத்தை நிறுவுவதாக அறிவித்தார்.
- ✓ அது இளவரசர் முகமது பின் சல்மான் இலாப நோக்கமற்ற நகரம் என்று அழைக்கப்படும்.

## ➢ வசிப்பிட ஒருங்கிணைப்பாளர் (Resident Coordinator)

- ✓ ஐக்கிய நாடுகள் சபையானது, அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு நிலையான வளர்ச்சி நிபுணரான ஷோம்பி ஷார்ப் என்பவரை இந்தியாவில் வசிப்பிட ஒருங்கிணைப்பாளராக நியமித்தது.
- ✓ உலக அமைப்பிற்குள்ளாக, அவர் மிக சமீபத்தில் ஆர்மீனியாவில் ஐக்கிய நாடுகளின் வசிப்பிட ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றினார்.

## ➢ வி பவர் இந்தியா கூட்டாண்மை மன்றம் (WePOWER India Partnership Forum)

- ✓ இந்தியாவில் மின்துறை தொழில்முறை வலையமைப்பில் உள்ள உள்ள தெற்காசிய பெண்களை முன்னேற்றுவதற்காக, வி பவர் இந்தியா கூட்டாண்மை

மன்றக் கூட்டம், நவம்பர் 9, 2021 அன்று மெய்நிகர் தளம் மூலமாக நடத்தப்பட்டது.

- ✓ இந்தியா ஸ்மார்ட் கிரிட் ஃபோரம் உடன் இணைந்து உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்தன.
- ✓ இந்த நிகழ்ச்சியில் இந்தியாவில் தூய்மை ஆற்றல் மாற்றத்தில் பெண்களுக்கான வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்துவது குறித்த குழு விவாதம் நடைபெற்றது.

## ➢ யுனெஸ்கோ (UNESCO)

- ✓ 2021-25 காலத்திற்கான ஐக்கிய நாடுகளின் கல்வி. அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் நிர்வாகக் குழுவிற்கு (யுனெஸ்கோ) இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ✓ ஐ.நாவின் மூன்று அரசியலமைப்பு உறுப்புகளில் ஒன்றாகிய யுனெஸ்கோ நிர்வாகக் குழுவிற்கு 2021-25 ஆம் ஆண்டு காலத்திற்கு இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ✓ இதற்கான தேர்தல் 17 நவம்பர் 2021 அன்று நடைபெற்றது.

## ➢ அமெரிக்க அதிபரின் அதிகாரங்கள்

- ✓ அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் - குறுகிய காலமாகவே இருந்தாலும், நவம்பர் 19 அன்று அமெரிக்க அதிபர் அதிகாரத்தைப் பெற்ற முதல் பெண்மணி ஆனார்.
- ✓ அதிபர் ஜோ பைடன் ஒரு கொலோனோஸ்கோபி செயல்முறைக்காக மயக்க மருந்துக்கு உட்படுத்தப்பட்டபோது, கமலா ஹாரிஸ் மொத்தமாக ஒரு மணி நேரம் 25 நிமிடங்களுக்கு அதிபரின் அதிகாரங்களைப் பெற்றிருந்தார்.
- ✓ அமெரிக்காவின் முதல் பெண், முதல் கருப்பின மற்றும் முதல் தெற்காசிய துணை அதிபர் ஹாரிஸ், மற்றொரு தடையையும் உடைத்தெறிந்தார், நாட்டில் அதிபரின் அதிகாரங்களைப் பெற்றிருந்த முதல் பெண்மணியும் அவரே ஆவார்.

## ➢ பிட்காயின் நகரம் (Bitcoin City)

- ✓ எல் சால்வடார் உலகின் முதல் ‘பிட்காயின் நகரத்தை’ உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.
- ✓ உலகின் முதல் ‘பிட்காயின் நகரத்தை’ உருவாக்க நாடு திட்டமிட்டுள்ளதாக எல் சால்வடார் அதிபர் நயிப் புக்கெலே (Nayib Bukele) அறிவித்தார்.
- ✓ புதிய நகரம் லா யூனியனின் கிழக்குப் பகுதியில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடக்கத்தில் பிட்காயின் ஆதரவு பத்திரங்கள் மூலம் நிதியுதவி பெறும்.

## ➢ உலகின் மிகச் சிறந்த அமைப்பு சார்ந்த வங்கி

- ✓ உலகளாவிய கட்டுப்பாட்டாளர்களால் சிறந்த கடன் வழங்குபவர்களின் சமீபத்திய வருடாந்திர தரவரிசையின்படி, ஜே.பி. மார்கன் சேஸ் வங்கி. மீண்டும் உலகின் அமைப்பு ரீதியாக மிகச் சிறந்த வங்கியாக மாறியுள்ளது.

## ➢ புதிய ஜெர்மன் அதிபர்

- ✓ 16 ஆண்டுகளாக ஜெர்மனியை வழிநடத்தி வந்த ஏஞ்சலா மெர்க்கலுக்குப் பதிலாக ஒலாஃப் ஷோல்ஸ் ஜெர்மனியின் அடுத்த அதிபராக இருப்பார்.
- ✓ அவர் தற்போது நிதி அமைச்சராக பணியாற்றி வருகிறார்.

- **குவைத்தின் புதிய பிரதமர்**
  - ✓ குவைத்தின் புதிய பிரதமராக ஷேக் சபா அல் காலித் அல் ஹமத் அல் சபா நியமிக்கப்பட்டுள்ளார்.

- **உலக பாரம்பரிய குழு – 2021-25**
  - ✓ 2021 முதல் 2025 வரையிலான நான்கு வருட காலத்திற்கு ஐக்கிய நாடுகளின் உலக பாரம்பரியக் குழுவிற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டது.

- **ஓமிக்ரான் என்ற புதிய வகை கோவிட் மாறுபாடு**
  - ✓ புதிய கோவிட்-19 மாறுபாடு, பி.1.1.529, தென்னாப்பிரிக்காவில் முதன் முதலில் கண்டறியப்பட்டுள்ளது. இது உலக சுகாதார அமைப்பால் 'கவலைப்படத் தக்க மாறுபாடு' என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.
  - ✓ சார்ஸ் கோவி-2 இன் இந்த வகை மாறுபாடு ஓமிக்ரான் என்று பெயரிடப்பட்டுள்ளது.
  - ✓ இந்த வகை மாறுபாடு தென்னாப்பிரிக்காவின் போட்ஸ்வானா பகுதியில் நவம்பர் 24 அன்று முதன் முதலில் கண்டறியப்பட்டது.

- **உலகின் மிகப் புதிய குடியரசு நாடு**
  - ✓ முன்னாள் பிரிட்டிஷ் காலனியாகிய பார்படாஸ் - இந்த வாரம் உலகின் புதிய குடியரசாக மாறியுள்ளது.
  - ✓ அதன் கடற்கரைகள் மற்றும் கிரிக்கெட் மீதான ஆர்வம் ஆகியவற்றால் பிரபலமான பார்படாஸ், அதன் அரச தலைவரான இரண்டாம் எலிசபெத் மகாராணிக்குப் பதிலாக அதன் தற்போதைய பிரதிநிதியான கவர்னர் ஜெனரல் சாண்ட்ரா மேசனைத் தேர்ந்தெடுத்துள்ளது.

- **புதிய பிரதமராக பீட்டர் ஃபியலா நியமிக்கப்பட்டுள்ளார்.**
  - ✓ பீட்டர் ஃபியலா செக் குடியரசின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். அக்டோபரின் அவரது தேர்தல் வெற்றிக்குப் பிறகு அதிபர் மிலோஸ் ஜெமான், நவம்பர் 28 அன்று அவரைப் பிரதமராக நியமித்தார்.

- **2021ஆம் ஆண்டிற்கான சிறந்த சொல்**
  - ✓ அமெரிக்க பதிப்பக நிறுவனமான மெரியம்-வெப்ஸ்டெர், 2021ஆம் ஆண்டின் சிறந்த சொல்லாக 'தடுப்பூசி' என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்துள்ளது.

- **டிவிட்டர் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர்**
  - ✓ ஐஐடி மும்பை முன்னாள் மாணவரும், ட்விட்டரின் தலைமை தொழில்நுட்ப அதிகாரியுமான பராக் அகர்வால், சமூக ஊடக தளமான ட்விட்டரின் தலைமைச் செயல் அலுவலராகப் பொறுப்பேற்க உள்ளார்.

- **இன்டர்போல் அமைப்பின் தலைவர்**
  - ✓ சர்வதேச குற்றவியல் காவல்துறை அமைப்பாகிய இன்டர்போல் (The International Criminal Police Organization) துருக்கினியின் இஸ்தான்புல்லில் நடைபெற்ற 89வது இன்டர்போல் பொதுச் சபை கூட்டத்தில், இன்ஸ்பெக்டர் ஜெனரல் அகமது நாசர் அல்-ரைசியை (ஐக்கிய அரபு அமீரகம்) 4 ஆண்டு காலத்திற்கு தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளது.

- **2025க்குள் மிதக்கும் நகரம்**
  - ✓ கடல் மட்டம் உயர்வதால் ஏற்படும் வெள்ளப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக உலகின் முதல் மிதக்கும் நகரத்தை தென் கொரியா விரைவில் பெறப் போகிறது.
  - ✓ இந்த மிதக்கும் நகரத் திட்டம் என்பது ஐ.நா மனித குடியேற்றத் திட்டம் [UN Human Settlement Programme (UN-Habit)] மற்றும் ஓசனிக்ஸ் (OCEANIX) ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.

- **ஸ்வீடனின் முதல் பெண் பிரதமர் மீண்டும் வருகிறார்**
  - ✓ கடந்த வாரம் ஸ்வீடனின் முதல் பெண் பிரதமராக இருந்த மக்டலேனா ஆண்டர்சன், பட்ஜெட் தோல்வியால் ஒரு கூட்டணிக் கூட்டாளியால் ராஜினாமா செய்வதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு, திங்களன்று மீண்டும் அரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- **வாழ்க்கைச் செலவுக் குறையீடு (Cost of Living Index) 2021**
  - ✓ பொருளாதாரப் புலனாய்வுப் பிரிவு சமீபத்தில் வாழ்க்கைச் செலவுக் குறியீடு 2021ஐ வெளியிட்டது.
  - ✓ டெல் அவிவ் உலகின் மிக அதிக செலவின நகரமாகும். அதைத் தொடர்ந்து பாரிஸ் இரண்டாவது இடத்தையும், சிங்கப்பூர் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

- **உலக மூன்றாம் பாலின அழகி பட்டம் (Miss Trans Global) 2021**
  - ✓ கேரளாவின் ஸ்ருதி சித்தாரா என்பவரே, உலக மூன்றாம் பாலின அழகி 2021 பட்டத்தை வென்ற முதல் இந்தியர் ஆவார்.
  - ✓ இந்தத் தகுதியை வென்ற முதல் இந்தியர் இவரே.
  - ✓ உலக மூன்றாம் பாலின அழகி பட்டம் என்பது திருநங்கைகள் மற்றும் அனைத்துப் பின்னணியிலிருந்தும் உள்ள பாலினம் அல்லாதவர்களுக்கான சர்வதேச ஆன்லைன் போட்டியாகும்.

- **ஐக்கிய அரபு அமீரகம் சாதனை அளவாக 80 ர∴பேல் ஜென் விமானங்களை வாங்க உள்ளது.**
  - ✓ ஐக்கிய அரபு அமீரகம், பிரான்சிலிருந்து 80 ர∴பேல் போர் விமானங்களை வாங்குவதற்காக, 14 பில்லியன் யூரோ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
  - ✓ ர∴பேல் ஜெட் விமானங்களுக்காக இதுவரை செய்யப்பட்ட சர்வதேச ஆர்டர்களிலேயே இதுவே மிகப் பெரியது ஆகும்.

- **சார்கோ கேப்சூல் (Sarco Capsule)**
  - ✓ ஸ்விட்சர்லாந்து, 'வலியற்ற மரணத்திற்காக' கருணைக் கொலை சாதனைத்தை அங்கீகரித்துள்ளது.
  - ✓ சார்கோ கேப்சூல் என்று அழைக்கப்படும் தற்கொலை பாட்-ஐ பயன்படுத்துவதற்கு சுவிட்சர்லாந்து அரசு ஒப்புதல் அளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.
  - ✓ இது, ஹைப்போக்சியா மற்றும் ஹைபோகாப்னியா (hypoxia and hypocapnia) ஆகியவற்றை தங்களுக்குள் தூண்டிக் கொள்வதன்மூலம், பயணர்கள் ஒப்பீட்டளவில் வலியின்றி தங்களது உயிரை மாய்த்துக் கொள்வதற்கு அனுமதிக்கிறது. திசு மட்டத்தில் போதிய ஆக்சிஜன் வழங்கல் மற்றும் இரத்தத்தில் கார்பன் டை ஆக்சைடு குறைதல் ஆகியவை மரணத்தை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் இந்த முறை செயல்படுகிறது.

➢ **2022ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக்கை தூதரக அளவில் புறக்கணிப்பு செய்தல்**

✓ சீனாவின் பெய்ஜிங் நகரில் 2022 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை தூதரக ரீதியாக புறக்கணிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

✓ சீனாவின் மனித உரிமைகள் பதிவு குறித்த கவலைகள் காரணமாக, விளையாட்டுப் போட்டிகளுக்கு அதிகாரபூர்வ பிரதிநிதிகள் யாரும் அனுப்பப்பட மாட்டார்கள் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. அதே சமயம், அமெரிக்க விளையாட்டு வீரர்கள் இந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம் என்றும், அவர்களுக்கு அரசின் முழு ஆதரவு உண்டு என்றும் அது தெரிவித்துள்ளது.

➢ **2021ஆம் ஆண்டின் சிறந்த சொல்**

✓ கேம்பிரிட்ஜ் அகராதி ‘விடாமுயற்சி’ (perseverance) என்ற சொல்லை, 2021ஆம் அண்டின் மிகச் சிறந்த சொல்லாக அறிவித்துள்ளது.

✓ 2021ஆம் ஆண்டில் பல சவால்கள் இருந்த போதிலும், உலகெங்கிலும் உள்ள மக்களின் ஒரு போதும் கைவிடக்கூடாது என்ற உறுதியற்ற விருப்பத்தை மிகச் சரியாகப் படம் பிடிக்கும் சொல் இது ஆகும்.

➢ **அரபு நாடுகளுக்கு உணவு வழங்குவதில் இந்தியா முதலிடத்தில் உள்ளது**

அரபு நாடுகளின் கூட்டமைப்புக்கான உணவு ஏற்றுமதியில் இந்தியா 15 ஆண்டுகளில் முதல் முறையாக பிரேசிலை விஞ்சியுள்ளது.

➢ **2050 வாக்கில் கார்பன் - நியூட்ரல்**

✓ டிசம்பர் 8 அன்று, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் - 2050ஆம் ஆண்டிற்குள் கூட்டாட்சி அரசின் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கான ஒப்பந்தங்களை ‘கார்பன்-நியூட்ரல்’ ஆக்குவதற்கான நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டுள்ளார்.

✓ 2030ஆம் ஆண்டிற்குள் கிரகத்தை வெப்பமாக்கும் பசுமை இல்ல வாயு உமிழ்வை 65 விழுக்காடு குறைப்பதையும், 2035 ஆம் ஆண்டிற்குள் அனைத்து மின்சார கார் மற்றும் டிரக்குகளை உருவாக்கவதையும் இந்த ஆணை இலக்காகக் கொண்டுள்ளது.

➢ **சூரியக் கூட்டணியில் பார்வையாளர் நிலை (Observer Status On Solar Alliance)**

✓ ஐ.நா பொதுச் சபை சர்வதேச சூரியக் கூட்டணிக்கு பார்வையாளர் அந்தஸ்தை வழங்கியுள்ளது. இது உலக எரிசக்தி வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு பயனளிக்கும் கூட்டணிக்கும் ஐ.நாவுக்கும் இடையே நன்கு வரையறுக்கப்பட்ட ஒத்துழைப்பை வழங்க உதவும் என்று இந்தியா கூறியுள்ளது.

✓ சூரிய ஆற்றல் தீர்வுகளைப் பயன்படுத்துவதன் மூலம் காலநிலை மாற்றத்திற்கு எதிரான முயற்சிகளை அணிதிரட்டுவதற்காக இந்தியாவும் பிரான்சும் கூட்டாக எடுத்த முயற்சியே சர்வதேச சூரியக் கூட்டணி ஆனது.

➢ **ஜி7 (G7)**

✓ உலகின் பணக்கார ஜனநாயக நாடுகள் சனிக்கிழமையன்று, உக்ரைன்மீதான ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிராக ஐக்கிய முன்னணியை முன் வைக்க முயன்றன. இந்த பின்னணியில் பிரிட்டன் வட ஆங்கில நகரமான லிவர்பூலில் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தை நடத்தியது.

➢ **சுய பரிசோதனையின் வயது**

- ✓ ஜி7 அமைப்பின் தற்போதைய தலைவராக பிரிட்டன் உள்ள நிலையில், அதன் உறுப்பு நாடுகள், 'சுதந்திர உலகம்' என்று அழைப்பதைப் பாதுகாப்பதில் இன்னும் கடுமையாக இருக்க வேண்டும் என்று பிரிட்டன் அழைப்பு விடுத்துள்ளது.
- ✓ சுழலும் ஜி7 தலைமைப் பொறுப்பை அடுத்த ஆண்ட பிரிட்டனிடம் இருந்து ஏற்கும் ஜெர்மனி. 2022ஆம் ஆண்டிற்கான தனது திட்டத்தை கூட்டத்தில் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ➢ பிரபஞ்ச அழகி **2021**

- ✓ இஸ்ரேலின் ஈலாட்டில் நடைபெற்ற 70வது பிரபஞ்ச அழகி போட்டியில் 2021ஆம் ஆண்டுக்கான பிரபஞ்ச அழகி பட்டத்தை இந்தியாவின் ஹர்னாஸ் சந்து வென்றார்.
- ✓ 2000ஆம் ஆண்டு லாரா தாத்தா இந்த மகுடத்தை வென்ற 21 ஆண்டுகளுக்குப் பிறகு, 21 வயதான இவர் அதே மகுடத்தை வென்று வந்து சரித்திரம் படைத்துள்ளார்.

### ➢ சர்வதேச கடல்சார் அமைப்பு கவுன்சில் (International Maritime Organisation Council)

- ✓ லண்டனில் உள்ள அதன் தலைமையகத்தில் 2022-23ஆம் ஆண்டுக்கான தேர்தல்கள் நடைபெற்ற பின்னர், சர்வதேச கடல்சார் அமைப்பு கவுன்சிலுக்கு இந்தியா மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- ✓ இந்தியாவின் தேர்வு, 'சர்வதேச கடல்வழி வர்த்தகத்தில் அதிக ஆர்வம் கொண்ட' 10 நாடுகளின் வகையின்கீழ் வருகிறது.

### ➢ 100 விழுக்காடு காகிதமில்லாத நிலை

- ✓ துபாய் - 100 விழுக்காடு காகிதம் இல்லாத உலகின் முதல் அரசாக மாறியுள்ளது.
- ✓ இந்த முயற்சியின் பயனாக, 1.3 பில்லியன் திர்ஹாம் (350 மில்லியன் டாலர்கள்) மற்றும் 14 மில்லியன் மனித நேரம் சேமிக்கப்பட்டதாக, அமீரகத்தின் பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தான் பின் மொகம்மது பின் ரஷீத் அல் மக்தூம் குறிப்பிட்டுள்ளார்.

### ➢ ராய் புயல் (Typhoon Rai)

- ✓ டிசம்பர் மாதத்தில் 2021ஆம் ஆண்டின் வலிமையான சூறாவளியால் பிலிப்பைன்ஸ் பாதிக்கப்பட்டது.
- ✓ அந்தப் புயலுக்கு ராய் என்று பெயரிடப்பட்டுள்ளது.

### ➢ சிலியின் மிகவும் இளவயது அதிபர்

- ✓ சிலி நாட்டில், 19 டிசம்பர் 2021 அன்று நடைபெற்ற அதிபர் தேர்தலில், 35 வயது முன்னாள் மாணவர் தலைவராகிய கேப்ரியல் போரிக் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, மிகவும் இளவயதில் அதிபராக பதவியேற்க உள்ளார்.

### ➢ ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில்

- ✓ ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் - ஆப்கானிஸ்தான் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் ஆப்கானிஸ்தானுக்கான மனிதாபினமான உதவியை பாதிக்காது என்பதை உறுதி செய்வதற்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- ✓ அளிக்கப்பட்டுள்ள விலக்கை 12 மாதங்களில் மறு ஆய்வு செய்வதற்கான விதியை அமெரிக்கா வரவேற்றதால், அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது.

### ➢ சட்டபூர்வ பாலின மாற்றம்

- ✓ ஜனவரி 1, 2022 முதல், சுவிட்சர்லாந்தில் உள்ள மக்கள் குடிமைப்பதிவு அலுவலகத்திற்குச் சென்று தங்கள் பாலினத்தை சட்டபூர்வமாக மாற்றிக் கொள்ள முடியும்.
- ✓ இது, ஐரோப்பாவின் பாலின அடையாள இயக்கத்தில் அந்த நாட்டை முன்னிலையில் வைத்துள்ளது.

# ஜனவரி- பிப்ரவரி- மார்ச் 2022

## ➢ யூரோபோல் (Europol)

- ✓ சமீபத்தில் ஐரோப்பாவிற்கு வெளியே யூரோபோலில் இணைந்த 10 வது நாடாக தென்கொரியா மாறியுள்ளது.
- ✓ 27 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன்மூலம் தென்கொரியாவின் தேசிய காவல் முகமை யூரோபோலுடன் இணைந்தது.
- ✓ யூரோபோல் என்பது பயங்கரவாதம் மற்றும் பிற சர்வதேச குற்றங்களை எதிர்த்துப் போராடும் ஐரோப்பிய ஒன்றிய சட்ட அமலாக்க ஒத்துழைப்பு நிறுவனம் ஆகும்.

## ➢ ஐரோப்பிய யூனியன் தலைமை (European Union Presidency)

- ✓ ஜனவரி 01, 2022 முதல் ஐரோப்பிய ஒன்றிய கவுன்சிலின் தலைமைப் பொறுப்பை பிரான்ஸ் ஏற்றுக் கொண்டது. இந்த நாடு அடுத்த ஆறு மாதங்களுக்கு ஜுன் 30, 2022 வரை ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை வகிக்கும்.

## ➢ உலகின் மிக நீளமான மெட்ரோ ரயில் பாதை

- ✓ உலகின் மிக நீளமான மெட்ரோ ரயில் பாதை சீனாவில் திறக்கப்பட்டுள்ளது.
- ✓ ஷாங்காய் இரண்டு புதிய மெட்ரோ ரயில் பாதைகளைத் திறந்து, உலகின் மிகப்பெரிய மெட்ரோ நெட்வொர்க்கைக் கொண்ட நகரமாகத் திகழ்கிறது.
- ✓ புதிய பாதைகளுடன், ஷாங்காயில் மெட்ரோ நெட்வொர்க்கின் மொத்த நீளம் 831 கிமீ வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இது உலகிலேயே மிகவும் நீளமானது ஆகும்.

## ➢ ஐரோப்பிய ஒன்றியம்

- ✓ ஐரோப்பிய ஒன்றியத்தின் சுழலும் தலைமைப் பொறுப்பை பிரான்ஸ் ஜனவரி 1, 2022 அன்று ஏற்றுக் கொண்டது.
- ✓ கடந்த 14 ஆண்டுகளில் முதன்முறையாக பிரான்ஸ் தலைமைப் பொறுப்பை தற்போது ஏற்றுள்ளது.
- ✓ இந்த ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளிடையே ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் மாறும் தன்மை கொண்டது ஆகும்.

## ➢ நீதிபதி ஆயிஷா மாலிக்

- ✓ பாகிஸ்தான் - நாடு சுதந்திரம் அடைந்த 75 ஆண்டுகளில் முதல் பெண் உச்ச நீதிமன்ற நீதிபதியாக - லாகூர் உயர் நீதிமன்ற நீதிபதி ஆயிஷா மாலிக் - நியமனத்தை உறுதி செய்துள்ளது.

## ➢ டாக்கா சர்வதேச திரைப்பட விழா 2022

- ✓ வங்காளதேசத்தின் டாக்கா, 20வது டாக்கா சர்வதேச திரைப்பட விழாவை நடத்துகிறது

- ✓ ஜனவரி 15 மற்றும் 23ஆம் தேதிகளுக்கு இடையில், டாக்கா முழுவதும் பல்வேறு இடங்களில், டாக்கா முழுவதும் பல்வேறு இடங்களில் பத்து பிரிவுகளில் 70 நாடுகளில் இருந்து 225 திரைப்படங்கள் திரையிடப்படும்.

➢ பிரதமர் மோடி உலகப் பொருளாதார மன்றத்தில் பி3 இயக்கத்தை அறிமுகப்படுத்தினார்.

- ✓ உலகப் பொருளாதார மன்றத்தின் டாவோஸ் நிகழ்ச்சி நிரல் 2022இல் இந்தியாவின் காலநிலை மாற்றக் கடமைகளை அடிக் கோடிட்டுக் காட்டும் பி3 (Pro-Planet-People) இயக்கத்தை பிரதமர் நரேந்திர மோடி அறிமுகப்படுத்தினார்.
- ✓ இந்த பி3 இயக்கத்தின்கீழ், காலநிலைக்கு நமது வாழ்க்கைமுறை ஏற்படுத்தும் சவால்களை பிரதமர் மோடி எடுத்துரைத்தார். தூக்கி எறியும் கலாச்சாரம் காலநிலை மாற்றத்தை ஆழப்படுத்தியுள்ளது என்று அவர் கூறினார்.
- ✓ 'டேக் -மேக்- யூஸ் டிஸ்போஸ்' பொருளாதாரத்தில் இருந்து வட்டப் பொருளாதாரத்திற்கு மாறுவது முக்கியம் என்று அவர் தெரிவித்தார்.

➢ **திருமதி உலகப் பேரழகி 2022 (Mrs World 2022)**

- ✓ திருமதி அமெரிக்கா ஷைலின் ஃபோர்டு 2022ஆம் ஆண்டுக்கான திருமதி உலகப் பேரழியாக முடிசூட்டப்பட்டார்.
- ✓ அவர் ஓஹியோவின் கிரான்வில்லியைச் சேர்ந்தவர்.
- ✓ இந்த திருமதி உலகப்பேரழகி 2022 போட்டியானது, ஜனவரி 2022இல் அமெரிக்காவின் நெவாடாவில் உள்ள லாஸ் வேகாஸில் நடைபெற்றது.

➢ **நுசந்தாரா - இந்தோனேசியாவின் புதிய தலைநகரம்**

- ✓ இந்தோனேசியர்கள் புதிய தலைநகருக்கு இடம்பெயர்கிறார்கள். அது கிழக்கு காளிமந்தன் ஆகும்.
- ✓ அது தற்போது 'நுசந்தரா' என்று அழைக்கப்படுகிறது. முன்னதாக ஜாகர்த்தா இந்தோனேசியாவின் தலைநகராக இருந்தது.

➢ **555.55 காரட் கருப்பு வைரம் - தி எனிக்மா (The Enigma)**

- ✓ எனிக்மா என்று அழைக்கப்படும் 555.55 காரட் கருப்பு வைரம், பிப்ரவரியில் லண்டனில் ஏலம் விடப்படும். இது கிட்டத்தட்ட 9.5 மில்லியன் டாலர்களுக்கு விற்பனை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ 55 அம்சங்களையும் கொண்ட இந்த வைரத்திற்கு 'ஐந்து' என்ற எண் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.
- ✓ 2.6 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு சிறு கோள் அல்லது ஒரு விண்கல் பூமியைத் தாக்கியபோது இந்த வைரம் உருவாக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

➢ ஹோண்டுராசின் முதல் பெண் அதிபர்

- ✓ ஹோண்டுராசின் முதல் பெண் அதிபராக சியோமாரா கேஸ்ட்ரோ ஜனவரி 27, 2022 அன்று பதவியேற்றார்.
- ✓ அவர் ஹோண்டுராசின் முன்னாள் முதல் பெண்மணி ஆவார். ஏனெனில் அவர் 2009ல் ஆட்சிக் கவிழ்ப்பில் பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் அதிபர் மானுவல் ஜெலயாவின் மனைவி ஆவார்.

➢ **உலகின் மிகப்பெரிய கால்வாய் பூட்டு**

- ✓ டச்சு மன்னர் வில்லெம் அலெக்சாண்டர், ஜனவரி 2022இல் இஜ்முய்டன் கடல் பூட்டை அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தார். இஜ்முய்டன் என்பது வட கடல் வாய்வாயை ஆம்ஸ்டர்டாம் துறைமுகத்துடன் இணைக்கும் ஒரு சிறிய துறைமுக நகரம் ஆகும். இது உலகின் மிகப்பெரிய கடல் பூட்டு ஆகும்.
- ✓ இந்த மாபெரும் உள்கட்டமைப்புத் திட்டத்தின் கட்டுமானம் 2016இல் தொடங்கப்பட்டு 2021இல் நிறைவடைந்தது.

➢ **குவாட் சந்திப்பு - இந்தியா பசிபிக் உறவுகள் (Quad Meet - Indo-Pacific Ties)**

- ✓ மும்பையில் 26-11 பயங்கரவாதத் தாக்குதல் (2008) மற்றும் பதான் கோட் விமானப் படைத் தாக்குதல் (2016) ஆகியவற்றிற்கு நீதி கோரி, குழு அமைக்கப்பட்ட பிறகு முதல் முறையாக. ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர்கள், இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் உள்ள அச்சுறுத்தல்கள் பற்றிய உளவுத் துறை தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில் குவாட் ஏற்கனவே ஒத்துழைப்பு நல்கி வருவதாகத் தெரிவித்தனர்.
- ✓ வெள்ளிக்கிழமை அன்று மெல்போர்னில் நான்காவது குவாட் அமைச்சர்கள் கூட்டத்தை நடத்திய அமைச்சர்கள் குழு, இந்தியாவில் தயாரிக்கப்படும் ஒரு பில்லியனுக்கும் அதிகமான கோவிட்-19 தடுப்பூசிகளை விரைவாகக் கொண்டு போய் சேர்க்கவும், இந்த ஆண்டு காலநிலை மாற்றம் குறித்த சிறப்புக் கூட்டத்தை நடத்தவும், பிராந்தியத்தில் கடல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான முயற்சிகளை முடுக்கி விட வேண்டும் என்றும் தீர்மானித்தது.

➢ **மியூனிச் பாதுகாப்பு மாநாடு**

- ✓ 1963ஆம் ஆண்டு முதல், மியூனிச் பாதுகாப்பு மாநாடு ஜெர்மனியின் மியூனிச் நகரில் சர்வதேச பாதுகாப்புக் கொள்கைக்கான வருடாந்திர மாநாடாக நடத்தப்பட்டு வருகிறது.
- ✓ இந்த மாநாட்டில் இந்தியாவின் சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கலந்து கொள்கிறார்.

➢ **உக்ரைனில் இராணுவ நடவடிக்கை**

- ✓ பிப்ரவரி 24 அன்று, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் - கிழக்கு ரஷ்யாவில் உள்ள டான்பாஸ் பிரிவினைவாதிகளைப் பாதுகாப்பதற்காக உக்ரைனில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறிவித்தார்.
- ✓ இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஒரு ஐரோப்பிய அரசின் மீதான மிகப்பெரிய தாக்குதலில் தரை, கடல் மற்றும் வான்வழித் தாக்குதல் மூலம் ரஷ்யா மூன்று பக்கங்களிலும் உக்ரைனை ஆக்கிரமித்தது.

➢ **தாவரம் அடிப்படையிலான கோவிட்-19 தடுப்பூசி**

- ✓ கனடா – தாவர அடிப்படையிலான கோவிட்-19 தடுப்பூசியைப் பயன்படுத்த அங்கீகாரம் அளித்த முதல் நாடு என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- ✓ பிப்ரவரி 24 அன்று, மெடிகாகோ இங்க் மற்றும் கிளாக்சோஸ்மித்கிளைன் பிஜசி இணைந்து உருவாக்கிய உலகின் முதல், தாவரத்திலிருந்து பெறப்பட்ட கோவிட் -19 தடுப்பூசியான கோவிபென்ஸ்-ஐ பயன்படுத்த கனடா ஒப்புதல் அளித்தது.
- ✓ 18 முதல் 64 வயதுக்குட்பட்டவர்களுக்கு போடுவதற்கு இந்தத் தடுப்பூசி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

➢ **உலகின் மிகப்பெரிய விமானம் ரஷ்யாவால் அழிக்கப்பட்டது**

- ✓ உலகின் மிகப்பெரிய சரக்கு விமானமான அன்டோனோவ் ஏஎன்-225 அல்லது 'ம்ரியா', ரஷ்யா-உக்ரைன் போரில் அழிந்து போனது.
- ✓ அண்டோனோவ் ஏஎன்-225, 1980களில் வடிவமைக்கப்பட்டது. இது ஆரம்பத்தில் சோவியத் வானூர்தித் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இது 1988இல் தனது முதல் விமானப் பயணத்தை எடுத்தது. இப்போது பேரிடர்களின்போது நிவாரணப் பொருட்களை வழங்கப் பயன்படுத்தப்பட்டது.

➢ **உலகளாவிய பிளாஸ்டிக் ஒப்பந்தம்**

- ✓ மிகப்பெரிய பலதரப்பு சுற்றுச் சூழல் ஒப்பந்தத்தில், 175 நாடுகள் 'உலகளாவிய பிளாஸ்டிக் ஒப்பந்தம்' எனப்படும் சட்டபூர்வமாக பிணைக்கப்பட்ட உலகளாவிய

ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டுள்ளன. இது ஒட்டுமொத்த பிளாஸ்டிக் விநியோகச் சங்கிலியை சரிசெய்வதன்மூலம் பிளாஸ்டிக் மாசு நெருக்கடிக்கு முற்றுப் புள்ளி வைக்கிறது.

- ✓ கென்யாவில் நைரோபியில் நடைபெற்ற ஐநா சுற்றுச் சூழல் சபையின் கூட்டத்தில் முதல் ஒப்பந்தம் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ✓ முதல் ஒப்பந்தம் 1950களில் பிளாஸ்டிக் பயன்பாடு அதிகரித்ததிலிருந்து உற்பத்தி செய்யப்படும் 9 பில்லியன் டன் பிளாஸ்டிக்கை நேரடியாகச் சமாளிக்க முயல்கிறது.
- ✓ இப்போது, 2024க்குள் இந்த ஒப்பந்தத்தை எப்படிச் செயல்படுத்துவது என்று அவர்கள் வேலை செய்யத் தொடங்கியுள்ளனர்.

➢ **ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையம் - -ஜபோரிஜியா ஆலை (Zaporizhzhia Plant)**

- ✓ வெள்ளியன்று உக்ரேனிய பாதுகாவலர்களுடனான கடுமையான சண்டையின்போது அந்த வளாகத்தில் உள்ள கட்டிடம் தீப்பிடித்து எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ரஷ்யப் படைகள் ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையத்தைக் கைப்பற்றின.
- ✓ ஒரு பயிற்சி மையமாக அடையாளம் காணப்பட்ட கட்டிடத்தில் ஏற்பட்ட தீ அணைக்கப்பட்டு விட்டதாக அதிகாரிகள் கூறுவதற்கு முன்பே ஜபோரிஜியா ஆலையில் அணுசக்தி பேரழிவு ஏற்படக்கூடும் என்ற அச்சம் உலகத் தலைநகரங்களில் பரவியது.

➢ **உலகின் மிக அதிக தடை விதிக்கப்பட்ட நாடு**

- ➢ உக்ரைன் மீதான அதன் போரின் காரணமாக, ரஷ்யா உலகிலேயே மிக அதிக தடைவிதிக்கப்பட்ட நாடாக மாறியுள்ளது என்று நியூ யார்க்கைத் தளமாகக் கொண்ட பொருளாதாரத் தடைகள் கண்காணிப்புத் தளம் தெரிவித்துள்ளது.
- ➢ ஜனாதிபதி விளாடிமிர் புடின் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகிய இரு உக்ரேனிய கிளர்ச்சிப் பகுதிகளை 'சுதந்திர நாடுகள்' என்று அறிவித்த ஒரு நாளைக்குப் பிறகு, பிப்ரவரி 22 அன்று ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளால் முதலில் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன என்று Castellum.AI கூறியது.
- ➢ பிப்ரவரி 22க்கு முன்னர் ரஷ்யாவிற்கு எதிராக ஏற்கனவே 2,754 தடைகள் நடைமுறையில் இருந்ததாகவும், தாக்குதலுக்கு அடுத்த நாள் 2,778 கூடுதல் தடைகள் விதிக்கப்பட்டதாகவும், மொத்தத் தடைகளின் எண்ணிக்கை 5,532 ஆகும் என்றும் அந்தத் தளம் குறிப்பிடுகிறது.

➢ **தென்கொரியாவின் புதிய அதிபர்**

- ✓ 2022ஆம் ஆண்டு தென் கொரிய அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற யூன் சுக்-யோல் (Yoon Suk-yeol) நாட்டின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ✓ அவர் மே 10, 2022 அன்று புதிய அதிபராகப் பதவியேற்க உள்ளார். அவரது பதவிக் காலம் நிலையாக 5 ஆண்டுகள் ஆகும்.

➢ **ஹங்கேரி முதல் பெண் அதிபரைத் தேர்வு செய்தது.**

- ✓ பிரதம மந்திரி விக்டர் ஓர்பனின் நெருங்கிய கூட்டாளியான கட்டலின் நோவாக்கை (Katalin Novak), ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாட்டின் முதல் பெண் அதிபராக ஹங்கேரி நாடாளுமன்றம் தேர்வு செய்துள்ளது.
- ✓ மிக சமீபத்தில் குடும்ப கொள்கை அமைச்சராக பணியாற்றிய நோவக், தனது தேர்தலை பெண்களுக்கான வெற்றியாக சித்தரித்தார்.

- **உலக அழகி 2021**
  - புவேர்ட்டோ ரிக்கோவில் உள்ள சான்ஜுவானில் நடைபெற்ற 70வது அழகுப் போட்டியில் போலந்து நாட்டைச் சேர்ந்த கரோலினா பைலவாஸ்கா (Karolina Bielawaska) 2021ஆம் ஆண்டுக்கான உலக அழகி பட்டத்தை வென்றார்.
  - உலக அழகிப் போட்டி 2021ல், அமெரிக்காவின் ஸ்ரீசைனி மற்றும் கோட் டி ஐவரியின் ஒலிவியா யாஸ் ஆகியோர் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசுகளை வென்றனர்.

- **1915 கனக்கலே பாலம் (Canakkale Bridge)**
  - மார்ச் 18 அன்று, துருக்கிய ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் - வடமேற்கு துருக்கியில் உள்ள டார்டனெல்லஸ் ஜலசந்தியில் உலகின் மிக நீளமான தொங்கு பாலத்தைத் திறந்து வைத்தார்.
  - 2,023 மீட்டர் தொலைவுடன், 2.8 பில்லியன் டாலர் செலவில் கட்டப்பட்ட இந்த '1915 கனக்கலே பாலம்' ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையிலான பயண நேரத்தை வெறும் ஆறு நிமிடங்களாகக் குறைக்கிறது.
  - இது உலகின் எந்த ஒரு தொங்கு பாலத்திலும் இல்லாதவாறு, இரண்டு கோபுரங்களுக்கு இடையே மிக நீண்ட இடைவெளியைக் கொண்டுள்ளது.
  - இந்தப் பாலத்தின் தொடக்க விழாவானது, முதலாம் உலகப் போரின் போது, கலிபோலி பிரச்சாரத்தில் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு துருப்புகளுக்கு எதிராக ஓட்டோமான் படைகளின் கடற்படை வெற்றியின் 107 வது ஆண்டு நிறைவு விழாவுடன் இணைந்து கொண்டாடப்படும் வகையில் அமைந்துள்ளது.

APOLLO STUDY CENTRE